# ஏட்டில் எழுதாக் கவிதைகள்

செ. அன்னகாமு



கழக வெளியீடு

கழக வெளியீடு : ௧௨௯௭

# ஏட்டில் எழுதாக் கவிதைகள்

*

ஆசிரியர் :

செ அன்னகாமு பிஏ,எல்டி

*

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6. சென்னை-1.
1987

© செ அன்னகாமு

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED

பதி 3 (Kazhagam) Aug 1966
பதி 4 ஏப் 1987

Y73(P3):351
N87

AETTIL EZHUTHAAK KAVITHIGAL

அரசன் அச்சகம், சென்னை-600 004

# பதிப்புரை

இலக்கியம் மக்கள் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்து விட்ட ஒன்று என்பதற்கு நாட்டுப்புறப் பாடல்களே சிறந்த எடுத்துக்காட்டாகும். உயர்ந்த இலக்கியம் என்று படித்த புலவர்களால் இயற்றப்பெற்ற இலக்கியம் படித்த கூட்டத்தினருக்கே பயன்படுகின்றதன்றிப் பாமர மக்களைக் கவருவதில்லை. அவர்களைக் கவருவது இனிமையும் எளிமையும் ஓசையின்பமும் பொருளின்பமும் கொண்ட நாட்டுப்புறப் பாடல்களே.

நாட்டுப்புறப் பாடல்கள் இலக்கணவரம்பை மீறியே எழுந்தவையாயினும் பாலுக்கு இன்றியமையாத ஓசை நயமும் பொருள் நயமும் கொண்டு உவமை நயமும் மிக்கு விளங்குவதால் அவை என்றும் இறவாப் புகழ் பெறுகின்றன. அவை இறவாத புகழை மட்டும் பெறுகின்றனவே அன்றித் தம்மைக் காலவெள்ளத்தில் கரைந்து போகாத வண்ணம் காப்பாற்றிக் கொள்ளும் திறமையைப்பெறவில்லை. எனவே இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் எழுதப் பெற்ற சங்க இலக்கியம் இன்று படிக்கக் கிடைக்கும் பொழுதும் அப்பொழுது வழங்கிய நாட்டுப் புறப்பாடல்கள் நமக்குக் கிடைக்கவில்லை, ஏனெனில் இவை 'ஏட்டில்-எழுதாக் கவிதைகள்', காலவெள்ளத்தில் அடித்துச் செல்லப் பெறுபவை. இந்நிலையில் இவற்றை யெல்லாம் தொகுத்துக் காக்க வேண்டுமென்ற ஆர்வம் சிலருக்கு எழுந்தது. மேனாட்டார் சிலரும் இம்முயற்சியில் ஈடுபட்டனர்.

இந்நூலில் தாம் அரிதின் முயன்று தொகுத்து வைத்த நாட்டுப் பாடல்களனைத்தையும் தமக்களித்துள்ளார். திரு செ. அன்னகாமு பி.ஏ., எல்.டி., அவர்கள். இப் பாடல்கள் அனைத்தையும் புது நாகரிகம் வேகமாகப் பரவி வரும் இக்காலத்து மக்கள் தெரியாது போய்விடக் கூடாது என்பதோடு எதிர்கால மக்களும் இத்தகைய இலக்கியம் இருந்ததையே அறியாமல் போய் விடவும் கூடாது என்ற நோக்கத்தோடு திரு. அன்னகாமு அவர்கள் இவற்றைத் தொகுத்துள்ளார்கள். இந்நூலை வெளியிடும் பேற்றினை இக்கழகத்திற்கு அளித்தமைக்காக அவர்கட்கு எம் நன்றி உரித்தாகுக. மறைந்து கொண்டுவரும் இவ்விலக்கியத் துறையினைப் போற்றிப் பாதுகாத்து மக்கள் அனைவரும் பயன் பெறுவார்கள் என்று நம்புகிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# முன்னுரை

தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளிலும், உள்நாட்டுக் கிராமங்களிலும் ஓர் உயர்ந்த பண்பு நிலவி வருகிறது. அவ்விடங்களில் வாழும் மக்கள் புத்தகமும் படிப்பும் கண்டறியார். அவர்கள் கல்லூரிகளுக்குச் சென்றதில்லை. எனினும் உயர்ந்த கருத்துக்களும், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நாம் நம் இலட்சியங்களாக ஏற்று வரும் இராமன், முருகன் போன்றவர்களின் உபதேசங்களும் அவர்கள் வாழ்க்கையின் முக்கிய அம்சங்களாக இருந்து வந்திருக்கின்றன. இவற்றை, இப் புத்தகத்தில் வெளியிடப் பெற்றிருக்கும் நாட்டுப் பாடல்கள் மூலம் நாம் அறிகிறோம்

இப் பாடல்கள் பலவிதமானவை. உயர்ந்த வேதாந்தக் கருத்துக்கள் கொண்டவை அவற்றில் சில. இவை தவிர, மக்கள் தினசரி வாழ்க்கையில் கண்ட அனுபவங்கள், அனுபவித்த இன்ப துன்பங்கள் ஆகியனவும் இப்பாடல்கள் மூலம் சுவைபடச் சொல்லப் பெற்றிருக்கிறது. இப்பாடல்கள் பலதரப்பட்டன. உழவு செய்யும் போது, நாற்று நடும் போது, வண்டி ஓட்டும் போது, கல்தூக்கும் போது, இன்னும் பலவிதமான காரியங்கள் செய்யும் போது சிரமத்தை மறந்து பலர் ஆனந்தமாகச் சேர்ந்து வேலை செய்ய இவை உதவியிருக்கின்றன. கணவன் மனைவி சண்டைகள், அவை தீர்ந்து சமாதானமாகும் விதங்கள் முதலியனவும் அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. நம் கிராம மக்களது வாழ்க்கையின் எல்லா அம்சங்களும் இந்நூலில் அழகுபெறச் சித்திரிக்கப் பட்டுள்ளதைக் காணலாம். இவை அனைத்தையும் எளிய பதங்களில், யாரும் பாடக்கூடிய மெட்டுக்களில், ஆண்கள் பெண்கள் குழந்தைகள் முதலிய அனைவரும் சுலபமாகப் பாடக் கூடிய முறையில் அமைந்திருப்பதே இதன் முக்கிய விசேடமாகும். இப்பாடல்களின் எண்ணிக்கை பல ஆயிரங்களாகும். இவை ஏட்டிலே எழுதப்படவில்லை, மக்கள் மனதிலே, அவர்கள் உணர்ச்சி வடிவிலே பரம்பரையாக வந்திருக்கின்றன. சமீப காலத்திலே சிலர் இவற்றைத்

தேடிக் கண்டுபிடித்துச் சேர்க்கும் பணியிலே ஈடுபட்டிருக் கிறார்கள். அவர்கள் நாட்டின் உயர்ந்ததொரு பொக்கிஷத் தைக் காப்பாற்றியவர்கள் ஆவார்கள். ஸ்ரீ அன்னகாமு அவர்களின் இந்த 'ஏட்டில் எழுதாக் கவிதைகள்' அத்தகைய சிறந்த முயற்சியாகும்.

இப்புத்தகம் ஸ்ரீ அன்னகாமு அவர்களின் பன்னிரண்டு ஆண்டு முயற்சி. பல தடவைகள் திருச்சி வானொலி நிலை யத்தில் இவற்றைப் பாடியிருக்கிறார். பள்ளிகளில் பிள்ளை களுக்குப் படித்துக் காண்பித்து மகிழ்ச்சி ஊட்டியிருக்கிறார். இப்பொழுது அவருடைய முயற்சியின் ஒரு பகுதி புத்தக உருவிலே வெளிவருவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷய மாகும்.

இப்புத்தகத்தில் பாட்டுகள் நன்றாக வரிசைப் படுத்தப் பட்டிருக்கின்றன. கடவுள் துதி, மழைச் சிறப்பு, நாட்டுச் சிறப்பு, குழந்தை பிறப்பு வளர்ப்பு, குழந்தைகள் விளை யாட்டு, திருமணம், பலவிதமான தொழில், களியாட்டம், கதைப் பாடல்கள் என்ற முறையில் ஆசிரியர் பாகுபடுத்தி யிருப்பது, ஒவ்வொரு துறையிலும் சிலவற்றைத் தெரிந்து கொள்ள உதவியாயிருக்கும்.

மக்கள் உள்ளக் கிடக்கைகளையும் உணர்ச்சிகளையும் வெற்றி தோல்விகளையும் இன்ப துன்பங்களையும் ஆசை களையும் அவைகளை அடையச் செய்யும் முயற்சிகளையும் அழகுபெற எடுத்துரைப்பதே எல்லா மொழிகளிலும் இலக்கி யத்தின் சாரமாக இருந்து வருகிறது. அம்முறையில் இந் நாட்டுப்பாடல் தொகுப்பு, தமிழ் இலக்கியத்தின் ஓர் அரிய அம்சமாகும். இதில் கைம்மாறு கருதாது தமிழ் அன்பாலும், தமிழ் நாட்டுக் கிராம மக்கள் பாலுள்ள அன்பாலும் உந்தப் பட்டுப் பல ஆண்டுகள் உழைத்து இந்நூலை வெளியிட்டுள்ள ஆசிரியருக்கு நம் அன்பும் நன்றியும் உரியன.

ஸ்ரீ ராமகிருஷ்ணா வித்யாலயம்
21—4—59

தி. சு. அவினாசிலிங்கம்

## தோற்றுவாய்

" பாடறியேன் படிப்பறியேன் !
பள்ளிக்கூடம் நானறியேன் .
ஏடறியேன் எழுத்தறியேன் !
எழுத்துவகை நானறியேன் !
ஏட்டிலே எழுதவில்லை !
எழுதிநான் படிக்கவில்லை !
வாயிலே வந்தபடி
வகையுடனே நான் படிப்பேன் !

# நன்றியுரை

இதை நன்றி நவில எழுதுகிறேன். என் முன்னிலையிலும் நான் கேட்கும் படியான தூரத்திலிருந்தும் இந் நூலிலுள்ள பாடல்களையும், என்னிடமுள்ள இதர பாடல்களையும் பாடிய சகோதர-சகோதரிகளை என்தலை தாழ்த்தி வணங்குகிறேன்.

அன்புக்கண் கொண்டு என்னைத் தமிழ் உலகிற்கு அறிமுகம் செய்துள்ள நண்பர் உயர்திரு வி. ரங்கராஜன் எம்.ஏ. அவர்களுக்கும், இந்நூலுக்கு மேலானதொரு சிறப்புரை தந்த சென்னை மாநிலக்கல்வியமைச்சர் உயர்திரு சி. சுப்பிரமணியம் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி! மதிப்புரை வழங்கிச் சிறப்பித்த மும்மொழி வல்லுநர், நாடோடி இலக்கியங்களின் வளர்ப்புத்தந்தை உயர்திரு கி. வா. ஜகந்நாதன் அவர்களுக்கும், முன்னுரை தந்து சிறப்பித்த சென்னை மாநில முன்னாள் கல்வியமைச்சர் உயர்திரு தி. சு. அவினாசிலிங்கம் அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றி உரித்தாகுக!

தமிழ் நாட்டின் தலைசிறந்த தினசரி, வார, மாத ஏடுகள் உயர்தரமான மதிப்புரை தந்து என்னைப் பெரிதும் ஊக்குவித்துள்ளமைக்கு என் இதய பூர்வமான நன்றி!

சென்னை அரசாங்கம் சமுதாய நலத்திட்ட இலாகாவைச் சேர்ந்த பிளாக்குகளிலுள்ள கிராம சேவகர்கள் சேவிகைகள் பொதுமக்கள் உபயோகத்திற்கென 1026 பிரதிகள் வாங்கியதோடு கிராமத்தாரும் இதைப் படித்துப் பயனடைய வேண்டும்

எனத் தெரிவித்துள்ளது. அரசாங்கம் கிராம மக்களின்பால் அவர்களின் கலைவளர்ச்சியின்பால் கொண்டுள்ள அக்கறையைப் பாராட்டா திருக்கமுடியாது. சென்னைச் சமுதாய நலத்திட்ட இலாகாவினருக்கு என்னை இத் துறையில் ஊக்கியதற்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்பாடல்களில் பல திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தில் ஒலிபரப்பப்பட்டு ஒலிப்பதிவும் செய்யப்பட்டுள்ளன. அவற்றை வெளியிட அனுமதித்த அந் நிலையத்தாருக்கு எனது நன்றி!

இந்நூல் இப்பொழுது மூன்றாவது பதிப்பாக வெளிவருகின்றது. கடந்த இரண்டு பதிப்பையும் அன்புடன் வாங்கி என்னை ஆதரித்த தமிழினம் இந்த மூன்றாம் பதிப்பையும் வரவேற்குமென நம்புகின்றேன். இப்பதிப்பு பல திருத்தங்களோடு விரிவாக்கப்பெற்றுள்ளது.

காந்திகிராமம்
விகாரி, தை, 29
12—2—'60

செ. அன்னகாமு

# மதிப்புரை

பாட்டைக் கேட்டு இன்புறும் ஆற்றல் பசுவுக்கும் பாம்புக்கும் குழந்தைக்கும் உண்டென்று சொல்வார்கள்.

"காட்டில் விலங்கறியும் கைக்குழந்தை தானறியும்
பாட்டின் சுவையதனைப் பாம்பறியும் என்றுரைப்பார்"

என்பது பாரதியார் பாட்டு. பாட்டோடு கவிதைச் சுவையை அறியும் ஆற்றலும் மனிதனுக்கு இருக்கிறது. இந்த நாட்டில் கவிதையை எழுதுவார் இல்லை; பாடுவார் இருந்தனர். அதனால் நாவலர் என்று அவர்களைக் கூறினார்கள். கவிதையை வாயாரப் பாடியும் கேட்டும் இன்புறும் வழக்கத்தை நெடுங்காலமாக மனித சமுதாயத்தினிடம் காண்கிறோம். பிறந்த குழந்தைக்குத் தாலாட்டிசைத்து வளர்த்துப் பாட்டிசைத்துச் சோறூட்டி, விளையாட்டுக் காட்டி, இசைப்பாடல் பாடி மணம் செய்து, இறந்தால் ஒப்பாரி பாடி உணர்ச்சிகைக் காட்டும் தாய்மார் நிறைந்த நாடு தமிழ்நாடு. பாட்டால் வளரும் வாழ்க்கை இதுவென்றே சொல்லி விடலாம்.

மனிதன் வரையறை செய்து வளர்த்துவரும் பூந்தோட்டத்திலும் மலர் உண்டு; அவன் வளர்க்காத காட்டிலும் மலர் உண்டு. அது போலப் புலமைச் சிறப்பால் வளம்பெற்ற கவிஞர்கள் பாடிய இலக்கியச் செய்யுட்கள் அறிஞர்களுக்கு இன்பம் ஊட்டுகின்றன; நாடோடியாகப் பாமரர்களிடையே வழங்கும் பாடல்களே சிற்றூர்களில் வாழ்ந்து தொழில் செய்து பிழைக்கும் ஏழைகளுக்கு இன்பம் தருகின்றன. இசை,

தாளக்கட்டு, கவிச்சுவை ஆகிய இலக்கணங்கள் இரண்டுக்கும் உண்டு. காட்டு மலர் போன்ற நாடோடிப் பாடல்களின் இசை இசையுலகக் கட்டுப்பாட்டில் அடங்காதது; ஆயினும் அப்பாடல்களினூடே ஒரு கட்டுப்பாடு இருப்பதைக் காண லாம். அப்படியே யாப்பிலக்கண ஒழுங்குக்கு உட்படாத பாடல்களாக அவை இருக்கலாம்; ஆயினும் அவற்றுக் கென்றே ஒரு தனி அமைப்பு நுட்பமாக இருக்கிறது.

இத்தகைய நாடோடிப்பாடல்கள் தமிழ்நாட்டில் மிகுதி யாக வழங்குகின்றன. சினிமா வருவதற்கு முன் வழங்கின அளவுக்கு இப்போது வழங்கவில்லையானாலும், இன்னும் பலபல பாடல்கள் எழுதத் தெரியாத மக்களுடைய உள்ளத்தே இன்ப உணர்ச்சியைப் பெய்து கொண்டு உலாவுகின்றன. அவற்றையெல்லாம் தொகுக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டி ருக்கின்றனர்.

அன்பர் திரு. செ. அன்னகாமு அவர்கள் இந்தப் பாடல்களிலே நெஞ்சைப் பறிகொடுத்தவர். இவற்றை மக்கள் பாடக் கேட்டவர். அந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தவர். மதுரை மாவட்டத்தில் வழங்கிவரும் பல பாடல்களை வகைப் படுத்தி விளக்கக் குறிப்பு எழுதி இந்த அழகிய தொகுதியை வெளியிடுகிறார். பதினேழு தலைப்புக்களில் பாடல்களை வரையறை செய்து பிரித்து அமைத்திருக்கிறார்.

கவிதைச் சுவை, நாடோடிப் பாடலின் இயல்பு ஆகிய வற்றைப் பற்றிப் பல அறிஞர்கள் எழுதியவற்றை நினை வுக்கு கொண்டு வந்து அந்த இயல்புகள் இந்தப் பாடல் களில் பொருந்தியிருப்பதை எடுத்துக் காட்டுகிறார். பறவை களின் குரலைக் கேட்டு நாடோடிப் பாடல்களுக்குரிய இசையை அமைத்துக் கொண்டார்கள் என்றும், எந்த எந்தத் தொழிலில் ஈடுபடுகிறார்களோ அந்தத் தொழிலுக்கு ஏற்றபடி தாள அமைப்புடைய பாடல்களைப் பாடுகிறார்கள் என்றும் இவர் ஆராய்ந்து கூறுகிறார். சுருளியாற்றங் கரையில் உள்ள சிற்றூரில் பிறந்த ஆசிரியர் இளமையில் பல ஆண்டுகள் வயலில் வேலை செய்து இயற்கையெழிலரசியின்

புன்னகையை நுகர்ந்தவர். அந்தக் கவிதையரங்கில் காற்றோடு இழைந்து வந்த பாடல்களைப் பாடியும் கேட்டும் இன்புற்றவர். அந்தப் பாடல்களோடு இணைந்து பலவகை வேலைகளைச் செய்தவர். ஆனால் அப்போது இவர் உணராத இன்பம் இன்று இவர் உள்ளத்திலே ஊற்றெடுக்கிறது. 'அந்தக் காலத்தைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் மனதில் ஏதோ சொல்லமுடியாத ஓர் இன்ப உணர்ச்சி எழுகிறது.' அந்த உணர்ச்சி தூண்ட இந்த அரிய தொகுதியைத் தொகுத்திருக்கிறார்.

நாடோடிப் பாடல்களை அனுபவிக்கும் திறமைதான் நமக்கு உண்டு; நாம் எவ்வளவு கலைவல்லுநராக இருந்தாலும் கவிஞராக இருந்தாலும் நாடோடிப் பாடல்களை இயற்ற இயலாது அந்த உலகமே வேறு. நம் உள்ளம் அவர்களைப்போல் ஆனால், நாமும் நாம் படித்தவற்றையெல்லாம் மறந்து நாடோடியானால், ஒரு கால் அத்தகைய பாடல்களைப் பாடலாம். அது முடிகிறகாரியமா? வளர்ந்தவன் கிழவனாக வேடம் புனையலாம். பேசலாம். ஆனால் குழந்தையாக மாறவோ குழந்தை போல மழலை பேசவோ இயலாது.

"கல்லா மழலை"

என்பர் ஒரு புலவர். அதுபோலவே கவிதையுலகத்தில் இவை மழலைக் கவிகள். நெஞ்சில் வஞ்சமில்லாப் பாமரர் உள்ளத்தே உணர்ச்சியைக் கருதியாகக் கொண்டு தாளத்தோடு எழுந்தவை. "நானும் புதிய நாடோடிப் பாடல்கள் இயற்றுகிறேன்; பழையதை இலக்கணப்படி செப்பஞ் செய்கிறேன்" என்றால் அத்தகைய முயற்சிகள் கங்கையைக் கழுநீராக்கும் முயற்சிகளாகவே முடியும். இதை அன்பர் சுட்டிக் காட்டுகிறார். "நாட்டுப் பாடல்களைத் திரட்டி வெளியிட முயலுபவர்கள், எவ்விதத்திலும் அவற்றின் தனித்தன்மை பழுதுபடாதிருக்குமாறு கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொள்ளவேண்டும்; கொச்சையாக இருக்கின்றன என்று அவற்றில் காணும் மழலைச் சொற்களை மாற்றுவதோ

பொருள் நயம், ஓசை நயம் ஏற்படுமெனக் கருதிப் புதிய சொற்களைப் புகுத்துவதோ பண்களில் புதுமையைப் புகுத்துவதோ நாட்டுப்பாடல்களுக்குத் தீங்கு செய்வதாகும்'' என்று எழுதுவதை இத்துறையில் ஈடுபடுபவர்கள் தம் சிந்தையில் வைத்துக் கொள்ளவேண்டும்.

ஃ ஃ ஃ ஃ

ஆசிரியர் திரு. அன்னகாமு அவர்கள் தேடி எடுத்துத் திரட்டித் தந்திருக்கும் இந்தத் தேனடை எத்தனை இனிமை யுடையதாக இருக்கிறது! ஒரு பொருளின் பெருமையையும் அருமையையும் நுட்பமாகக் கூறும் பாடல்கள் பல. மலர் களை இறைவனுக்கு அர்ச்சனை செய்ய எடுக்கிறார்கள். அவற்றின் மேல் மூச்சுக் காற்றுப் படாமல் வாயை மூடிக் கொண்டு மெல்ல எடுப்பார்கள் என்பதை நாம் கேட்டிருக் கிறோம். ஆனால் இவர்கள் எப்படி எடுக்கிறார்கள்?

கையாலே பூ எடுத்தால் காம்பழுகிப் போகுமின்னு
விரலாலே பூ எடுத்தால் வேரழுகிப் போகுமின்னு
பொன்னூசி கொண்டு பூத்த மலரெடுத்து
வெள்ளூசி கொண்டு வெடித்த மலரெடுத்து

வழிபடுகிறார்கள். பூவின் மென்மையை இவர்கள் எத்தனை நுட்பமாக உணர்ந்திருக்கிறார்கள்!

காட்டின் செறிவைச் சொல்கிறது ஒரு பாட்டு. ''மந்தியும் அறியா மரன் பயில் அடுக்கம்'' என்று இலக்கியக் கவிஞர் பாடுவதை நாம் கேட்டிருக்கிறோம். இந்த நாடோடிப் பாவலனுக்குக் காட்டின் செறிவை அளந்து காட்ட மந்தி வரவில்லை; ஈயும் கொசுவும் வருகின்றன.

ஈப்புகுந்தால் இறகொடியும்
இண்டம் பிணங்காடு[1]
கொசுப் புகுந்தால் இறகொடியும்
கொங்கர் இளங்காடு.

---

1. புனக்காடு என்றும் பாடுவர்.

தொன்னை தைத்துச் சோறு இடுகிறார்கள். வாழை யிலையில் தொன்னை தைப்பாரையும் தேக்கிலையில் தொன்னை தைப்பாரையும் கண்டிருக்கிறோம். பசியறிந்து அன்னமிடும் இந்தப் பாண்டியனார் நெல்லி இலையாலே தொன்னை தைக்கிறாராம்.

நெல்லி இலைபிடுங்கி
நேர்த்தியாய்த் தொன்னை தைத்துப்
பசியறிந்து அன்னமிடும்
பாண்டியனார் பெற்ற கண்ணோ?

இந்தப் பாடல்களைப் பாடுகிறவர்கள் பெரும்பாலும் ஏழை மக்கள். வாழ்க்கையில் வளம் அறியாதவர்கள்; ஆனாலும் மனநிறைவு உள்ளவர்கள். வாழ்க்கையிலே பெறாதவற்றைக் கற்பனையிலே கண்டுகளிப்பவர்கள். வெள்ளி விளக்கும், தங்க விளக்கும் வைக்க அவர்களுக்கு வாய்ப்பில்லை. ஆனால் அவர்களுடைய கற்பனை உலகத்திலே அவற்றைஏற்றி வைக்கும் பரந்த உள்ளத்துக்குப் பஞ்சம் இல்லை. வெள்ளியும் தங்கமுமாக அவர்கள் கவிதை யுலகத்திலே நிரப்பி அழகு பார்க்கிறார்கள். நேரிலே இருப்பவற்றை நுகர்வது சிலகாலம்; நெஞ்சிலே இருப்பவற்றை எப்போதும் நுகரலாம் அல்லவா?

நாடோடிக்கவிஞன் தான் வழிபடும் சண்முகன் கோயிலில் விளக்கேற்றுகிறான் பாருங்கள் :

வெள்ளி விளக்கெரியும்
வெண்கலங்கள் ஓசையிடும்
தங்க விளக்கெரியும்
சண்முகனார் கோயிலிலே

இந்தக் கற்பனை உலகத்திலே வரும் வயலில் எப்படி உழுகிறார்கள்? விதைக்கிறார்கள்?

தங்கக் கலப்பை கொண்டு
தடம்பதியா மாடு கொண்டு
வெள்ளி விதை எடுத்து
விதை விதைக்கப் பிறந்த கண்ணோ?

வள வாழ்வுடையவர்கள் அவர்களுடைய கற்பனையை உண்மையான நிகழ்ச்சி ஆக்க முனையலாம்; ஆனால் முழு வெற்றியைக் காண முடியாது. தங்கக் கலப்பையும் வெள்ளி விதையும் அவர்களுக்குக் கிடைக்கலாம்; அவற்றைப் பொறுத்த மட்டில் கற்பனையைக் கண்கூடாக்கலாம்; ஆனால் தடம் பதியா மாட்டுக்கு எங்கே போவார்கள்?

இந்த ஏழைகள் வாழ்கிற வீடு வெறும் குடிசை. அதுவும் சந்திர சூரியர் தடையின்றிக் கரம் நீட்டும் சிறு குடில்கள். அதன் சிறுமை மழை வந்தால் தெரிந்துவிடும். அது 'தஞ்ச மற்ற கூரை'.

மேகந் திரளுதடி
    மின்னிருட்டுக் கம்முதடி
தலையே நனையுதடி
    தஞ்சமத்த கூரையிலே.

தலையை நனையச் செய்யும் இந்தக் குடிசையிலே அவர்கள் உடம்புஇருந்தாலும் அவர்கள் உள்ளம் எங்கெங்கோ தாவிப் பறக்கிறது. கிழிசல் துணியிலே ஏணை கட்டிப் பாடும் தாயின் தாலாட்டிலே, அவள் கட்டும் மாளிகையையும் மண்டபத்தையும் பார்க்கிறோம்.

ஏழரையாம் கோபுரமாம்
    எறும்பேறா மண்டபமாம்
பாம்பேறா மண்டபத்தே
    பள்ளிகொள்ள வந்தகண்ணோ!

அந்தக் குழந்தை ஏதோ அன்றாடங் காய்ச்சியான ஏழைக்குப் பிறந்தவன் என்று நினைக்கவில்லை. இரவும் பகலும் பசித்தார் முகம்பார்த்து அமுதிடுவார் பெற்ற பாலகன் என்று கற்பனை செய்கிறாள்.

கொப்பரையில் சோறும்
    குடத்தில் இளநீரும்
பந்தம் கொளுத்திப்
    பசித்தார் முகம்பார்த்து

அந்தநகர்ச் சோலையிலே
அழுதிடுவார் பாலகனோ !

தங்கள் சொந்த ஊரினிடம் யாருக்குமே அன்பு இருப்பது இயற்கை. கோகிலாபுரத்து மக்கள் அதன் சிறப்பைப் பாடுகிறார்கள்.

உப்புத்தண்ணி கோட்டையூரு
உவருத்தண்ணி பாளையமாம்
தேங்காத்தண்ணி கோகிலாபுரம்—நீங்க
தேடிவந்தால் ஆகாதோ ?
நித்தநித்தம் நெல்லுச் சோறு
நெய்மணக்கும் கத்தரிக்காய்
பூமணக்கும் கோகிலாபுரம்
போகமனம் கூடலையே !

இயற்கையோடு ஒன்றி வாழும் நாட்டு மக்களுக்கு இயற்கையே தோழியாக இருக்கிறாள். வண்டும் மரமும் தவளையும் அவர்களுடைய வாழ்க்கைக்கு இன்பமூட்டுகின்றன.

வண்டுகள் ஆட மரங்கள் கவிபாடப்
பெண்டுகள் ஆடப் பெற்றெடுத்த பாலகனோ !
தவளை குலவையிடத் தாமரையே பூமலர
பொன்னான தாமரையும் பூக்குமந்தப் பொய்கையிலே.

காதற் காட்சிகளில் எத்தனை வகை! கவிதைக்கு ஏற்ற பொருள் அல்லவா காதல் ?

"கண்ணன் முகம் மறந்து போனால் – இந்தக்
கண்கள் இருந்துபயன் உண்டோ?
வண்ணப் படமும் இல்லை கண்டாய் – இனி
வாழும் வழி என்னடி தோழி?"

என்று பாடுகிறார் பாரதியார். ஆனால் நாடோடிக் கவிஞன் காட்டும் காதலி வாழும் வழி தெரியாதவள் அல்லள். அவள் என்ன செய்கிறாள் தெரியுமா?

ஒருநாள் ஒருபொழுது உங்கமுகம் பாராமே
ஓடைக்கரை மண்ணெடுத்து உருவாரம் செஞ்சு பார்த்தேன்

காதல் உலகப் பாட்டிலும் வேதாந்த உலகப் பாட்டிலும் சொல்லால் உணராமல் குறிப்பால் உணரும்படி அமைந்த உருவகப் பாடல்கள் பல உண்டு. உள்ளுறையென்றும் இறைச்சியென்றும் இலக்கணம் சொல்லி உள்ளே நுட்பமாக அமைந்து கிடக்கும் பொருளைப் புலவர்கள் விரித்துரைப் பார்கள்.

தன் காதலன் புறஉலகில் நடமாடுகிறான். அவன் 'பரத்தமை'க்கு ஆளாகக் கூடாது என்பது அவள் எண்ணம். அதை நயமாக, குறிப்பாகச் சொல்லி அனுப்புகிறாள்.

கருவேலங் காட்டுக்குள்ளே
கணக்கெழுதப் போற தம்பி
கருவேலம் பூவாடை தட்டிக்
கணக்கை மறந்திடாதே!
எருக்கலங் காட்டுக்குள்ளே
ஏடெழுதப் போற தம்பி
எருக்கலம் பூவாடை தட்டி
ஏட்டை மறந்திடாதே!

அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் 'கணக்கெழுதவும்' 'ஏடெழுதவும்' போகிற தம்பிமார்கள் கணக்கையும் ஏட்டையும் மறந்துபோய் வாழ்வதை நாம் உணர்ந்திருக்கிறோமே!

வாழ்விழந்த மகளிர் தம்முடைய துயரத்தை ஒப்பாரியிலே வடித்துக் காட்டும்போது உண்டாகும் அவலச்சுவை இலக்கியத்தில் எங்கும் காண முடியாது. அந்தப் பாடல்களில் பொங்கும் உணர்ச்சியும், புரளும் சொற்களும், ஒளிரும் உருவக உவமைகளும் அவற்றிற்கே உரியவை. அந்த அவல உலகமே தனி.

மையினால் இட்டபொட்டு
நெய்யாய் உருகவில்லை
பந்தல் பிரிக்கவில்லை
வந்தசனம் போகவில்லை

பலகாரம் சுட்டசட்டி
பாதிமணம் போகவில்லை
இட்டலி சுட்டசட்டி
எடுத்துக் கவுத்தவில்லை
கோலம் அழியவில்லை
கொட்டுக்காரன் போகவில்லை.

அதற்குள் இடிவிழுந்துவிட்டது! இதில் முன்நிலையை நினைப்பூட்டி அவலத்திற்கு உரமேற்றுகிறாள் அந்தப் பெண். இன்னும் மேலான கவிப்பதம் அமைய வடித்த அவலச் சுவைக்கு உதாரணம் வேண்டுமா?

சில்லென்று பூத்த
சிறுநெருஞ்சிக் காட்டூடே
நில்லென்று சொல்லி
நிலைநிறுத்திப் போனீரே!
தலையை வகுந்து
தாழம் பூச்சூடி
தலையிலே உள்ளெழுத்தைத்
தாயார் அறியவில்லை!

இரண்டு அன்றில்கள் இணைந்து மரத்திலே இருந்தன. அதில் ஓர் அன்றிலை ஒரு வேடன் எய்துவிட்டான். அதைக் கண்டு வால்மீகி இரக்கமிகுந்து அவலச்சுவை அல்லது கருணா ரசமிக்க கவிதை ஒன்றைப் பாடினார். அதுவே இராமாயண மாகாவியத்துக்கு வித்தாயிற்றாம். 'அந்தச் சுலோகம் இப்படி இருக்குமென்று அறியாத நாடோடி உலகத்தில் சோக ரசத்தில் சற்றும் குறைவில்லாத பின்வரும்பாடல்கள் தோன்றி யிருக்கின்றன.

ஆற்றங் கரையோரம்
அன்னத்தை மேயவிட்டேன்
அன்னமென்றும் பாராமல்
அம்பு கொண்டு எய்தார்கள்!
குளத்தங் கரையோரம்
குயிலை நான் மேயவிட்டேன்

குயிலென்றும் பாராமல்
குண்டுகொண்டு எய்தார்கள்!

அன்றிலை எய்த வேடனைச் சபித்த பாட்டிலே துயரமும் இருக்கிறது; கோபமும் இருக்கிறது. இங்கே கலப்பில்லாத துயரமே எழுந்து உருவாகிக் கூவுகிறது.

இலக்கியங்களிலே பயிலும் சொல்லும் பொருளும் நாடோடிப் பாடல்களில் தமக்குரிய வகையில் இணைந்து அணி செய்கின்றன. இலஞ்சியம் என்ற சொல் குழந்தை களைக் குறிக்க வரும் சொல்; அருமைப் பாட்டைக் குறிக்க வருவது.

"மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன்
முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப் போன்வெய்ய
வாரணம் போல்
கைதான் இருப துடையான் தலைபத்தும்
கத்தரிக்க
எய்தான் மருகன், உமையாள் பயந்த
இலஞ்சியமே!"

என்று அருணகிரிநாதர் பாடுகிறார். இந்த அருமையான சொல்,

சாம்பசிவ பூசைசெய்து
தாரணியில் பெத்தகண்ணோ
ஈசன்கொடுத்த இலஞ்சியமே
கண்ணுறங்கு

என்ற தாலாட்டுக் கண்ணியில் வருகிறது.

திருமழிசைக்கு வடமொழியில் மஹீஸாரபுரம் என்று பெயர். மண்ணிலே சாரமுடையது என்று பொருள். உலகத்துப் பிற மண்ணையும், திருமழிசை மண்ணையும் ஒரு தராசிலே வைத்துத் தூக்கினால், திருமழிசை மண் கனக்கு மாம். இப்படி ஒரு பாட்டு உண்டு. இந்த வழக்கை ஏட்டில் எழுதாக் கவியும் சொல்கிறது. மாரியாத்தாள் எங்கே தங்க

லாமென்று ஆராய்ந்தாளாம்; ஓரிடத்தில் தங்கத் தராசெடுத்து மண்ணை ஒரு தட்டிலும், பொன்னை ஒரு தட்டிலும் வைத்து நிறுத்தாளாம். மண், கீழே இழுத்ததாம். அந்த இடம் அவள் திருவுள்ளத்தை இழுத்தது. அங்கேயே 'டேராவை' அடித்து விட்டாளாம்.

தங்கத் தராசெடுத்து — மண்ணைத்
　　தானா நிறுப்பமின்னு
மண்ணு ஒரு தட்டில்
　　பொன்னு ஒரு தட்டில்
நிறுத்தாளாம் அந்நேரம் — மாரி
　　நிலைநிறுத்த வேணுமின்னு
மண்ணே இழுக்குதின்னு — மாரி
　　வளைச்சடிச்சாள் டேராவை.

இந்தப் பாடல்களிலும் சில இடங்களிலுள்ள பாடலோடு உலகத்துப் பாடல்களை வைத்து நிறுத்தால் இழுப்பவை உண்டு: இவை பிறந்த மண்ணின் வாகு அது!

இத்தகைய சிறந்த தொகுதியை வெளியிட்டுத் தமிழ் நங்கையை அழகு பண்ணிய அன்பர் திரு. அன்னகாமுவுக்குத் தமிழுலகம் நன்றி பாராட்டும் கடமைப்பாடுடையது' தோட்டத்து ரோஜாவினால் அழகுபெறும் அம்மங்கை காட்டு முல்லையினாலும் அழகும் ஆனந்தமும் அடைகிறாள்.

ஃ ஃ ஃ ஃ

இன்னும் இந்தத் துறையில் பலபல வெளியீடுகளை இந்த நாடோடிக் கவிதைக்காதலர் வெளியிட வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

காந்தமலை,
சென்னை-28
1-6-59

கி. வா. ஜகந்நாதன்
ஆசிரியர் 'கலைமகள்'

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | தலைவாசல் | 1 |
| 2. | பாடிப் பரவசமடைவோம் | 16 |
| 3. | கடவுள் துதி | 29 |
| 4. | மழை | 43 |
| 5. | நாட்டுச் சிறப்பு | 51 |
| 6. | பிறப்பு வளர்ப்பு | 58 |
| 7. | குழந்தைகளின் விளையாட்டு | 95 |
| 8. | திருமணம் | 114 |
| 9. | தொழிற்பாட்டு | 128 |
| 10. | நவீனம் | 161 |
| 11. | களியாட்டங்கள் | 170 |
| 12. | கதைப் பாட்டுக்கள் | 197 |
| 13. | வாழ்க்கையில் சோதனைகள் | 210 |
| 14. | வேதாந்தப் பாடல்கள் | 215 |
| 15. | ஆதிவாசிகளின் பாடல்கள் | 219 |
| 16. | மங்களம் | 233 |

# ஏட்டில் எழுதாக் கவிதைகள்

## 1. தலைவாசல்

*''எனது கவிதைப் பெண் அவளுடைய அணி கலன்களைக் கழற்றி வைத்துவிட்டுச் செய்யாக் கோலமொடு பொலிவுற்று விளங்குகிறாள். ஆடையிலும் அணிகளிலும் அவள் பெருமிதம் கொள்ளவில்லை. அணிகள் நம்முடைய ஒற்றுமையைக் குலைக்கும். உனக்கும் எனக்கும் இடையில் வந்து சத்தமிட்டு, நினது அந்தரங்கப் பேச்சை நான் கேட்காது செய்துவிடும். நினது பார்வையில் எனது காவியப் பெருமை நாணுகிறது. ஏ கவியரசே! நினது திருவடியில் நான் அமர்ந்திருக்கிறேன். எனது வாழ்வை நாணற்குழல் போல் நேராக அமைத்து அதில் நாத ஒலி செய்தருள்வாயாக!''*

—கவி தாகூர்.

நாட்டுப் பாடல்கள் எளியவை; பகட்டில்லாதவை; பரிசுத்தமானவை; பொய்க்கலப்பற்றவை; நேரானவை; உள்ளத்தை ஈர்க்கும் இனிமையும் இசை யொலியும் நிறைந்தவை. ''செழுமை மிக்க மனோபாவமும், கற்பிக்கப்படாத கட்டுப்பாடற்ற கற்பனையும்'' நிறைந்த களஞ்சியங்கள் அவை. தீங்கற்ற கலைக்கருவூலங்களென்றே அவற்றைக் கூறலாம். அதன் வேர்கள் ஆழத்தில் சென்று மனித சமுதாயத்தின் ஆத்மாவைத் தொடுகின்றன. ''உயிர் பெற்று

வளரும் சமுதாயமாகிய கற்பாறையிலிருந்து புறப்படும் ஜீவ ஊற்றே கவிதை'' என்கிறார், எப். பி. கம்மெரி என்ற மேனாட்டு அறிஞர். மனித சமுதாயத்தின் ஆரம்ப காலந் தொட்டு, மக்களின்-பாமர மக்களின்-உணர்ச்சிப் பெருக்காகக் கொந்தளித்தோடும் நதிப்பிரவாகமே நாட்டுப்பாடல்கள். நாட்டுப்புற மக்களின் இருள் சூழ்ந்த வாழ்க்கையை ஊடுருவிச் சென்று அதை ஒளி மயமாக்கும் மின்னொளி அது; விவசாயத் தொழிலாளிகளின் சிரம மிகுந்த அன்றாட வேலைகளுக்குப் புது மெருகிட்டு, தொழிலில் இன்பச் சுவை ஏற்றும் சஞ்சீவி அது; மேலும் அது உழைப்பாளிகளின் விடுதலையைக் கோரும் சுதந்திர கீதம்!

*கட்டுப்பாடற்ற கவிதை*

மேனாட்டு அறிஞரான எல்வின் என்பவர் நாட்டுப் பாடல்களில் தாம் கண்டவற்றைப் பற்றிக் கூறும்போது, ''இங்கே சமயச்சார்பற்றதும், இலக்கியப் புத்தகங்களில் எழுதப்படாதது மான கவிதைகளைக் காண்கின்றோம். அப்பாடல்கள் விண்ணையும் மண்ணையும், மலைகளையும் பொழில்களையும், நதிகளையும் மாறுபடும் பருவங்களையும் வர்ணிப்பதோடு, மனித உள்ளத்தெழுகின்ற வெவ்வேறான உணர்ச்சிப் பாவனைகளையும் வெளியிடுகின்றன! இயற்கையான ஒளிவு மறைவும், கூச்சமுமற்ற உண்மைக் காதல், அவற்றில் காணப் படுகிறது. அதில் தாள லயத்துடன் கூடிய இன்னிசை யுள்ளது,'' என்று எடுத்துரைக்கிறார்.

அக்பரின் அரசவைக் கவிஞன் தான்சேன் ஒரு நாள் அரசனை மகிழ்விக்கும் பொருட்டுப் பாடிக்கொண்டிருந்தான். பாட்டு மன்னனை மயக்கி விட்டது. பாட்டு முடிந்தவுடன் காவலன் கவிஞனை விளித்து, ''உமது ஆசான் யார்? உமது பாட்டிலேயே இத்தனை இனிமை இருக்கிறதே, அவருடைய பாட்டில் எத்தனை அதிக இன்பம் இருக்கும்! அவரை நான்

காண விழைகிறேன்'' என்றான். அவர் மனித சஞ்சாரமற்ற வனத்தில் வதிவதாகத் தான்சேன் கூறினான். இருவரும் அவரைக் காணக் கானகம் சென்றனர்.

அங்கே பால் போன்று வழிந்தோடும் ஒரு நதி—அதன் கரையில் அடர்ந்த மரங்கள்—பெரும்புதர்கள்—அவற்றின் ஒரு மருங்கில் ஒரு தழை வீடு தென்பட்டது. வீட்டினுள் ஒரு சாது அமைதியே உருவெடுத்தாற்போல் அமர்ந்து எவ்விதப் பின்னணிக் கருவிகளுமின்றிப் பாடிக் கொண்டிருந்தார். குடிசைக்கு முன்னிருந்த பசும்புல் போர்த்த பரந்த வெளியில் மான், புலி, கரடி போன்ற காட்டுவிலங்குகள் அசைவற்றுத் தங்கள் காதுகளை உயர்த்திச் சாதுவின் பாட்டிலிருந்து வந்த நாத இன்பத்தைப் பருகிக் கொண்டிருந்தன. மரஞ்செடி கொடிகளும் அசைவற்றிருந்தன, வழிந்தோடும் நதி கூட ஒரு கணம் நின்று அந்தக் கானாமுதத்தைச் செவிமடுப்பது போலிருந்தது. இந் நிலையில் சாதுவின் அமரகீதம் 'இன்ன முதைக் காற்றில் எங்கும் கலந்தது போல்' அந்தக் குறிஞ்சி நிலமெங்கும் பரவிக் கொண்டிருந்தது. அருகிற் சென்றால் பாட்டு நின்று விடுமோவென அஞ்சி, அக்பரும் தான்சேனும் தூரத்தில் நின்றபடியே அவ்விசை இன்பத்தைப் பருகினர்.... என்பதாக ஒரு கதையை எனது சிறு வயதில் கேட்டிருக்கின்றேன்.

*தன்வயமாக்கும் தகைமை*

நாட்டுப் பாடல்களைப் பற்றி நினைக்கும்போது அக் கதையின் ஞாபகமே எனக்கு வருகிறது. ''புல்லை நகை யுறுத்தி பூவை வியப்பாக்கும் சோதி''யினைப் போன்று நாட்டுப் பாடல்கள் நாட்டுப் புறத்தையே ஒளிபெறச் செய்து, அங்குள்ள உயிரினங்களுக்கு வியப்பூட்டி, அவற்றைத் தம் வயமாக்குகின்றன. அவற்றின் சுவையைப் பாம்பும் அறிகிறது. பாம்புப் பிடாரனின் மகுடி ஓசை நாகப்பாம்பிற்குப் பித்தேற்று

கிறது. ஆயர்களின் தீங்குழலோசை கன்றுகாலிகளைத் தம்மையே மறக்கச் செய்கிறது. தாயின் தாலாட்டைக் கேட்டுக் குழந்தை சொக்கி விடுகிறது. வண்டிக்காரனின் பாட்டு வண்டியிழுக்கும் மாடுகளின் மனதைக் கவருகிறது. நெருங்கிய உறவினரை இழந்து அழுபவர்களின் உருக்கமான ஒப்பாரிப் பாட்டுகள், அவற்றைச் செவியுறுபவர்களையெல்லாம் துக்கத்திலாழ்த்துகின்றன. உழவர்களும் உழத்தியர்களும் இதர தொழிலாளிகளும் பாடும் பாடல்கள் அவர்களின் தொழிலிலுள்ள அலுப்பை மாற்றி மறக்கச் செய்கின்றன. காந்தம் இரும்பை இழுப்பதுபோல், காந்த சக்தி கொண்ட சொற்களையும் நெருப்புச் சுவையையுமுடைய பாடல்கள் உயிர்க்குலங்களைத் தம் வயப்படுத்துவதில் வியப்பொன்றுமில்லை.

*பிறப்பு—வளர்ச்சி*

''ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அதிலிருந்து சகலமும் உண்டாயிற்று....'' என்று பைபிளின் பழைய ஏற்பாடு துவங்குகிறது. ''நாதவிந்து கலாதீ நமோ நமோ....'' எனத் திருப்புகழ் ஆண்டவனைத் துதிக்கிறது. ஆதியில் சொல் தான் இருந்தது. அது கவிதையா, உரை நடையா? அது கவிதையாகத் தானிருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். மனிதன் விதைக்கத் தெரிந்து கொள்ளுமுன், காட்டில் தானாகவே விளைந்திருந்த கதிர்களை அறுவடை செய்யக் கற்றுக் கொண்டான். அதேபோல் அவன் பேசக் கற்றுக்கொள்ளுமுன் பாடக் கற்றுக் கொண்டான் எனத் தெரிய வருகிறது. ஆதிமனிதன் அவலத்திலும், மகிழ்விலும் இயற்கையின் புதிய வியப்பிலும், எதிர்ப்புகள் தந்த அச்சத்திலும் பாதிக்கப்பட்டபோது தனது உணர்ச்சிகளைக் கவிதை வடிவிலேயே வெளிப்படுத்தினான் எனவும் அறிகின்றோம்.

"ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டு இடம் விட்டு இடம் அலைந்து திரிந்த முற்கால மக்கள், சிந்தனை செய்து படைப்புப் பற்றிய கீதங்களைப் பாடினர். அவைகளே உலகின் ஆரம்ப காலத்தில் தோன்றிய மாபெருங் கவிதைகள்,'' என்று முல்க்ராஜ் ஆனந்த் கூறுகிறார். இன்றுங்கூட உயர்ந்த மலைக் காடுகளின் உட்பகுதிகளில் வாழும் ஆதிவாசிகளுக்குத் திருத்தமாகப் பேசவராது. ஆனால் பாடுவதென்றால் அவர்களுக்கு வெகு ஆனந்தம். மலைச் சோலைகளில் பாடும் ஒரு பறவையினத்தின் குரலைப் பின்பற்றி அவர்கள் பாடு கின்றனர்; நெடுநேரம் பாடிக்கொண்டே ஆடுகின்றனர். ஆதிமனிதன் தன் வாயைத் திறந்தவுடன் வெளிவந்தது நாட்டுப் பாடல்களின் முதலடியாகும்.

முன்கூறியதுபோலக் கேவலம் ஒரு பறவையினத்தின் குரலைப் பின்பற்றி எழுந்த கீதம் ஆட்டத்துடன் கலந்த போது விரிந்தது. சாதாரண ஆட்டம் பழகப் பழகப் பலவித மான அங்க அசைவுகளையும் முக பாவங்களையும் தோற்று வித்தது. ஆட்டத்திற்கேற்பத் தாளங்கள் ஏற்பட்டன. அப் பொழுது நாட்டுப் பாடல்களின் பண்ணின் நயமும் விரிந்தது, இவ்வாறாகப் பலவகைச் செயல்களுக்கான பாடல்களும். கும்மி, கோலாட்டம், கூத்துகளுக்கான பாடல்களும் வந்தன, இவைகளிலெல்லாம் ஆண்களும், பெண்களும் கலந்து கொள்ளும்போது பாலுணர்ச்சி, கவர்ச்சி, உணர்வெழுச்சி களும், கற்பனைச்செறிவும், அதற்கான அங்க முகபாவங்களும் அதிகரித்தன. இடம்விட்டு இடம் நகர்ந்து வாழ்க்கை நடத்திய மக்கள் ஓரிடத்தில் நிலைத்து ஊர் அமைத்து வாழவும், விவசாயம் செய்து ஆண்டுக்கான தேவைகளைக் குறுகிய காலத்திலேயே சேகரித்து வைக்கவும் கற்றுக்கொண்டபோது, ஓய்வுநேரமிருப்பதைக் கண்டனர். அதை நல்ல பொழுது போக்காக மாற்றவும் அத்துடன் சமூகப் பண்பை வளர்க்கவும் நீண்டநேரக் களியாட்டங்களும், விழாக்களும் எழுந்தன.

அதில் ஆடல்களும் பாடல்களுமிருந்தன. இவை புதியவை யல்லவேனும் முன் கூறியவற்றின் விரிவு அல்லது தொகுப்பே யாகுமிவை. இவ்வினத்தைச் சேர்ந்தவைகளில் பலவகையான கதைப் பாட்டுக்கள், பள்ளுகள், குறவஞ்சி நாடகங்கள், காமன் பண்டிகை முதலியன முக்கியமானவை இவ்வாறாக நாட்டுப் பாடல்கள் ஒன்று பலவாயின.

காட்டில் வதிந்த மக்களால் எவ்வாறு பாடல்கள் பாட இயலும் என்பதுதான் தற்காலப் படிப்பின் மூலம் வேறு திசையில் திருப்பப்பட்ட நோக்கத்தைக் கொண்ட நம்மில் பலரது ஐயப்பாடு. ''எளிய கரடு முரடான வாழ்க்கைதான் மனித உள்ளத்தின் அடிப்படையான உணர்வுகள் முழு வளர்ச்சியடைவதற்கு ஏற்ற வளமான நிலம்,'' என வேர்ட்ஸ் வொர்த், என்ற ஆங்கிலக் கவிஞன் கூறுகிருன். ஊர் பேர் தெரியாத அந்த நாவலர்கள் தங்கள் கவிதைகளுக்கு வேண்டிய கருத்துகளுக்காக, எங்கோ தேடியலையவில்லை. அவர்கள் தங்கள் வாழ்க்கைப் புத்தகத்தின் ஏடுகளிலிருந்து எந்த ஆகாயத்தின்கீழ், எந்த மண்ணில் வாழ்ந்தனரோ, எந்த வேலையைச் செய்தனரோ, எதைக் கண்டனரோ, எதைக் கேட்டனரோ, எதை உணர்ந்தனரோ?. எதை மதித்துப் போற்றினரோ—எல்லாவற்றையும் கற்பனை நிறைந்த இனிய கவிதைகளாகப் பொழிந்தனர். 'அவை மனித இனத்தின் சரிதத்தை, அதன் வாழ்வை, முடிவைச் சித்திரிக்கின்றன'

*கிராமங்கள்*

நாட்டுப் பாடல்களைப் பாடிய கவிஞர்களைத் தோற்று வித்த கிராமங்களே, நம் நாட்டின் நாகரிகத்தை, பண்பை உயிரை ஓம்பி வளர்த்த தாய்மார்கள். ''கிராமங்கள் பெண் களைப் போன்றவை'' என்று கூறும் கவி தாகூர் ''அவைகள் தான் மனித இனத்தின் தொட்டிற் பருவ வளர்ச்சியைத் தந்தவை. நகரங்களைவிட அவைகள் இயற்கைக்கு மிக்க

அருகாமையில் இருப்பதன் காரணமாக வாழ்வு என்னும் ஜீவ ஊற்றுடன் நெருங்கிப் பிணைக்கப்பட்டுள்ளன. சமுதாயத்தின் மனப்புண்ணின் துன்பத்தைக் குணப்படுத்துவதற்கேற்ற சூழ் நிலை அவைகளிடம் இயற்கையாகவே ஏற்பட்டிருக்கிறது. பெண்களைப் போலவே கிராமங்களும் மக்களுடைய அடிப் படைத் தேவைகளான உணவைத் தருவதோடு எளிய வாழ்க்கைப் பாடல்களின் மூலமும், எவ்விதச் சிரமமுமின்றித் தாமாகவே எழுகின்ற அழகு விழாக்களின் மூலமும் இன்பத்தையும் தருகின்றன. அதன் காரணமாக அவைகள் ஆனந்தமடைகின்றன,'' என்று தம் கூற்றை விளக்குகிறார்.

*கல்லாமல் கற்றவை*

கிராமங்களே நமக்கு அமுதூட்டும் அன்னையாகவும், மக்கள் குலம் வளர அதைத் தொட்டிலிலிட்டு அமுத கீதம் பாடும் செவிலியாகவும், அழகுபொலியும் ஆட்டங்களைக் காட்டி மகிழ்விக்கும் தோழியாகவும் விளங்குகின்றன. முற்காலத்தில் இக்கிராமங்களில், இப்போது நாம் படிப்பெனக் கருதும் எழுத்தறிவு மிகக்குறைவுதான். ஆனால் இயற்கை அன்னை யின் கல்விச் சாலையிலிருந்து, அவைகள் குறிப்பாலுணர்ந்து, கற்பிக்கப்படாமல் கற்றவை அனந்தம். அவ்வாறு கல்லாத உள்ளத்திலிருந்துதான், கவிதை ஊற்றெடுத்துக் கிளம்புகிறது.

கிராமவாசிகளின் கூட்டமொன்றில் கதைப் பாட்டு ஒன்றைப் பாடப்போகும் ஒருவர் பாடும் அவையடக்கத்தைக் கேளுங்கள் :

> ''பாடறியேன் படிப்பறியேன்—பள்ளிக்கூடம் நானறியேன்
> ஏடறியேன் எழுத்தறியேன்—எழுத்துவகை நானறியேன்
> ஏட்டிலே எழுதவில்லை—எழுதி நான் படிக்கவில்லை
> வாயிலே வந்தபடி—வகையுடனே நான் படிப்பேன்.''

யாரும் எழுதியதைப் படிக்காமல், தாம் பாடியதையும் எழுதி

வைக்காமல், தம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மக்களால் பாடப்பெற்ற வாய்மொழிக் காவியங்கள் எண்ணற்றவை. அவைகளே பின்வந்த உலக மகா காவியங்களுக்குத் தாயெனலாம்.

''உலகம் முழுவதிலும் நாட்டுப்பாடல்களிடையே விளக்கிக் கூறமுடியாத ஓர் ஒற்றுமை நிலவுகிறது. அவற்றின் மொழிகள் வேறு வேறாக இருப்பினும் அவைகள் எடுத்துக்கொள்ளும் பொருளில், சொல்லும் பாணியில், கருத்திற்கூட ஒற்றுமை காணப்படுகிறது'' என்று டபிள்யூ. பி. ஹெர் கூறுகிறார். 'சில பல நாட்டுப் பாடல்களின் தொகுப்புகளிலிருந்தே உலக மகாகாவியங்கள் தோன்றின'' என விண்டர்னிட்ஜ் என்ற ஜெர்மானியப் பேரறிஞர் கூறுகின்றார்.

''இராமாயணம் பாடிய வால்மீகி தோன்றுவதற்கு வெகு காலத்திற்கு முன்பே அவருடைய கதாபாத்திரங்களான உண்மையான ராமனும் சீதையும் வாழ்ந்திருக்கவேண்டும். நாட்டுப் பாடல்களே போன்று அவர்களுடைய கதையும் (கிராம) மக்களிடமிருந்தே தோன்றியிருக்கவேண்டும்,'' என ராஜாஜி கூறுகிறார். இவ்வாறாக அன்று நாட்டின் உயிர் நிலையாக இருந்த கிராமங்களின் தற்கால நிலை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது.

*கிராமங்களின் சிதைவு*

ஆங்கிலக் கவிஞரான கிரே என்பார், ஒரு கிராம இடுகாட்டில் நின்று கொண்டு ஓர் இரங்கற்பா பாடியுள்ளார். ''மிக்க ஒளி பொருந்திய விலைமதிக்க வொண்ணாத எத்தனையோ மாணிக்கங்கள் ஆழமறிய முடியாத கடற்குகைகளின் அடியில் மறைந்து கிடக்கின்றன. சுகந்த மணத்தோடு கூடிய மெல்லிய மலர்கள் வனாந்தரங்களில் மலர்ந்து அவற்றின் வாசனையை யாரும் நுகராமலே வாடி உதிர்ந்து விடுகின்றன. அதேபோன்று மில்டனைப் போன்று கவிதை

யுள்ளம் படைத்த பலர் இக்கிராமத்தில் பிறந்திருக்கலாம். சந்தர்ப்பங்களும் சூழ்நிலையும் அவர்களின் கவிதையுள்ளத்தை உலகிற்குத் திறந்து காட்டும் வாய்ப்பை அளிக்கவில்லை. ஆகவே அவர்கள் மாண்டு மடிந்து இங்கு புதையுண்டு போயிருக்கலாம்...'' என இரங்கிக் கூறியுள்ளார்.

அக்கவிக் கூற்று நாட்டுப்புற மக்களைப் பொறுத்த மட்டில் உலக முழுமைக்கும் உண்மையாகும். நம் நாடெங்கும் சிதறிக்கிடக்கும் லட்சக்கணக்கான கிராமங்களில் கம்பனைப் போல், காளிதாசனைப்போல் கவிதையுள்ளம் படைத்த மக்கள் கணக்கற்றவர் இருந்தனர், இருக்கின்றனர். வாழ்க்கைச் சுழலின் படுசோதனைக்குள்ளாகி பலர் மாண்டனர். திரம்பித் ததும்பும் அவர்களின் உள்ளுணர்ச்சி வெளியீட்டை, சந்தர்ப்பங்களும் சூழ்நிலையும் அனுமதிக்கவும் ஏற்கவும் மறுத்தன. ஆனால் உணர்ச்சி வெள்ளம் காட்டாறுபோல் கட்டுக்கடங்காமல் புறப்பட்டு வழிந்தோடி வனாந்தரங்களில் பாய்ந்து கொண்டிருக்கிறது. மேலும் தற்கால நாகரிகம் என்ற பெயரால் கிராமங்கள் கோல்ட்ஸ்மித் என்ற ஆங்கிலக் கவிஞன் சித்தரித்த ''குடிபோன கிராமம்'' என்ற பாட்டிலுள்ள நிலையை அடைத்து வருகின்றன.

''எல்லாம் வல்ல, எல்லாம் அறிந்த பணம் என்ற பகவான், இன்று மனித வாழ்க்கையின் அடிப்படையையே ஆட்டங்கொள்ளச் செய்துவிட்டான். மனித சமுதாயமானது நடத்திவந்த கூட்டு வாழ்க்கையைப் பணம் சிதைத்துவிட்டது. கூட்டு வாழ்க்கை வாழ்வதன் மூலம் மக்கள் பெரு வெள்ளங்களையும், வரண்ட பருவங்களையும் பஞ்சங்களையும் உள் நாட்டுப் போர்களையும் எதிர்த்து நின்று, அவற்றிலிருந்து மீள முடிந்தது ஏனெனில் தனிமனிதனுக்கு எதுவும் சொந்தமில்லாதிருந்தது. ஆனால் இப்பொழுது மனிதன் தன்னந்தனியாக விடப்பட்டுள்ளான். அதனால் அவனுடைய மேன்மையும் பெருமையும் பறிபோய்விட்டன. சிலரைமேன்மை

யுறச் செய்வதற்காகச் சிலருக்கு விலை கொடுக்கப்படுகிறது. பல்லாயிரக்கணக்கான மக்களின் சிவப்பு இரத்தத்தின் சிவப்பு நிறமிகளையே பிழிந்தெடுத்துவிட்டு, மரணமே அவர்களுக்கு விற்கப்படுறது. தங்களின் திறமை நிறைந்த பிரசாரத்தின் மூலமாகவும், விளம்பரத்தின் மூலமாகவும் இதுதான் வாழ்க்கை முறையென எங்கும் பறைசாற்றி பரப்பி வருகின்றனர்.

''சென்ற சில தலைமுறைகளாக மேற்கூறிய கொடுமைகளாலும், பல்லாயிரக்கணக்கான மக்களின் மனதில் உண்டாக்கிய பயத்தினுலும், கிராம சமுதாயத்தின் தன்னிறைவு நிலை அழிந்துவிட்டது. கிராம மக்கள் நடைப்பிணங்களாகி விட்டனர்......'' என முல்க்ராஜ் ஆனந்த் கூறுகிறார்.

கிராம மக்களின் கூட்டு வாழ்விற்கு அடிப்படையாகவும், அச்சாணியாகவுமிருந்த நாட்டுப் பாடல்கள் தோன்றவும் செழிக்கவும் உதவியாகவிருந்த சூழ்நிலை அழிந்தது. அதனால் அவை அருகிவிட்டன. முன்பிருந்தனவற்றுள் பெரும்பகுதி கவனிப்பாரற்றுச் சிதைந்து மண்ணோடு மண்ணாகிவிட்டன. அண்மைக் காலத்தில் நிலைமை கொஞ்சங் கொஞ்சமாக மாறி வருகிறது. உழைப்பாளிகளின் ஒன்றுசேர்ந்த விடுதலை முழக்கம், உலக மக்களிடையே ஒரு விழிப்பை யுண்டுபண்ணியிருக்கிறது.

*மறுமலர்ச்சி*

ஆதியில் அறிவாளிகளான ரிஷிகளின் யுகம் இருந்தது. அது படைபலம் மிகுந்த அரசர்களின் யுகத்திற்கு இடங் கொடுத்தது. இச்சமயங்களிலெல்லாம், கிராமங்கள் நசித்துப் போகவில்லை. பின்னர் முன்னே நாம் விவரித்த பண முதலாளிகளின் யுகம் வந்தது. அதனால் கிராமங்கள் அடைந்துள்ள நிலை பற்றி அறிந்தோம். இப்பொழுது கீழ்வானில் தொழிலாளர் யுகத்தைத் தோற்றுவிக்கும் சமதர்ம ஞாயிறு புலர்ந்து கொண்டிருக்கிறது. நாட்டுப்பாடல்களின் மறுமலர்ச்சி

கீதத் திருப்பள்ளியெழுச்சியை இசைக்கிறது. லிவிங்ஸ்டன் போன்றவர்கள் ஆப்பிரிக்காவிலுள்ள பெருநதிகளின் உற்பத்தியைக் காண முயன்றதுபோல், சத்தியார்த்தி போன்றவர்கள் நாட்டுப் பாடல்கள் என்ற நதியின் மூலத்தையும், போக்கையும், முகத்துவாரத்தையும் காண முயன்று வருகின்றனர்.

### நாட்டுப் பாடல்களின் நயம்

உலகெங்குமுள்ள நாட்டுப் பாடல்களை ஊன்றிப் பார்த்தால், வால்மீகி, இளங்கோ, கம்பன், காளிதாசன், ஷேக்ஸ்பியர், மில்டன், வேர்ட்ஸ்வொர்த், தாகூர் போன்ற உலகக் கவிஞர்களின் உள்ளத்தில் கவிதை வித்திட்டு, அவர்களின் கவிதைப் பொழில் செழிக்க உரமானது அவைகளே என்பதை உணரலாம். அவர்கள் தாய்மார்களின் தாலாட்டுகள், அவர்களின் மனதில் அடைபட்டிருந்த கவிதை ஊற்றைத் திறந்திருக்க வேண்டும். அவர்கள் கவிதைகளில் நயமானவற்றை எடுத்துச் சில கற்பனை நிறைந்த தாலாட்டுக்களுடன் ஒத்திட்டுப் பார்த்தால் அது தெரியவரும்.

பாட்டு என்றால் படிப்போரின் உள்ளத்திலும் கேட்போரின் உள்ளத்திலும் பட்டு உருவுவது என்றார் ஒருவர். நாட்டுப்புற மக்கள் பல சமயங்களில் தம்மை மறந்து உள்ளங்களை ஊடுருவிச் செல்லும் உணர்ச்சிகளை இன்னிசைத் தீம்பாட்டாக வெளியிடுகின்றனர்.

இவ்வகையான பாடல்கள் அரசவைக் கவிஞர்களால் பாடப்பெறும் கவிதைகளிலிருந்து வேறானவை. இவை ஜீவநதி போன்றவை; அடித்தளத்தில் ஓடிக் கொண்டிருப்பவை. கங்கை நதிக்கும் உயிர் கொடுக்கும் ஆகாச கங்கை போன்றவை. ''மேல் தளத்தில் ஓடும் மற்றைய கலை நதிகள் வறண்டுபோய்த் தன் ஆன்மாவையே இழக்க நேரிடும்போது, நாட்டுப் பாடல்கள் என்ற ஜீவநதியுடன் தொடர்பு கொண்டு, அவற்றில் மலிந்து வற்றாத ஊற்றுகளாகவுள்ள பண்பு

நிறைந்த பாட்டுகளையும், கூத்தையும், ஓசையும் கற்பனை யும் நிறைந்த சொற்களையும் மீண்டும் பெற்று உயிர் பெறு கின்றன.'' அந்த யுகம் இப்பொழுது ஆரம்பமாகியுள்ள தெனலாம்.

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய ஐவகை நிலங்களிலும், அங்குள்ள சூழ்நிலைக் கேற்ப மக்களும், அவர்களின் தொழிலும், பழக்க வழக்கங்களும், ஆடல் பாடல்களும், வழிபடு தெய்வங்களும் வேறு வேறா னவை. பர்ஸிமாக்வீன் திரட்டிய 'மலையருவி' என்ற நாடோடிப் பாடல்களின் தொகுதிக்குத் தாம் எழுதிய முன்னுரையில், அவைகளைப்பற்றிச் சங்க இலக்கியங்களி லுள்ள குறிப்புகளை, கி. வா. ஜ. அவர்கள் சுவைபட விளக்கியுள்ளார். முல்லை நிலத்தில் முருகனை வழிபடும் வேலனும் தேவராட்டியும் பாடுகின்றனர். குறமகளிர், தினைப்புனத்தில் கிளிகளைக் கடிவதற்காக ஆலோலம் பாடு கின்றனர். அவர்கள் தினையைக் குத்தும் போதும், குரவைக் கூத்தாடும் போதும், புலியொடு பொருது காயமுற்ற குற மகனுக்கு வேதனையைத் தணிப்பதற்கும் பாட்டுப் பாடு கின்றனர். பாலைநில மக்கள் வேட்டுவவரி பாடித் துர்க்கையை வழிபடுகின்றனர். முல்லை நிலத்தில் ஆயரும் ஆய்ச்சியரும் தம் குலதெய்வமாகிய கண்ணனைப் பரவி குரவையாடிப் பாடுவர். மருத நிலத்தில் கூடவரும் பெண்டிரும் இணைந்து ஆடிப்பாடுவர். மகளிர் கைகோத்து ஆடிக்கொண்டே பாடி மகிழ்வர். நெய்தல் நிலத்தில் நீர் இறைப்பவர்கள், பறவை ஓட்டுபவர்கள், குரவை யாடும் பரதவ மகளிர், தெய்வ வழி பாடு செய்பவர்கள், ஊசலாடும் மகளிர் மடலேறும் ஆடவர்கள் பாடும் பாடல்களைச் செவியுறலாம்.

குறிஞ்சி நிலத்தில் பிறந்த இந்தக் கவிதைக்குழவி, தவழ்ந்து, எழுந்து, நடந்து, ஓடி, ஆடிப்பாடி மருத நிலத்திலும் நெய்தல் நிலத்திலும் முழுவளர்ச்சியுற்று முழு

ஆளுமையுடன் திகழ்வதைக் காணலாம். இந்நிலங்களில் தான் நாட்டுப் பாடல்கள் செழித்துக் காணப்படுகின்றன. அப் பாடல்களில் சொல் வளமும் கருத்துச் செறிவும் பண்களில் இனிமையும் இருப்பதைக் காண்கின்றோம். இங்கு பாட்டுக் களோடு சேர்ந்த ஆட்டங்களில் கலையழகு இருக்கிறது. ஆனால், உழவர்கள் சுதந்திரமாக இருக்கும் இடங்களில் பாடப்படும் பாடல்களில்தான் உயிர் இருக்கிறது. சுதந்திரம் பறிபோனபின் எதுதான் எஞ்சும்?

### *இந்நூலின் பிறப்பு*

மதுரை மாவட்டத்தில் வளம் நிறைந்த கம்பம் பள்ளத் தாக்கில் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நாட்டுப் பாடல்கள் ஏராளமாகவுள்ளன; அங்கு நிலம் செழித்திருக் கிறது. அங்கு வதியும் வேளாளப் பெருமக்கள் ஓரளவு சுதந்திரத்துடன் வாழ்கின்றனர். அதனால் அங்குள்ள பாடல்கள் செழுமையும் இனிமையும் உயிரும் உள்ளனவாக இருப்பதை உணரலாம்.

அப்பள்ளத்தாக்கில் சுருளி நதிக் கரையின் (இப்பொழுது பெரியாறு) மேலுள்ள ஒரு குக்கிராமத்தில் பிறந்த நான், இளமையில் பல ஆண்டு வயல் வெளிகளில் விவசாய வேலை களில் ஈடுபட்டு இயற்கையோடியைந்த வாழ்க்கை நடத்தினேன்.

> "கானப்பறவை கலகலெனும் ஓசையிலும்
> காட்டுமரங்களிடை காட்டும் இசைகளிலும்
> ஆற்றுநீரோசை அருவியொலியினிலும்......"

மனம் ஈடுபட்டிருந்த காலம் உண்டு. அந்தக் காலத்தைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் மனதில் ஏதோ சொல்ல முடியாத ஓரின்ப உணர்ச்சி எழுகிறது. பலதரப்பட்ட வேலை களைச் செய்துகொண்டே, அச்சமயம் பாடிய ஒரு சில

பாடல்கள் என் உள்ளத்தின் ஆழத்தில் பதிந்துள்ளன. ஆனால் பின்வந்த கல்லூரிப் படிப்பும், பட்டணத்து வாழ்க்கையும், அந்தப் பட்டிக்காட்டானின் காட்டுப் பாட்டுக்களைப் பாடுவதும், அவற்றைச் சிறப்பித்துப் பேசுவதும் அநாகரிகம் என்று எண்ணச் செய்துவிட்டன.

"சில முன் செய்த நல்வினைப் பயனாலும் நந்
தேவிபாரதத் தன்னை யருளினாலும......"

சமீப காலத்தில் நாட்டுப்பாடல்களை நாடு போற்ற ஆரம்பித்துள்ளது. சிலர் அவற்றைத் தொகுத்து முறைப்படுத்தி விளக்கத்துடன் பல நூல்கள் வெளியிட்டுள்ளனர். ஆனால் சீன நாட்டின் தலைவனான மாசேதுங் சோஷலிசக் கருத்துகள் பரந்த அளவில் பரவவேண்டியதன் இன்றியமை யாமையைப் பற்றிக் கூறும்போது, "இன்னும் நூறு மலர்கள் மலரட்டும்" என்றான். நாட்டுப் பாடல்கள் சம்பந்தப்பட்ட மட்டில் இன்னும் ஆயிரம் மலர்கள் மலரவேண்டும்.

ஆனால் ஒன்று மட்டும் கவனிக்கத் தக்கது. நாட்டுப் பாடல்களைத் திரட்டி வெளியிட முயலுபவர்கள், எவ் விதத்திலும் அதனுடைய தனித்தன்மை பழுதுபடாதிருக்குமாறு கண்ணுங்கருத்துமாகக் கவனித்துக் கொள்ளவேண்டும். கொச்சையாக இருக்கின்றனவென்று அவற்றில் காணும் மழலைச் சொற்களை மாற்றுவதோ, பொருள்நயம் ஓசைநயம் ஏற்படுமெனக் கருதிப் புதிய சொற்களைப் புகுத்துவதோ, பண்களில் புதுமையைப் புகுத்துவதோ நாட்டுப் பாடல் களுக்குத் தீங்கு செய்வதாகும்.

"ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவு நக்குபு புக்கென......"

கம்பன் தனது இராமகாதையில் குறிப்பிடுவதுபோல, அறிவும், ஆற்றலுமிக்க பெரியார்கள் பலர் ஈடுபட்டுள்ள இத்

துறையில், நாட்டுப்பாடல் என்னும் பாற்கடலை நக்கிக் குடிக்கத் துணிந்த பூனையைப் போல், ஆவல் காரணமாக நான் பங்குகொள்ள நேர்ந்தது. இளமையில் சின்னாள்பெற்ற இன்பத்தை மீண்டும் பெற ஒரு வாய்ப்புக் கிட்டியது நல்வினைப் பயனே போலும்! மதுரை மாவட்டத்தின் உட் பகுதியிலுள்ள கிராமங்களிலிருந்து திரட்டிய பாடல்களில் பலவற்றை ரசிக நண்பர்களடங்கிய மேடைகளிலும் வானொலி நிலையங்களிலும் வெளியிடும் வாய்ப்புக் கிட்டியது. அவர்கள் பாடல்களைப் போற்றி என்னை ஊக்குவித்தனர். அவர்கள் கொடுத்த ஊக்கத்தாலும், பல வருடங்களாகத் திரட்டி முறைப் படுத்திய இப் பாடல்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற அவாவாலும் இந்நூலை வெளியிட முன்வந்துள்ளேன். என் எழுத்திலுள்ள குற்றம் நீக்கி, இந்த ஏட்டில் எழுதாக் கவிதைகளிலுள்ள நயத்தையும் குணத்தையும் தமிழ் கூறும் நல்லுலகம் வரவேற்குமென நம்புகின்றேன்.

# 2. பாடிப் பரவச மடைவோம் !

'..............................................................நான்முகனே
.....................நின்றன் அதிசயங்கள் யாவினுமே
கானா முதம்படைத்த காட்சிமிக விந்தையடா !
காட்டு நெடுவானம் கடலெல்லாம் விந்தையெனில்
பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா !
பூதங்க ளொத்துப் புதுமைதரல் விந்தையெனில்
நாதங்கள் சேரும் நயத்தினுக்கு நேராமோ ?
ஆசை தருங் கோடி அதிசயங்கள் கண்டதிலே
ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ ?''

—*பாரதி.*

ஓசை தரும் இன்பத்திற்கு ஒரே ஓர் உவமைதான் உண்டு. ஆண்டவனுக்கு நாதப் பிரம்மம் என்ற பெயருமுண்டு. உயரிய இசை இன்பத்தை நுகர்வதால் ஏற்படும் பேரானந்தம் ஆண்டவனின் திருவருளைப் பெறுவதால் ஏற்படும் பேரின்பத் திற்கு நிகரானது ! அதை இன்னதென்று விவரிக்க முடியாது. அதேபோல் ஓசையும் கட்புலனுக்கு எட்டாதது ஆனால் அதை உணர முடிகிறது. ஆண்டவனைப் பற்றிக் கூறப்படும் குணங்களெல்லாம் நாதத்திற்குமுண்டு. ஒளியும் ஒலியும் பார்ப்பதற்கு வெவ்வேறாகத் தோன்றிடினும் ஆழ்ந்து கவனித்தால், அவை ஒரே பொருளின் வெவ்வேறுவகையான அசைவுகளால் ஏற்படுபவை என்பது தெரியவரும். 'ஈதர்' அலைகளே, ஒலிக்கும் ஒளிக்கும் காரணமாயிருக்கின்றன. அந்த அணுவின் அதிசயத்தை இங்கு விரிக்கிற் பெருகும்.

அணுவையும் அண்டத்தையும் தோற்றுவித்து இயக்கும் கருப்பொருளைப் பரம்பொருள் என்றனர் ஆன்றோர்.

## இசைக் கருவிகள் தரும் இன்பம்

தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக் கருவியென நால்வகையான வாத்தியக் கருவிகளைப்பற்றிச் சிலப்பதிகாரம் கூறுகிறது. அதில் புல்லாங்குழலான துளைக் கருவி எவ்வளவு எளியது! மலையில் வளரும் ஈத்தை யென்ற ஒருவகைப் புல்லின் தண்டுதான் அது! சிறிது அனுபவமுள்ள எவரும் அதை ஒரு தீங்குழலாக்கி விடலாம். நாதசுர வாத்தியக் கருவிதான் என்ன? மரத்திலிருந்து கடைந்தெடுக்கப்பட்டது தானே! ஜடமாக இருக்கும்போது அவற்றினால் ஏதேனும் இன்பமுண்டா? ஆனால் தீங்குழ லூதுவோனும், நாதசுரம் வாசிப்போனும், அவற்றினுள் உயிர்க் காற்றை ஊதியதும் எத்தனை பெரிய விந்தையும் நயமும் ஏற்படுகின்றன! அதே போல் நாட்டுப் பாடல்களிலுள்ள வார்த்தைகள் எளியவை, சாதாரணமானவை. ஆனால் அவற்றில் பண்ணேற்றிப் பாடும் போது, அவை 'எண்டிசையும் இன்பக்களி' ஏற்றுகின்றன.

## இசை நயம்

''நாட்டுப் பாடல்களின் முழுப்பெருமை, அதன் கவிதை நயத்திலும் இசை இன்பத்திலுமே பொதிந்துள்ளது. ஏனெனில் அவைகளிரண்டும் இன்றியமையாதவை. ஒன்றுக்கொன்று துணைபுரிபவை.'' ''பண்ணோடு பாடப்படாத நாட்டுப் பாடல்கள் இறகில்லாத பறவைகள் போன்றவை. அவற்றைப் பண்ணோடு பாடியாடும்போது, பறவை இறகை விரித்துப் பறந்து விண்ணிலே உயர உயரக் கிளம்புவது போலிருக்கும்,'' என நாட்டுப்பாடல் ஆராய்ச்சி நிபுணர் சத்தியார்த்தி கூறுகின்றார்.

'இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று' என்பதைப் போலப் பொருளாழமில்லாத வார்த்தைகளாலான, எதுகை மோனை நயமில்லாத சில பாடல்கள்கூட, பாடுவோரின் இசை நயங் காரணமாக நம்மைக் கவருவதுண்டு. இசையில்லாத

பாட்டு ஓடாதது, நடக்காதது, முடமானது. பாட்டிலுள்ள வார்த்தைகளுக்கு உயிர் கொடுப்பது பண்தான்.

''பண் என்னாம் பாடற் கியைபின்றேல்'' என்றார் நாயனாரும். பண்ணோடு பாடப்படும் பாட்டு ''ஏழுலகும் இன்பத்தீ ஏற்ற'' வல்லது!

*இசையின் பயன்*

ஜே. சி. ஹாட்கார்ட் என்னும் ஆங்கில அறிஞர் நாட்டுப் பாடல்களின் இசைபற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்: ''நாட்டுப் பாடல்களின் இசை, அவற்றின் வளத்தையும் கம்பீரத்தையும் அதிகப்படுத்துகிறது. நாட்டுப் பாடல் களாலான கதைப் பாட்டுகளின் இசை பற்றிய குறிப்பெதுவு மில்லாது, அவைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்தல், எவ்விதத் திலும் முற்றுப் பெற்றதாகக் கூறமுடியாது. ஞாபகத்திலிருத்திக் கொள்வதற்கு இசை ஒரு சக்தி வாய்ந்த சாதனமாகும். இசை இல்லாவிட்டால் இந்த வாய்மொழிக் கவிதை வழி வழியாக வந்திராது.''

லாங் என்பவர் இதே பொருள் பற்றி மேலும் விரிவாக விளக்கியுள்ளார். அவர் கூற்றின் சாரம் வருமாறு: நாட்டுப் பாடல் கதைகள் மக்களின் இதயத்திலிருந்து குதித்தெழுந் தவை. இயற்கையோடியைந்த வாழ்க்கை நடத்தும் ஆயர்கள், உழவர்கள், தாய்மார்கள் ஆகியோரின் வாயிலிருந்து வாய்க்கு, யுகம்விட்டு யுகம் அவை மெல்லெனப் பறந்து வந்தவை. படகோட்டியின் துடுப்பின் தளதளப்பொலி, இராட்டையின் ஹம்மென்ற ஓசை, தாளம்போட்டு நடைபோடும் உழவனின் எருதுகளின் நடை ஆகியவற்றுடன் அவை பிறந்தவை. நாட்டுப்புறச் சூழ்நிலையிலுள்ள பாடும் பறவைகளின் ஒலியில் இருந்தும், மரங்களின் சலசலப்பொலியிலிருந்தும், ஓசையிடும் மணிகளின் கிண்கிணி கீதத்திலிருந்தும், பாடி நகர்ந்துவரும் நதிகளிலிருந்தும் எவ்வாறு கீதம் பிறந்ததென அவர்

கூறுகிறார். இப்பாடல்கள் பேச முடியாத மனிதர்களிடம் இருந்தும், தனித்த இடங்களிலிருந்தும் பழங்காலத்திலிருந்தும் வந்தவை. ஆகவே அவை நம்முடன் நூதன முறையில் நெருங்கிய தொடர்பு கொண்டு நம்முள்ளத்தைத் தொட்டு ஈர்க்கின்றன. புனையப்பட்ட பாடல்களால் இவ்வாறு செய்ய என்றும் இயலாது.

*பித்தேற்றும் இசை*

பாடல் மனதை உருக்குகின்றது. நம்மை மெய் மறக்கச் செய்கிறது. பாட்டிலுள்ள இன்பம் கள்வெறிக்கு ஒப்பானது. ''பித்தனும் புலவனும் மெத்தவும் ஒப்பர்'' என்ற ஷேக்ஸ்பியரின் வாக்கின்படி, பாட்டு பாடும் கவிஞனுக்குப் பித்தேற்றுவதோடு, கேட்போரையும் பித்தர்களாக்குகிறது. அஃது ஆன்மாவைத் தொட்டு, அதைப் பிணிக்கும் எல்லாக் கட்டுகளையும் விலக்கி, நம்மைச் சாதாரண மனித நிலையில் இருந்து உயரியதொரு மேல் நிலைக்கு எடுத்துச் செல்கிறது. இதற்கு வெளிப்படையான சான்றுகள் பல வுள.

போர்க்களம் புகும் வீரர்கள், தங்கள்முன் திறந்திருக்கும் பயங்கரமான மரண வாயிலை உணர்கின்றனர். சாதாரண நிலையிலுள்ள மனிதனுக்கு அவ்வுணர்ச்சி அவல நிலையை உண்டுபண்ணும். ஆனால் போர் வீரர்களின் செவிகளில் அது வீரமுழக்கம் கேட்கும்படி செய்கின்றது. போர்ப்பறைகள், வீரமான பாடல்கள் வழி நடையின்போது முழங்குகின்றன. இந்த நாதம் வீரனின் மனதில் பெரியதொரு மாற்றத்தை உண்டுபண்ணுகிறது. 'கூற்றுடன்று மேல்வரினும் கூடியெதிர் நிற்கும் .....' ஆற்றலைப் பெற்றுக் கூற்றுவனை அவன் வரவேற்கிறான். தேசத் திருப்பணியில் சிரித்த முகத்தோடு உயிர்விடுகிறான். நம் தேச விடுதலைப் போர் நடந்த காலத்தில் பாரதியின் 'வந்தே மாதர கீதம்' மற்றும் 'அச்சமில்லை அச்சமில்லை' போன்ற பாடல்களைப் பாடிக்

கொண்டு, தொண்டர்கள் போலீசாரின் தடியடி, துப்பாக்கி முனையிலுள்ள ஈட்டிக்குத்து, துப்பாக்கிக்குண்டு, சிறைவாசம், தூக்குமேடை போன்ற கடுமையான சோதனைகளைச் சிரித்த முகத்துடன் ஏற்றனர். சாதாரண மனித உள்ளத்தில் உணர்ச்சி மிகுந்த பாட்டுகளின் நாத ஒலி அளவிட முடியாத சக்தியைத் தோற்றுவிக்கிறது. தெருவிலே பாடிக்கொண்டு போகும் உணர்ச்சி நிறைந்த பாட்டுகளைக் கேட்டுப் பலர் தேசீய இயக்கமெனும் தியாகக் கனலில் குதித்ததுமுண்டு.

'ஹெமலின் நகரத்துக் கோடிட்ட சட்டை போட்ட குழலூதி' என்று ஓர் ஆங்கிலக் கவிதையுண்டு. அந்த வாத்தியக்காரன் தன்னுடைய குழலில் ஒருவகையான பண்ணை இசைத்தவுடன் அவ்வூர் எலிகளெல்லாம் அவனைப் பின்பற்றின. பின்னர் அவ்வூர் மக்கள் அவனை மோசஞ் செய்யக் கருதியபோது, அவன் மற்றொரு வகைப் பண்ணை இசைத்தான். அதைக்கேட்டு அவ்வூர்க் குழந்தைகளெல்லாம் அவனைப் பின்பற்றினர்; பெரியவர்கள் செயலற்றுப் போயினர். இஃது ஒரு ரசமான கதை. கதை உண்மையாயிருக்கலாம் அல்லது கற்பனையாகவிருக்கலாம்; ஆனால் அதிலுள்ள கருத்து முக்காலத்திற்கும் உண்மையானது. பண், உயிர்க்குலங்கள் யாவற்றினுடைய உள்ளத்தையும் கவரும். ஆண்டவனுக்குச் சம்பந்தர் கொடுத்த 'உள்ளங்கவர் கள்வன்' என்ற அடைமொழி பண்ணோடு கூடிய நாட்டுப் பாடல்களுக்கும் பொருந்தும்.

''ஏழிசையாய் இசைப்பயனாய்
என்னுடைய தோழனுமாய்.........''

என்பதற்கேற்ப ஆண்டவன் பண்ணாகவும் அதன் பயனாகவுமிருக்கிறான். கண்ணனின் குழலோசை கேட்ட ஆனினங்கள் 'மேய்ந்த புல்லும் கடைவாய் வழி சோர' நின்றன. ஆய்ச்சியர்கள் அவன் 'கொன்றையந் தீங்குழல்' கேட்டுக்

கள்ளால் மயங்குவது போலக் கண்மூடி வாய் திறந்தே கேட்டிருந்தனர்.' இன்னும், தான்சேன் இன்னிசை பாடி அக்பருடைய மகளின் நோயைத் தீர்த்தான் என்ற ஒரு செய்தி இருக்கிறது. முத்துசாமி தீட்சிதர் அற்புதப் பாடலொன்றைப் பாடி மழையை வருவித்தார் என்ற சமீபகாலச் செய்தியொன்று முள்ளது. அவரே பாடல்கள் மூலம் பலருக்கு நோய் தீர்த்துள்ளார். தியாகராஜ சுவாமிகள் தம்முடைய பாடல்கள் மூலம் செய்த அற்புதங்கள் பல.

### நாட்டுப் பாடல்களின் பயன்படு தன்மை

பொதுவாக நாட்டுப் பாடல்களெல்லாம் கூட்டுப் பாடல்களே—சேர்ந்து பாட வேண்டியவையே. குழுவாகச் சேர்ந்து வேலைசெய்யும் போதும், விழாக்கள் கொண்டாடும் போதும், களியாட்டங்களாடும் போதும் அவை உண்டாகின்றன. ''நாட்டுப் பாடல்கள் உழைப்பிற்குப் பணிவானதொரு துணைக் கருவியாகவேதான் பிறந்தன. மனிதனின் பலவகையான உடலசைவுகளை ஏதேனுமொரு தாள லயத்தால் ஒழுங்குபடுத்தி அவற்றிற்கு நிறுத்தற் குறிகளும் இடவேண்டிய அவசியம் ஏற்பட்டது,'' என உமாசங்கர் ஜோசி கூறுகிறார்.

நாட்டுப் பாடல்கள் தோன்றுவது ஒரு வியப்பான செய்தி ஆகும். மழைக்குப்பின், தரையின் கீழிருந்து புல் திடீரெனத் தோன்றுவது போன்று அவை தோன்றும். ஒருவர் வாயினின்றும் புறப்பட்ட அந்தக் கவிதை ஊற்று, சிறிது சிறிதாகப் பெருகும். ஒருவர் பாட ஆரம்பிப்பார்; மற்றவர்கள் தோன்றிய அப்பாட்டுக்கு உருவும் அழகும் கொடுப்பர். இவ்வாறாக அது வளர்கிறது. இது புதிதாக உருவாகும் நாட்டுப் பாடல்களைப்பற்றியது.

அப்படித் தோன்றிக் காற்றிலே மிதக்கும் பாடல்களைப் பாடிப் பழகியவர்கள், வாய்ப்பு ஏற்படும்போது பண்ணோடு பாடுவர். நாட்டுப் பாடல்களின் பண்கள் எளியவை. அவை

களை எவரும் எளிதில் கற்றுக்கொண்டு விடலாம்; பாடவும் செய்யலாம். வாழ்வில் தோன்றிய கீதங்கள், வாழ்க்கை நடத்துவதற்காக ஏற்பட்ட பாடல்கள். ஆகையால் எளிதில் யாருக்கும் கிட்டக்கூடியதாக, எட்டக்கூடியதாக இருக்கின்றன.

நாட்டுப் பாடல்களின் உயர்வு அவற்றின் பண்களின் எளிமையிலும் இனிமையிலுமே இருக்கின்றது. ஒரு சில பண்களைக் கற்றுக்கொண்டு விட்டால் எல்லாப் பாடல் களையும் பாடி அனுபவிக்கலாம். வேலை செய்யும்போது பாடும் பாடல்களாதலின், தொழிலிலுள்ள அங்க அசைவிற்குத் தகுந்தாற்போல் தாளமும் இசையுமிருக்கும். உதாரணமாக, நடவு நடும்போது பாடும் இசை ஒன்று; ஆனால் கதிரறுப்பு நேரத்தில் பாடப்படும் இசை மற்றொன்று. நடவு நடும்போது பெண்கள் சேற்றுக்குள் இறங்கி வேலை செய்வர்; சேறு கெண்டைக் காலளவிற்கு இருக்கும்; அடியெடுத்து வைப்பதே சிரமமாக இருக்கும். இந்த நிலையில் ஒரு கையிலிருக்கும் நாற்றை ஒவ்வொன்றாக எடுத்து ஊன்றிக் கொண்டும் பாடிக் கொண்டுமிருப்பர். வேலையில் பரபரப்பிராது. பாடல்களின் பண்ணும் அதுபோலவே இருக்கும். ஆனால் கதிரறுப்பில் மிக்க பரபரப்பிருக்கும்; பலவகையான அங்க அசைவுகளும் இருக்கும். குனிந்து ஒருகையால் கதிரைப் பிடித்து இன்னொரு கையிலிருக்கும் அரிவாளால் அறுத்து, நிமிர்ந்து கையை வீசி, சற்று வளைந்து, அறுத்த கதிரை அடுக்கடுக் காகப் பின்புறமாகப் போட வேண்டும். பண்ணிலும் இத்தனை அசைவுகளைப் பார்க்கலாம்.

### பாடும் வகை

இவ்வாறாக வேலை நடக்கும் குழுவில் ஒருவரிருவர் பாடத்தெரிந்தவர்கள் இருப்பார்கள். அவர்கள் பாடலை அடி அடியாகப் பாடுவர். அதற்கு முன்பாட்டு என்று பெயர். குழுவிலுள்ள மற்றவர்களெல்லாம், ஓர் அடிபாடி

முடிந்தவுடன், பாட்டின் மெட்டிலுள்ள சந்தத்தைப் பாடுவார்கள். இதற்குப் பின்பாட்டு என்று பெயர். வயல் வெளிகளில் பாட்டுகள் பாடும்போது எவ்விதப் பக்க வாத்தியமும் இருக்காது. ஆனால் வேலை செய்வதிலுள்ள அசைவு, அதன்மூலம் ஏற்படும் ஓசை இயற்கையாகவே தாளம் போடுவது போன்றிருக்கும். உதாரணமாக நெற்கதிர் அறுக்கும்போது, கதிரை அரிவாளால் கோதி 'சரக், சரக்' என்று அறுக்கும் ஓசை, கை நிறைந்தவுடன் நிமிர்ந்து, அறுத்த கதிரை வீசிக் கீழே போடும் 'சல், சல்' என்ற ஓசை, அறுக்கும் அரிவாளில் கட்டியுள்ள சதங்கை மணிகள் ஒலிக்கும் கிண்கிணி ஓசை முதலியன பாட்டுக்குத் தாளம் போடுவது போன்றிருக்கும். சில சமயங்களில், வேலைத் தலத்திலேயே உடுக்கை போன்ற கருவிகளை ஒலித்துக்கொண்டு பாடுவதும் உண்டு. இதில் வேலைக்குத் தடங்கல் ஏற்படுகிறது. உடுக்கை ஒலிப்பவரால் வேலை செய்ய இயலுவதில்லை. அதனால் இம்முறை அதிகமாகப் பின்பற்றப் படுவதில்லை.

பொழுது போக்கிற்காக ஊர்ச் சாவடியில் நடக்கும் களியாட்டங்களுக்குப் பக்கவாத்தியங்கள் உண்டு. அவை மிக எளிய கருவிகள். உடுக்கை, தப்பு, தம்பட்டம், பம்பைக் கொட்டு, ஜால்ரா, கஞ்சரா, உருமி, கரடி வாத்தியம், துந்தினா முதலியன அவை. கதைப் பாட்டுகளைப் பாடும் போதும், ஒயில் கும்மி, தேவராட்டம், கரகம், பொய்க்கால், குதிரை முதலிய ஆட்டங்கள் ஆடும்போதும் மேற்கூறிய பக்கவாத்தியக் கருவிகள் பயன் படுத்தப்படுகின்றன.

நாட்டுப் பாடல்களைப் பாடுவோர் கையாளும் சில முக்கியமான மெட்டுகளின் சந்தங்கள் அடியில் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அவற்றின் உதவி கொண்டு இந்நூலில் காணப்படும் எல்லாப் பாடல்களையும் பாடிப் பரவசமடை வோம்!

## மெட்டுகள்

### I. ஆதிவாசிகளின் மெட்டுகள்

(அ) சாமி ஆட்டம்

தாலல் லே லேலே
லேலே லேலே
தாலல் லே லேலே
லேலே லேலே

(ஆ) கல்யாண — களியாட்டம்

தாலேலே லேலல்லே (5 முறை ஏற்றி இறக்கி)
தாலேலே லேலல்லே லேலல்லே
ஏகே! ஏகே! ஏகே! ஏகே!
ஓஹோ! ஓஹோ! ஓஹோ! ஓஹோ!

### II. சமவெளியில்

1. நடவு மெட்டு

(ஆ) தன் ன னானே னான ன ன்னே ஏ........
னானானே னான ன ன்னே
னானானே னானேனன்னே
என் வெள்ளைச்சீலை வெளுமை
னானானே னானே னன் னே —
என் மஞ்சச்சீலை மகிமை
(ஆ) தன் னானே னானே னன்னே
— இடது புறம் வள்ளி ராசா
னானானே னானே னன்னே
— இருந்தா தெய்வானை

2. கதிரறுப்பு

ஏலோ ஏலோ ஏலோ லங்கடி
ஏலோ ஏலோ — ஆமாசொல்லு
ஏலோ ஏலோ — அப்படிச்சொல்லு
ஏலோ ஏலோ ஏலோலங்கடி
ஏலோ ஏலோ ஐலசா

3. களையெடுப்பு போன்ற வேலைகளுக்கான மெட்டுகள் :

(அ) தன்ன னன்னே னானே னன்னே —மணித்தங்கமே
னான னன்னே னான ன ன்னே —ஒயில் அன்னம்மே

(ஆ) தன்ன னானே னான னானே —அன்னமே ராசா
னான னானே னான னானே —என்னமோ ஏதோ

(இ) தன்னே னானே னானே னன்னே —மயிலாளே
தானே னன்னே னானே னன்னே —குயிலாளே

(ஈ) தன்னே னன்னே னானே னன்னே—போடு
தானே னன்னே னானே னன்னே

(உ) தன்னானே னானே னன்னே —அல்லிலே லே லோ
னானானே னான னன்னே —தில்லேலே லே லோ

(ஊ) தன்னானே னானே னன்னே ஏ.........
னானே னன்னே னானே னன்னே
தன்னானே னானே னன்னே
னானே னன்னே னானே னன்னே
—ரெண்டாம் நம்பரு டேசன் கச்சேரி
தெரியுது பாரு—அந்தச்
சீமை வெள்ளக்காரங்கப்பல் ஓடுதுபாரு.

(எ) தன்ன னன்னே னான னன்னே—சின்ன நரிக்குறவர்
தானே னன்னே—னானன் னானே......ஓ
தன்னே னன்னே—னானன் னானே...ஓ
தில்லே லல்லே
லேலல் லேலே......

4. வண்டிக்காரன் மெட்டு

அட டா தன்னன்னே னானே னன்னே
னானே னன்னே னானே னன்னே—ஓ...
... ...ஏகேய் ... ...

5. களியாட்டங்கள்

(அ) சேர்ந்து ஆடுதல்
தெங் தேந்தி நாதி ன ன
தெங் தேந்தினா
தினத் தெந்தி நாதி ன ன தெங்தேந்தினா.

(ஆ) கரக ஆட்டம்

தன்ன னன்னே னான னன்னே
னான னன்னே னானே — னானே
னான னன்னே னான னன்னே — னானே

(இ) காவடி ஆட்டம்

1. தனன தன தனனதன தனனா — தந்த
தானா தனாதந்த னாதந்த னானா

2. தந்தனைத் தானானே
தனை தனை தானைத் தானானே — வேல் வேல்
தந்தனைத் தானானே
தனை தனை தானைத் தானானே.

(ஈ) ஒயில் கும்மி

தனனம் தன்னே னன னாதினம் தன்னானே — தனம்
தன்னே னன னாதினம் தன்னானே —

6. கதைப்பாட்டுக்கள்

(அ) காத்தவராயன்

தன்ன னன்னே னான னன்னே
னான னன்னே னானே னானே னன்னே
முடுக்கு
ஏ...தன்னே னானே னானே னன்னே
னான னானே னானே னன்னே

(ஆ) சந்தனம் பாட்டு

தன்னன னானே னன்னே
னானே னன்னே னானே னன்னே
(நாலு முறை ஏற்றி இறக்கி)

7. தாலாட்டுக்கள்

ஆரா ரோ ஆரா ரோ
ஆரா ரோ ஆரா ரோ

*வேதாந்த விளக்கம்*

பாட்டின் சந்தங்களுக்காகப் பயன்படுத்தப்படும் பதங்களைப் பற்றி ஒரு வார்த்தை. குயில் பாட்டைப் பாடிய

பாரதி, அப் பாடல்கள் அத்தனையும் தன் மனத்திலெழுந்த கற்பனையின் விளைவெனினும், அவற்றை வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க யாதேனும் சற்று இடமிருந்தாற் கூறும்படி தமிழ்ப்புலவர்களைக் கேட்கிறான். ஆனால் நாட்டுப்புற மக்கள் தம் பாட்டுகளுக்கான மெட்டுகளில் உபயோகிக்கும் பதங்களில் வேதாந்தக் கருத்து வெளிப்படை யாகவே இருக்கிறது. உதாரணமாக இங்குக் கடைசியாகக் கூறப்பெற்றுள்ள தாலாட்டு மெட்டில் உபயோகப்படுத்தப்படும் பதங்களைப் பாருங்கள்! அதில்,

''அன்னை யெத்தனை எத்தனை அன்னையோ,
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ?''

என்ற பட்டினத்தார் பாட்டின் கருத்து தொனிக்கிறது. ''இப் பிறவியில் உனக்குத் தாயாகி, இத் தொட்டிலை ஆட்டும் நான் யாரோ? எனக்குக் குழந்தையாக வந்திருக்கும் நீ யாரோ? யாரோ இவர்?'' என்று மறுபடியும் மறுபடியும் கேள்வி கேட்டுப் பாடல்கள் ஏங்குவது போன்றிருக்கிறது.

மேலும் ''தன்னனனே'' என்னும் பதத்திற்குக் கிராமத்தவர்களே விளக்கம் கூறுகின்றனர். அது 'தன்னை நினை' என்ற சொல்லின் சிதைவு. ''உன்னனயே, நீ எண்ணிப்பார். புறநோக்கு நோக்குவதை விட்டு அகநோக்கு நோக்கு. தன்னை அறிந்தவனே தலைவனை அறிவான்,'' என்ற உயர்ந்த வேதாந்தக் கருத்தை அவை நினைவு ஊட்டுகின்றன.

''தானானே தானானே தன்னானே –'' என்ற பதங்கள் தான் ஆனாய் என்ற மகாவாக்கியப் பதங்களின் சிதைவெனத் தெரிகிறது. (தான் ஆனாய் — தானானா – தானானே – தன்னானே)

''நட்ட கல்லும் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்'' என்னும் சிவவாக்கியரின் பாடலை ஞாபகமூட்டுகின்றன அவை.

''இறைவனைத் தேடி எங்கும் அலையாதே! அவன் உன் உள்ளத்திலேயே இருக்கிறான். இருண்ட உன் உள்ளம் ஒளி பெறும்போது அங்கே அவனிருப்பதைக் காண்பாய்'' என்று கடந்த முனிவர்கள் கூறும் வாக்கியங்கள் போன்றிருக்கின்றன அவை.

''நாட்டுப் பாடல்கள் மக்கள் இனம் இதுவரை கண்ட தத்துவத்தின் சாரம்'' என முல்க்ராஜ் ஆனந்த் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

*

# 3. கடவுள் துதி

## பக்திப் பாடல்கள்

*"உனது மண்டபத்தில் பாடகர்கள் பலர் உண்டு. அங்கு எப்பொழுதும் பாடல்கள் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. ஆனால் பாடிப் பழக்கமில்லாத எனது கீதம் உனது அன்பைத் தொட்டுவிட்டது. ஒரு சிறு துன்பநாதம் உலகப் பெரும் கீதத்தில் கலந்தது, அது கேட்டு என்னிடமிருந்து ஒரு மலரைப் பரிசாகப் பெறு வதற்கு எளியேன் குடிசையருகே எழுந்தருளி விட்டாய் நீ..."*

*—கீதாஞ்சலி.*

வைரங்கள் எங்கோ விளைகின்றன. அவற்றைச் சிரமப்பட்டு எடுத்துப் பட்டை தீட்டி அழகுபடுத்தி, பின்னர்த் தம் விருப்பத்திற்கும் திறமைக்கும் ஏற்ப மாலைகளாக்கித் தாம் அணிகின்றனர்; தெய்வங்களுக்கும் அணிவித்து மக்கள் மகிழ்வெய்துகின்றனர். அதேபோன்று நாட்டுப் பாடல்கள் என்ற வைரமணிகளில் சில எனக்குக் கிடைத்தன, அவற்றைத் திறமையற்ற எனது பாணியில் மாலையாக்கித் தமிழன்னைக்கு அணிவிக்கின்றேன். மாலையின் முதல்மணி 'பக்திப் பாடல்கள்' என்பதாகும்!

பஞ்ச பூதங்கள், சூரியன், சந்திரன், விண்மீன்கள், மலைகள், நதிகள், மழை, இடி, மின்னல், வறண்ட பருவங்கள், சூறைக் காற்றுகள் முதலிய இயற்கையிலுள்ள புதுமைகளை மறுக்கவோ, மாற்றவோ முடியாது. காடுகளை அழித்து, உழுது பயிர்செய்து பலனடைய நினைக்கும் பலமற்ற

மனிதன், தன்னைச் சூழ்ந்துள்ள அளவிட முடியாத இயற்கைச் சக்திகளால் தனக்கும் தனது பயிர்களுக்கும் கன்று காலி களுக்கும் தீங்கு ஏற்படுமெனப் பயந்தான். இவ்வாறு பயமடைந்த தன் மனதைத் திடமடையச் செய்யவும், தன்னைச் சூழ்ந்துள்ள இயற்கை, மகிழ்வுகொண்டு தனக்குத் தீங்கிழைக் காதிருக்குமாறும், உதவி செய்யுமாறும் துதிபாடினான். அவன் தனக்குத் தீங்கிழைக்கும் பறவை விலங்குகளைப் பற்றிக்கூட துதிபாடியுள்ளான். இதுவே மனிதன் தனக்குப் புறம்பாக உள்ள சக்திகளைப்பற்றி நினைக்க, துதிக்க ஆரம்பித்த வரலாறு எனச் சரித்திரம் கூறுகிறது.

*ஆண்டவன் எங்கிருக்கிறான்?*

ஆண்டவன் தாளிட்ட, அடைபட்ட இருளடைந்த கோவில் களில் இல்லை. சாலைபோடக் கல்லுடைக்கும் உழைப்பாளி யினிடமும், நெற்றிவியர்வை நிலத்தில்விழப் பாடுபடும் உழவனிடமும் அவன் இருக்கிறான். அவர்களுடன் அவன் மழையில் நனைகிறான்; வெயிலில் உலர்கிறான். அவனுடைய ஆடை அழுக்கடைந்துள்ளது. தீனர்கள், திக்கற்றவர்கள், தாழ்ந்தோரிடையே நாதியற்றவர்களின் நண்பனாய் அவன் இருக்கிறான், எனத் தாகூர் கூறுகிறார்.

ஏழை எளியவர்களின் உள்ளங்கள் தெய்வபக்தி நிறைந்தவை. கடின உழைப்பும், கடுமையான சோதனை களும், அவர்களின் வாழ்வில் ஒரு துறவு மனப்பான்மையை ஏற்படுத்தியுள்ளன. உழவர்களும் தொழிலாளிகளும் உலகம் உய்யும் பொருட்டுத் தம் நலத்தைத் தியாகம் செய்து சொட்டும் வியர்வைத்துளிகள் ஒவ்வொன்றும் புனிதமானவை.

நாட்டுப் புறங்களில் உழைக்கும் உழைப்பாளிகளைச் சூழ உள்ள இயற்கையே தெய்வ வடிவாகத் திகழ்கிறது. அஃது அன்புருவான தாய்வடிவிலும், பயங்கரமான பத்திரகாளியின் உருவிலும், வல்லமை மிக்க மாயவனாகவும் தோற்றம் அளிக்கிறது.

மள்ளர்களின் விளை நிலங்களின் அருகில் விசுவரூப தரிசனம் தந்த நீலநிறக் கண்ணனே போன்று, கொடியனவும் சாதுவானவையுமான உயிர்க்குலங்களைத் தன் அகத்தே அடக்கியுள்ள மலை உயர்ந்தெழுந்திருக்கிறது. அதனினின்றும் கன்றுக்குப் பாலூட்டக் கதறிக்கொண்டு ஓடி வரும் பசுவே போல், நதிகள் ஒலித்துக்கொண்டே சமவெளியிலுள்ள நிலங் களைச் செழிப்பிக்கத் துரிதமாக இறங்கி வருகின்றன. வைகறையில்,

"தங்க முருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பிய தோர் இங்கிதமோ..."

என்று சொல்லும்படி கதிரவன் தன் கிரணக் கைகளால் எல்லாப் பொருள்களையும் தொட்டு அழகுபெறச் செய்து கொண்டிருக்கிறான். இச்செயலைக் கண்டு சிரிப்பதுபோல் சோலையெங்குமுள்ள கானப்பறவைகள் தொகை தொகை யாகப் பாடுகின்றன. அதுசமயம் உழவன் ஏர் பூட்டுகிறான். தன் வலிய கரங்களால் மேழியைத் தொடுமுன் கடவுளை வணங்குகிறான். அவன் மிதித்திருப்பது மண், தலைக்கு மேலிருப்பது விண். இதுவே அவனது கோயில். "சேறாடு கோலமொடு, வீறுபெறத் தோன்றும், செங்கயல் நெடுங்கண் சின்மொழி உழத்தியர்..." நாற்றையெடுத்துச் சேற்றில் நடும்போது மங்கலப் பாட்டுப்பாடி இறைவனைத் துதிக் கின்றனர். மரம் அறுப்பவர், கல்லுடைப்பவர், கதிரறுப்பவர், கட்டிடம் கட்டுபவர் முதலிய பல தொழிலாளிகளும் தம் தொழிலை ஆரம்பிக்குமுன், தம் தொழிற் கருவிகளைத் தொடு முன் இறைவனை வணங்கிப் பணிகின்றனர். சிலர் உருக்க மாகப் பாடுகின்றனர்.

கிராமங்களில் காளியம்மனும் மாரியம்மனும் வணங்கப் பெறுகின்றனர். காளி, மாரி என்னும் பதங்கள் வழக்கில்சில சமயங்களில் வாந்திபேதி, வைசூரி என்ற நோய்களைக்

குறிப்பதுமுண்டு. ''உனக்குக் காளிவர ; மாரிவர...'' என்று சொல்வது மிகக் கடுமையான வசை மொழியெனக் கருதப் படுகிறது. சாபத்தால் தலை மாறிய மாரியின் கையில் சிவன் தந்த முத்துமாலை இருக்கிறது. அதை அவள் யார்மேலாவது வீசினால் அதற்கு எவரும் தப்பமுடியாது! ஆகவே அவளை மக்கள் பொங்கலிட்டும், தீச்சட்டி எடுத்தும், தீக்குழி இறங்கியும், மாவிளக்கு எடுத்தும் வழிபடுகின்றனர். காளி சிங்கத்தின்மேல் நிற்பவள் ; மனிதத் தலைகளையும் கைகளையும் மாலையாக கோத்து அணிந்துள்ள கோரமான உருவினள். அவளையும் மக்கள் மேற்கூறியவாறு பொங்கல் இட்டுப், பூசை செய்து, பலியிட்டுத் துதிக்கின்றனர். மேலும் அன்றே பிறந்து அன்றே அழியும் கன்னித் தெய்வமான முத்தாலம்மா புனிதமானவள், வணக்கத்துக் குரியவள். மழையைத் தரும் இந்திரன், பருவங்களுக்கெல்லாம் காரண மாகவுள்ள சூரியன், வசுதேவன் முதலிய தெய்வ நாமங்களும் நாட்டுப் பாடல்களில் வருகின்றன. மகாலிங்கம், சுருளி மலை நாதன், சண்முகநாதன் போன்ற வனத்திலுள்ள தெய்வங் களும் மதுரை மாவட்டத்திலுண்டு. பழனி மலை மேல் பண்டார வடிவோடிலங்கும் முருகன் கிராம மக்களுக்குக் கண்கண்ட தெய்வம் இத்தெய்வங்களைப் பற்றிய பாடல் களைப் பக்திப் பாடல் வகையில் பிரித்திருக்கிறேன். அவைகளே இந்நூலுக்கும் கடவுள் வாழ்த்துப் பாடல்களாக வருகின்றன.

*பாடல்கள் (நடவு மெட்டு)*

1. முந்திமுந்தி விநாயகரே
 முருகா சரஸ்வதியே
கந்தனுக்கு முன்பிறந்த
 கணபதியே முன் நடவாய் !

2. சித்திக் கணபதியே
 செல்வக் கணபதியே
முத்திக்கு வித்தே
 முடிக்கணியுஞ் சோதிமுத்தே !

3. ஆதிக் கணபதியே
 அருள்சேர் பரஞ்சுடரே
வேதம் வகுத்த
 விநாயகனே வந்தருள்வாய் !

4. ஏடு கொடுத்தவரே
 எழுத்தாணி தந்தவரே !
பாடங் கொடுத்தவரே
 பாதுகாக்க வேணுமய்யா !

5. கழனி வயல்சூழும்
 கனகமலை மேலிருக்கும்
பழனியாண் டிக்குமரா
 பாலனுக்கு வாக்கருள்வாய் !

6. ஓரெங்க நாதரென
 உலகமெலாம் தான்போற்றும்
சீரங்க நாதாநீ
 திருவாக்குத் தந்தருள்வாய் !

7. மந்தையிலே மாரியாயி
மலைமேலே மாயவரே
இந்திரரே சூரியரே
இப்ப வர வேணுமய்யா !

8. வடிவான லட்சுமியே
மாது முத்து லட்சுமியே
நானிலத்தோர் போற்றும்
நாச்சியா ரம்மா வா !

9. மங்காத ஞான
மணி விளக்காய் வந்தருளும்
அங்காள தேவிஎனை
ஆதரிக்க வந்திடுவாய் !

10. வீரியம் பேசிவந்த
வீரர்களை வெற்றிகொண்ட
மாரியம்மா ளிப்போது
வந்திறங்க வேணுமம்மா !

11. செல்வம் பெருகும்
சிவகங்கை நன்னாட்டில்
வல்லமுத்து வீராயி
வந்திடுவா யிப்போது !

12. மலையாள பகவதியே
மந்திரங்கள் கற்றவளே
மந்திரங்கள் கற்றவளே
அந்திரமா வந்திரமா !

13. சாமி யிருப்பாராம்
சங்கரனார் கோயிலிலே
எங்கும் இருப்பாராம்
எம் பெருமாள் கோயிலிலே

14. முத்தாலம்மா பாதம்
முழுத்தமிட்ட காந்தாரி
பட்டாலம்மா மாரியம்மா
பாதுகாக்க வேணுமம்மா !

15. காளியம்மா மாரியம்மா
கண்ணனூர் துர்க்கையம்மா
துர்க்கைப் பிடாரியம்மா
துணையிருக்க வேணுமம்மா !

*சுருளிமலை பாண்டி*

மதுரை மாவட்டத்தில், பெரியகுளம் தாலுகாவின் தெற்கு எல்லையாகச் சுருளிமலை அமைந்துள்ளது. அது பொதிகை மலையின் ஒரு கிளையேயாகும். செழிப்பான இப்பகுதிக்கு ஆங்கிலேயர்கள் ''ஹைவேவீஸ்'' என்று பெயரிட்டுள்ளனர். மலைமேலேறிப்பார்த்தால் கொந்தளிக்கும் கடலில் அலைச் சிகரங்கள் தோன்றுவதுபோன்று, அடுக்கடுக்காக மலைச் சிகரங்களிருப்பதைத் காணலாம். இவைகள் எரிமலைக் குழம் பால் ஏற்பட்ட பாறைகளாலான பழங்கால மலைகளென்று ஆராய்ச்சியாளர் சொல்வர். ஆனால் நாட்டுப்புற மக்கள் சுருண்டு சுருண்டுள்ள அம்மலைத்தொடரைச் 'சுருளி' என்று அழைக்கின்றனர். அக் குறிஞ்சி நிலத்தில், அதன் அதி தெய்வமான முருகனுக்குக் கோவில் (குகைக் கோவில்) கண்டு வழிபட்டு வருகின்றனர்.

சுருளிமலைத் தொடர் வடக்கிலும் கிழக்கிலுமாகப் பரந்திருக்கிறது. அப்பகுதிகளில் சங்கிலியாண்டி கோவில், சண்முகநாதன் கோவில், மகாலிங்கம் போன்றவை அமைந்துள்ளன. அவைகளைப் பற்றிய பாடல்களில் சில வருமாறு:

*சுருளிமலை*

1. [1]பண்டாரத் துறையோரம்
பருமரத்துக் காட்டோரம்
நிக்கிறாராம் சுருளியாண்டி
நீல முழி வாடாமே

---

[1]பண்டாரத்துறை: திருவிழாக்காலங்களில் சாதுக்கள் (பண்டாரங்கள்) கூடுமிடம் சுருளிமலையில் உள்ளது.

2. மலையை மலை பொருத
   மண்டபத்தை யுண்டுபண்ணி
சிலையா முளைச்சாராம்
   செல்வமுள்ள சுருளியாண்டி

3. பச்சை வனத்தழகும்
   பண்டாரத் துறையழகும்
மேல்மெத்தைக் குகையழகும்
   மேலவர்கொண் டாடலாகும்.

*சுருளிமலையின் மலை வளத்தைப் பற்றிய ஒரு சுவையுள்ள பாடல்*

இஞ்சி படருமலை
   ஏலக்காய் காய்க்குமலை
மஞ்சி படருமலை
   மகத்தான சுருளிமலை

*மகாலிங்கம் - சண்முக நதி, சங்கிலியாண்டி கோயில்கள்*

1. மலைக்கு மகாலிங்கம்
   மாமதுரைச் சொக்கலிங்கம்
தானா வளர்ந்தலிங்கம்
   தனுக்கோடி ராமலிங்கம்

2. வெள்ளி விளக்கெரியும்
   வெண்கலங்கள் ஓசையிடும்
தங்க விளக்கெரியும்
   சண்முகனார் கோயிலிலே

3. கூந்தப் பனையோரம்
   குளிராட்டும் கானலிலே
ஏந்து பலகையிலே
   இருப்பாராம் சண்முகனார்.

### வேறு (தந்தனைத் தானானே மெட்டு)

1. சங்கு முழங்கிவரும் — சண்முகா
 சரவணப் பொய்கையிலே
 வையா புரிமுருகா — இந்நேரம்
 வந்து உதவவேணும். (தந்தனை)

2. கட்டைப் பனைமரமாம் — சண்முகா
 காவேரி வையைநதி
 தீத்தம் குதித்ததின்னு — சண்முகா
 கூடக் குதித்தவராம். (தந்தனை)

3. அங்குமே பெற்றெடுத்த — சங்கிலி
 அடங்காப் பெரும்புலியே
 தங்கமே சற்றுநேரம் — சங்கிலி
 தாட்டியனே திரும்பு ! (தந்தனை)

4. சங்கிலிப் பாறையிலே — கருப்பையா
 சயனமா உந்தனுக்கு
 மங்கள மாகவேதான் — சங்கிலி
 மன்னவ னேதிரும்பு (தந்தனை)

### காவடிச் சிந்து

மதுரை மாவட்டத்தில் முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் சிறந்தவைகளான பழனி, திருப்பரங்குன்றம், பழமுதிர் சோலை ஆகிய திருப்பதிகள் உள்ளன. பழனி மலை மேல் பண்டார வேடத்துடன் நிற்கும் குமரக்கடவுள் பக்தர் களின் மனதைக் கொள்ளை கொள்பவன். பாற்காவடி தீர்த்தக் காவடி, மச்சக்காவடி, சேவற்காவடி, சர்ப்பக்காவடி ஆகியவற்றைத் தோளில் ஏந்திக்கொண்டு, ''முருகா, முருகா'', ''வேல், வேல்'', ''அரோகரா'', ''சாமியே சரணம்'' என்று உருக்கமாகக் கூவிக்கொண்டே ஓட்டமும் நடையும், ஆட்டமும் பாட்டுமாகப் பக்த கோடிகள் அவன் சந்நிதியை நோக்கிப் போய்க் கொண்டேயிருக்கின்றனர்.

வாழ்க்கையில் சோதனைகளும் அதன் மூலம் உள்ளொளியும் ஏற்படும்போது பக்தர்கள், மனதில் ஒரு சங்கற்பம் செய்து கொள்ளுகின்றனர். அதற்கு நேர்த்திக்கடன் என்று பெயர். அஃது எத்தனையோ வகைப்படும்; அதில் காவடி யெடுப்ப தென்பது ஒருவகை.

காவடி என்பது ஒரு தொடர்மொழி காவு+தடி எனப் பிரிக்கலாம். ஆண்டவனுக்கான காணிக்கைப் பொருள்களை எடுத்துச் செல்லும் தடி என்பது அதன் பொருள். ஆதியில் கயிலை மலையிலிருந்த இரு குன்றுகளான பழனி மலையையும் இடும்பன் மலையையும், ஆண்டவன் உபயோகத்திற்கெனவும், தன் உபயோகத்திற்கெனவும், காவடி கட்டித் தோளில் சுமந்து கொண்டு வந்தான் இடும்பன் எனத் தல வரலாறு கூறுகிறது. நெடுந்தூரம் வழி நடந்து கோவிலுக்கு வரும் பக்தர்கள், ஆண்டவனின் பூசைக்கான பொருள்களையும், தம் தேவைக் கான பொருள்களையும் தனித் தனியாகக் கட்டி, ஒரு தடியின் உதவிகொண்டு தோளின் இருபுறங்களிலும் தொங்கவிட்டுச் சுமந்து வந்திருக்கக் கூடும். இன்றுங்கூட ஐயப்பன் மலைக் கோயிலுக்குச் செல்லும் பக்தர்கள் இருமுடி கட்டிக் காணிக்கைப் பொருள்களை ஒரு முடியிலும் தம்தேவைக்கான பொருள்களை இன்னொரு முடியிலும் சுமந்து செல்வதைக் காணலாம். இதுவே காவடியின் உற்பத்தியெனலாம்.

காவடி எடுப்பதென முடிவு செய்து கொண்டவர்கள் கடின விரதங்களை மேற்கொள்ளுகின்றனர். தினமும் அதிகாலையில் நீராடுவது, தேவ நாமத்தைப் பாடுவது, ஒருவேளை மிதமாக உண்பது, பகலில் தூங்காதிருப்பது, இரவில் மிகக் குறைந்த நேரம் தனியாகத் தரையில் படுத்துறங்குவது, யாவரையும்—விலங்குகளையுங்கூட ஆண்டவன் உருவாகக் காணல், யார் யார்க்கும் தாழ்ச்சி சொலல், செய்யாதன செய்யாது, தீக் குறளை சென்றோதாது, ஐயமும், பிச்சையும் ஆந்தனையும்

இட்டு இரவு பகலாக ஆண்டவனிடம் இடையறாப் பக்தி கொண்டிருப்பது, அந்த விரதமாகும். ஆண்டவன் சந்நிதிக்குப் போகும் நாள் வந்தவுடன், காய்ந்த ஆல விழுது போன்ற இலேசான மரத்தில் தடியொன்று தயாரித்து, அதன் இரு பக்கங்களிலும் பால் நிரப்பிய சிறிய செம்புகளை வைத்துக் கட்டுவர். பின்பு தடியின்மேல் அரைவட்டமாகப் பல குச்சிகளை வளைத்துக் கட்டி, துணிகளாலும், மயில் தோகைகளாலும், அதை அலங்காரம் செய்வர். இதுவே காவடியாகும். தம் வாழ்வில் ஏற்பட்ட இன்ப துன்பங்களத்தனையையும் காவடியாகக் கட்டி ஆண்டவன் அடியிணைகளில் வைத்து வழிபடுவதே அதன் உட்கருத்தாகும். காவடி, சந்நிதி நோக்கிச் செல்லும் வழியிலுள்ள கிராமங்களில் ஊர்விளையாடிக் கொண்டே செல்லும். காவடி ஏந்திச் செல்பவருடன் சில சீடர்களும் சேர்ந்து விடுவர். வழிநெடுகலும் இறை வழிபாடும், காவடிச் சிந்துப் பாடல்களும் ஆட்டமும் ஓட்டமும் இருக்கும். ''அரகரா அரோகரா'' ''வேல், வேல்'', ''முருகா, பழனியப்பா, வடிவேலா'' என உளமுருகிக் கூவுவர். ஆண்டவனும் அவர்கள் கூடவே வழிநடப்பான். அவன், ''முருகா என ஓர் தரமோ தடியார் முடிமீ தினைதாள் அருள்வோன்'' அல்லவா? பல நாட்கள் நடந்து, முடிவில் காவடியுடன் மலையின் மேலேறிப் பழநியப்பனின் முன் தங்கள் காணிக்கையைச் செலுத்துவது கண்கொள்ளாக் காட்சியாகவிருக்கும்.

காவடிச் சிந்து ஒரு வழிநடைப் பாட்டு. அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து தமிழ் மக்களுக்குப் பழக்கமானது. அதில் கவிதை நயம் சொட்டும். இன்னும் பல காவடிச் சிந்துகள் புத்தக வடிவில் உள்ளன. அவ்வாறு அச்சிடப் படாமல் வாய்மொழி வழக்கில் உள்ளனவற்றில் ஒன்று கீழே தரப்படுகிறது. அதில் முருகன் கண்கண்ட தெய்வமாகக் கைக்கெட்டிய பழமாக (பழநியல்லவா அவனது இருப்பிடம்)

வாழ்க்கையில் இரண்டறக் கலந்த தோழனாகச் சித்திரிக்கப் படுகிறான் :

*பாடல்கள் (மெட்டு தந்தனைத்தானானே)*

1. எட்டடிக் குச்சுக்குள்ளே — சுப்பய்யா
எப்படி நானிருப்பேன்
தங்க மயிலேறிச் — சுப்பய்யா
வந்திட வேணுமய்யா (தந்தனை)

2. மாவூத்து வேலவரே — சுப்பய்யா
மன்னவன் நீதானோ
தெப்பத்துப் பட்டி வழி — சுப்பய்யா
தேடியே வாராராம் (தந்தனை)

3. வெள்ளிக் கிழ மையின்னு — வள்ளியவள்
வீடு மெழுகையிலே
அத்தை மகன்போலச் — சுப்பய்யா
கூட மெழுகுறாராம் (தந்தனை)

4. காப்படி கம்பு கொண்டு — வள்ளியம்மை
கடைக்குப் போகையிலே
அத்தை மவன் போல — வேலவர்
வெத்திலை கேட்டாராம் (தந்தனை)

5. பாக்கு எங்கிட்டேயில்லை — வெத்திலை
தானுமெங் கிட்டேயில்லை
சுண்ணாம்பு நான்தாரேன் — சுப்பய்யா
தூரவே நின்னுகேளு (தந்தனை)

6. ஆறும் பெரியாறு — சுப்பய்யா
ஆறு முகனாறு
இந்த ஆறு கடந்து — சுப்பய்யா
எப்படி நான் வருவேன் (தந்தனை)

7. காவடிக் கூட்டங்களாம் — சுப்பய்யா
கருமலைச் சந்நிதியாம்
தீர்த்தக் குகை நோக்கி — எல்லோரும்
சென்று வழி நடப்போம் (தந்தனை)

8. அரும்பு மோதிரமாம் — வள்ளிக்கு
ஆனந்தக் கைவீச்சாம்
தனக்கு வேணுமின்னு — சுப்பய்யா
தட்டிப் பறிக்கிறாராம் (தந்தனை)

9. வெள்ளிக் கரண்டகமாம் — வள்ளிக்கு
வெண்கலப் பாக்குவெட்டி
தனக்கு வேணுமின்னு — சுப்பய்யா
தட்டிப் பறிக்கிறாராம் ! (தந்தனை)

10. தங்கக் காவடிகொண்டு — சுப்பய்யா
தான்வரும் வேளையிலே
தனக்கு வேணுமின்னு — வள்ளியும்
தட்டிப் பறிக்கிறாளாம் ! (தந்தனை)

மேலே கொடுக்கப்பட்டுள்ள பாட்டுகள் எளிமையானவை களே. இருப்பினும் சிலவற்றில் சொல் நயமும், பொருள் நயமும் கருத்தாழமும் உள்ளன. உதாரணமாக ''ஆறும் பெரியாறு, சுப்பய்யா ஆறுமுகனாறு, இந்த ஆறு கடந்து— சுப்பய்யா எப்படி நான் வருவேன்?'' என்ற பாட்டில் ஆறு என்ற பதம் திரும்பத் திரும்ப வருகிறது. ஆறு என்ற பதத் திற்குச் சாதாரணமாக நதி என்று பொருள் கொள்ளும்போது, பாட்டு நாட்டு வளத்தை வெளிப்படுத்துவதைக் காண்கிறோம். ஆனால் ஆறு = வழி என்று பொருள் கொள்ளும்போது, பாட்டில் கருத்துச் செறிவு இருப்பதைப் பார்க்கிறோம். ''ஆறுமுகம் கொண்ட ஐயா, நீ எனது ஆன்ம விடுதலைக் காகக் காட்டுகின்ற வழி மிகப் பெரியது, சிறந்தது. அஃது

உனது அருள் வழி கடையனாகிய நான் அவ்வழியைப் பின் பற்றச் சிறிதும் அருகதையற்றவனாக விருக்கிறேன்! என்ன செய்வேன்! எங்கு செல்வேன்? எப்படிச் செல்வேன்? எப்பொழுது எனக்கு விடுதலை கிட்டும்?'' என்ற கருத்தும் அதில் பொதிந்துள்ளதென்பது ஊன்றிப் பார்த்தால் புலனாகும்.

# 4. மழை

''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை,''

மழையே அமுதமாகும். அது நாம் உண்பதற்கான உணவை உண்டாக்குவதோடு, அதுவும் உணவாக அமைகிறது. ''வானம் சுருங்கின் தானம் சுருங்கும்.'' அத்துடன் தவமும் உயிர்க்குலங்களும் சுருங்கிவிடும். மழையே உலகின் உயிர்நிலை. விவசாயிகளுக்கு அதுவே உயிரும், உணவும், கடவுளும் கூட.

பூமிதானத் தந்தை வினோபா ஒருநாள் ஒரு கிராமத்தில் விவசாயிகளடங்கிய கூட்டமொன்றில் பேச ஆரம்பிக்குமுன் கூட்டத்திலிருந்தவர்களை, ''நீங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா?'' என்று கேட்டார். அவர்களில் சிலர், ''ஆம்!'' என்றனர்.

''எப்பொழுது? எவ்வுருவில்?'' என்று மறுபடியும் அவர் கேட்டார்.

''மழை பெய்யும்போது...'' என்று கூறினர்.

விவசாயிகள், விளை நிலங்களில் விதையை விதைத்து விட்டு ஆண்டவனை நோக்கிப் பிரார்த்திக்கின்றனர். அவன் மழையுருவில் அவர்களுக்குக் காட்சியளிக்கிறான். மழையே அவர்களின் கண்கண்ட தெய்வம்!

''உணவினின்றும் உயிர்கள் உண்டாகின்றன. மழையினின்றும் உணவு உருப்பெறுகிறது. யக்ஞத்திலிருந்து

(வேள்வி) மழை வருகிறது. யக்ஞத்திற்குப் பிறப்பிடம் கர்மம். கர்மம் வேதத்தினின்றும் உதித்ததென அறிக. வேதம் பரமாத்மாவினின்று வந்தது.''—கீதை.

இஃதொரு பெரிய வட்டம். தன்னலமற்ற தியாகச் செயல்கள்-வேள்விகள் மிகுந்திருக்கும்போது *''மாதம் மும்மாரியும் வருடமொரு பொன்மாரியும்''* பெய்யுமெனக் கிராம மக்கள் நம்புகின்றனர்.

மழையை நம்பி அவர்கள் விதை விதைக்கிறார்கள். பூமி வானத்தைப் பார்த்து ஏங்கியிருக்கிறது. (வானம் பார்த்த பூமி யென்பது புன்செய் நிலங்களுக்கு வழங்கும் மறுபெயராகும்.) ஆனால் மழை தக்க தருணத்தில் பெய்யாது பொய்க்கிறது. மழை வருவது போல் மேகஞ் சூழ்கிறது; மழை பெய்வதில்லை. விவசாயிகளின் மனம் கலங்குகிறது; அது பாட்டாக வெளிப்படுகிறது:

1. [1]''இந்த மழையை நம்பி
இங்குச் சோளம் நான்விதைச்சேன்
வந்தமழை போகுதில்லோ
வருண பகவானே!''

2. வந்தமழை போகுதில்லோ
மந்தை யாத்தாள் கண்பார்!
அடுத்தமழை போகுதில்லோ
அய்யனாரே கண்பார்!

3. கண்டமழை போகுதில்லோ
காணியாளா கண்பார்!
சொன்னமழை போகுதில்லோ
சோணைஐயா கண்பார்!

---

[1] களையெடுப்பு மெட்டு.

*மழையை அழைத்தல்*

ஆனால் மழை எப்படியும் வந்தே தீரவேண்டும். சில சமயங்களில் வனத்திற்குப் போய்த் தேவதைகளை வாழ்த்திக் கிராம மக்கள் மழையை அழைப்பதுமுண்டு; அவர்களின் நம்பிக்கையின் வலிமையால் மழை வந்து விடுவதுமுண்டு. மழையை வேண்டிப் பாடப்படும் பாடல்களில் சில வருமாறு :

1. சந்திரரே சூரியரே
   சாமி பகவானே
   இந்திரரே வாசுதேவா
   இப்ப மழை பெய்யவேணும் !

2. மங்கையிலே மாரியாயி
   மலைமேலே மாயவரே
   இந்திரரே சூரியரே
   இப்பமழை பெய்ய வேணும் !

3. மட்டமலை அய்யனாரே
   மாவூத்து வேலவரே
   மழையை இறக்கிவிடு
   மானுடங்க கையெடுக்க !

4. மலையாள பகவதியே
   மனங்குளிர்ந்த கூத்தனாச்சி
   மழையை இறக்கிவிடு
   மானுடங்க கையெடுக்க !

*மழைக்கும்மி*

தேசம் செழித்திடவே
செல்லமழை பெய்ய வேணும்
செல்ல மழை பெய்திடவே
குளங்க ளெல்லாம் பெருகிடவே
பெருகி வந்த குளங்களிலே
பெண்களெல்லாம் நீராடி

நீராடி முளைத் தொளிச்சு
நீலவர்ணப் பட்டுடுத்திச்
சட சடன்னு மழைபொழியச்
சன்னிதித்தெரு புரண்டோடச்
சமத்தா நிக்கிற முத்தாளுக்குச்
சரிகை மின்னுது பாருங்கடி !
கலகலன்னு மழைபேயக்
கல்லும் நீரும் கலந்தோட
கணக்காய் நிக்கிற முத்தாளுக்குக்
கல்லோலை மின்னுது பாருங்கடி !
மொடுமொ டுன்னு மழைபேய
முச்சந்திநீரும் பாய்ந்தோட
முடுக்காய் நிக்கிற முத்தாளுக்கு
முருகுமின்னுது பாருங்கடி !

*அதி விருட்டி*

தமிழ் நாட்டிற்கு வடகிழக்குப் பருவக்காற்று மழையைக் கொண்டுவரும். ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் அதிக மழையிருக்கும். அப்பருவத்தில் வடகிழக்கு மூலையில் (ஈசான மூலையில்) மின்னல் மின்னும், கொண்டல் கட்டும். திடீரென மழை வந்துவிடும்! 'பசுக் கறக்குமுன் பத்துப்பாட்டம் மழை வரும்.' சில சமயங்களில் இவ்வாறு பெய்யும் மழை அதிகரிக்கும்போது, எளிய வாழ்க்கை வாழும் விவசாயிகளுக்கு இன்னல்கள் பல நேரும். அவர்களின் வீடெங்கும் ஒரே ஒழுக்கலாக விருக்கும். பகலில் எங்கும் வெளிச் சென்று வேலை பார்க்க முடியாது. இரவெல்லாம் அடை மழை பெய்தால் நிலைமை மிக மோசமாகிவிடும். இந்நிலையைப் பாட்டுகள் படம் பிடித்துக் காட்டுகின்றன :

1. கன்னங் கருத்த மழை
காலூன்றிப் பெய்யுமழை
இன்னங் கருக்குதடி
ஈசான மூலையிலே!

2. மின்னுதடி வடகிழக்கே
முழங்குதடி கடலோரம்
பிறப்பிட்ட நேரமெல்லாம்
பேயுதடி பேமழையும் !

3. மேகந் திரளுதடி
மின்னிருட்டுக் கம்முதடி
தலையே நனையுதடி
தஞ்சமத்த கூரையிலே !

*பஞ்ச நிலை*

நம் கருமங்களே மழைக்குக் காரணமெனக் கண்டோம். மழை பெய்யாதிருப்பதற்கும் நம் செய்கைகள் தாம் காரணம். மலைகளிலுள்ள வனங்களை அழித்து விறகாக்கியும் கரியாக்கியும் அடுப்பெரிக்கிறோம்; குடியிருப்பதற்கான வீடுகள் கட்டவும், ரயில் வண்டிகள் கட்டவும், கப்பல்கள் கட்டவும் மரங் களை உபயோகித்து வருகிறோம். அதனால் மலைகளில் மேகங்கள் தங்குவதற்கான குளிர்ந்த சோலைகளற்றுப் போயின. அதனால் மழை காலா காலத்தில் போதிய அளவு பெய்வதில்லை; விளைச்சலுமில்லை. மக்களுக்கு வேலையு மில்லை; உணவுமில்லை. பஞ்சம் வருகிறது; மக்கள் குடிபெயர்ந்து வேலைதேடி, ஊர் ஊராக அலைகின்றனர். இதைப் பாட்டுகள் விளக்குகின்றன :

*பாட்டு (களையெடுப்பு மெட்டு)*

1. [1]மானத்திலே மழையு மில்லை
மழை பொழியக் கானலில்லை
முட்டிகளைத் தூக்குங்கடி
முல்லையாறு போயிச்சேர !

---

[1] மானம் - வானம்

2. மானத்திலே மேகமில்லை
மழை பொழிய நாளுமில்லை
கூடவந்து சேந்தியின்னா
குடிமங்கலம் விடியப்போவோம்!

3. கோடை மழை பெய்யலையே
கொடுப்பை தழைக்கலையே
[1]கொடுப்பை புடுங்கவந்த
கொடுப்புலியைத் தோத்தனடி!

*நம் வனமகோற்சவங்கள் இந்நிலையை மாற்றுமா?*

மலைகளிலே—முக்கியமாக மேற்கு மலைகளிலே—இருந்த காடுகளை அழித்துவிட்டோம். அதனால் மக்களுக்கு மட்டும் கஷ்டமல்ல! யானைகள் படுந் துயரத்தைப் பாருங்கள்:

வண்டமெட்டுப் பாதையிலே
கண்டமட்டும் காடுவெட்டி
ஆனைநிற்க இடமில்லாமல்
அலையுதடி ரோட்டுவழி!

அந்தோ! பரிதாபம்!

*கோடை மழை*

கோடை காலத்தில் ஆயர்கள் தங்களின் ஆடுகளை வயல் வெளிகளில் மறித்து வைப்பார்கள். இதற்குக் கிடை மறித்தல் என்று பெயர். இவ்வாறு கிடையமர்த்தப்படும் ஆடுகளில் ஒரு வகை குறும்பாடு. இவை மதுரை ஜில்லாவில் அதிகம். அதை மேய்ப்பவர்கள் குறும்பர்கள் எனப்படுவர். அவ்வாடுகள் மழையைத் தாங்காது. ஆனால் கடுங் கோடை வெயிலைத் தாங்கும். திறந்த வெளியில் வாழும் அவை திடீரென மழை வந்தால் கும்பல் கும்பலாக மடியும். ஆயர்களுக்குப் பெரு நஷ்டம். இறந்த ஆடுகளை எப்படியாவது விற்றாக

[1]கொடுப்பை - ஒருவகைக் கீரை.

வேண்டும். மலிவாக அவற்றை விற்று நஷ்டமடைவர். ஆனால் வாங்குபவர்களுக்கு என்ன கொண்டாட்டம்! பாட்டைப் பாருங்கள் :

கோடை மழை பெய்யாதோ
குறும்பராடு சாகாதோ
துட்டுக்கு எட்டாடு
தூக்கிக் கொடுக்காரோ!

*மாசி மழை*

"தைப்பனி தரையைப் பிளக்கும்
மாசிப்பனி மச்சைப் பிளக்கும்."

தையும் மாசியும் பனிக்காலம். இப்பொழுது குளம் குட்டைகளிலும் ஏரிகளிலும் உள்ள தண்ணீர் வற்றிக் கொண்டே வரும். கதிர்கள் முற்றி, கற்றறிந்த பெரியோரைப் போன்று தலை வணங்கி நிற்கும். உழவர்கள் நீர் நிலைகளின் மடைகளையெல்லாம் நன்றாக மூடிவிடுவர். குளம் குட்டைகளில் மீன் ஏராளமாகவிருக்கும். அதை யாரோ குத்தகைக்கு எடுத்துவிடுவர். பொது மக்களுக்கு மீன் கிடைக்காது போய் விடும். மீன் பஞ்சம் வந்துவிடும். இது சமயம் மழை பெய்து மலைகளினின்றும் வடிந்த புதுவெள்ளம், குளம் குட்டைகளினுள் புகுந்து விடுகிறது. புது வெள்ளத்தில் விளையாட மீன்கள் துள்ளிக் குதித்துக் கொண்டு வெளியே வந்துவிடும். திடீரென வெள்ளம் வற்றிவிடும். பின்பு வீதி, வாசல், காடு மேடெங்கும் மீன்கள் துள்ளும். யாவருக்கும் ஏராளமாக மீன் கிடைக்கும். மக்களின் மீன் பஞ்சம் தீரும். இதை ஒரு பாட்டு படம்போட்டுக் காட்டுகிறது :

மாசி மழை பெய்யாதோ ?
மலையில் வெள்ளம் சாயாதோ ?
ஏத்து மீனு ஏறாதோ ?
எங்க பஞ்சம் தீராதோ ?

*மழைக்கெனப் பாடும் ஒரு பாட்டு*

நல்ல மழை பேயணும் ஆலம்மா
நாடு செழிக்கப் பேயணும் ஆலம்மா
ஊசி போல மின்னி மின்னி
ஊர் செழிக்கப் பேயு மழை
காசு போல மின்னி மின்னி
காடு செழிக்கப் பேயு மழை
பணத்தைப் போல மின்னி மின்னி
பட்டண மெல்லாம் பெய்யு மழை
ஊர் குலுங்கப் பேயு மழை
உருட்டு மழை பேயுமே ஆலம்மா
சீமை யெங்கும் பேயுமே ஆலம்மா
செல்ல மழை பேயுமே ஆலம்மா!

5

# நாட்டுச் சிறப்பு



"தன்னா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு"

என்பது பொய்யாமொழி. மதுரை மாவட்டத்தின் சிறப்பையும், அதிலுள்ள சில ஊர்களின் செழிப்பையும் குறிக்கும் நாட்டுப் பாடல்கள், மேற்கண்ட குறளுக்கு விரிவு உரையாக வுள்ளன.

"இரு புனலும், வாய்ந்த மலையும், வருபுனலும்," பாண்டி நாட்டில் உண்டு. இங்கு வெள்ளி மலை, விராலி மலை, நாகமலை, கொடைக்கானல் மலை, பழனிமலை, ஏலக்காய் மலைகள் போன்ற மலைகள் உள்ளன. (மலைக்) கோம்பையினின்று இறங்கி வரும் நதியின் வெள்ளம் கரை புரண்டோடுகிறது. அதன் இரு மருங்கிலும் உள்ள நிலம், நதி அடித்து வந்த வண்டல் மண்ணால் செழிப்புறுகிறது. அதில் தேக்கு மரங்கள் போன்ற மரங்கள் வளர்கின்றன. அவை மற்ற இடங்களிலுள்ள மரங்களைப்போல், தளிர் விட்டு, இலை விட்டுப் பின் கொம்பு விட்டு வளர்வதில்லை. செழுமையின் காரணமாக [1]ஆக்கை ஆக்கையாக விட்டு வளர்கின்றன. நாடெங்கும் நெல் விளைச்சல் அதிகம். அத்துடன் மக்களின் பண்பும் அதிகம். நாட்டில் அரசியல், பொருளாதாரம், மற்றும்

[1] ஆக்கை - நீண்ட சிறு கிளை.

சமூகத் துறைகளில் நீதி நிலைத்திருக்கிறது எனக் கூறுகின்றன பாடல்கள் :

1. [1] வெள்ளி மலை விராலி மலை
விறகெடுக்கும் நாகமலை
பஞ்சந் தாங்கும் மதுரைக் கோட்டை
படிபோடும் மீனாட்சி !

2. ஆக்கடிக்கும் தேக்கு மரம்
அலைமோதும் கோம்பைத் தண்ணி
நீரோடி நெல் விளையும்
நீதியுள்ள பாண்டி நாடு !

கொடைக்கானல் மலை, சுருளி மலைகளின் வளங் குறித்துப் பேசும் இரு பாடல்கள் :

1. துந்தி நிழல் கட்டுறதும்
தூவானம் தூவுறதும்
நாதசுரம் ஊதுறதும்
நம்ம கொடைக்கானலிலே !

2. இஞ்சி படருமலை
எலுமிச்சை காய்க்கு மலை
மஞ்சி படருமலை
மகத்தான சுருளிமலை !

நாடோடியாகப் பாடப்படும் பவளக்கொடி மாலையி லிருந்து தென் மதுரையின் சிறப்பைக் குறிக்கும் சில அடிகள் :

"வாழை வடக்கீனும் வான்கரும்பு மேற்கீனும்
கரும்பும் இளநீரும் கண்திறந்து மடைபாயும்
கட்டுக் கலங்காணும் கதிருழக்கு நெற்காணும்
அரிதாள் அறுத்துவர மறுதாள் பயிராகும்
அரிதாளின் கீழாக ஐங்கலந்தேன் கூடுகட்டும்

[1] மணித் தங்கமே மெட்டு

ஆனைகட்டும் தாளும் வானமுட்டும் போரும்
மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெலென்று
ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை!"

*ஊர்ச் சிறப்பு*

பெற்ற தாயைப் போன்றது தான்பிறந்த தேசம், ஊர். ஒருவன் எந்தச் சுகபோகங்களிடையே வாழினும், பெரிய மாட மாளிகை, கூட கோபுரங்களில் வதியினும், எவ்வளவு எளிய தாயினும் தனது பிறந்த ஊரின் நினைவே மேலான இன்பம் தரும், என ஓர் ஆங்கிலக் கவிஞன் கூறுகின்றான். அதே போன்று கிராம மக்கள் ஒவ்வொருவரும் தமது ஊரைச் சிறப்பித்துப் பாடிக்கொள்வர். எல்லாப் பாடல்களும் ஒரே மாதிரியாக இருப்பினும், இடையில் தமது ஊரின் பெயரைச் சேர்த்துப் பாடிக்கொள்வர்.

அந்த மரபிற்கேற்ப நான் பிறந்த கிராமமான கோகிலாபுரத்தின் சிறப்பைக் கீழ் வரும் பாடல்கள் சித்திரிக்கின்றன. பொதுவாக ஊரின் அமைப்பும் அதற்குப் பொருத்தமாகவேயிருக்கிறது. முன் கூறியபடி அது பெரியாற்றின் கரையில், நன்செய் நிலங்களால் சூழப்பெற்ற கிராமம். மரக்கும்பலின் மத்தியில் ஊர் உள்ளது. வெளியிலிருந்து வருகிறவர்களுக்கு மிக அண்மையில் வருமளவும் ஊர் தென்படாது. தோப்புகளில் குயில்கள் அதிகமுண்டு. ஒருசமயம் அவ்வூருக்கு [1]கோகிலபுரம் என்ற பெயர் வழங்கியிருந்திருக்கிறது. ஊரையடுத்துக் கயிறுகள் போன்ற நீண்ட விழுதுகளையுடைய ஆலமரம் இருந்தது. ஊரின் நான்கு புறத்திலும் கால்வாய்களில் நீரோடிக் கொண்டிருப்பதைக் காணலாம். அறுவடைக் காலங்களில் ஊர் வீதிகளின் வழியே நெற் கட்டுகளைச் சுமந்து செல்பவர்களைக் காணலாம். ஊரின் அருகே தாமரைக் குளம் என்ற ஒரு குளம் உண்டு. அதில் முன்பெல்லாம் தாமரை

[1] கோகிலம் - குயில்.

ஏராளமாக இருந்ததாம். சூரியோதயத்தில் தாமரை மலரும் காட்சியை அங்கு வாழும் தவளைகள் கண்டு மகிழ்வெய்திக் குலவையிடுகின்றனவாம்!

இவ்வூரை யாரால் மறக்க முடியும்? நித்தம் நித்தம் நெல்லுச்சோறு, நெய் மணக்கும் கத்தரிக்காய், பூமணக்கும் பதியைவிட்டு யார்தாம் போக மன மிசைவாரெனப் பாட்டுகள் பன்னிப் பன்னிக் கூறுகின்றன:

1. [1] ஏத்தமடி கம்பமெட்டு
இறக்கமடி களிமேடு
தூரமடி கோகிலாபுரம்
தொடர்ந்து வாடி நடந்து பார்ப்போம்!

2. பட்ட மரம் பாளையமாம்
படந்த மரம் களிமேடு
கும்ம மரம் கோகிலாபுரம்
குயிலிருந்து கூவுதடி!

3. தவளை குலவையிட
தாமரையே பூ மலர
தவளைச் சத்தம் கேட்டவுடன்—நீங்க
தள்ளி நடை கொள்ள வேணும்!

4. கல்லுக்கட்டி வில்லை மரம்
கவுரோடி ஆலமரம்
நெல்லுக்கட்டுப் போகுதில்லோ
நீதியுள்ள கோகிலாபுரம்!

5. தோணுதடி தோணுதடி
தூரந்தொலை தோணுதடி
அன்பான கோகிலாபுரம்
ஆலமரந் தோணுதடி!

---

[1] 'சின்ன நரிக்குறவா' என்ற மெட்டு

6. மானிருக்கும் மட்டப்பாறை
மயிலிருக்கும் சின்ன வாய்க்கால்
தேனிருக்கும் கோகிலாபுரம் — நீங்க
தேடிவந்தா லாகாதோ !

7. உப்புத்தண்ணி கோட்டையூரு
உவருத்தண்ணி பாளையமாம்
தேங்காத்தண்ணி கோகிலாபுரம் — நீங்க
தேடிவந்தா லாகாதோ !

8. ஊரைச்சுத்தி புளியமரம்
உலுப்பிவிட்டா கலகலங்கும்
பேருப்போன கோகிலாபுரம்
பிரளுதில்லோ கலுங்குத் தண்ணி !

9. நித்தம் நித்தம் நெல்லுச் சோறு
நெய் மணக்கும் கத்தரிக்காய்
பூமணக்கும் கோகிலாபுரம்
போக மனங்கூடலேயே !

இவ்வூரில் பல பெரியோர்கள் புகழோடு தோன்றி, இசை பட வாழ்ந்துள்ளனர். அவர்களுடைய சிறப்பைப் பற்றிக் கூறும் பாடல்களில் இரண்டு :

1. குடிக்கக் கிணறு வெட்டி
கும்பிடச் சிலை எழுதி
படிக்கு மடம் கட்டிவச்சார்
பாண்டியராம் பொன்னுச்சாமி !

2. எட்டேருக் கட்டி
இடத்திலொரு ஆனைகட்டி
பத்தேருக் கட்டியுழும்
பாண்டியரு பண்ணையிலே !

*சுருளிமலைக் குறவஞ்சி*

குற்றாலக் குறவஞ்சியில், குறத்தி மலை வளம் கூறும் பகுதியில் தமிழ் வளம் மிகுந்துள்ளது. புலவர், குறமகளின் வாயிலாக வனங்களை வெட்டி அவர்கள் தினை விதைப்பதைப் பற்றியும், கிழங்கு கிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்பதைப் பற்றியும், கிம்புரியின் கொம்பொடித்து வம்பு தினை யிடிப்பதைப்பற்றியும் சுவையொழுக வர்ணித்துள்ளார். இதனடியில், ஊர் பேர் தெரியாத ஒரு நாட்டுப்புற மகன், சுருளி மலையின் சிறப்பைத் தன் குழந்தைத் தமிழில் பாடு வதைக் கேளுங்கள் :

காடுவெட்டி முள்பெரக்கி
 மேடுபள்ளம் செப்பனிட்டு
வள்ளி வள்ளி வனந்தனிலே
 முள்ளி முள்ளிக் கிழங்கெடுத்து

கிழங்கெடுத்த குழிதனிலே
 என்னென்ன விதைப்பமய்யா ?
கருந்தினையும் செந்தினையும்
 கலந்து கொட்டி விதைப்பமய்யா !
படியிலே தினையெடுத்துப்
 பாடிப்பாடி விதைப்பமய்யா !

பொட்டியிலே தினையெடுத்துக்
 கொட்டிக்கொட்டி விதைப்பமய்யா !
முந்தியிலே விதையெடுத்து
 வீசி வீசி விதைப்பமய்யா !

காரானை உழுதுவர
 கவண்ட மக்கள் தினை விதைக்க
வெள்ளானை உழுதுவர
 வேட மக்கள் தினை விதைக்க

அத்தையத்தை மாமி
உம்மகனைக் காவ வையி
கார்ச்சம்பா நெல்லுக்குத்தி
சாதங்கொண்டு நான் வருவேன்
ஓடி ஓடிக் கிளி விரட்ட
ஒயிலுப்பந்தப் போடவேணும்!

படுத்துக்கிட்டுக் கிளி விரட்ட
பச்சைப்பந்தப் போடவேணும்
நின்னுக்கிட்டுக் கிளி விரட்ட
நீளப் பந்தப் போடவேணும்!

ஓடிஓடி ஓடிச்சாளாம்
ஒருமடி தினைக்கதிரை
பறந்துபறந் தொடிச்சாளாம்
பத்துமடி தினைக்கதிரை
சொழட்டி மிதிச்சாலே
நாலுபடி தினையாகும்
கல்லுலேயே உரலுசேத்து
[1]கடலுக் கம்பம் உலக்கை சேத்து

தேக்கிலையில் சொளகு செய்து
தெள்ளினாளாம் தினை மாவு
அந்தமலை இந்த மலை

அவரிருக்கும் சுருளிமலை
சுருளிமலைத் தேனெடுத்துச்
சுருட்டிப் பினைஞ்சாளாம்

*

[1] கடமான் கொம்பு என்றும் பாடுவர்.

# 6



# பிறப்பு வளர்ப்பு

## தாலாட்டுகள்

"அம்மா ! நான் எங்கிருந்து வந்தேன் ? நீ என்னை எங்கே கண்டுபிடித்தாய் ?" என்று குழந்தை தாயைப் பார்த்துக் கேட்டது.

அவள் கரைகாணா ஆர்வத்துடன் குழந்தையை இழுத்து மார்போடணைத்துக் கொண்டு, அழுகையும் சிரிப்புமாகப் பதில் அளித்தாள் :

"என் செல்வமே ! என் இதயத்தில்—அதன் ஆசையாகவே நீ மறைந்திருந்தனை !

"எங்கள் குலதெய்வத்துடன் நீயும் கோவில் கொண்டிருந் தனை ! அதைத்தொழுதபோது உன்னையுமன்றோ நான் வழி பட்டேன் !

"என்னுடைய கோரிக்கைகளிலும் என்னுடைய ஆசை களிலும் என்னுடைய உயிரிலும்—ஏன், என்னுடைய தாயின் உயிரிலுங்கூட நீ இருந்தனை !

"நம் இல்லத்தைக் காக்கும் அழிவிலாச் சக்தி சொருபத்தின் மடியிலே, நீ தலைமுறை தலைமுறையாகத் தாலாட்டப் பட்டிருக் கின்றாய் !

"சொர்கத்தின் முழு முதற் செல்வமும், அருணோதயத் தோடு பிறந்த இரட்டைப் பிறவியுமான நீ, உலக உயிர் ஓடை யோடு மிதந்து வந்து என் இதயத்திலே கரைசேர்ந்துவிட்டாய்!"

—தாகூர்

அகில உலகப் புகழ் பெற்ற ரவீந்திரர், நோபின் பரிசு பெற்ற மேற்கண்ட கீதாஞ்சலிப் பாட்டில் கூறப்பெற்றுள்ள சாரத்தை யெல்லாம், தாலாட்டுப் பாட்டு ஒன்று சில சாதாரணச் சொற்களால் வெளியிடுகின்றது.

பாட்டு

வானத்து மீனோ
மேகத்து மின்னொளியோ
பாம்பின் மணிஒளியோ
பதக்கத்து முத்தொளியோ !

இப்பொழுது, தாயாகக் குழந்தையை மார்போ டணைத்துக் கொண்டு அழுகையும் சிரிப்புமாக இன்பக்கனவில் மூழ்கியுள்ள தாய் தன் குழந்தைப் பருவத்தில் சிற்றில் கட்டிப் பொம்மைக் குழந்தையை மார்போடணைத்துச் சீராட்டும் விளையாட்டை நினைக்கின்றாள். அப்பொழுது குழந்தைப் பேறு என்பது அவளுக்கு எட்டாத தூரத்திலுள்ள வானத்து மீனாக இருந்தது.

குழந்தையாக இருந்த பெண், பருவமுற்றுத் திருமணம் நடைபெறுகின்றது. பெண்ணும் கணவனின் கையைப் பற்றி னாள். ஒரு பொம்மைக் குழந்தையைத் தொட்டிலிட்டு ஆட்டு கின்றனர். இப்பொழுது, அவளுக்குக் குழந்தைப் பேறு என்ற கனவு சமீபமாகி விட்டது. தண்ணென்ற தன் கணவனின் தீண்டல் உணர்ச்சி, வரவிருக்கும் இல்வாழ்க்கையில் தான் தாயாகப் போகும் ஒளி பொருந்திய நம்பிக்கை "மேகத்து மின்னொளியாக" இருக்கின்றது.

திருமணத்திற்குப் பின் அவள் கருவுற்றிருக்கும் நேரம், சீமந்தச் சடங்குகள் நடைபெறுகின்றன. தலைப் பிள்ளைப் பேற்றில் எத்தனை ஆபத்துக்கள். பாம்பு தன்னுள் நாக ரத்தினத்தை (பாம்பின் மணியை) வைத்திருக்கின்றது.

அதற்குப் பெருமைதான். நாகரத்தினம் வெளிவந்தால் எங்கும் ஒளி வீசும். அதைக் காண்பவர் போற்றிப் புகழ் வார்கள். ஆனால் பாம்பின் கதி யென்ன? அஃது இறந்து படும்! இந்த நினைவும் ஒருகணம் அவளை உலுக்கிய துண்டு.

ஆண்டவன் கிருபையால் குழந்தை பிறந்தது: தாயும் சேயும் நலமே உளர். தாய் தன் "*பதக்கத்து முத்தென*" குழந்தையை மார்போடணைத்திருக்கிறாள். அஃது அனை வரின் கவனத்தையும் ஈர்க்கின்றது. "ஈன்ற பொழுதினும் பெரிதுவந்து" பாடுகின்றார். கடுகைத் துளைத்தேழு கடலைப் புகட்டியது போல் சாதாரண வார்த்தைகளில் கருத் தாழம் நிறைந்திருப்பதைக் காண்கின்றோம். இதே போன்று தாலாட்டுப் பாடல்களில் பலவற்றை எடுத்து விவரித்தால் அஃது ஏட்டில் அடங்காது!

குழந்தையைப் பெற்ற தாய்க்கு எத்துணை மகிழ்ச்சி. எவ்வளவு பெருமிதம்! குழந்தை அவளுடைய இன்பக் கனவு களின் உரு! அவளுடைய பிரார்த்தனையின், தவத்தின் பலன்! ஆண்டவனின் அருள் பிரசாதம்! தன் குடும்ப விளக்கு! சந்ததியின் தூண்!

பண்புடைய மக்களை, அறிய வேண்டுவன அறிதற்குரிய மக்களை, தம்மிலும் அறிவுடைய மக்களை, சான்றோனாக விளங்கக்கூடிய மக்களைப் பெறத் தாயும் தகப்பனும் நினைத்த நினைவுகள் எத்தனை! நோற்ற நோன்புகள் எத்தனை! செய்த தருமங்கள் எத்தனை! செய்த தவங்கள், தரிசித்த தலங்கள், ஏற்றிய விளக்குகள் எத்தனை எத்தனையோ! இதை அவர்கள் வெளியிட்டுச் சொல்வதில்லை. ஆனால் கவிஞர்கள், உள்ளுணர்ச்சிகளை யெல்லாம் கருத்தும் கற்பனையும் நிறைந்த சொல்லோவியங்களாக்கி விடுவார்கள். குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டும் தாய் தன்னை

மறந்து விடுகிறாள். ஒரு கணம் அவள் கவிஞனாகவே ஆகி விடுகிறாள். அவளுடைய கற்பனை சிறகுகளை விரித்து எண்ண உலகில் பறக்கிறது. அவளுடைய உள்ளத்தின் ஆழத்தில் அடைபட்டுக் கிடந்த உணர்ச்சிகளெல்லாம் நயமான கவிதைகளாக வெளி வருகின்றன.

> "ஆண்டவனே ! என்னால் என்றைக்கும்
> நாடி அடைய முடியாத உன் பாதங்களை
> வெகுதூரம் அகன்று பரந்த என் பாட்டின்
> இறக்கைகளின் நுனிகளால் தொடுகிறேன்."

என்ற கவிக்கூற்றுக்கு ஏற்ப, ஒருகணம் தாயுள்ளம் தெய்வ நிலையிலுள்ள குழந்தையின் உள்ளத்தோடும், கடவுளோடும் ஐக்கியமாகி விடுகிறது. குழந்தை நித்திரையில் ஆழ்ந்து மோன நிலையிலுள்ள பரமனே போன்று விளங்குகிறது !

தமிழ் நாட்டிலுள்ள தாலாட்டுகள் "நடையழகில் செயங் கொண்டானையும், இனிமையில் இளங்கோவையும், கற்பனையில் கம்பனையும், சொல்லாட்சியில் மணிவாசகரை யும், நாகரிக விளக்கத்தில் சங்ககாலப் புலவர்களையும் உவமை யாகப் பெற்றுப் பெருமையுடன் விளங்குகின்றன" என்கிறார், தமிழண்ணல். அவரே இலக்கியத்தின் ஊற்று தாலாட்டுகளே எனவும் புகழ்ந்துள்ளார்.

தாலாட்டுப் பாடல்களிலுள்ள உயர்ந்த இசை நயத்தைக் குழந்தை உணர்ந்துதான் தூங்குகிறதா, அது முடியுமா, அல்லது வெறும் தொனியைக் கேட்டுத்தான் அயர்ந்து விடு கிறதா என்ற கேள்வி எழும்.

> "காட்டு விலங்கறியும் கைக்குழந்தை தானறியும்
> பாட்டின் சுவையதனைப் பாம்பறியும்"

என்று பாரதியார் கூறுவதை ஆழ்ந்து சிந்தித்தால் இக் கேள்விக்கு இடமே யிராது. சிசுக்களுக்கு ஆரம்பத்தில் செவி

யுணர்வுதான் கூர்மையாகவும் ஆழமாகவு முள்ளது என்பது மன நூல் வல்லுநர்களின் முடிவு. ஆகவே தாயின் பாட்டிலுள்ள இசை இன்பத்தைக் குழந்தை பருகுகிறது.

பாட்டுகளிலுள்ள உயர்ந்த கருத்துகளைப் பற்றி எண்ணும் போது ஒரு விஞ்ஞான உண்மையைக் கருத்தில் கொள்ள வேண்டும். நாம் பெறும் அனுபவத்தில் பல நம் விழிப்பு நிலைப் பகுதியிலேயுள்ளன; சில உள்ளத்தின் ஆழத்தில் சென்று அதன் புதைந்த நிலைப் பகுதியில் தங்குகின்றன. தொட்டில்பாட்டுகளிலுள்ள உயர்ந்த கருத்துகளைப் பொறுத்த மட்டில், அவை தாய் முலைப் பாலே போல் உவப்புடன் அளிக்கப்படுவதால், குழந்தையின் உள்ளத்தின் ஆழத்தில் சென்று தங்குகின்றன. நாம் பிற்கால நலனுக்காகச் சேமித்து வைக்கப்படும் பொருளே போல், அவை குழந்தை வளரும் போது அதன் குணநல வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படு கின்றன. தாய்மார்கள் குழந்தைகளைத் தொட்டிலிலிட்டு, நல்ல தாலாட்டுகளைப் பாடும் வழக்கமிருக்கும் சூழ்நிலையில் வளரும் குழந்தைகள் உயர்ந்த பண்புகளையும், கவிதை யுள்ளத்தையும் இயல்பாகவே பெற்றிருப்பர் என்ற செய்தியி லுள்ள உண்மை ஆராயத்தகுந்தது.

*1. தாய் செய்த தவம்*

தன் கண்ணின் மணியான மாணிக்கத்தை அடையத் தாய் செய்த தவத்தையும், தரிசித்த தலங்களையும், நோற்ற நோன்பையும், ஆடிய தீர்த்தங்களையும் விரிவாகக் கூறும் பாடல்களில் சில வருமாறு :

ஆராரோ ஆராரோ
ஆராரோ ஆராரோ

1. **கண்ணுமணி பொன்னுமணி**
**கந்தருட வேலுமணி**
**வேலுமணி வேணுமின்னு**
**வெகுநாத் தவசிருந்தேன்!**

2. [1]ஆத்து மணலிலே — உன்னைப் பெற்றா
அருந்தவசு செய்யயிலே
மைந்தனில்லை இன்னு சொல்லி — வேலவர்
மடிப்பிச்சை தந்தாரோ !

3. [1]ஆத்துமணல் குவித்து
அருந்தவசு செய்யயிலே
பார்த்திருந்து பரமசிவன்
பாலகனைத் தந்தாரோ !

4. வெள்ளி முழுகி
வெகுநாள் தவசிருந்து
அள்ளி மிளகுதின்னு
ஐந்நூறு நாள் தவசிருந்து

5. வெந்த மாவைத் தின்னா
விரத மழியுமின்னு
பச்சை மாவைத் தின்னு
பகவானைத் தெண்டனிட்டு

6. சாம்பசிவன் பூசைசெய்து
தரணியில் பெத்தகண்ணோ
ஈசன் கொடுத்த
இலஞ்சியமே கண்ணுறங்கு !

---

[1] மேலே கூறிய இரு பாடல்களும் பாவை நோன்பைப் பற்றிக் குறிக்கின்றன போலும் ! பெண்கள் பையத்துயின்ற பரமனடிபாடி, நெய்யுண்ணாது, பாலுண்ணாது, அதிகாலையில் நீராடி, மையிட்டெழுதாது, மலரிட்டு முடியாது, செய்யாதன செய்யாது, தீக்குறளை சென்றோதாது, ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் செய்து, ஆற்று மணலிலே பாவையை உண்டு பண்ணி அதைச் சாற்றி நீராடிய தவத்தில் வந்த பாலகன் எனக் குறிப்பிடுகின்றன.

7. பிள்ளையில்லை இன்னு சொல்லி — உன்னைப்பெற்றா
என்ன தவம் செய்தாளோ !
தொண்ணூறு நாளா
துளசிக்கு நீர் வார்த்து
ஆயிரம் நாளா
அரளிக்கு நீர் வார்த்து
எண்ணி மிளகு தின்னு
இந்திரனே வேணுமின்னு
அள்ளி மிளகு தின்னு
அர்ச்சுனனே வேணுமின்னு
காசி முழுகிக் கடலேறித் தானம் செய்து
சீரங்கமாடிச் சிவனோட வாதாடித்
தைப்பூசமாடித் தவம்பெற்று வந்த கண்ணேோ !

8. காணிக்கை கொண்டு — நான்
கடைத்தெருவே போகையிலே
மாணிக்கம் போல — வேலவர்
மடிப்பிச்சை தந்தாரோ !

9. மலடி மலடியின்னு — என்னை
வையத்தார் ஏசாதே
மலடியென்ற பெயரை
மாற்றி வைக்க வந்த கண்ணோ !

10. இருசி இருசி யின்னு — என் அப்பா !
என்னைத் தேசத்தார் ஏசாமே
இருசி யென்ற பெயரை
எடுத்துதைக்க வந்த கண்ணோ !

11. விளக்கிலிட்ட நெய்போலே — நான்
வெந்துருகி நிற்கையிலே
கலத்திலிட்ட பால்போல — என் கண்ணே
காட்சி தந்த கண்மணியோ !

12. ஊசி நிறுத்தி
உனக்கே தவசிருந்தேன்
பாசுபதம் பெற்றுவந்த
பார்த்திபனே நித்திரைபோ !

13. வெள்ளி முழுகி
வெகுநாத் தவசிருந்து
பிள்ளையில்லை யின்னு சொல்லி—உன்னைப் பெற்றா
பெரிய தவம் செய்தாளோ ?
மைந்தனில்லை யின்னு சொல்லி—உன்னைப் பெற்றா
மாதவசு செய்தாளோ ?

நேராகக் கோவிலுக்கு
நெய்த்தீபம் நேந்தாளோ ?

காணாத கோவிலுக்கு
கற்பூரத் தீபமிட்டுத்
தூரத்துக் கோவிலுக்குச்
சுடர் விளக்கு நேந்தாளோ ?
பழனிமலை ஆண்டவர்க்குப்
பாதம் பணிந்தாளோ ?

தை ஆறுமாசமா
தரைமெழுகிச் சாதம் உண்ண
நிச்சயமா ஆறுமாதம்
நிலமெழுகிச் சாதம் உண்ண
மாத முடிவிலே
மனஞ்சடைச்சு நிக்கையிலே

இந்திரனும் ஈஸ்வரியும்
இருமனசும் ஒண்ணாகி
ஆதி சிவன் பார்த்து
அரிராமர் கிருபையிலே
பிண்டப் பிரசாதம்
கொடுத்தாரோ ஈஸ்வரனும்

ஆண்டு தவமிருந்து
அறுபதுநாள் சுமந்திருந்து
முந்தித் தவமிருந்து
முந்நூறுநாள் சுமந்திருந்து
தவசிருந்து பெற்றெடுத்த
தவமணியே நித்திரை போ! (ஆரர்ரோ)

என்று தாய்க்குலத்தின் தியாகத்தை, தவத்தை விவரிக்கும் கீதங்களைக் கேட்டு, மந்திரத்தால் கட்டுண்டு போவதுபோல் குழந்தை அயர்ந்து தூங்கிவிடுகிறது.

## 2. *தந்தை செய்த தவம்*

"மகன்தந்தைக் காற்று முதவி யிவன்தந்தை
என்நோற்றான் கொல்லெனுஞ் சொல்"

என்று தமிழ் வேதம் கூறுகிறது. அது மக்களின் கடமையை உணர்த்துவதோடு, தந்தையின் கடமையையும் வலியுறுத்து கிறது. அவர் தவம் செய்துதான் மக்களைப் பெறவேண்டும். அப்பொழுதுதான் அவர்களை உலகம் வியந்து போற்றும்!

நன் மக்களைப் பெறுவதற்காகத் தகப்பன் பல தான தருமங்களைச் செய்கிறார், சாலைகள் போடுகிறார், சத்திரங் கள் கட்டுகிறார், குளங்குட்டைகளையும் கிணறுகளையும் உண்டு பண்ணுகிறார், கோவில்களுக்குத் திருப்பணி செய் கிறார், தானங்களிலெல்லாம் சிறந்தது ஆன அன்னதானம் செய்கிறார்; அதையும் சிறப்பான முறையில் செய்கிறார்; எந்த இலையும் இல்லாத காலத்து, மலைமேலேறி அங்கு கிடைத்த சிறிய இலைகளை எடுத்துவந்து தொன்னை தைத்து வந்தவர்களுக்கு அன்னமிடுகிறார். கொப்பரையில் சோற்றையும், குடத்தில் இளநீரையும் வைத்துக் கொண்டு பசித்து வருபவர்களை எதிர்பார்த்துக் கொண்டே காத்திருக் கிறார். இரவு வந்துவிட்டது. பந்தம் கொளுத்தி, அவர் களைத் தேடி அந்நகரின் சோலைக்கே போகிறார். தீவட்டியின்

ஒளியில் பசித்தவர்களை முகக்குறியால் அறிந்து, அவர்களுக்குப் பரிந்து அன்னமிடுகிறார். இவ்வாறாக அவர் செய்த பெருந்தவத்தின் பலன்தான் தொட்டிலிருக்கும் பாலகன் என்று கூறுகின்றன பாட்டுகள் :

1. மைந்தன் பெற வேண்டுமென்று
 வருந்திய பாண்டியர்கள்
 சாலைகள் போட்டு வைப்பார் !
 சத்திரங்கள் கட்டி வைப்பார் !
 நடை வாவி திருக்குளங்கள்
 நல்ல தண்ணீர்க் கிணறெடுப்பார் !
 தவித்து வருபவர்க்குத்
 தண்ணீர்ப் பந்தல் இட்டு வைப்பார் !
 பசித்து வருபவர்க்குப்
 பாலமுதம் செய்து வைப்பார் !
 ஆலயங்கள் தோறும்
 அணி மதிலும் கட்டி வைப்பார்!
 காணாத கோயிலுக்குக்
 காணிக்கை அனுப்பி வைப்பார் !

2. நெல்லி இலை பிடுங்கி
 நேர்த்தியாய்த் தொன்னை தைத்துப்
 பசியறிந்து அன்னமிடும்
 பாண்டியனார் பெற்ற கண்ணே !

3. கொப்பரையில் சோறும்
 குடத்தில் இளநீரும்
 பந்தம் கொளுத்தி வந்து
 பசித்தார் முகம் பார்த்து
 அந்த நகர்ச் சோலையிலே
 அமுதிடுவார் பாலகனோ !

4. ஆடியம்மா வாசையிலே
ஆயிரம்பேர்க் கன்னமிட்டுத்
தேடியதோர் புண்ணியத்தால்
செல்வமாய் வந்தகண்ணோ !

5. காசி விசுவ நாதருக்குக்
கைநிறையப் பூவெடுத்துப்
பூவெடுத்துப் பூசை செய்த
புண்ணியத்தால் வந்தகண்ணோ !

6. நந்தவனம் பூஞ்சோலை
நாலுபக்கம் உண்டுபண்ணிக்
கந்தர் சஷ்டி நோன்பிருந்து
காதலுடன் பெற்றகண்ணோ !

7. தோட்டம் திறந்து
தொன்னை தைத்துப் பூ வெடுத்துக்
கையாலே பூ வெடுத்தா
காம்பழுகிப் போகுமின்னு
விரலாலே பூவெடுத்தா
வேரழுகிப் போகுமின்னு
பொன்னூசி கொண்டு
பூத்த மலரெடுத்து
வெள்ளூசி கொண்டு
வெடித்த மலரெடுத்து
செடி செடியாப் பூ வெடுத்துச்
செண்டு செண்டாய் மாலை கட்டி
வாடாமே சாத்தினாரோ — உங்களப்பா
வட பழனி யாண்டவர்க்கு !
கோணாமே சாத்தினாரோ
அகிலாண்ட ஈஸ்வரிக்கு

8. வெட்டி வேர்ச் சப்பரமாம்
விண்ணை முட்டும் கோபுரமாம்
ஆயிரம்பூச் சப்பரத்தை — உங்களப்பா
அசைத்து விட்டார் பொய்கையிலே

9. தாமரையின் நூலெடுத்துத்
தனிப்பசுவின் நெய்யுருக்கிப்
போட்டாரே நெய்விளக்கு — உங்களப்பா ஒரு
புத்திரரே வேணுமின்னு !

10. ஆறு கொண்ட காவேரி
பேரு கொண்ட சீரங்கமாம்
சீரங்கத்து வீதியிலே
சிறுபூசை கொண்டவரோ ? (ஆராரோ)

*3. மருத்துவம்*

நம்மை இவ்வுலகில் தோற்றுவிக்க நமதன்னை பட்டபாடு கொஞ்ச நஞ்சமன்று ! அவள் அங்கமெல்லாம் நொந்து நம்மை ஈன்றாள் ! பிரசவத்தின்போது பெரிய உயிரும், சின்ன உயிரும் பிரிவதற்குள், ஒரு கணம் அவள் மரண வாயிலையே எட்டிப்பார்க்க வேண்டியிருக்கிறது. அத்தருணம் அவளுக்கு அருந் துணையாகவிருப்பது ஆண்டவன்தான் ! இருப்பினும் குழந்தைப்பேற்றின் சமயம் பல முன்னேற்பாடுகள் செய்யப்படு கின்றன. பல மருந்துகள் வாங்கப்படுகின்றன ; மருத்துவச்சி வருகிறாள். கருத்தோடு பல காரியங்கள் செய்யப்படுகின்றன. ஆண்டவனருளால், இராப் பிறந்த சந்திரனே போல, பகல் பிறந்த சூரியனே போல மாயா வேந்தன் பிறக்கிறான்:

1. சீரான பெண்ணுக்குச்
சிறுவயறு நோகுதின்னு
வாராளே மருத்துவச்சி
பழனி — தங்கரதமேறிக்

கசாயம் குடியாமல்
கடைச்சரக்கு வாங்காமல்
வெந்நீர் குடியாமல்
வேந்தனைப் பெற்றெடுத்தாள்!
சந்திரனைப் போலத்
தூங்குகிறான் பூமியிலே
சூரியனைப் போலச்
சுணங்குகிறான் பூமியிலே
திருப்பாற் கடல் கடைந்து
தேவர்களுக் கமுதளித்து
மாறுபடாச் சந்ததிக்கு
விளங்கவந்த புண்ணியனே!
மண்ணாள வந்தவொரு
மனக்கிளியே நித்திரைபோ
பூமியை யாளவந்த
பொற்கிளியே நித்திரைபோ! (ஆராரோ)

*பிறந்தபோது*

உலக ரட்சகனாகிய ஏசு பிறந்தார், கிழக்கே வெள்ளி உதித்தது; பல அதிசயச் சம்பவங்கள் நிகழ்ந்தன. அவதார மூர்த்தியும், கீதாசிரியனுமான கண்ணன் பிறந்தான், பல அற்புதங்கள் நிகழ்ந்தன. அதேபோல் தவத்திலுதித்த தன் பாலகன் பிறந்தபோது இயற்கையும், தேசத்தவர்களும், இவ்வையகமும், கவிஞர்களும் கரடி புலியுங்கூடப் பாடி ஆடித் துதித்தன என்கிறாள் பெற்ற தாய் :

1. வண்டாடப் பூமலர—என் கண்ணே!
வையகத்தார் கொண்டாடச்
செண்டாடச் செடிமலர
தேசத்தார் கொண்டாட!

2. வண்டு களாட
மரங்கள் கவிபாடப்
பெண்டு களாடப்
பெற்றெடுத்த பாலகனோ :

3. தவளை குலவையிட
தாமரையே பூமலரப்
பொன்னான தாமரையும்
பூக்குமந்தப் பொய்கையிலே !

4. செண்டாடப் பூமலரச்
சிலபேர் கவிபாட
வண்டாடப் பூமலர
வனங்களெல்லாம் பூச்சொரிய !

5. கரடி கவிபாட — என் கண்ணே !
கண்டபுலி தண்டனிடப்
புலவர் கவிபாட — என்கண்ணே
பிறந்த வனக்குயிலோ ! (ஆராரோ)

*அவன் யார் ?*

ஆண்டவனே தனக்குக் குழந்தையாக வந்து பிறந்திருப்ப தாக நினைக்கிறாள், அன்னை ! அவனால் தன் குடியும், கல்வியும், செல்வமும், இந்தச் செகமும் தழைக்கப் போகின்றன ! அவன் பெருமைகள் சொல்லில் அடங்காதன :

1. மதுரை அழகரோ ?
மாமதுரைச் சொக்கரோ ''
திருமால் அழகரோ ? நான்
சேவிக்கவந்த கண்ணோ ?

2. சேவற் கொடியோனோ ?
திருமால் மருகோனோ ?
பார்வதியாள் பெற்றெடுத்த
பன்னிருகை வேலவனோ ?

3. புன்னை ஒருமரமாம் — அது
பூத்தாலும் ஆயிரம் பூ
புன்னைசுத்திப் பூவெடுக்கும்
புன்னைவனச் சங்கரரோ ?

4. மாசிப் பிறையோ — நீ
வைகாசி மாங்கனியோ ?
தேசப் பிறையோ — நீ
தெவிட்டாத மாங்கனியோ ?

5. அரவத்தின் மேல் நின்றாட
அசோதை பயந்தோட
பாம்பின் மேல் நின்றாட என்
பாலகனாய்ப் பிறந்த கண்ணோ ?

6. சீதை மகனோ ?
சீராமர் பெத்தகண்ணோ ?
அல்லி மகனோ ?
அர்ச்சுனர் பெத்த கண்ணோ ?

7. கைகேசி அம்மைக்கும்
கௌசல்யா தேவியர்க்கும்
பேரான கோசலைக்கும்
பெயராக வந்த கண்ணோ ?

8. எல்லைக்குக் கல்லோ ?
இலங்கைக்கு இராவணரோ ?
வில்லுக் கருச்சுனரோ ?
வேந்தருட வம்மிசமோ ?

9. ஆற்றைத் திரைபோட்டு
அக்கரையில் கோட்டை கட்டிக்
காற்றைப் பிடித்தடைக்கும்
காசிராசர் வம்மிசமோ ?

10. கோர்ட்டுத் திறந்து
குரிச்சியிலே உக்கார்ந்து
சர்ச்சியோட வாதாடும்
சமத்தருட வம்மிசமோ ?

11. எங்ககுலம் மங்காமல்
எதிர்க்குலத்தார் ஏசாமல்
தங்கமணிப் பொக்கிசத்தைத்
தானாள வந்த கண்ணோ ?

12. பாட்டனார் ஆண்ட
பதினெட்டு ராச்சியத்தை
வச்சாள வேணுமின்னு
வரம்பெத்து வந்த கண்ணோ ?

13. செம்பால் எழுத்தாணி
சேரக் குறுத்தோலை கொண்டு
வண்ணக் குறுத்தோலை கொண்டு
வாசிக்க வந்த கண்ணோ ?

14. தங்கக்கலப்பை கொண்டு
தடம்பதியா மாடுகொண்டு
வெள்ளி விதையெடுத்து
விதைவிதைக்கப் பிறந்த கண்ணோ ?

15. கண்ணான மீனா—மதுரை
மண்ணாள வந்தவளோ ?
பொன்னான மீனா—மதுரைப்
புவியாள வந்தவளோ ?

16. தித்திக்கும் பாலே
தெவிட்டாத தெள்ளமுதே !
சித்தத்தி னுள்ளினிக்கும்
செங்கரும்பே கண்வளராய் !

17. ஆயர் குலத்தில்
அவதரித்த மாமணியே!
மாயனே கண்ணா
மகிபனே கண்வளராய்!

18. பச்சைமுடி மன்னவரோ
பவளமுடிப் பாண்டியரோ?
அச்சமெல்லாந் தீர்க்கவந்த
ஆதி பகவானோ?

19. ஒருமாங் கனிக்காக
உலகைவலம் வந்தவனோ?
பெருமாள் மருகோனோ?
பெண்ரதிக்கு மாப்பிள்ளையோ?

20. கரும்புக் கணையானோ?
கன்னிவள்ளி நாயகனோ?
பரமன்தனை அடித்த
பார்த்தனும் நீ தானோ?

21. மானீனும் கண்ணே
மரமீனும் சந்தனமே
தேனீனும் கண்ணே
தேடப் பிறந்தவனோ?

22. செந்தமிழும் இங்கிலீசும்
தெலுங்கும் பல சாத்திரமும்
சொந்தமாய்க் கற்க வந்த
துரைராசன் பெற்ற கண்ணோ?

23. நல்ல துரை மகனோ
ராப்பிறந்த சந்திரனோ?
பாண்டித் துரை மகனோ
பகல் பிறந்த சூரியனோ?

24. கண்ணின் கரு விழியே
கருணைக்கோர் வாரிதியே
விண்ணில் திருமணியே
வித்தகனே கண்வளராய் !

25. ஏலமும் கொண்டு
இளநீரும் கண்திறந்து
பானக்கம் கொண்டு
பசிதீர்க்க வந்தகண்ணோ ?

26. பம்பாய் கல்கத்தா
பலதேச வர்த்தகத்தால்
செம்பொன்நிதி தேடவந்த
செல்வக் களஞ்சியமோ ?

27. செம்புச் சிலையோ
சிவன்உமையாள் பாலகனோ
அம்புவில் பூட்டும்
அருச்சுனனும் நீதானோ ?

28. கற்கண்டே பாலே — என்
கனிரசமே செங்கரும்பே
கற்பகமே என்னுடைய
கண்மணியே கண்வளராய் !

29. தெள்ளமுதே பூங்காவே
தித்திக்கும் செங்கரும்பே
பிள்ளைக்கலி தீர்க்கவந்த
பெருமாளே கண்வளராய் !

30. சந்திரரும் சூரியரும்
தன்ஒளி மங்கிநிற்க
எந்தனுக்கு வாய்த்த — என்
இளவரசே கண்வளராய் ! (ஆராரோ)

மேலும் அவன் ஓர் ஆணி முத்து! தேடி எடுத்த முத்து! முதிர விளைஞ்ச முத்து! தொட்டிலிலே துவண்டு விளையாடும் முத்து!

1. முத்தே பவளமே — என்
முக்கனியே சக்கரையே
கொத்து மரிக்கொழுந்தே — என்
கோமளமே கண்வளராய்

2. கரும்பே கலகலங்க
கல்லாறு தண்ணிவர
கல்லாற்றுத் தண்ணியிலே
நெல்லா விளைஞ்ச முத்து!

3. முத்திலே முத்து
முதிரவிளைஞ்ச முத்து
தொட்டிலிலே ஆணிமுத்து
துவண்டு விளைஞ்சமுத்து!

4. தேடி எடுத்த முத்து
தேவாதி ஆண்ட முத்து
பாண்டி பதிச்ச முத்து
பஞ்சவர்கள் ஆண்ட முத்து!

5. கொட்டி வைத்த முத்தே
குவித்து வைத்த ரத்தினமே
கட்டிப் பசும் பொன்னே — என்
கண்மணியே நித்திரை போ!

*தொட்டில்*

"வட்டிலிலும், தொட்டிலிலும், மார்மேலும், தோள்மேலும்
கட்டிலிலும், வைத் தென்னைக்காதலித்து — முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்..."

எனப் பட்டினத்தார், தம் தாயை நினைத்து உள்ளமுருகு கிறார். குழந்தையை ஈ எறும்பணுகாது, ''ஏழரையாம் கோபுரத்தில், எறும்பேறா மண்டபத்தில்'' தொட்டில் கட்டி அதிலிட்டுத் தாலாட்டி, உறக்காட்டுகிறாள். கீழ்வரும் பாடல்கள் அந்தத் தொட்டிலின் சிறப்பைக் குறிக்கின்றன:

1. நித்திரையும் போராரே
   சித்திரப்பூந் தொட்டிலிலே
   முத்தாலே தொட்டிலிலே
   மோதியழுத கண்ணோ ?

2. பச்சை யிலுப்பை வெட்டிப்
   பால் வடியத் தொட்டில்கட்டித்
   தொட்டிலிட்ட அம்மானே — நீ
   பட்டினியாய்ப் போகாதே !

3. ஆடுமாம் தொட்டில்
   ஆசையுமாம் பொன்னூஞ்சல்
   பொன்னூஞ்சல் மேலிருந்து — நீ
   பொய்யுறக்கம் கொண்டவனோ ?

4. பட்டாலே தொட்டில்
   பவளக் கொடிக் கயிறு
   எட்டாள தேசமெங்கும்
   அரசாள வந்த கண்ணோ ?

5. வெள்ளி மலை யருகே
   வீமனுக்கே தொட்டில் கட்டி
   வீமனழுத சத்தம்
   வெள்ளிமலை ஓசையிடும் !

6. தங்கமலை யோரம்
   தருமருக்கே தொட்டில் கட்டித்
   தருமர் அழுத சத்தம்
   தங்கமலை ஓசையிடும் !

7. காத்தடியா மூலையிலே
கர்ணனுக்கே தொட்டில் கட்டிக்
காத்தடிக்கக் காலசையக்
கால் சதங்கை ஓசையிட

8. மாணிக்கக் கால் நாட்டி
வச்சிர வடம் பூட்டி
ஆணிப் பொன் தொட்டிலிலே
அருமருந்தே கண்வளராய் !

9. ஏழரையாம் கோபுரமாம்
எறும் பேறா மண்டபமாம்
பாம் பேறா மண்டபத்தே
பள்ளி கொள்ள வந்த கண்ணோ ?

10. நித்திரைபோ நித்திரைபோ—என் கண்ணே !
சித்திரப்பூந் தொட்டிலிலே
பிள்ளைக்கலி தீர்க்கவந்த
பெருமாளே கண்வளராய் !

11. வாங்கு மணிவாங்கி—என்கண்ணே
வயிரமணிக் கல்லிழைச்சுத்
தூங்குமணித் தொட்டிலிலே—என்
துரைமகனே நித்திரைபோ ! (ஆராரோ)

*தாய் மாமன் பெருமை*

"பெண்ணைக் கொடுத்தோமோ
கண்ணைக் கொடுத்தோமோ ?"

என்று பெண்ணைப் பெற்ற தாயும் தகப்பனும், புக்ககம் போன பெண்ணைப்பற்றி நினைத்துக் கொண்டேயிருப்பர். தங்களின் குழந்தை கருவுற்றிருப்பதை அறிந்து மகிழ்ந்து சீமந்தம், வளை காப்பு முதலிய சடங்குகளைச் செய்து தம் இல்லத்திற்கு இட்டு வருவர். பெண்ணுடன் பிறந்த சகோதரர்கள், சகோதரியையும்

பிறந்த குழந்தையையும், தம் அன்புப் பெருக்கில் ஆழ்த்தி விடுவர். குழந்தையைப் பெற்றெடுத்த பெண், தனக்கேற்பட்ட உடல் நோவையெல்லாம் மறந்து மனமகிழ்வெய்தியிருப்பாள். தன் தாய் வீட்டைப் பற்றியும் உடன் பிறந்த அண்ணன் தம்பி மார்களைப் பற்றியும் பெருமிதத்தோடு எண்ணி எண்ணிப் பூரிப்பாள். அதை வெளியிட ஒரு சந்தர்ப்பம் வேண்டுமே! குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டும் சமயம் உள் உணர்ச்சிகள் பாடல்களாக வெளிவருகின்றன :

1. திண்ணை மெழுகித்
 திருநெல்வேலிப் பாய்விரிச்சு
இருந்து கணக்கெழுதும்
 இந்திரரோ உன்மாமன்!

2. சவுக்கை மெழுகிச்
 சாதிலிங்கப் பாய்விரிச்சு
சாஞ்சு கணக்கெழுதும்
 சந்திரரோ உன் மாமன்!

3. காக்காய் கதிரறுக்கக்
 கட்டெறும்பு சூடடிக்க
மாமன் பொலிதூற்ற
 மைத்துனமார் கோட்டைகட்ட!

4. உயர்ந்த தலைப்பாகை
 உல்லாச வல்லவட்டுச்
சபையடக்கிப் பேசிவரும்
 சமத்தரோ உன் மாமன்!

5. பாய்ச்சக் கயிறும்
 பலநாயும் சங்கிலியும்
வேட்டைக்கே போராக
 வீரப்புலி உன்மாமன்!

6. காட்டைக் கலைச்சுக்
கடிநாயை ஏவலிட்டு
வேட்டைக்கே போய்வருவார்
வீரப்புலி உன்மாமன்!

7. பன்றி படுமோ?
பதினெட்டு மான் படுமோ?
சிங்கம் படுமோஎன் கண்ணே உன்
சின்னம்மான் வேட்டையிலே!

8. கல்லைக் கயிறாக்கிக்
கல் தூணை வில்வளைச்சு
வில்லை விசையேற்றும்
வீமன் மருமகனோ? (ஆராரோ)

*சீர்வரிசை*

1. காலுக்குத் தண்டை — என் ஐயா!
கழுத்துக்கு வீரதண்டை
கொண்டைக்குக் குப்பி
கொண்டுவந்தார் தாய் மாமன்!

2. முத்தளக்க நாழி
முதலளக்கப் பொன்னாழி
வச்சளக்கச் சொல்லி
வரிசையிட்டார் தாய் மாமன்!

3. அஞ்சு கிளியெழுதி
அம்மான்மார் பேரெழுதி
கொஞ்சுங் கிளியெழுதிக்
கொண்டுவந்தார் உன் மாமன்!

4. மானா மதுரையிலே
மாடு விற்கும் சந்தையிலே
மாடு மதிச்சு — உன்மாமன்
வாங்கிவந்தார் பால் பசுவு!

5. வாங்கி வந்த பால்பசுவு — என் கண்ணே
வாலெல்லாம் தங்க நிறம் !
கொண்டு வந்த பால்பசுவு — என் கண்ணே
கொம்பெல்லாம் தங்க நிறம் !

6. அணைச்சுப் பால் கறக்க — என் கண்ணே
அணைகயிறும் பொன்னாலே
பிடிச்சுப் பால் கறக்க — என் கண்ணே
பிடிகயிறும் பொன்னாலே !

7. உட்கார்ந்து பால் கறக்க — என் கண்ணே
முக்காலி பொன்னாலே !
குடிக்கக் கிணறு வெட்டி — என் கண்ணே
கொப்பளிக்கத் தெப்பம்வெட்டி
உட்கார்ந்து மோர்கடைய — என் கண்ணே
முக்காலி பொன்னாலே !
சாய்ந்திருந்து மோர்கடைய — என் கண்ணே
சாய்பலகை பொன்னாலே !

8. மலையின்மே லேபசுவே
மகுடமணி ஓசையிடப்
பொழுதிறங்க வா பசுவே — என் கண்ணே
பொன்னுமகன் பால் குடிக்க !
அந்திபட வா பசுவே — என் கண்ணே
அருமை மகன் பால் குடிக்க ! (ஆராரோ)

*ஏன் அழுகிறது ?*

சில சமயங்களில் குழந்தை அழாமல் தொட்டிலிலே படுத்திருக்கும். தாயார் வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருப்பாள். ஆனால் அவளுடைய மனம் மட்டும் தொட்டிலைச் சுற்றிக் கொண்டேயிருக்கும். பிள்ளை அழாவிட்டால் என்னமோ ஏதோவென அவள் மனம் அடித்துக் கொள்ளும். அழுது

விட்டாலோ பதறியடித்துக் கொண்டு ஓடிவந்து, அதை வாரி யெடுத்து, மார்போடணைத்து, உச்சி முகந்து, முத்தமிட்டுப் பாலூட்டுவாள்.

*சில சமயங்களில்* ''*துயில் திருடி*'' வந்து பாப்பாவின் கண்களிலிருந்து தூக்கத்தைத் திருடிச் சென்று, எங்கோ மறைத்து வைத்து விடுவாள் போலும்! குழந்தை அடம் பிடித்துக் கொண்டு விடாப் பிடியாக அழும். தனக்குத் தெரிந்த வித்தை யெல்லாம் காட்டித் தாய் குழந்தையைச் சமாதானப்படுத்தப் பார்ப்பாள். ஆனால் அதை யாராலும் சமாதானம் செய்ய முடியாது. வீட்டிலுள்ளவர்களுக்குக் குழந்தையின் மேல் ஆத்திரம் உண்டாகும். ஆனால் தாய்க்கு மாத்திரம் அது கொடுக்கும் துன்பமெல்லாம் இன்பந்தான். அவள் பொறுமைக் கடலாகவே இருப்பாள். நெடுநேரம் குழந்தை அழுதால் அதன் தொண்டை வறண்டு விடுமோ என அவள் மனம் அடித்துக் கொள்ளும். 'குழந்தை என்றுமே வம்பு செய்யாது, இன்று யாரோ அடித்து விட்டார்கள் போலிருக்கிறது, அவர்களை ஆக்கினை செய்ய வேண்டும்!' என்ற எண்ண அலைகள் தாய் மனதில் உண்டாகிப் பாடல்களாக வெளிவருகின்றன :

1. கொம்புக் கனியே!
    கோதுபடா மாங்கனியே!
வம்புக் கழுகாதே — கனி
    வாயெல்லாம் தேனூற!

2. யாரடிச்சா நீயழுக!
    அடிச்சாரைச் சொல்லியழு!
பாட்டியடிச் சாளோ!
    பால் வார்க்கும் கையாலே!
மாமன் அடிச்சாரோ!
    மல்லிகைப்பூச் செண்டாலே!
அத்தை அடிச்சாளோ!
    அரளிப்பூச் செண்டாலே!
அண்ணன் அடிச்சானோ!

அணைத்தெடுக்கும் கையாலே !
அடிச்சாரைச் சொல்லியழு !
ஆக்கினைகள் செய்திடுவோம் !
தொட்டாரைச் சொல்லியழு !
தோள்விலங்கு போட்டிடுவோம் !

3. வையையாம் பொய்கை
வடக்கேயாம் பாலாறு
பாலாறு பார்க்கவந்த
பாலகனை ஆரடிச்சா ?

4. உறங்காத கண்ணுக்கு
ஓலைகொண்டு மையெழுதி !
தூங்காத கண்ணுக்குத்
துரும்புகொண்டு மையெழுதி !

5. வண்டுகளாம் தும்பிகளாம்
மரந்துளைக்கும் கோல வண்டாம் !
கோல வண்டைக் கூப்பிடுங்க — என் ஐயா
கோவலர்க்கு மையெழுத !

6. என் கண்ணே நீயுறங்கு
கான மயிலுறங்கு !
என் பொன்னே நீயுறங்கு
பூமரத்து வண்டுறங்கு !

7. உன் கண்ணீர் கண்டால்
உன் அப்பா நொந்திடுவார் !
சின்ன இமைக் கதவைச்
செல்வீ ! பொருத்திடுவாய் ! (ஆராரோ)

என்று பாடிக் குழந்தையின் பிடிவாதத்தை மாற்றி விடுவாள் தாய் !

*பரிசு பெற்ற பாடல்*

இராமநாதபுரம் சேதுபதி வமிசத்தார் தமிழை வளர்த்தவர்கள். தமிழ்க் கவிதைகளின் சொன்னலமும் பொருணலமும் சுவை கண்டு, சுவை கண்டு துய்த்தவர்கள். தமிழ்க் கவிஞர்களுக்கு வாரி வாரி வழங்கியவர்கள். அவ்வழி வந்த சேதுபதியொருவரின் நெஞ்சைக் கொள்ளை கொண்ட பரிசு பெற்ற தாலாட்டு ஒன்றுண்டு.

ஒருநாள் மாலை, அந்தச் சேதுபதி அரண்மனைத் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தார். ஒரு மெல்லிய இன்னோசை காற்றிலே மிதந்துவந்து, அவர் காதிலே பட்டது ஓசை வரும் திசையை நோக்கிச் சேதுபதி நடந்தார். அது தோட்டக்காரன் குடிசையிலிருந்து கிளம்பிய ஒலி.

குடிசையினுள் தோட்டக்காரன் மனைவி, தன் குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுப் பாடிக்கொண்டு இருந்தாள். அவள் புத்திக் கூர்மையுள்ளவள். குடிசையினுள் இருந்தபடியே சேதுபதியின் வருகையை அறிந்து விட்டாள். சேதுபதியின் கையிலணிந்திருந்த கற்கட்டு மோதிரத்தின் மேல், மாலை வெயிலொளி பட்டு, அதன் பிரகாசம் குடிசையினுள் பிரதிபலித்தது. கற்பனை நிறைந்த அவளது உள்ளத்தில் சந்தர்ப்பத்திற்கேற்ற கவிதை உண்டாயிற்று.

''குழந்தை எதற்காக அழுகிறான்? ஒரு வேளை சேதுபதியின் கையை அலங்கரிக்கும் மோதிரத்தைக் கண்டு ஆசைப் பட்டுத்தான் அழுகிறானோ? இப்படி வீணாசைப் படலாமா? முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டாற் போல'' என்று பொருள்படக் கீழே கண்டவாறு பாடினாள்:

"திக்கெட்டும் போற்றும்
சேதுபதி ராசேந்திரன்
கற்கட்டு மோதிரத்தை — என் கண்ணே நீ
கண்டாசைப் பட்டாயோ?"

மன்னன் காது குளிரப் பாட்டைக் கேட்டான்; பெருமை யடைந்தான்; தன் நாட்டில் ஒரு சாதாரணப் பெண்ணிடத்தில் கூட உயர்ந்த கவிதையுள்ளம் இருப்பதை மெச்சிப் புகழ்ந்தான்; அக்கவி பாடிய அந்தப் பெண்ணுக்குத் தனது ரத்தினக்கல் பதித்த மோதிரத்தோடு மேலும் பல பரிசுகள் வழங்கியதாக வரலாற்றுச் செய்தி யொன்றுண்டு !

*சொக்கர் - மீனாட்சி*

மதுரை மாவட்டத்தின் தலைநகரமான மதுரையம்பதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சொக்கநாதப் பெருமானும் மீனாம்பிகையும் கிராம மக்களின் குலதெய்வங்கள். சொக்கர் மதுரையில் அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் செய்துள்ளார். அவற்றைப் பற்றிப் புலவர்கள் வசனமாகவும் கவிதை உருவிலும் பெரிய காவியங்கள் செய்துள்ளனர். அவற்றைத் தமிழ்மொழியில் பயிற்சி பெற்றவர்கள் படித்து இன்புறுகின்றனர்.

ஆனால் கிராம மக்கள் கண்கூடாகப் பார்த்துக் களிப்புற' ஒவ்வொரு திருவிளையாடலை யொட்டியும் திருவிழா நடைபெறும். அதைக் காண மக்கள் பல்லாயிரக் கணக்கில் கூடுவர். அதில் பிட்டுத் திருவிழா ஒன்று. இது மாசி மாதத்தில் நடைபெறும். எழுத்து வாசனையற்ற ஒரு பட்டிக் காட்டுத் தாய், அவ்விழாவைக் கண் குளிரக் கண்டாள்; மன நிறைவு கொண்டாள்; தான் கண்டதைச் சுருக்கமாக, ஆனால் தெளிவாக இனிய தாலாட்டுப் பாடல்களாக வெளியிடுகிறாள் :-

1. வையை யுடைஞ்சு — சொக்கர்
 வாதுக்கே மண் சுமந்து
பிட்டுக்கே மண் சுமந்து — சொக்கர்
 பிரம்பா லடியும் பெத்து !

2. மண் சுமந்த சொக்கருக்கு
மாசித் தேரோடுதின்னு
ஒட்டகத்து மேலேறி — மீனாள்
ஒசந்தாள் ரதமேறி !

3. பொழுது மினு மினுங்க — ஆதிமீனாள்
பூக்கடையே சோதிமின்ன !
சருகை சல சலங்க — ஆதிமீனாள்
சப்பரமே சோதிமின்ன !

4. வெள்ளிக் குடையோ — ஆதிமீனாள்
வெட்டி வேர்ச் சப்பரமோ !
எண்ணெய்க் கிணறோ? ஆதிமீனாள்
எதிரே கொடிமரமோ ?

5. தண்ணிக் கிணறோ — ஆதி மீனாளுக்குத்
தானம் செய்யும் தெப்பங்களோ !
தாழ்ந்த சுவரோ — ஆதி மீனாளுக்குத்
தலைக்கு மேல் செண்பகப்பூ !

6. காடெல்லாம் பிச்சி — ஆதிமீனாளுக்குக்
கரையெல்லாம் செண்பகப் பூ !
நாடெங்கும் வீசுமாம் — ஆதிமீனாளுக்கு
நல்லதிரு முடிமேலே !

7. முல்லை இருவாட்சி
அவள் முடிக்கும் செண்பகப் பூ !
செண்பகப் பூ தான் மணக்கும்
ஆதிமீனாள் திருமுடியின் மேலாக !

8. மின்னல் ஒளியோ ? ஆதிமீனாள்
மூக்குத்திக் கல்லொளியோ ?
தங்கத் தகட்டொளியோ ? — ஆதிமீனாள்
தாதிமார் பொட்டொளியோ ? (ஆராரோ)

*சொக்கர் வலை வீசியது*

1. வைகை பெருகிவர
வாளை மீன் துள்ளிவர
துள்ளி வந்த மீனுக்கெல்லாம் — சொக்கர்
தூண்டிவலை போட்டாராம் !
தப்பி வந்த மீனுக்கெல்லாம் — சொக்கர்
கப்பிவலை போட்டாராம் !
பறந்து வந்த மீனுக்கெல்லாம் — சொக்கர்
பாசிவலை போட்டாராம் !

*மீனாட்சி நீராடுதல்*

1. நாழி நறுக்கு மஞ்சள்
நானாழிப் பச்சை மஞ்சள்
அரைச்சுக் குளிப்பாளாம் — மீனா
அஞ்சு வகைக் கிண்ணியிலே
தேய்த்துக் குளிப்பாளாம் — மீனா
தெப்பமெல்லாம் பூ மணக்க
உரசிக் குளிப்பாளாம் — மீனா
உலகமெல்லாம் சோதி மின்ன !

*தூய்மைப்படுத்தல்*

மனிதனுடைய வாழ்க்கை முழுவதும் அவனது சூழ்நிலையாலும், மரபு நிலையாலும் உருவாக்கப்படுகிறது. அவற்றை மாற்ற முடியுமா ? மனித இனம்-ஏன் உயிரினங்கள் தோன்றிய காலந்தொட்டு அவற்றின் சகல முயற்சியும், அந்நிலைகளை மாற்றுவதற்காகவே நடைபெற்று வருகின்றன. தன்னைக் கணந்தோறும் ஆட்டுவிக்கும், தவிர்க்க முடியாத இந்நிலைகளைத் தன் உயர்வுக்குச் சாதகமானவைகளாக மாற்ற இயலுமெனக் கண்ட மனிதன், அவற்றில் பெரிய மாறுதலை யுண்டு பண்ணப் பெருமுயற்சி செய்து வருகிறான்.

தன் மரபு நிலையை மாற்றத் தன் உள்ளத்தை, அறிவைத் தூய்மைப்படுத்துகிறான். தான தருமங்கள், தவ விரதங்கள், யோகப்பயிற்சிகள் செய்து, தன் மரபு நிலையை மாற்ற முயல்கிறான். தன்னை மாற்றுவதோடு தன் சந்ததிக்கும் புது உருக் கொடுக்க முயல்கிறான், தற்கால விஞ்ஞான ஆராய்ச்சிகளும் இத்துறையிலேயே செல்கின்றன.

நம் சூழ்நிலையிலுள்ள தூண்டல்கள் காரணமாகப் பல துலங்கல்களும் மன வெழுச்சிகளும் இயற்கையாகவே ஏற்படுகின்றன. அச்சம், கோபம், வெறுப்புப்போன்ற தாழ்ந்த மன வெழுச்சிகள், தனக்கும் பிறருக்கும் கேடு விளைவிக்கக் கூடியவை. அவ்வுணர்ச்சிகளை மடை மாற்றம் செய்து, தூய்மைப் படுத்தினால் அவற்றின் மூலம், தனக்கும் சமூகத்திற்கும், இன்பமும் நன்மையும் ஏற்படும். சமூக நலனுக்கும், வளர்ச்சிக்கும் உதவும். ஒழுங்கு, அமைதி, அடக்கம், அன்பு, கருணை, வீரம் போன்ற உயர்ந்த பண்புகள் வளரும்.

சாதாரணமாக, வெறுப்புணர்ச்சி மிகுதியாகக் கொள்ளும் ஒருவரை, மனிதர்களை வெறுப்பதற்குப் பதிலாக, உலகிலுள்ள ஏழைமை, பசி, பிணி, அறியாமை, ஏற்றத்தாழ்வு போன்ற காரியங்களில் வெறுப்புணர்ச்சி காட்டி, அவற்றிற்குக் காரணமாகவுள்ளனவற்றை நீக்கப் பணிபுரியுமாறு தூண்டலாம். குடும்பத்தில் சண்டை சச்சரவு மூலமாக, மனக்கசப்பும் குரோத உணர்ச்சியும் கொள்பவர்களுக்குக் குடும்பப் பண்பு, கடமையுணர்ச்சி, தெய்வச் செயல்களை நினைப்பூட்டி உயர்ந்த எண்ணங்களை யுண்டுபண்ணித் தெய்வ பக்தியும், அன்பும் பண்பும் வளர வகை செய்யலாம். இவ்வாறு இயற்கையாகவே மனித உள்ளத்தில் உண்டாகும் தாழ்ந்த மன எழுச்சிகளை, உயர்ந்த பண்புகளாக மாற்றுவதைத் தூய்மைப் படுத்துதல் என்பர் மன நூலார். கீழே கொடுக்கப் பட்டுள்ள ஒரு நாட்டுப்புற நிகழ்ச்சியில், இது பெரிய அளவில், நாம் நன்கு உணரும் வகையில் காணப்படுகிறது.

தை மாசத்தில் வரும் முழு நிலவின்போது, மதுரையில் தெப்பத் திருவிழா நடக்கும். மதுரைக்கு நேர் கிழக்காக இருக்கும் மாரியம்மன் தெப்பக்குளத்திற்கு மீனாட்சி செல்வாள். அவள் அவ்வாறு செல்லும் சம்பிரமத்தைப் பாருங்கள்:

"ஆனையை அழைச்சு
ஆளுகளைச் சேகரிச்சுப்
போலீசை முன்னடத்தி—மீனாள்
போறாளே தெப்பம் பார்க்க"

இஃது ஓர் அறுவடைத் திருநாள். சொக்கரும் மீனாட்சியும் அறுவடைக்குச் செல்வதைப்போல் சிங்காரிக்கப்படுவர். கடவுள் தன் சாயலில் மனிதனைப் படைத்தான் என்பர்; அதை யாரும் பார்த்ததில்லை. ஆனால் மனிதன் தன் உருவில் தேவதைகளைப் படைத்திருக்கிறான். அத்துடனில்லாது, தான் செய்யும் காரியங்களையும் தேவதைகளைச் செய்யவைக்கிறான். வயலில் தான் அறுவடை வேலையில் ஈடுபட்டு ஆனந்தமடைந்திருக்கும்போது தேவதைகளுக்கும் அறுவடைத் திருநாள், தெப்பத் திருநாள். இந்தத் திருநாளைக் கண்டு களித்துத் திரும்பிய ஓர் உயர் குடியில் பிறந்த தாய், குழந்தையைத் தொட்டிலிட்டுத் தாலாட்டுகிறாள். வீட்டினுள் யாவரும் இருக்கின்றனர். அவளுடைய மனக்கண்முன் பல எண்ண அலைகள்—பழைய சம்பவங்கள் நினைவிற்கு வருகின்றன.

அவளுக்கு மணமான புதிது. அதிகாலையில் கணவன் கழனிக்கு ஏர் உழச் சென்று விட்டான். வயலில் கடினமான வேலை. இதை அறிந்து அவள் அவசர அவசரமாகச் சமைத்துச் சோறும், பாலும், தண்ணீரும், அறுசுவைப் பதார்த்தங்களும் எடுத்துக் கொண்டு வேகமாக வயலுக்கு வருகிறாள். கணவன் முகத்திலே ஒரு கடுகடுப்புக் காணப்படுகிறது. பசி போலும்! சுருக்காகப் பரிமாறுகிறாள். என்ன விபரீதம்!

சாப்பிட உட்கார்ந்தவன், ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி எழுந்து மனைவியை அடித்துவிடுகிறான். அவள் ஒரு குற்றமும் செய்யவில்லை. அடிபட்டவள் வாய்பேசவுமில்லை. சுருண்டு விழுந்து விடுகிறாள். தெய்வ உருவில் காட்சி யளிக்கும் *கணவன்தானே அடித்தான்!* அதற்காக அவள் மனதில் எவ்வித ஆத்திரமோ, கோபமோ, மனக்கசப்போ தோன்றவில்லை. அவள் அகத்தின் அழகு முகத்திலும் இருந்தது. கணவன் தன் குற்றத்தை யுணர்ந்து, மயங்கி விழுந்த, குற்றமற்ற மனைவியை மடியில் தூக்கி வைத்து மயக்கம் தெளிவிக்கிறான். இச்செய்தி எப்படியோ, பெண்ணின் தாய் வீட்டாருக்கு எட்டி விடுகிறது. அவளுடைய சகோதரர்கள் பல பரிசுப் பொருள்களுடன் வந்து அவளைப் பார்த்துப் போகின்றனர். எங்கும் எவரும், சண்டைபற்றிய பேச்சே பேசவில்லை. வருடம் உருண்டோடியது; கணவனும் மனைவியும் தெப்பத் திருநாளுக்குச் சென்று வந்தனர். மீனாட்சி-சொக்கர் அருளால் ஆண் மகவு பிறந்தது. அது தொட்டிலில் கிடக்கிறது. பழைய நினைவலைகள் வெளிக் கிளம்புகின்றன. ஆனால் இரும்பு ரசவாதத்தால் பொன்னா கியது போன்று, அது குழந்தைப் பாசமாகவும், பதிபக்தி யாகவும், கடவுள் நினைவாகவும் இருக்கிறது. பாடல்களைப் பார்ப்போம்:

மதுரைக்கு நேர் கிழக்கே
　　மழைபேயாக் கானலிலே
தரிசு கிடக்குதின்னு—சொக்கர்
　　தனிச்சம்பா நாத்துவிட்டுத்
தங்கக் கலப்பை கொண்டு—சொக்கர்
　　தடம்பதியா மாடு கொண்டு
வெள்ளி விதையெடுத்து—சொக்கர்
　　விதை விதைக்கப் போகையிலே!
அடுப்பு மெழுகி—ஆதிமீனாள்
　　அடுக்கடுக்காய்க் கோலமிட்டு

வயிர விறகெடுத்து ஆதிமீனாள்
ஒயிலாகத் தீமூட்டி
வங்காரப் பானையிலே — ஆதிமீனாள்
சிங்காரச் சோர் சமைத்துப்
பாலாடு கறந்து ஆதிமீனாள்
பாங்காய்க் கறி சமைத்துச்
சூலாடு கறந்து ஆதிமீனாள்
சுருக்காய்க் கறிசமைத்துப்
பாலோடு சோறுங்கொண்டு — ஆதிமீனாள்
பாங்காய் வழிநடந்து
தண்ணீருஞ் சோறுங் கொண்டு — ஆதிமீனாள்
தனியே வழி நடந்து
நேரமாச்சு தென்று சொல்லி — சொக்கர்
நெல்லால் எறிந்தாராம்!
கலத்திலிட்ட சோறுதனில்
கல்லே கிடக்குதென்று — சொக்கர்
கடுங்கோபம் கொண்டாராம்!
வாரி எறிந்தாராம் — சொக்கர்
வைரமணிக் கையாலே!
சோறு சுடுதென்று சொக்கர்சாமி
சொல்லி யடிச்சாராம்
பாலு சுடுதென்று — சொக்கர்சாமி
பாங்காய் அடிச்சாராம்
பதறி விழுந்தாளாம் — ஆதிமீனாள்
பஞ்சணை மெத்தையிலே
சோர்ந்து விழுந்தாளாம் — ஆதிமீனாள்
சொக்கட்டான் மெத்தையிலே
மயங்கி விழுந்தாளாம் — ஆதிமீனாள்
மல்லிகைப் பூ மெத்தையிலே!
ஏந்தி யெடுத்தாராம் — சொககர்
இடதுபுறம் தோளணைய!

வாரி யெடுத்தாராம் — சொக்கர்
வலதுபுறம் தோளணைய !
அழுத குரல் கேட்டு
அழகர் எழுந்து வந்து
வரிசை கொடுத்தாராம்
வையகத்தில் உள்ள மட்டும் !
சீரு கொடுத்தாராம்
சீமையில் உள்ள மட்டும் !
மானா மதுரைவிட்டார்
மதுரையிலே பாதி விட்டார்
தல்லா குளமும்விட்டார்
தங்கச்சி மீனாளுக்குத்
தழுகையிலே பாதி விட்டார் ! (ஆராரோ)

எவ்வளவு உயர்ந்த உள்ளப் பண்பு ! இந்தப் பாட்டைச் செவியுற்ற பெற்றோர்கள் எத்துணை உவகை எய்தியிருப்பர் ! கணவன் எவ்வளவு பெருமிதம் கொண்டிருப்பான் ! அவன் உள்ளத்தில் எவ்வளவு பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கும் ! தொட்டிலில் படுத்திருக்கும் சீராளனின் பிஞ்சு உள்ளத்தில் எவ்வளவு நல்ல சீரிய தெய்வப் பண்பு முத்திரை விழுந் திருக்கும் !

*பழனி மலை*

பழனி ஆண்டவனையும், பழனி மலையையும், வள்ளியை யும், வள்ளி-தெய்வானை மயிருபிடி சண்டையையும் பற்றித் தொட்டில் பாடல்கள் பல உண்டு. அதில் சில வருமாறு :

வையாபுரி அழகு
மலையைச்சுற்றித் தோப்பழகு
இடும்பன் குளத்தழகு — நான்
எங்குமே பார்த்ததில்லை !
ஏலம் திறந்து
இளநீரும் கண்திறந்து
பாலே மணக்குதையா
பழனிமலைச் சந்நிதியில் !

கட்டை தட்டிக் கால் இடறி — இடையர்
கணங்கால் பால் கவிழ்ந்து
வெட்ட வெட்டப் பாலூறும் — பழனி
முருகனது சந்நிதியில் ! (ஆராரோ)

*வள்ளி*

1. கானகமே வாழும்
கருங்குறவர் உங்கசனம் !
மலையிலே வாழும்
மலைக்குறவர் உங்கசனம் !

2. கானக் குறத்தி
கருங்குறத்தி வள்ளியம்மை !
ஏழைக் குறத்தி பெற்ற
இளமயிலே கண்வளரு

3. தின்னத்தினை விதைச்சு
தேன்மொழியைக் காவலிட்டு
அறுக்கப்பதம் தப்புதம்மா
அருங்கிளியே காத்ததினை !

4. பாலிடுவா அம்மா
பழமிடுவா வள்ளியம்மை !
தேனைப் பகுத்திடுவா
தெய்வகுல வள்ளியம்மை

5. வெள்ளிமலைக் கானலிலே — வேலவர்
வேலொடிக்கப் போகையிலே !
வெள்ளியினால் வேலொடிச்சு — வேலவர்
புள்ளிமான் எய்தாரோ ?

6. வள்ளியின்னா வள்ளி
மலைமேல் படரும் வள்ளி
கொடி படர்ந்த வள்ளிக்கு — வேலவர்
கொடி மரமா நின்னாரோ ?

தேசவளம்

1. தேங்காயைக் கீறி
வயலுக் குரம் போட்டுத்
தேங்காய்த் தண்ணீர் பாயும்
செல்வமகன் செங்நெலுக்குச்
செங்நெல் விளையும்
சிறுசம்பா போரேறும்
பொன்னு நதிபாயும்
பூமான் மருகோனோ ?
நல்லநிலம் பொன்விளையும்
நைப்பவளம் கொப்புவிடும்!
தஞ்சமென்று வந்தவரைத்
தாமதிப்பார் பாலகனோ ?
சம்பா விளையும்
தனிச்சம்பா போரேறும்!
முத்து விளையும்
மிளகுசம்பா போரேறும் !
கட்டுக் கலங்காணும்
கதிருழக்கு நெற்காணும் !
முடிகுருணி யாகுமின்னு — மீனாள்
முறியெழுதி விட்டாளாம் !
மாடுகட்டிப் போரடிச்சா
மாளாது செங்நெலென்று
ஆனைகட்டிப் போரடிப்பா
அணிமதுரை மீனாட்சி !

✻

# 7



# குழந்தைகளின் விளையாட்டு

''முடிவற்ற உலகங்களின் கடற்கரையில் குழந்தைகள் கூடுகின்றன.

எல்லையற்ற ஆகாயம் மேலே சலனமற்று இருக்கிறது. முடிவற்ற உலகங்களின் கடற்கரையிலே கூச்சலிட்டுக் கொண்டும் ஆனந்தக் கூத்தாடிக் கொண்டும் குழந்தைகள் கூடுகின்றன.

குழந்தைகள் தங்கள் வீடுகளை மணலினால் கட்டுகின்றன; வெறும் சிப்பிகளை வைத்துக் கொண்டு விளையாடுகின்றன; உலர்ந்த சருகுகளைக் கொண்டு ஓடம் முடைகின்றன; அகண்ட ஆழ்ந்த கடலிலே ஆனந்தமாக அவற்றை மிதக்க விடுகின்றன.''

—*தாகூர்*

### *குழந்தையின் பல பருவங்கள்*

குழந்தை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்கிறது. முக்கியமாகப் பெண் குழந்தைகள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே வெள்ளரிக்காயைப் போல் வளர்ந்து விடுகின்றனர். செங்கீரைப் பருவம், தாலப்பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், அம்புலிப் பருவம், சிறுபறைப் பருவம், சிற்றில் பருவம், சிறு தேர்ப் பருவம் போன்ற ஆண் குழந்தைகளின் வளர்ச்சிப் பருவங்களைப்பற்றிப் புலவர்கள் அழகொழுக எழுதியுள்ளனர். இவையெல்லாம் கடந்து,

இப்பொழுது குழந்தையின் வாழ்க்கை, வேறு உலகத்தில் புகுந்துவிடுகிறது.

"தெருவி லிருந்து புழுதியணைந்து
தேடிய பாலரோ டோடிநடந்து
அஞ்சுவய தாகிவிளை யாடுகிறான்."

ஆண்டவனைக் கம்பர் அலகிலா விளையாட்டுடையான் என்கிறார். அதேபோல் குழந்தைகளின் விளையாட்டுகளுக்கும் முடிவில்லை; கணக்குமில்லை.

*ஏன் விளையாடுகின்றன?*

உயிரினங்களின் சிசுக்கள்—பூனைக்குட்டி, நாய்க்குட்டி, பசுவின் கன்றுகள், மனிதச் சிசுக்கள் எல்லாம் விளையாடுவதைக் காணலாம். ஆனால் கீழான உயிரினங்களின் விளையாட்டுகள் ஒரே மாதிரியாகவுள்ளன. மேலான உயிரினங்களின் விளையாட்டுகள் வித விதமாகவுள்ளன. தாம்சன் என்ற உளநூலறிஞர், "விளையாட்டைப்பற்றிய கோட்பாடு யாதெனில், உயிரினங்கள் வாழ்க்கையில் ஆவலாகச் செய்ய வேண்டிய வேலைகளுக்காகத் தங்களைத் தயார் செய்து கொள்வது என்பதாகும்.. உயிரினங்களில், விளையாட்டுத் தன்மை படைத்தனவற்றை உயர்ந்தனவாகத் தேர்ந்தெடுத்த போது இயற்கை தன் பரிணாம வளர்ச்சிப் பரிசோதனையில், ஒரு மூலையைத் திருப்பி, மனிதனை உண்டாக்கும் காரியத்தைத் துவங்கிவிட்டாள் எனக் கூறலாம்," என்கிறார். விளையாட்டே உயிரினங்களை மேன்மையுறச் செய்துள்ளது. அதிக காலம், நன்றாகப் பல விளையாட்டுகளை விளையாடத் தெரிந்தவை உயர்ந்த பிறவிகள்; மற்றவை தாழ்ந்த உயிரினங்கள்.

சிசுக்கள் விளையாடுவதற்கு, உளநூலார் மூன்று முக்கிய காரணங்கள் கூறியுள்ளனர். குழந்தை பிற்கால வாழ்க்கைக்குத் தன்னைத் தயார் செய்துகொள்ளவே விளை

யாடுகிறது என்பது ஒரு கோட்பாடு. எலி பிடிக்கும் வித்தையைப் பூனைக்குட்டி, பந்தோடும், பல பொருள் களோடும் விளையாடுவதன் மூலம் கற்றுக்கொள்ளுகிறது. குழந்தையினிடம் அபரிமிதமான சக்தி உண்டாகிறது. அஃது அதன் உடல் வளர்ச்சிக்குத் தேவைப்படுவதற்கு அதிக மானது. விளையாடுவதன் மூலம், அதைக் குழந்தை வெளி விடுகிறது என்பது இன்னொரு முடிவு. பரிணாம வளர்ச்சியின் பல படிகளைத் தாண்டி இப்பிறவி வந்திருக்கிறது. முந்திய பிறவிகளில் பழகிய, சமூக விரோதமான பழக்கங்களைக் குழந்தை விளையாட்டின் மூலம் வெளிவிட்டு விடுகிறது எனக் கூறுகிறது மூன்றாவது முடிவு.

எந்த வகையில் பார்த்தாலும், இயல்பாகவே குழந்தையிட முள்ள இந்த மனவெழுச்சி, அதன் உடல் வளர்ச்சிக்கும், குண வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் இன்றியமையாததா கிறது. தாமாகவே, எந்த ஆசிரியரின் உதவியுமின்றிக் குழந்தைகள் விளையாடும் விளையாட்டுகளில் கற்பனையிருப்ப தோடு, விளையாட்டின்போது பாடும் பாடல்களில் ஓசை நயமுமிருக்கிறது.

பட்டுப் போன்ற நில வொளி வீசுகிறது. ஊர் மத்தியிலே யுள்ள பொட்டலிலே பரந்து கிடக்கும் மணல், நிலவொளியில் மின்னுவது, கண் சிமிட்டிக் குழந்தைகளை "விளையாட வா" வென்றழைப்பதைப்போ லிருக்கிறது. ஓரிரு உற்சாகமான குழந்தைகள் கைகளைக் கோத்துக்கொண்டு வீதி வழியே பாடிக்கொண்டு சென்று தம் தோழர்களையும் தோழிகளையும் அழைக்கின்றனர். "வாழையடி வாழையாக மனித குலம் தழைக்கவந்த கன்றுகளே, இளவாழைத் தண்டுபோல் முற்றாத புதிய பிஞ்சு அவயங்களைக் கொண்ட என் சோட்டாளிகளே! மெல்லிய வாழைக் குருத்துப் போன்றவர் களே! ஓடி வாருங்கள்! விளையாட வாருங்கள்! நேரமாக வில்லையா? ஓடோடியும் வாருங்கள்!" என்று பாடுகின்றனர்.

"என்சோட்டுப் பிள்ளைகளா !
இளவாழைத் தண்டுகளா !
வாழைக் குருத்துகளா !
விளையாட வாரலையா ?"

"ஓஹோ ! நேரமாகி விட்டதா ? எல்லாரும் வந்துவிட்டார்களா ? இதோ வந்துவிட்டேன்." நாலு திசைகளிலுமிருந்து குழந்தைகள் சிட்டாய்ப் பறந்து வருகிறார்கள். சிறிது நேரத்தில், ஊர்ப் பொது மரத்தில் பட்சிகளெல்லாம் ஒன்று கூடிப் பாடுவதுபோல் ஊர்ப் பொதுவிடத்தில் குழந்தைகளெல்லாம் ஒன்று சேர்ந்து ஆடவும் பாடவும் ஆரம்பித்து விடுகின்றனர். எண்ணற்ற விளையாட்டுகள் ; அத்துடன் பாட்டுகள்.

**1.** *கரகர வண்டி*

இயந்திரத்திற்குச் சூடேற்றுவது போல் இது குழந்தைகளுக்குச் சூடு கொடுக்கும் விளையாட்டுப் போலும் ! தனித் தனியே ஒவ்வொரு குழந்தையும் கைகளை விரித்துக் கொண்டு கர கர வெனக் கறங்கு போல் சுற்றும். பாடும் :

கர கர வண்டி !
காமாட்சி வண்டி ! (திரும்பத் திரும்ப)

**2.** *ராட்டுப் பூட்டு*

இரண்டு இளஞ் சிறு பாப்பாக்கள் கைகளைக் கோத்து அவற்றைக் கழுத்தில் மாற்றிப் போட்டுப் பின்னிக்கொண்டு சுற்றிச் சுற்றி வருகின்றனர். அப்பொழுது இருவரும் பாடுகின்றனர் ;

ராட்டு பூட்டு !
அண்ணங் கொடுத்த சீட்டு ! (திரும்பத் திரும்ப)

மேற்கூறிய விளையாட்டுகளில், குழந்தைகளைப் பொறுத்த மட்டில் இந்த உலகமே சுற்ற வேண்டும். வானமும்

பூமியும் அசைந்து அலமலந்து போய்விட வேண்டும். அப்பொழுது குழந்தைகளும் கீழே விழுந்துவிடும்! தரையே சற்று நேரம் கீழும் மேலும் போவது போன்றிருக்கும். விளையாட்டு சற்று நேரம் ஓயும். பின்பு மறுபடியும் ஆரம்பமாகும்.

### 3. *பூ! பூ!*

இரு குழந்தைகள் எதிரெதிரே நின்று கொண்டு கைகளைக் கூப்பித் தொட்டும் விரித்துக் கொண்டும் பாடும் :

> பூ! பூ! புளியம் பூ
> பொன்னாங் கண்ணிக்குத் தாழம் பூ
> காக்கா கருப்பங்கா
> கஞ்சிகுடிச்சா நெல்லிக்கா! (திரும்பத் திரும்ப)

### 4. *பிஸ்ஸாலே பறத்தல் :*

குழந்தைகள், சின்னஞ்சிறு குருவிகள் போலத் திரிந்து பறந்து வருவதற்கான விளையாட்டு இது. குழந்தைகள் நேர் எதிரில் நின்றுகொண்டு, எதிரிலுள்ளவரின் இடது கையைத் தனது வலது கையாலும், வலது கையைத் தனது இடது கையாலும் இழுத்துப் பிடித்துக் கொண்டு, கால்களோடு கால்களைச் சேர்த்துக் கொண்டு, இராட்டினங்களின் மேலிருக்கும் பொம்மைகள் போல் நிற்பர். பின்பு மெதுவாகக் கையை அசைத்துக் கொண்டு பாடிக்கொண்டே சுற்றிவருவர். போகப் போகக் கைகளை அசைப்பது நின்றுவிடும். இராட்டினம் போல் கர கர வென்று சுற்றிவருவர்—தலை சுற்று மளவும். கடைசியாகக் 'கொல்'லென்று சிரித்துக் கொண்டு 'தொப்'பென்று கீழே விழுவர்! பாட்டுகள் வயதுக்கேற்றாற் போல் அளவிற் சிறியனவாயும், பெரியனவாயுமிருக்கும்.

> (அ) மாமோ பிஸ்ஸிபூ
> மல்லிகே பிஸ்ஸிபூ
> பிஸ்ஸி பிஸ்ஸி (பறந்து வருதல்)

(ஆ) ஏரியிலே இலந்தமரம் !
என்தங்கை வச்சமரம் !
காயுமில்லை பூவுமில்லை !
கண்டவக வச்சமரம் ! (மாமோ)

(இ) பொண்ணு வருது பொண்ணு வருது
பொட்டி வண்டியிலே
பொண்ணைப் பெத்த தாயார் வருது
டக்கு வண்டியிலே !
மாமோ பிஸ்ஸிபூ... (பறந்து வருதல்)

(ஈ) வெள்ளி மலையிலே தீ எரிய
வெங்கலப்பாத்திரம் பொங்கிவர
சூட்டடுப்பிலே கத்தரிக்காய்
பாத்திறக்கடி சக்களத்தி
சக்களத்திக்கும் சக்களத்திக்கும்
சண்டை என்னாடி — இந்தச்
சாதி கெட்ட மாப்பிள்ளைக்குக்
கொண்டை என்னாடி
மாமோ பிஸ்ஸிபூ (பறந்து வருதல்)

(உ) நாலு கரண்டி நல்லெண்ணெய்
நாப்பத்தாறு தீவட்டி !
வாராரய்யா சுப்பையா !
வழிவிடம்மா மீனாட்சி !
தெப்பக் குளத்திலே
தலை முழுகி
தேவடியா வீட்டிலே
குந்த வச்சு
மானத்திலே ரோட்டுப்போட்டு
மாதுளங்காய்ப் பாவிரிச்சு
வாராரய்யா சுப்பையா
வழிவிடம்மா மீனாட்சி (மாமோ)

(ஊ) நெருஞ்சிமுள்ளாம் தாவடமாம்
நேருசக்கரக் கோபுரமாம்
கோபுரத்திலே விளக்கெரிய
கொமாரசாமி கணக்கெழுத ! (மாமோ)

(எ) கண்டங் கத்தரிக்காயே !
கதலி வாழைப் பழமே !
தேனிருக்கும் குத்தாலம் !
தெரிஞ்ச வாழைப் பழமே !
மக்களும் மக்களும் நாங்கதான் !
மனிச மக்களும் நாங்கதான் !
வெங்கிப் பானையை வெடுக்கினு போட்டு
வேடிக்கை பாக்கிறது நாங்கதான் !
கோழி முட்டையைக் குப்புறப் போட்டு
கூத்துப் பாக்கிறதும் நாங்கதான் !
கரிசக் காட்டு மண்ணெடுத்துக்
கரும்பு நட்டது நாங்கதான் !
ஆடிப்பாடிச் சக்கிலிப்பட்டியில்
ஆனந்தங் கொள்வது நாங்கதான் !

(ஏ) அத்தான் வந்தாங்க !
ஆத்திலே இருக்கிற பாவக்காயை
அறுக்கச் சொன்னாங்க !
பின்னே கொஞ்சம் நெய்யை ஊத்தி
வறுக்கச் சொன்னாங்க !
சின்னக் கிண்ணியில் சோறு போட்டுத்
தின்னச் சொன்னாங்க !
பாலக்காட்டுப் பாயைப்போட்டுப்
படுக்கச் சொன்னாங்க !

(ஐ) அக்கடி அக்கடி
ஏண்டி அக்கடி
விறகுக்குப் போனேன்

களைச்சு வந்தேன்
நீரு மோரு
இருக்கா அக்கடி
இல்லை யக்கடி
பாரு பாரு !
பானையைப் பாரு !

### 5. *சீப்பு விக்கிது*

இதில் ஒரு தலைவர் இருப்பார்: பெரிய உத்தி—தாய்ச்சி. குழந்தைகள், கைகளைக் கோத்துக்கொண்டு வட்டமாக நிற்பார்கள். குழுத் தலைவர் கீழ்வரும் பாட்டைப் பதம்பதமாகச் சொல்லி நிற்பவர்களை ஒவ்வொருவராகத் தொட்டுக்கொண்டே போவார். பாட்டில் ஓடிப்போ என்ற பதம் யாரிடம் வந்து முடிகிறதோ அவர் பழம்—வட்டத்திலிருந்து விலகிவிடவேண்டும். கடைசியில் ஒருவர் பட்டுக்கொள்வார். அவர் கடைக்குப்போய் அடையாளம் கொண்டுவந்து தலைவரிடம் காட்ட வேண்டும். மற்றவர்கள் அதற்குள்ளாக ஓடிப் பதுங்கிக்கொள்வார்கள். கடைக்குப் போய்வந்தவர் கண்டு பிடிக்கவேண்டும்.

சீப்பு விக்கிது ! சித்தாடை விக்கிது !
எரிச்சங்குழல் தோப்பு விக்கிது !
வள்ளி நடந்துவா ! வரப்பிலே ஓடிவா !
காக்கறுத்தா ! மூக்கறுத்தா !
குறத்திமகள் ஓடிப்போ !

### 6. *ஒருப்பத்தி இருப்பத்தி !*

இதிலும் ஒரு தலைவர் உண்டு. எல்லாரும் ஒரு வட்டத்தில் உட்கார்ந்துகொண்டு, கைகளைத் தரையில் வைக்கவேண்டும். தலைவர் தம் விரலால் ஒவ்வொரு கையையும் தொட்டுக் கொண்டே கீழ்வரும் பாட்டைச் சொல்லுவார் :

ஒருப்பத்தி திருப்பத்தி
ஓரியமங்களம் செக்கு சிவந்தி
மாடு கன்று வார நேரம்
மஞ்சத்தண்ணி ஊத்தும் நேரம்
உங்கப்பன் பேரென்ன ?

பதில் : முருங்கத் தண்டு
முருங்கத் தண்டைத் தின்னவரே !
முன்னாங் கஞ்சியைக் குடிச்சவரே !
பாலும் பழமும் தின்னவரே !
பட்டாங்கையைப் படக்கின்னு எடு!

பதில் : மாட்டேன்
மாட்டேனிங்காதே ! மல்லுக்கட்டாதே !
தார் தார் வாழைக்காய் !
தாமரைக்காய் வாழைக்காய் !
பிள்ளைப்பேர் மண்டபம் !
பூமாதேவி கையெடு !

இப்பொழுது அவர் கையை எடுத்து இடுப்பில் மறைத்து வைத்துக்கொள்ளவேண்டும். எல்லாரும் கையை எடுத்த பின் தலைவர்,

பிள்ளையார் கோவில்
மொழுகி மொழுகி
காரெடுத்தேன் கப்பெடுத்தேன்
ஓடு காஞ்சு போச்சா ?

பதில் யாவரும் : இல்லை.

மறுபடியும் பிள்ளையார் கோவில் பாட்டு ! ''ஓடு காஞ்சு போச்சா ?'' கேள்வி. கடைசியில் ஒருவர், ''ஆமா !'' என் பார். அப்படிச் சொன்னவர் ஒளித்து வைத்திருந்த தம்

கையைத் தலைவரின் கன்னத்தில் வைக்கவேண்டும். கை சூடாக இல்லாவிட்டால் அவர் கையில் மற்றவர்கள் மண்ணை அள்ளிப் போடுவார்கள். இவ்விளையாட்டைத் தமது ''குழந்தை உலகம்'' என்ற நூலில் திரு. கி. வா. ஜ. 'கில்லாப் பறண்டி' என்று கூறுகிறார். அங்கு அவர் குறிப் பிடும் பாடலும் விளையாடும் முறையும் வேறானவை.

7. *திரித்திரி*

இரு குழந்தைகள் மணலில் விளையாடுவது. ஒரு குழந்தை ஒரு கையில் சிறிய துணியை வைத்துக்கொள்ளும். அது தான் திரி. மணலைக் கரைகட்டி அதில் திரியை ஒளித்து வைக்கும். அப்பொழுது பாடும் :

**திரித்திரி பொம்மாலை !**
**தில்லாலங்கடி பொம்மாலை !**
**காசுகண்டேன் பொம்மாலை !**
**கடையிலே போட்டேன் பொம்மாலை !**
**மூசிக்கோ ! மொத்திக்கோ !**
**முத்தாட்டம் போட்டுக்கோ !**

இன்னொரு குழந்தை திரி ஒளித்து வைத்திருக்கும் இடத்தைத் தன் கையால் மறைக்கும். மறைத்து வைத்த குழந்தை, அந்தக் கைகளுக்குள்ளிருக்கும் திரியைத் தன் விரலால் தோண்டி எடுக்க முயற்சிக்கும். ''ஆனைக்கு வழி விடு—பூனைக்கு வழி விடு'' என்று மூன்று முறை முயற்சி செய்யும். தோற்றவர் மேலே ஓர் 'உப்பு' வைக்கப்படும். பத்து 'உப்பு' ஆகிவிட்டால் தோற்றவரின் கையில் திரியை வைத்து மண்ணைப் போட்டு, கண்களைக் கட்டித் தூரமான ஓர் இடத்திற்கு இட்டுச் சென்று, மண்ணையும் திரியையும் அங்கே போட்டு விட்டு, விளையாடிய இடத்திற்குத் திரும்பக் கொண்டுவந்து, ஒரு சுற்றுச் சுற்றி விட்டு விடவேண்டும். இப் பொழுது தோற்றவர் திரியைக் கண்டெடுக்க வேண்டும்.

இந்த விளையாட்டில் பாடப் பெறும் மற்றொரு பாட்டு :

மாது மாது மன்னவன் தம்பியை
கோது கோது கொழுந்து வெத்திலை
வெள்ளைக்காரன் சொல்லிக் கொடுத்தான்
சொல்லாதே சொல்லாதே
தட்டிக்கோ தாய்ச்சுக்கோ
தட்டி வெத்திலை போட்டுக்கோ
போட்ட இடத்திலே துப்பிக்கோ !

**8. *ஓடு சிக்கு***

இதில் இரண்டு கட்சிகள் உண்டு. இரு கட்சிகளின் பிராந்தியங்களையும் பிரிக்கும் எல்லைக் கோடு ஒன்று உண்டு. ஒரு தடவையில் ஒருவர், எல்லையிலிருந்து பாடிப்போய், எதிர்க் கட்சியாரைத் தொட்டுவிட்டு எல்லைக்குப் 'பாட்டம்' கொண்டு வர வேண்டும். எதிர்க் கட்சியினர் சிக்காது ஓடி விடுவர். ஆனால் பின்னாலேயே மறைந்து வந்து, பாடி வந்தவர் எல்லையைத் தாண்டியதும் துரத்தித் தொடுவர். எந்தக் கட்சி எல்லாரையும் தொட்டுவிடுகிறதோ அதற்கு வெற்றிகிட்டும். அப்பொழுது 'எள்ளுக் குத்தி முள்ளு வாங்கி' என்று சொல்லி எதிர்க் கட்சிக்காரர்களைக் கிள்ளிக் கிள்ளி எல்லைமாற வேண்டும்.

*பாட்டம்*

ஈச்சு — எலுமிச்சு
பால் கொடுத்த — பாச்சு
(திரும்பத் திரும்ப மூச்சடக்கிப் பாட வேண்டும்)

**9. *சடு குடு***

இது பலப் பரீட்சை செய்யும் விளையாட்டு. முந்திய விளையாட்டு மாதிரியே இருக்கும். ஆனால் பாடி வருபவர் களை எதிர்க் கட்சிக்காரர்கள் பிடித்து நிறுத்துவார்கள்.

பாட்டத்தோடு எல்லையைத் தொடாவிட்டால் 'சங்கு' (அஃதாவது அவுட்).

*பாட்டம்*

(அ) சடு குடு மலையிலே ரெண்டானை
தவறி விழுந்தது கிழட்டானை கிழட்டானை
(திரும்பத் திரும்ப மூச்சடக்கிப் பாட வேண்டும்)

(ஆ) அடடாநரி கரடேறுது
ஒன்பது நரியிலே
ஒருநரி செனை நரி
செனை நரி முதுகிலே
ஒரு பிடி நரை மயிர் (திரும்பத் திரும்ப)

(இ) திருகல் முருகலான
கருவேலா மரத்தடியில்
சீப்புச் செதுககிற
சப்பை வாய்த்தச்சா
சீப்பைச் செப்பமாச் செதுக்கடா
சப்பை வாய்த்தச்சா !
(மூச்சு விடாமல் பாடவேண்டும்)

(ஈ) செஞ் சோளத் தோசை
தீஞ்ச தோசை (திரும்பத் திரும்ப)

(உ) கடலாடி வெள்ளைக் கோழி
கிழடு மல்ல மலடு மல்ல !

(ஊ) பொலிஞ் சடு குடு ஒன்பது
சாட்டை ஒன்பது
முத்துமாடன் செத்துப்போனான்
கொட்டுடா குலாவுடா
பொலிஞ் சடு குடுகுடுகுடு !

(எ) முத்து முத்துச் சீலைக்காரி
முத்துப் பொன்னு ஓலைக்காரி
தண்டை சிலம்புக்காரி
தலைவாசல் வீட்டுக்காரி
அவளைத் தொடுவானேன்!
கவலைப் படுவானேன்
கச்சேரிக்குப் போவானேன்
கைகட்டி நிற்பானேன்!
பொலிஞ் சடுகுடு குடுகுடு சங்கு!

### *10. தட்டலங்கா—புட்டலங்கா*

இந்த விளையாட்டில் ஒரு தாய்க் கிழவியுண்டு. குழந்தைகள் எதிர் எதிராக இரண்டு வரிசைகளில் காலை நீட்டி உட்கார்ந்து கொள்ள வேண்டும். தாய்க் கிழவி அவற்றின் கால்களைத் தொட்டு,

தட்டலங்கா புட்டலங்கா!
    தாடிக்கொம்பு மாதுளங்கா!
தேங்காயுடைச் சுடைச்சு!
    தெருமேலே வச்சு வச்சு!
மாங்காயுடைச் சுடைச்சு!
    மடிமேலே வச்சு வச்சு!
எந்தக் காக்காய் சாடுமோ!
    இந்தக் காக்காய்!

என்று ஒரு குழந்தையைச் சுட்டிக் காட்டுவார், தாய்ச்சி. அது நீட்டி நிமிர்ந்து படுத்துக்கொள்ளும். இவ்வாறாக எல்லாரும் சாய்ந்தபின், தாய்ச்சி, நெல் வேகவைப்பதாகவும், அதைக் காயப் போடுவதாவும் காய்ந்த நெல்லைப் பதம் பார்ப்பதாகவும் பாவனை செய்வார்! குழந்தைகளின் தாடையைத் தட்டி, கடக்கென்று சத்தம் கேட்கும்படி செய்து, நெல் காய்ந்து விட்டதென, நெல்லைக் குத்த ஆரம்பிப்பார். குழந்தைகளின் கால்களை எடுத்துத் தரையில் மோதி,

"சின்ன உலக்கையைக் குத்தி குத்தி
பெரிய உலக்கையைக் குத்தி குத்தி
சீமாட்டி வச்ச உலக்கை
சிங்கு சிங்குன்னு குத்துது"

என நெற்குத்துவார். கடைசியாக விறகெடுக்கக் காட்டுக்குப் போவார். குழந்தைகள் அவரைப் பின்தொடரும். "முள்ளு, முள்ளு வாராதீர்கள்" என்பாள் பாட்டிக்கிழவி. "பாட்டி பாட்டி, உன் ஒத்தைக்கால் செருப்பைக் கொடு," எனக் குழந்தைகள் கத்துவர். தாய்க்கிழவி கோபம் கொண்டு பிள்ளைகளைத் துரத்துவார். எங்கும் ஒரே சிரிப்பும், கூச்சலு மாகவிருக்கும் !

## *11. கோ விளையாட்டு*

இதை உஸ்ஸா விளையாட்டு என்றும் அழைப்பர். இதில் இரு கட்சிகள் உண்டு. கட்சிக்குக் குறைந்தது நான்கு நபர்கள் வேண்டும். ஒரு கட்சியின் தலைவனைத் தவிர மற்ற வர்கள் ஒரு நேர்கோட்டில் குறைந்தது ஒரு பாகமிடம் விட்டு, நேர்முகமாகவும் எதிர்முகமாகவும் பார்த்து, மாறி மாறி உட்கார வேண்டும். தலைவன் பறந்துவந்து எதிர்க்கட்சி யினரைத் தொடவேண்டும் : அவர் குறுக்கே செல்லக் கூடாது.

அவர் ஒரு கோடியிலிருந்து மறுகோடிக்கு ஓடோடியும் வருவார். இப் பக்கம், அப் பக்கம் மாறி மாறிச் சக்கரமாகச் சுற்றி வருவார். எதிர்க் கட்சியினர் குறுக்கே புகுந்து விலகிக் கொள்வார்கள். சற்றுக் கவலையீனமாக இருந்தால் அடிபட வேண்டும். அடிபட்டவர் விலகிக் கொள்ள வேண்டும். அவர் அவுட்' அல்லது 'சங்கு.' இவ்வாறு ஒருவரைத் தொட்டு விட்டால் உட்கார்ந்திருப்பவரை எழுப்பலாம். தொட்டு வரு பவர் கோ என்று சத்தமிட்டு ஊடே உட்கார்ந்திருப்பவரை எழுப்பிவிட்டுத் தாம் அந்த இடத்தில் அமர்ந்து கொள்வார்.

ஊடே உள்ளவரை எழுப்ப ஆரம்பித்து விட்டால் எதிர்க்கட்சி யினர் இலகுவில் அடிபட்டு விடுவர். யாவரும் அடிபட்டு விட்டால், அவர்கள் உட்கார வேண்டும்.

இதில் பாட்டு உண்டு. பறந்துவரும் தலைவன் விளை யாட்டில் சூடு ஏற்றுவதற்காகத் தமக்குக் கால் வலிப்பதாகவும், மேல் வலிப்பதாகவும் பாசாங்கு செய்து கொண்டு பாடுவார். எதிர்க்கட்சியினர் ஒன்று சேர்ந்து அவரைக் கேலி செய்து பாட்டில் பதில் கூறுவர்.

*பாட்டு*

**தலைவன்:** காலே வலிக் குதே !
**பதில் :** கட்டிலைத் தூக்கிப் போட்டுக்கோ !
த : மேலே வலிக்குதே !
ப : வெந்நியை வச்சு ஊத்திக்கோ !

அல்லது

(மெத்தையிலே படுத்துக்கோ)

த : ஊசி விழுந்திருச்சு !
ப : உத்து உத்துப் பாத்துக்கோ !
த : பாசி விழுந்திருச்சு !
ப : பாத்துப் பாத்து எடுத்துக்கோ ;
த : வடிச்ச கஞ்சி கொட்டிப்போச்சு !
ப : வாரி வாரிக் குடிச்சுக்கோ !
த : கட்டுச் சோறு நொந்து போச்சு !
ப : புட்டுப் புட்டுத் தின்னுக்கோ !

***12. ஐந்து கல் விளையாட்டு :***

இதில் இருவர் அல்லது அதிகமானவர் சேர்ந்து ஆடுவர். இதில் ஏழுகல் விளையாட்டுமுண்டு. ஐந்து கல்லைத் தரையில்

உருட்டி ஒரு கல்லை உயரப்போட்டு, அது கீழே விழுமுன்! கீழே கிடக்கும் கல்லை எடுத்துக் கொண்டு உயரப்போட்ட கல்லைப் பிடிக்க வேண்டும். அதில் ஒண்ணான் என்றால் ஒவ்வொரு கல்லாகவும், இரண்டான் என்றால் இரண்டு இரண்டு கல்லாகவும், மூன்றான் என்றால் மூன்று கல்லையும், நாலான் என்றால் நாலு கல்லையும் எடுக்கவேண்டும். பின்பு கொத்தலக்கை விளையாட வேண்டும். இதில் எல்லாக் கற்களையும் கையில் வைத்துக் கொண்டு ஒரு கல்லை மாத்திரம் உயரப்போட்டு, தரையை ஒரு விரலால் தொட்டுவிட்டு உயரப் போட்ட கல்லைப்பிடிக்க வேண்டும். பின்பு தப்பை ; இதில் எல்லா கற்களையும் உயரப் போட்டுக் கையால் தரையைத் தட்டிவிட்டு எல்லாக் கற்களையும் பிடிக்க வேண்டும். அதன் பின் சிணுங்கி ; இப்பொழுது எல்லாக் கற்களையும் புறங் கையில் நிறுத்திப் பின் மேலே போட்டு, எதையும் கீழே விட்டு விடாமல் பிடிக்க வேண்டும். கடைசியாகக் காட்டுவா. இதில் எல்லாக் கற்களையும் புறங்கையில் நிறுத்த வேண்டும். அதில் கட்சிக்காரர் குறிப்பிட்ட ஒரு கல்லைக் காட்டுவார். எல்லாக் கற்களையும் உயரப்போட்டு, குறிப்பிட்ட அந்தக் கல்லைப் பிடிக்கவேண்டும். எல்லா ஆட்டங்களிலும் கல்லைக் கீழே போடாமல் ஆடுபவர் பழம். அவ்வாறு விளையாடத் தவறு பவர் மேல் கட்டை வைக்கப்படும்.

கட்டை கொடுக்க வேண்டியவர் கையைக் கீழே வைக்க வேண்டும். கட்டை கிள்ளுபவர் ஒவ்வொரு கல்லாக உயரப் போட்டுத், தோற்றவரின் கையைக் கிள்ளிவிட்டுக் கல்லைப் பிடிப்பார். இவ்வாறு ஒவ்வொரு கல்லையும் மேலே போட்டு, அதைப் பிடிக்கத் தவறும்வரை கிள்ளிக் கொண்டேயிருப்பார். பட்டவர் பாவம்! கிள்ளுப் பொறுக்கமாட்டாமல் திணறிக் கொண்டிருப்பார். இந்த விளையாட்டில் ஆரம்ப முதல் கட்டைகிள்ளி முடிக்கும் வரை பாட்டு உண்டு :

ஒன்னான் :

இரண்டான் : ஈறு இரிச்சுக்கோ
இலையைப் பறிச்சுக்கோ

மூணான் : முக்கட்டுப் புள்ளையை
மூக்கறுத்துக்
காக்காப் புள்ளையைக்
கழுத்தறுத்து.

நாலான் : நான்கு நரி வாலு
சோழப் பொறி வாலு.

கொத்தலக்கை : கொத்தலக்கை —
கோழி குண்டு
வச்சடிப்பான்,
வாரிப்போவான்.

தப்பை : தப்பை — தாளம் —
கொட்டுக் கூடை —
சந்தனக் கும்பா —
சகா தேவி

சிணுங்கி : சீ சிணுங்கி ஒண்ணு
சீ சிணுங்கி இரண்டு
சீ சிணுங்கி மூன்று
சீ சிணுங்கி நாலு
சீ சிணுங்கி ஐந்து

காட்டுவக : காட்டுவாவே
கரை யேறிக்கோ !

கட்டை : கட்டே கட்டை
கருவேலாங் கட்டை
வேலாங் கட்டை
விறகுச் சுப்பி
வச்சடிப் பான்
வாரிக்கிட்டுப் போவான்.

## கட்டை கிள்ளுதல்

கட்டை ஒண்ணுதாடா
 பட்டி விழுவாய்
சொட்டை ரெண்டு
 சில்லுப் போல
இட்டிலித் தட்டை
 எங்கே வச்சே!
எலியும் பூனையும்
 கொண்டோடிப் போச்சு
எடுத்துத் தாடா
 பரசு ராமா
ஆறாங் கட்டை
 குறளிக் கூந்தல்
ஏழாங் கட்டை
 எழுதின பூச்சக்கரம்
எட்டாங் கட்டை
 கொட்டுமான கோசம்
ஒன்பதாங் கட்டை
 ஓவலக் கூ தாலப்பூ
பத்தாங் கட்டை
 பல்லாக்குச் சேவை
பிள்ளையார் கட்டை
 பெரிய கட்டை
சாமிகட்டை — சகலகட்டை
 பூமாதேவி அம்மா!
பொறுத்துக் கோடி யம்மா!
 சகாதேவி யம்மா
சகித்துக் கோடி யம்மா!
 எல்லாக் கட்டையும் எடுத்து
எம்மேலே குத்தமில்லை
 கூட ஒரு கட்டை எடுத்தால்
குறைஞ்சுக்க மாட்டடி யம்மா!

கிராமங்களில் குழந்தைகள் மத்தியில் இவ்வகையான விளையாட்டுகள் நூற்றுக் கணக்கில் உள்ளன. அவைகள் அனைத்தும் ஒரு தனி நூலாகவே வெளிவரலாம்.

''குழந்தாய்! உனக்கு வர்ணம் தீட்டிய பொம்மைகள் கொண்டு வரும்போது மேகங்களிலும் நீரிலும் வர்ண விசித்திரங்கள் தோன்றுவது ஏன் என்று எனக்கு விளங்குகிறது. பூக்களிலே விதவிதமான வர்ணங்கள் தீட்டப்பட்டிருப்பதின் காரணம் என்னவென்பதையும் நான் அறிகிறேன்—நவ நவமான வர்ணந் தீட்டிய பொம்மைகளை நான் உனக்குத் தரும்போது!''

—*தாகூர்.*

*

# 8




''உயர்தரு ஞான குருஉப தேச
முத்தமி ழின்கலை யுங்கரை கண்டு
வளர்பிறை என்று பலரும் விளம்ப
வாழ்பதி னாறு பிராயமும் வந்து —
மயிர்முடி கோதி அறுபத நீல
வண்டிமிர் தண்டொடை கொண்டை புனைந்து
மணிபொன் இலங்கு பணிகள் அணிந்து
மாகதர் போகதர் கூடி வணங்க —
மதன சொரூபன் இவனென மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழிய எறிந்து
மாமயில் போலவர் போவது கண்டு —
மனது பொறாமல் அவர்பிற கோடி
மங்கல செங்கல சந்திகழ் கொங்கை
மதன சுகந்த விதனம் இதென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து —''

என்று பட்டினத்தார் கூறுவதுபோல், வாலிப வயதும் அதற்கேற்ப இளமையின் சின்னங்களும், இருபாலாரும் ஒருவரை ஒருவர் எதிர்வதால் கவர்ச்சியும் ஏற்படுகின்றன. ஞானிகளைத் தவிரச் சாதாரண மனிதர்களெல்லாம் இந்த நியதிக்குட்பட்டவர்களே.

*சக்தியும் சிவமும்*

உலகமேசக்தி சிவவடிவமானது. ஆண்டவன் உமையாளை ஒருபாகமாகக் கொண்டுள்ளான் எனச் சாற்றுகின்றன, சைவ ஆகமங்கள். உலகம் உண்டானது, உய்ந்திருப்பது, வளர்வது, குறைவது, ஒடுங்குவது அத்தனையும் சிவசக்தித் திருவிளையாடல்களே. இவற்றையே விஞ்ஞானம் வேறு வேறு பெயர்களிட்டு அழைக்கும். இவை ஒன்றை விட்டு ஒன்று பிரிந்திருக்கவோ, ஒன்றில்லாமல் மற்றொன்று இயங்கவோ இயலாது. கிராம வாழ்க்கையில், முக்கியமாகத் தென்னிந்தியாவின் நாட்டுப்புற வாழ்வில், ஆண் பெண் உறவு நிலை இயற்கையாக அமைந்துள்ளது. திறந்த வெளிகளில் நடைபெறும் நிலம் பண்படுத்தல், விதைத்தல், நடவு, களையெடுத்தல், கதிரறுப்பு, பாதைகள் அமைத்தல் போன்ற வேலைகளிலெல்லாம் ஆண்களும் பெண்களும் சம பங்கு கொள்ளுகின்றனர்! வேலையில் நல்ல முறையில், ஆரோக்கியமான வழியில் ஆபாசமில்லாத வகையில் போட்டி ஏற்படுகிறது. இந்த ஆரோக்கியமான போட்டி காரணமாக ஆண்களும் பெண்களும் தத்தம் வேலையைத் திறமையோடு செய்வதோடு வேகமாகச் செய்வதற்கான தூண்டுதலும் ஏற்படுகிறது. சுரண்டலற்ற போட்டி வாழ்க்கையில் ஓர் இனிமையும் பிறக்கிறது.

இவ்வாறாக வேலையில் ஏற்படும் போட்டி, பாட்டுப் போட்டியாகவும் சில சமயங்களில் உருவெடுக்கும். அதில் வேலையில் ஈடுபடுபவர்கள் யாவரும் கலந்து கொள்வதால் வேலையில் ஒரு விறுவிறுப்பிருக்கும்! மேலும் அவர்களால் பாடப்பெறும் பாடல்களில் 'எல்வின்' சொல்வதுபோல, ''உண்மையான, வெளிப்படையான, ஒளிவு மறைவற்ற, கூச்சமில்லாத காதற் பாடல்கள்'' இருப்பதையும் காணலாம். இவற்றில் கிராம மக்கள் அணியும் நகைகள், உடைகள் பற்றிய குறிப்புகளையும் உவமை நயங்களையும் காணலாம்.

அத்துடன் ''எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப் பில்லை'' என்பதையும் அறியலாம்.

## போட்டா போட்டிப் பாடல்கள்

### மெட்டு

தன்னனனே னானனன்னே
னானனன்னே னா னனன்னே
பேரையூர் சந்தனமே
னானனன்னே னான னன்னே — எம்
சாப்டூர் மாம்பழமே.

ஆண் : ஒட்ட ஒட்டம் பூவே நீ
ஒசக்க இருக்கும் தாழம்பூவே
கண்ணுவலிப் பூவே உன்னைக்
கண்டு வெகு நாளுமாச்சே !

பெண் : தோட்டத்துப் பூவைத்
தொடுத்து முடிஞ்சதுபோல்
தனிச்சு முடிஞ்சபூவு
தவறு மின்னா நானிருந்தேன்.

ஆண் : கந்தனைக் காண வென்று
காத்திகைக்கு வந்தேனடி
உந்தனைக் கண்டேனினி
ஊருக்குப் போகேனடி !

பெண் : காடைக் கூடு கக்கத்திலே
கருத்த மச்சான் பக்கத்திலே
மாடப்புறாக் குஞ்செடுக்க
மய்யலுண்டோ உங்களுக்கு !

ஆண் : கீரி மயிருணத்தி
கீமுழிக்கு மையெழுதி
கள்ள நடை நடப்பாய்
கவுண்டமக எந்த ஊரோ ?

பெண் : முத்திரி மோதிரமோ
மூணுதுட்டுச் சந்தனமே
கணையாழி மோதிரமே
கையைவிட்டுப் போகுதில்லோ !

ஆண் : ஈசத் தயிலானே
இடைசிறுத்த ஓரனமே
வானத் தயிலானே
வம்மம்தாண்டி உம்மேலே !

பெண் : பொட்டலிலே கிணறுவெட்டிப்
போருக்காளை ரெண்டும்போட்டுக்
காப்புப்போட்ட மச்சானுக்குக்
கமலைபூட்டத் தெரியலையே !

ஆண் : தண்டட்டி போட்டபுள்ளை
தானா வந்தபுள்ளை
மேலடு போட்டபுள்ளை
மெலிகிறண்டி உன்னாலே !

பெண் : கருவேலங் காட்டுக்குள்ளே
கணக்கெழுதப் போரதம்பி
கருவேலம்பூ வாடைதட்டிக்
கணக்கை மறந்திடாதே !

ஆண் : ஆலம் விழுதுபோல
அந்தப் புள்ளை தலைமயிரு
தூக்கி முடிஞ்சிட்டாளாம்
தூக்கணத்தான் கூடுபோல !

பெண் : எருக்கலங் காட்டுக்குள்ளே
ஏடெழுதப் போரதம்பி
எருக்கலம்பூ வாடைதட்டி
ஏட்டை மறந்திடாதே !

ஆண் : புள்ளிபோட்ட ரவிக்கைக்காரி
புளியம்பூச் சேலைக்காரி
நெல்லறுக்கப் போகும்போது — நான்
நெல்லிமரங் காவலடி !

பெண் : கானலிலே மழைபொழிய
கருங்குரங்கு நின்னழுக
ஈசனுக்குப் புத்திசொல்லி
இல்லிடத்தைத் தோக்கலாமோ ?

ஆண் : வண்டி வளைவிக்காரி
வாழைத்தாரு சீலைக்காரி
குண்டுமுத்து ரவிக்கைக்காரி — நீ
கூடவந்தாப் போதுமடி.

*ஆண்-பெண் தர்க்கம்*

பெண்கள் பயமின்றித் தனியாகவும் சென்று கழனிகளில் வேலை செய்யும் பழக்கம் கிராமங்களில் உண்டு. வள்ளி தினைப்புனம் காத்தாளல்லவா? அங்கு வேலவரும் வந்தா ரல்லவா ? ஒரு பெண் ஆற்றங்கரையோரம் தனியே ஆடு மேய்த்துக்கொண்டிருக்கிறாள். இக்கரையிலிருந்து ஆடவன் அவளைக் காண்கிறான். இவளை நேரடியாக அணுக அவனுக்கு அச்சம். இக்கரையில் இருந்தபடியே வாக்குவாதம் செய்கிறான். பெண்ணும் சாமார்த்தியமாகச் சுடச்சுடப் பதில் கொடுக்கிறாள் :

ஆண் : ஆத்துக்கு அந்தப்புறம்
ஆடுமேய்க்கும் பெண்மயிலே !
ஆத்திலே வெள்ளம்வந்தால்
அப்போநீ என்னசெய்வாய் !

பெண் : ஆத்திலே வெள்ளம்வந்தால்
ஆசாரியைக் கூட்டிவந்து

அழகான கப்பல்செய்து
அக்கரைக்கே நான்வருவேன் !

ஆண் : ஆசாரியைக் கூட்டிவந்து
அழகான கப்பல்செய்தால்
நண்டு வடிவங்கொண்டு
நறுக்கிடுவேன் கப்பலையே !

பெண் : நண்டு வடிவங்கொண்டு
நறுக்கினால் கப்பலைநான்
எலியாய் வடிவெடுத்து
இறப்புவழி பாய்ந்திடுவேன் !

ஆண் : எலியின் வடிவங்கொண்டு
இறப்புவழி பாய்ந்தாயானால் — நான்
பூனை வடிவங்கொண்டு
பிடித்திடுவேன் அவ்வெலியை !

பெண் : பூனை வடிவங்கொண்டு
பிடித்தாயானால் அவ்வெலியை — நான்
ஊர்க்குருவி வேடங்கொண்டு
உயரப் பறந்திடுவேன் !

ஆண் : ஊர்க்குருவி வேடங்கொண்டு — நீ
உயரப் பறந்தாயானால் — நான்
செம்பருந்து வேடங்கொண்டு
செந்தூக்காத் தூக்கிடுவேன் !

பெண் : செம்பருந்து வேடங்கொண்டு — நீ
செந்தூக்காத் தூக்கவந்தால் — நான்
பூமியைக் கீறிக்கொண்டு
புல்லாய் முளைச்சிடுவேன் !

ஆண் : பூமியைக் கீறிக்கொண்டு — நீ
புல்லாய் முளைப்பாயானால்
காராம்பசு வேடங்கொண்டு
கடித்திடுவேன் அந்தப்புல்லை !

பெண் : காராம்பசு வேடங்கொண்டு — நீ
கடிக்கவந்தால் அந்தப்புல்லை
ஆத்தங்கரை யோரத்திலே
அரளியாய்ப் பூத்திடுவேன்!

ஆண் : ஆத்தங் கரை யோரத்திலே — நீ
அரளியாய்ப் பூத்தாயானால் — நான்
பண்டார வேடங்கொண்டு
பறித்திடுவேன் அந்தப்பூவை!

பெண் : அத்திமரமும் உண்டு!
அத்தனையும் பிஞ்சுமுண்டு
நத்துத்தரும் மச்சானுக்கு
முத்துத்தரும் சிப்பியாவேன்!

''எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை'' என்று சொல்லும்படியாக அமைந்த இன்னொரு பாடல். கேள்வி பதில் வடிவில் அமைந்த ஆண் பெண் விவாதம் :

*பாட்டு*

ஆண் : அடி
வட்ட மிட்டுக் கொக்கரிக்கும்
வலையைக் கண்டால் கத்தரிக்கும்
வெட்டுப்பள்ளம் ஆத்துக்குள்ளே
வீச்சுவலைக் கண்ணிவச்சேன்
விவரம்ஒண் ணும்படலே — உன்னை
விடிஞ்சாலும் விடுவதில்லே.

பெண் : அட நீங்க
வெட்டுப்பள்ளம் ஆத்துக்குள்ளே
வீச்சுவலைக்கண்ணி வச்சா — நாங்க
வட்டச்சுளிக் கெண்டை போல
வலையை விட்டு விலகிடுவேன்
அட வாழ்க்கைப்பட்ட துண்டா?
வழக்கிருந்தா கொண்டா!

ஆ : அடி
வட்டச்சுளிக் கொண்டைபோல
வலையைவிட்டு விலகினாலும்
சுண்டுமுள்ளுத் தூண்டிபோட்டுச்
சுண்டி இழுத்திடுவேன்
செய்த மோசம் அறிந்து — உனக்குச்
செய்துவைப்பேன் மருந்து.

பெ : அட நீங்க
சுண்டுமுள்ளுத் தூண்டிபோட்டு
சுண்டி இழுத்தாலும் — நான்
தொட்டாச் சிணிங்கிபோலத்
துளைத்து முளைத்திடுவேன்
துருதுருத்த மடயா — நீ
தூரப் போடா மூடா.

ஆ : அடி நீ
தொட்டாச் சிணிங்கிபோலத்
துளைத்து முளைத்தாலும் — நான்
கட்டாயம் தொட்டுப்பார்த்துக்
கண்டு பிடிப்பேனடி.

பெ : அட நீங்க
கட்டாயம் தொட்டுப்பார்த்துக்
கண்டு பிடித்தாலும்
பட்டப்பகல் நேரத்திலே
பதுங்கி ஒளிந்திடுவேன்
படபடத்த பயலே — வண்டி
புறப்படுது ரயிலே !

ஆ : அடி நீ
பட்டப் பகல் நேரத்திலே
பதுங்கி ஒதுங்கினாலும் — நான்

முக்கண்ணனார் தென்மதுரை
மொட்டைநல்ல கோபுரத்து
முனியாண்டி ரூபங்கொண்டு
முடியைப் பிடிச்சிழுப்பேன்

பெ : அட நீங்க
முனியாண்டி ரூபங்கொண்டு
முடியைப் பிடிச்சிழுத்தால் — நான்
மதுரை மீனாட்சி யம்மன்
வங்கிநா னாகிடுவேன்
அறிவு கெட்ட ஆளே — ஒங்க
அப்பனைப் போய்க் கேளே.

ஆ : அடி நீ
மதுரை மீனாட்சி யம்மன்
வங்கிநீ ஆனாலும் — நான்
பெற்றவள் மடியில் வந்து
பிச்சுப் பிடுங்கிடுவேன்
பேச்சிருந்தாச் சொல்லு
பேதைப்பாட்டைத் தள்ளு !

பெ : அட நீங்க
பெற்றவ மடியில் வந்து
பிச்சுப் பிடுங்கினாலும் — நான்
உற்றதோர் உறன்முறையார்
ஊருக்குள்ளே சொல்லிடுவேன் — இப்போ
உனக்கும் எனக்கும் சண்டை
உடையப் போகுதுன் மண்டை !

ஆ : அடி நீ
உற்றதோர் உறன்முறையார்
ஊருக்குள்ளே சொன்னாலும்
நாட்டு வழக்கம் போலக் — கேட்டு
நான்தாலி கட்டிடுவேன் !

*காதல்*

காதலுக்குக் கண்ணில்லை என்பர். ஒரு பெண்ணுக்குத் தனது அத்தை மகன் மேல் அளவுகடந்த பிரியம். அவள் அதை நயமாக வெளியிடுகிறாள் :

1. செடியோரம் கிணறு வெட்டிச்
செவலைக் காளை ரெண்டும் பூட்டி
அத்தை மகன் இறைக்கும் தண்ணி
அத்தனையும் சக்கரையே !

2. மலையோரங் கிணறு வெட்டி
மயிலைக் காளை ரெண்டும் பூட்டி
அத்தை மகன் இறைக்கும் தண்ணி
அத்தனையும் சக்கரையே !

3. சாலையிலே கிணறு வெட்டி
சாய்ந்த பக்கம் பூட்டிறக்கி
அத்தை மகன் இறைக்கும் தண்ணி
அத்தனையும் சக்கரையே !

காதலனும் காதலியும் யாரும் அறியாமல் இரவுக்கிரவே தனிவழி நடக்கத் தீர்மானிக்கிறார்கள். வழியிலுள்ள சிரமங்களைக் காதலன் எடுத்துரைக்கிறான். அத்துடன் வழியில் நடந்தவற்றையும் பாட்டு வர்ணிக்கிறது :

ஆண் : ஈட்டி இடைஞ்சலிலே
இடிவிழுந்த கானலிலே
பாறை இடைஞ்சலிலே
பயமு மெத்த ஆகுமடி !

பெண் : இருட்டை இருட்டடிக்க
இந்திரனைப் பேயடிக்கச்
சாமவழி நடக்கச்
சம்மதமே எந்தனுக்கு !

ஆண்: கையோடு கைகோத்துக்
கானல்வழி போகையிலே
மெய்சோர்ந்து விழுந்ததென்ன
மென்குயிலே கண்மணியே!

பெண்: கையோடு கைகோத்துக்
கானல்வழி போகையிலே
கண்டேன் உனதழகை
கட்டழகா! சோர்ந்துவிட்டேன்!

*திருமண விழா*

இவ்வாறாகக் காதலனும் காதலியும் ஒருமனப்பட்டபின், தாய், தந்தையர்கள் ஊர் அறிய, உற்றார் உறவினர்களை அழைத்துக் காதலர்களுக்குத் திருமணம் செய்துவைப்பர். தமிழ் மக்களின் திருமண விழா ஒரு கலை நிகழ்ச்சியாக விருக்கும். முன்பெல்லாம் மூன்று நாட்கள், ஐந்து நாட்கள் கூடக் கல்யாணச் சடங்குகள் நடைபெறும். கடைசித் தினத்தன்று மஞ்சள் நீராட்டமும், பின்பு ஊர்வலமும் நடைபெறும். சில வகுப்பினரிடையே மாப்பிள்ளை குதிரைமேலேறி ஊர்வலம் வரும் வழக்கமிருக்கிறது. பெண் நாணிக் கோணிப் பக்கத்தில் நடந்து வருவாள். சுற்றமும், நண்பர்களும் புடைசூழ நிற்பர். மேளதாள வாத்தியங்களுடன் ஊர்வலம் ஆரம்பிக்கும்.

மணப்பந்தலிலே பெண்ணையும் மாப்பிள்ளையையும் பக்கம் பக்கமாக உட்காரவைத்துப் பலவகைச் சடங்குகள் நடத்துவர். பட்டணங்களில் படித்த வகுப்பினரிடையே பத்தியம், நலுங்கு, ஏசல், ஊஞ்சல், லாலி, ஓடம், ஓதியிடுதல், பச்சை போடுதல் போன்ற பல சடங்குகள் உண்டு.

ஒவ்வொரு சமயத்திலும் கைதேர்ந்தவர்கள் கட்டிய பாடல்களைப் பாடுவதுண்டு. ஆனால் கிராமத்தில் நடக்கும் கல்யாணங்களில் நாட்டுப் புறப் பாணியில் சில பாடல்கள் மாத்திரம் பாடுவர்; அவற்றுள் சில வருமாறு:

*சம்பந்தியை ஏசல் :*

திண்டுக்கல் சந்தையிலே — சம்மந்தி
தேங்காய்நீர் விற்றீரோ ?
வீதிதொறும் வந்தீரோ — உமக்கு
வெட்கமு மில்லையோதான் ?
மனைக்குமனை வந்தீரோ — உமக்கு
மானமு மில்லையோதான் ?

*மாப்பிள்ளையை ஏசல் :*

மெட்டு

தன்ன னனே னான னனே
னான னனே னான னனே
னான னன் னே னான னன்னே...ஏ.
னான னன்னே னான னன்னே
னான னன்னே னான னன்னே
ஜெய மங்களம்! நித்ய சுப மங்களம்

1. காசே கொடுத்த மின்னு
காசே கொடுத்த மின்னு
கதறாதே கதறாதே — நீ கொடுத்த
காசு எல்லாம் எங்கப்பன் போட்ட
காதணிக்கே காணாது (ஜெய)

2. பணமே கொடுத்த மின்னு
பணமே கொடுத்த மின்னு
பதறாதே பதறாதே — நீ கொடுத்த
பண மெல்லாம் நம்முடைய கல்யாணப்
பந்தலுக்கே பத்தாது (ஜெய)

3. வெத்திலை போல வல்லோ
வெத்திலை போல வல்லோ
வெந்த முகரருக்கு — எங்களுட
வேளா ளருவமிசம்
எப்படித்தான் வாய்த்ததுவோ (ஜெய)

4. பாக்குப் போல வல்லோ
பாக்குப் போல வல்லோ
படந்த முகரருக்கு—எங்க
பாண்டி யருவமிசம்
எப்படித்தான் வாய்த்ததுவோ (ஜெய)

5. சுண்ணாம்பு போல வல்லோ
சுண்ணாம்பு போல வல்லோ
சுருச்ச முகரருக்கு—எங்க
சூரி யருவமிசம்
எப்படித்தான் வாய்த்ததுவோ (ஜெய)

6. புகையிலை போல வல்லோ
புகையிலை போல வல்லோ
பொரிஞ்ச முகரருக்கு—எங்க
புண்ணி யருவமிசம்
எப்படித்தான் வாய்த்ததுவே (ஜெய)

7. அழிஞ்சி மாறு வெட்டி
அழிஞ்சி மாறு வெட்டி
அஞ்சு லட்சம் கூடை பின்னிக்
கூடை விற்றுக் கூலி கொள்ளும்
குறவர்மகன் நீங்க தானோ (ஜெய)

8. பருத்தி மாறு வெட்டிப்
பருத்தி மாறு வெட்டிப்
பத்து லட்சம் கூடை பின்னி
கூடை விற்றுக் கூலி கொள்ளும்
குறவர் மகன் நீங்க தானோ (ஜெய)

9. குருணை பொருக்கி மகன்
குருணை பொருக்கி மகன்
குதிரைமேல் வாரதென்ன — எங்க
காவலர் பெத்த கண்ணு
கால்நடையா வார தென்ன ? (ஜெய)

10. அரிசி பொருக்கி மகன்
அரிசி பொருக்கி மகன்
ஆனைமேல் வார தென்ன — எங்க
அருச்சனர் பெத்த கண்ணு
அடிநோக வார தென்ன ! (ஜெய)

11. குழந்தைகளைப் பெத்துக்
கொஞ்சி விளையாட
மக்களைப் பெத்து
மகிழ்ந்து விளையாடப்
பிள்ளைகளைப் பெத்துப்
பெருமை தனையடைய
நாலு பேத்துக் கிட்டே !
நல்ல வார்த்தை கேட்டுக்
கல்யாணப் பந்தலிலே
களப்பஞ்சம் நீங்கியிந்தப்
பந்தரிட்ட வாசலிலே
பரிந்துவிளை யாடிவர ! (ஜெய)

*

9



# தொழிற்பாட்டு

" இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே !
யந்திரங்கள் வகுத்திடுவீரே !
கரும்பைச் சாறு பிழிந்திடுவீரே !
கடலில் மூழ்கிநன் முத்தெடுப்பீரே !
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடுவீரே !
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே !
மண்ணெடுத்துக் குடங்கள் செய்வீரே !
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே !
உண்ணக் காய்கனி தந்திடுவீரே !
உழுது நன்செய் பயிரிடுவீரே !
எண்ணெய், பால் நெய் கொணர்ந்திடுவீரே !
இழையை நூற்றுநல் லாடை செய்வீரே !
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்
மேவிப் பார்மிசை காப்பவர் நீரே !:" —பாரதி

ஏழைகளுக்குக் கடவுள் சோறாகவும், ரொட்டியாகவுந் தான் தரிசனம் கொடுக்கிறார். இவற்றை யுண்டுபண்ணும் தொழிலாளிகள் பண்பிலே தெய்வமாய், பார்வையிலே பாட்டாளிகளாயிருக்கின்றனர்.

''உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை'' அதுவே எல்லாத் தொழில்களுக்கும் மேலானது ; மூலமானது.

உழவனின் உழவுகோலே தார்வேந்தனின் செங்கோலை, நடத்துங்கோல். விவசாயம் செவ்வனே நடைபெற்றால் நாட்டில் எந்தவிதக் குறைவுமிராது.

பருவமழை காலங்களில் நடக்கும் நாற்றரிப்பு, நடவு, களையெடுத்தல், கதிராறுத்தல், கதிர்சுமத்தல், கதிரடித்தல், முதலிய வேலைகளைச் செய்யும்பொழுது தொழிலாளர்கள் பாடிக்கொண்டே வேலையில் ஈடுபடுவார்கள். பாட்டு வேலையிலுள்ள சிரமத்தை மாற்றும்; வேலையின் வேகத்தை அதிகரிக்கும்; மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

(அ) நாற்றரிக்கும்போது பாடும் பாட்டு:

இஃது ஒரு மலையாளப் பாட்டு. நாட்டுப் பாடல்கள் எங்கும் ஒரேமாதிரியான கருத்தில், பாணியில் பாடப்படுகின்றன என்பதற்கு எடுத்துக் காட்டாக, இப்பாடல் இங்குத் தரப்படுகிறது. மேலும் ''கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமுந் துளுவும்'' தமிழ்த்தாயின் வயிற்றில் பிறந்தவை தானே!

மெட்டு

தானானே தன்னான தன்னா — தனத்
தானனே தன்னேனே தன்னா
மாரி மழைகள் சொரிஞ்சே — சிறு
வயலுகள் [1]ஒக்க நிறைஞ்சே
பூட்டி [2]ஒருக்கிப் [3]பாஞ்சே! — சிறு
நாற்று கட்டி எறிஞ்சே!
ஓமல சாந்திலே மால — சிறு
கண்ணம்மா காளி கருப்பி
சாத்தா சடைய மாராய — சிறு
மச்சிகளெல்லாரும் வந்து

1. ஒக்க - எல்லாம். 2. ஒருக்கி - ஒருமுறை.
3. பரஞ்சே - சொல்லி.

வந்து நிறஞ்சவா நின்றே—கெட்டி
[1]நாறெல்லாம் எண்ணிப் பகுத்தே
ஒப்பத்தில் நட்டிக் [2]கரேரான்—அவர்
குத்திக் கொடுத்துக் குனிஞ்சே.

(ஆ) *நடவு.* (மெட்டு: *இடதுபுறம் வள்ளி*)

நன்செய் நிலத்தை உழுது தொளிகலக்கிய பின், பரம் படித்துக் குழைமிதிப்பர். தொளி அமுகிச் சேறும் சகதியுமாக இருக்கும். நாற்றங்காலிலிருந்து நாற்றை வயலுக்குக் கொண்டுவந்து 'விளம்பி' விடுவார்கள்.

"சேறாடு கோலமொடு வீறுபெறத் தோன்றிச்
செங்கயல் நெடுங்கண் சின்மொழிக் கடைசியர்—"

மங்கலமாகக் குலவையிட்டுக் கொண்டு சேற்றில் இறங்கி நாற்று முடியை இடக்கையில் வைத்துக் கொண்டு, ஒவ்வொரு நாற்றாக வலக்கையில் எடுத்துச் சேற்றில் ஊன்றுவர். அப்பொழுது பாட்டு ஆரம்பமாகும் :

1. சம்பா விதைபோட்டுச்
சரியான நாத்து விட்டுப்
பம்பாயி சீலைக்காரி
பக்குவமா நட்டு வாடி !

2. மண்வெட்டி தோளிலிட்டு
மடைதிறக்கப் போறவரே
மடையைத் திறந்து விடு
மங்கையர்கள் நாத்து நட !

3. நாத்தரிச்சு நானறியேன்
நடவு நட்டுத் தானறியேன்
சேத்துக் குள்ளே நானிறங்கிச்
செல்ல முகம் வாடுறேனே ?

1. நாறெல்லாம் - நாற்றெல்லாம்.
2. கரேரான் - கரை யேறுவோம்.

4. நட்ட நடவிருக்க
நாலு பக்கம் தொளிகிடக்க
நாத்தரிக்கத் தெரியாமே
நடக்க லாமோ ரோட்டுவழி

5. உழுது தொளிகலக்கி
ஒண்ணு ரெண்டா நாத்தரிச்சு
பழுது படாமலிங்குப்
பக்குவமா நட்டு வாங்க

6. உள்ளான் உழுதுவர
ஊர்க்குருவி நாத்தரிக்க
நாரை பரம்படிக்க
நட்டு வாடி குட்டப் புள்ளை!

(இ) *களை யெடுப்பு. (மணித் தங்கமே மெட்டு)*

பயிர் வளர்கிறது. அத்துடன் களையும் வளர்கிறது. ஆண்களும் பெண்களும் களைகளைக் களைந்தெறியும் வேலையில் ஈடுபடுவர். வேலை பாட்டுடன் நடக்கிறது:

1. கானக் கரிசலிலே
களையெடுக்கும் பெண்மயிலே
நீலக் கருங்குயிலே
நிக்கட்டுமா போகட்டுமா?

2. ஒருநாள் ஒருபொழுது
உங்கமுகம் பாராமே
ஓடைக்கரை மண்ணெடுத்து
உருவாரம் செஞ்சுபார்த்தேன்!

3. படுத்தாப் பலநினைவு
பாய்நிறையுங் கண்ணீரு
உறக்கச் சடவிலேநான்
உலுப்பிவிட்டேன் கண்ணீரை!

4. ஈனாத நாருரிச்சி
எழிலான பூமுடிஞ்சு
செப்பிலே அடைச்சபூவை
சிந்திட்டையே வீதியிலே

5, பாலுவேண்டாம் தயிருவேண்டாம்
பழனிச்சம்பா நெல்லுவேண்டாம்
எருமைத் தயிருவேண்டாம்
ஏத்திவிடு கப்பலிலே !

6. ரெங்கூனுக்கே போரேனின்னு
தங்குமிடம் சொல்லிடாதே !
தங்கம்படும் பாதரவை
தந்தியிலே சொல்லிவிடு !

(ஈ) *ஏலமலை வேலை.*

*(மயிலாளே—குயிலாளே மெட்டு)*

கீழ் நாட்டில், அஃதாவது சமவெளிகளில் அடிக்கடி வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகிறது. மக்கள் குடி பெயர்ந்து வேலை கிடைக்கும் இடங்களைத் தேடியலைகின்றனர். இந்தக் காட்சி தமிழ் நாடெங்கும் சர்வ சாதாரணமானது. நெருக்கடி காரணமாக வாழ்க்கையின் கடைகோடிக்குத் தள்ளப்பட்டவர்களில் பலர் ஏலமலை வேலைகளுக்குச் செல்கிறார்கள். இங்கு அவர்கள் காப்பி, தேயிலை, ஏலத் தோட்டங்களில் வருட வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். நிலைமை படுமோசமானது. பாரதி ''கரும்புத் தோட்டத்திலே'' என்ற தமது பாடலில் அதை விரிவாக விளக்கியுள்ளார். அடிக்கடி நோய் வரும், குறைந்த கூலி, வயிறாரச் சாப்பிடவும் வழியிராது. வேலையோ கடினம். அட்டை, கூனவண்டு, அத்துடன் கங்காணியின் தொந்தரவு வேறு. பாட்டுகள் அந்த நிலையை ஒருவாறு விளக்குகின்றன:

1. உச்சிமலை கவ்வாத்து
உசந்தமலை களையெடுப்பு
தாழ்ந்தமலை பழமெடுப்பு
தலைநடுக்க மாகுதம்மா !

2. ஏலத் தடையேநீ
இரக்கமுள்ள, [1]செந்தட்டியே
[2]தட்டுப் பலாவேநீ
தயவுசெய்ய லாகாதோ ?

3. கொண்டைப் பிரம்பெடுத்துக்
கூலியாளை முன்னேவிட்டு
அண்டையிலே நிற்கிறாராம்
அருமையுள்ள கங்காணி !

4. தண்ணி கருத்திருச்சு
தவளைச்சத்தம் கேட்டிருச்சு
புள்ளை அழுதிருச்சு
புண்ணியரே வேலைவிடு !

5. கொல்லுகிறான் வேலையிலே
குறைக்கிறான் சம்பளத்தைக்
காணாமே ஓடிப்போனால்
கைவிலங்கை மாட்டுகிறான் !

6. அடியாதிங்க புடியாதிங்க
அநியாயம் செய்யாதிங்க
கங்காணி வந்ததுமே
கணக்கை முடிச்சிடுங்க !

---

1. செந்தட்டி 2. தட்டுப்பலா இவை விடமுள்ள செடிகள். உடம்பில் பட்டால் தினவு இருக்கும், வீங்கி விடும். மனித தயவு இல்லையாகையால், தாவரங்களாவது இரங்கித் தங்களுக்குத் தொல்லை கொடுக்காதிருக்க வேண்டுகின்றனர்.

## (2) கதிரறுப்புப் பாட்டுகள் (ஏலேலோ மெட்டு)

கதிரறுப்பு சுறுசுறுப்பான வேலை. இதில் பல ஆண்களும் பெண்களும் ஈடுபடுவர்: வரிசையாக வயலில் இறங்கி நிரை நிரையாக நின்று கதிரை அரிவாளால் கோதிச் சரக் சரக்கென்று அறுப்பர்: அரிவாளில் கட்டியிருக்கும் சலங்கைமணி சல சலக்கும் ; நிமிர்ந்து கதிரை வீசிப் பின்புறமாகச் சல் சல்லென்று போடுவர். வேலைக்கேற்ற மெட்டில் பாட்டுப் பாடுவர். வேலையில் அத்தனை கலை யழகிருக்கும்.

1. கோடைகாலக் கதிரறுப்பாம்
கொடிக்காலோரம் சேர்ந்தறுப்பாம்
நாளைநல்ல கதிரறுப்பாம்
நானும்வரக் கூடாதோ !

2. கண்ணாடி வளையல்போட்டுக்
கதிரறுக்கும் பெண்மயிலே
கண்ணாடி மின்னுதடி
கதிரறுப்புப் பிந்துதடி !

3. வெள்ளிப் பிடியருவா
விடலைப்புள்ளை கையருவா
சொல்லி அடிச்சருவா
சுழற்றுதடி நெற்கதிரை !

4. இரும்பிலே அடிச்சருவா
இருபுறமும் தந்தப்பிடி
கதிரறுக்கும் போதினிலே
கண்டோர் மயங்கிடுவார் !

5. கதிரறுத்துக் கிறுகிறுத்துக்
கண்ணிரண்டும் சோரப்போட்டுச்
சின்னக்கட்டுக் கட்டச்சொல்லிச்
சிமிட்டுறாளே மேல்விழியை !

6. நெல்லுநல்ல கதிரறுத்து
நேரம்பார்த்துக் கட்டுக்கட்டித்
தூக்கிவிடு கொத்தனாரே
தூரந்தொலை போறகட்டு !

7. நெல்லுநல்ல கதிரறுத்து
நெளிநெளியாக் கட்டுக்கட்டிக்
கட்டுகொண்டு போகையில்கண்
சிமிட்டுகிறாள் அத்தைமகள் !

8. கதிர்எடுத்து அடிக்கையிலே
கைவளையல் கலகலங்க
மரக்கா எடுக்கையிலே
மன்னர்மலைச் சிட்டாராம் !

9, ஏறினாராம் வண்டியிலே
இறங்கினாராம் சந்தையிலே
கைந்நிறையப் பணம்வாங்கிக்
கால்நடையா வந்திட்டாராம் !

*(உள) கதிர் சுமத்தல் (தந்தனைத்தானானே மெட்டு)*

அறுத்த கதிரைக் காயவிடுவதுமுண்டு. அதைப் 'பட்டரி' போடுதல். (அரி பட்டுப்போகச் செய்வதென்ற பொருள் போலும் !) பட்டரி போட்ட கதிரைக் காலையில் இளநேரத்தில் கட்டிவிடவேண்டும். இல்லா விட்டால் கதிரின் கொண்டைகள் முறிந்து, நெல் சேதமாகிவிடும். கதிரின் குலைகளை உட்புறமாக வைத்து, கட்டுகளுக்குக் கொண்டைவைத்து, வைக்கோல் புரியால் கட்டுக் கட்டுவர், நெற் கட்டுகளைத் தலையில் வைத்துக்கொண்டு ஆண்களும் பெண்களும் வரிசை யாக ஒருவர் பின் ஒருவராக ஓடுவர். தலையிலிருக்கும் கட்டு, கொண்டையை ஆட்டி ஆட்டிச் சல் சல் என்று மேலுங் கீழுமாகக் குதிப்பது போன்றிருக்கும். அத்துடன் உடுக்கை

அடித்துக்கொண்டு வழிநடைப் பாட்டொன்றைப் பாடிவிட்டால் அது வேலையாகவே தோன்றாது.

1. பூலா விளாறு வெட்டி — வள்ளிக்குப்
பூவாலே நாணேற்றி
எய்தாலும் எய்திடுவேன் — வள்ளிக்கு
எங்ஙனே பட்டிடுமோ (தந்தனை)

2. தோளிலே பட்டிமோ — வள்ளிக்கு
துச்சண மாகிடுமோ
துச்சணமாகி விட்டால் — உடனே
அச்சணம் நான் வருவேன் (தந்தனை)

3. நீளக் கயிறு போட்டு — வள்ளியவள்
நீரை யிறைக்கையிலே
அத்தை மகன்போல — வேலவர்
அவளோ டிறைக்கிறாராம்! (தந்தனை)

4. கஞ்சிக் கலையங்கொண்டு — வள்ளியவள்
காட்டுக்குப் போகையிலே
அத்தை மகன்போல — வேலவர்
அவளைத் தொடந்தாராம்! (தந்தனை)

5. சரவணப் பொய்கையிலே — ஆடை
தப்பித் தலைமுழுகி
மலையைநாம் சுற்றிவந்தால் — வேலவர்
வரங்கள் கொடுப்பாராம்! (தந்தனை)

6. சிரிச்சிடும் பல்வரிசை — வேலவர்
செந்தூரப் பொட்டழகர்
முறுக்கிய மீசையோடே — வேலவர்
முன்னோடி வாராரடி! (தந்தனை)

7. ஆண்டி யிருக்குமலை — வேலவர்
அழகாகக் கூடுமலை

தீர்த்தம் குதிக்கும்மலை — அன்பர்
தினமுஞ்சங் கூடும்மலை (தந்தனை)

8. சாவிட்டம் சோலையிலே — நீலமயில்
சார்ந்துமே கூவுதய்யா
காதிட்டுக் கேளுமய்யா — என்சாமி
கந்தனே வேல்முருகா ! (தந்தனை)

9. கந்தைத் துணியுடுத்தி — வேலவர்
காவடி தோளிலிட்டு
ஆயர்திருச் சோலையிலே—என்அப்பன்
ஆனந்தமாப் பாடுகிறானே! (தந்தனை)

(எ) *பொலிப் பாட்டு :*

அறுவடையான கதிர் களம் வந்து சேர்ந்தவுடன், கதிரைத் தலையடி அடிப்பர். அடித்த தாளைப் போராக அடித்துத் தலைக்கூட்டிவிடுவர். சில தினங்களானதும், முதலில் அடித்துச் சூடேற்றி வைத்திருக்கும் (படப்பாகப் போட்டிருக்கும்) போரை (வைக்கோலை)ப் படங்காகப் பரப்பிப் போட்டுச் சூடடிப்பார்கள். மாடுகளைத் தாம்புக் கண்ணியில் பூட்டி, தாம்பு (பிணையல்) அடிப்பார்கள். படப்பை இழுத்துப் படங்கு போடுதல், தாம்பு பத்துதல் (ஓட்டுதல்) சுற்றைப் பிடுங்கிப் போடுதல், தொடுவைக் கம்பால் வைக்கோலை உதறுதல், மறுபடங்கு போடுதல், நெல்லைக் குவித்தல், வைக்கோலைக் காயப்போட்டு அடைதல் போன்ற வேலைகள் ஒரே சமயத்தில் நடந்து கொண்டிருக்கும்.

இச் சமயம் வள்ளுவர் வருவார். அவருடைய தோளில் கறுப்புக் கம்பளி அழகுபெற விளங்கும். அவர் பொலிப்பாட்டுப் பாடுவார். அது வசனகவியாகவிருக்கும். பாட்டில் கிரேதா, திரேதா துவாபரயுகங்கள் தோன்றி மறைந்த விபரமும் கலியுகம் பிறந்த வரலாறுமிருக்கும். அவர் விவரிக்கும்

பிரளயம் பைபிள் பழைய ஏற்பாட்டில் கூறப்படும் நோவாவின் பெருவெள்ள விபரம் போன்றேயிருக்கிறது. நோவாவிற்குப் பதிலாகப் பிரளயத்தில் தப்பியவரின் பெயர் வள்ளுவர் எனக் கூறப்படுகிறது. பிரளயத்திற்குப்பின் உலகம் தோன்றுகிறது. தோன்றிய உலகம் தழைக்க, தேவலோக வாகனங்களாக விருந்த கன்று காலிகளையும், நெல்லையும் பூவுலகிற்குக் கொண்டு வந்தனர். அதை மனிதன் நிலத்திலிட, ஒன்று, பத்து நூறு ஆயிரமாக விளைந்தது. பூவுலகில் மகிழ்ச்சி பொங்கிற்று. "எங்கும் மங்களம் உண்டாகட்டும்! பொலி வளரட்டும்!" என்று பாடல்கள் முடியும். அதிலிருந்து சில வரிகள் கீழே தரப்பட்டுள்ளன :

பொலி வளர பொலி வளர
பொலியான பொலி பொலி
பொலிமேலே பொலி வளர்ந்திருக்கணும் !

*விநாயகர் துதி*

புத்தடி விநாயகனே புத்தி மிகத்தாரும் !
வித்தடி விநாயகனே வித்தை மிகத்தாரும் !
ஆலடிப் பிள்ளையாரே அரசடி விநாயகரே !
வேலடிப் பிள்ளையாரே வேண்டும் அடியேனை
விக்கினங்கள் வாராது விரும்பியே காத்தருளும் !

*உலகம் உண்டானது*

பரத்தில் பரந் தோன்றிச்
சக்தியில் நாதந் தோன்றி
நாதத்தில் விந்து தோன்றி
விந்துவில் விகாசம் தோன்றி
சுக்கில சுரோணிதத்தால்
பறக்கப்பட்டது பன்னீராயிரம்
ஊரப்பட்டது ஒன்பதினாயிரம்
எறும்புகடை எண்ணாயிரத்திற்கும்
பார்வதி பரமசிவன் படியளந்தார்...

*தேவலோகத்திலிருந்து வந்த நெல் வகை*

இன்பச் சம்பா—கம்பஞ் சம்பா
காடைக் குளத்தான்—கன்னாடி பூத்தான்
ஈக்கி நட்டான்—இலங்கை யழிச்சான்
இஞ்சன் சம்பா—பெஞ்சன் சம்பா
ஈக்கிச் சம்பா—ஆவிரம் பூச் சம்பா
கட்டை வெள்ளை—குட்டை வெள்ளை

இவைகளுக்கு மூக்குகளைக் குத்திச் சூல வண்டியி லேற்றி பூலோகத்திற்குக் கொண்டு வந்து, காப்புக் கம்பளம் காராளர் வம்மிசம், எட்டுத் தொட்டியம், குடியான வமிசத்தவர் களிடம் கொடுக்க, அவர்கள் என்ளு ஏழு வீச்சாகவும் நெல்லை ஒரே வீச்சாகவும் விதைத்தனர்.

*பயிர் வளர்தல்*

ஒண்ணாம் திங்களில் ஒரு முளைவிட்டு
இரண்டாம் திங்களில் இரு முளைவிட்டு
மூன்றாம் திங்களில் மூன்று முளைவிட்டு
நாலாம் திங்களில் நாகபாக மாகி
அஞ்சாம் திங்களில் பஞ்சும் கதிருமாகி
ஆறாம் திங்களில் அறுத்தே அடிக்க
பொலிக்கு ஐயாயிரக் கலமானது

அதைப் பூதங்கள் கவர வந்தன! மகாவிஷ்ணுவின் அருளால் அவை தடுக்கப்பட்டன.

பொலி பொலி பொலி
பொலி மேலே பொலி வளர!

எனப் பல மணி நேரம் பாடி முடிப்பார். இதைக் கோரோசனை யுள்ள மாடுகள் கண்ணீர் விட்டுக் கேட்கும்; இதைப் பாடினால் தானியப் பொலிவு (அளவு) அதிகரிக்கும்; மனிதருக்கும் கன்று

காலிகளுக்கும் நோய் நொடி யணுகாது எனக் கிராமத்தார் நம்புகின்றனர்.

### (ஏ) *வண்டி அடித்தல் :*

*களத்திலே அடித்துப் பொலிதூற்றிய நெல்மணிகளை* வண்டியிலேற்றி வீட்டுக்கு எடுத்து வந்து களஞ்சியத்தில் சேர்ப்பார்கள் விவசாயிகள். ஆனால் தானியம் வெகு நாளைக்கு அவர்கள் கையில் இராது. இது பணத்திற்கு மதிப்புக் கொடுக்கும் காலமல்லவா? எதற்கெடுத்தாலும் பணம் வேண்டும். அதற்காகத் தங்களுக்குக் கிடைத்த தானியங்களை வண்டிகளிலேற்றி விற்பதற்காகத் தூரத்திலுள்ள சந்தைகளுக்கும் நகரங்களுக்கும் விவசாயிகள் கொண்டு செல்வர். மதுரை மாவட்டத்தில், தேனி, திண்டுக்கல், மதுரை நகர் போன்ற இடங்களில் வாரமொருமுறை பெரிய சந்தைகள் கூடும். அறுவடைக் காலங்களில் தானிய மூடைகளை ஏற்றிய வண்டிகள் நூற்றுக்கணக்காகக் கிராமங்களிலிருந்து மேற்கூறிய நகரங்களுக்குப் பெரும் பாதைகளில் சென்றுகொண்டிருப்பதைச் சந்தை நாட்களில் காணலாம். நெடுந்தூரமுள்ள கிராமங்களிலிருந்து வருபவர்கள் சந்தை நாட்களுக்கு முந்திய நாள் இரவிலேயே தம் வண்டிகளைப் பூட்டி, இரவெல்லாம் பிரயாணம் செய்வர். "*வண்டியலங்காரமாம், வலத்துமாடு சிங்காரமாம்,*" என்றபடி, கூட்டு வண்டிகள் பார்ப்பதற்கு அழகாகவும் மாடுகள் செய்து வைத்த வாகனங்கள் போல் சிங்காரமாகவுமிருக்கும். அவற்றின் கொம்புகளைக் கும்பகோணத்துக் குப்பிகள் அலங்காரம் செய்யும்; கழுத்தில் திருநெல்வேலி மணிகள் 'ஜல்ஜல்' லெனச் சத்தமிடும்! வண்டிகள் 'கடக் கடக்' கென்று, ஒன்றன் பின் ஒன்றாக இரவெல்லாம் ஊர்ந்து சென்று கொண்டே யிருக்கும். வண்டிக் காரர்களும், மாடுகளும் இரவெல்லாம் தூங்காது வேலையில் ஈடுபட வேண்டும்' சுலபமான வழி யென்ன? முன்செல்லும் வண்டிக்காரரும் பின்தொடரும் வண்டிக் காரரும் ஒரு பாட்டுப்

போட்டியை ஆரம்பிப்பர். அதில் வெகுளி ஏற்படும் வகையில் கேலியும் ஏசலும் கலந்திருக்கும். மாடுகள் பாட்டை ரசித்துக் கொண்டே சிரக்கம்பம் செய்துகொண்டு நடைபோடும். முன் வண்டிக்காரர் நீட்டிச் சவுக்கமாக,

**அடடடா தன்ன னன்னே னானே னன்னே**
**னானே னன்னே னானே னன்னே ஏ...**

என்று பாட்டை ஆரம்பிப்பார். பின் வண்டிக்காரர் எதிர் பாட்டுப் பாடுவார். இடையிடையே பாட்டின் மெட்டையும் பாடிக்கொள்வர். மாட்டையும் ''ஏ கேய்'' என்று தூண்டிக் கொள்வர்.

*வண்டிக்காரன் பாட்டு:*

முன் வண்டிக்காரர் :

பாட்டுப் படி நாயே !
பரணு மேலே ஏறு நாயே !
ஏறி இறங்கு நாயே
ஏதுங் கெட்ட மூளி நாயே !

பின்வண்டிக்காரர் :

பாட்டுக்குப் பாட்டெடுப்பேன் !
பாட்டனாரைத் தோற்கடிப்பேன் !
எட்டாத பாட்டை யெல்லாம்
ஏணிவச்சு நான் படிப்பேன்.

மு. வ : மாடு ரெண்டும் மதுரை வெள்ளை
மணிகள்ரெண்டும் திருநெல்வேலி
குப்பி ரெண்டும் கும்பகோணம்
குலுங்குதடி ரோட்டுவழி !

பி. வ : அச்சு முறிஞ்ச வண்டி
ஆரக்காலு போனவண்டி
பட்டாத் தெரிச்ச வண்டி
பாதையிலே போகுதடி

மு. வ : கடலை புடிச்சவண்டி
கம்பத் துக்கே போனவண்டி
எள்ளுப் புடிச்ச வண்டி
எதுக்க வரக்காணிங் களோ !

பி. வ : வண்டி யலங்காரமாம்
வலத்து மாடு சிங்காரமாம் !
ஏறாத மேட்டுக் கெல்லாம் நீ
என்ன சொல்லி ஓட்டப் போறே !

மு. வ : கூடார வண்டிகட்டிக்
குயிலாளைத் தூக்கிவச்சு
மாடி ழுக்க மாட்டாமே
தானிழுத்துச் சாகிறானே !

பி. வ : வண்டி விறகிருக்க
வயல்விளைஞ்ச நெல்லிருக்க
தின்னிருக்க மாட்டாமே
தேசவழி ஏண்டா போறே !

மு. வ : உப்புப் புடிச்ச வண்டி
உடுமலை போற வண்டி
உப்பு விலை யாகட்டடி
உயர்ந்த சரம் பண்ணித் தாறேன் !

பி. வ : பாக்குப் புடிச்ச வண்டி
பாலக்காடு போற வண்டி
பாக்கு விலை யாகட்டடி
பாதசரம் பண்ணித் தாறேன் !

மு. வ : கொள்ளுப் புடிச்ச வண்டி
கோயமுத்தூர் போற வண்டி
கொள்ளு விலை யாகட்டடி
குவளைச் சரம் பண்ணித் தாறேன் !

பி. வ : நெல்லுப் புடிச்ச வண்டி
நெடுந்தூரம் போற வண்டி
நெல்லு விலை யாகட்டடி
நெல்லிச் சரம் பண்ணித் தாறேன் !

இவ்வாறாகப் பாட்டுகள் ஆற்று வெள்ளம்போல் பெருக்கெடுத்து வந்து கொண்டேயிருக்கும். இரவு கூட நிசப்தமாகப் பாட்டைக் கேட்டு ஆனந்திக்கும். சாலை மரங்கள் தொட்டிலில் இட்ட குழந்தைகளே போன்று, பாட்டில் சொக்கித் தூங்குவனபோல் காட்சியளிக்கும்! மாடுகள் பாட்டில் லயித்துவிட்டவைபோன்று மெதுவாக நடக்கும். வண்டிக்காரர் ஒரு கணம் பாட்டை நிறுத்தி ''ஏகேய்'' என்று மாடுகளைத் தூண்டுவார். இவ்வாறு இரவு கழியப் பொழுது விடியுமளவில் சந்தை நகரம் வந்துவிடும் !

இக்காட்சி ''சிந்திப்பார்க்குக் களிப்புமிக்க ஆனந்தக் கனவு பல காட்டு'' வதாகவும், பாட்டுகள் செவிக்கொரு விருந்தாகவும் அமையும்.

*(ஐ) சாந்திடித்தல் :*

உணவு, உடை, உறைவிடம் இம்மூன்றும் வாழ்க்கையின் இன்றியமையாத தேவைகள். கிராமங்கள் இவைகளைத் தாங்களே யுண்டுபண்ணிக்கொண்டு தன்னிறைவு பெற்றுச் சுதந்திரமாக இருக்க இயலும்! விவசாயம் உணவுக்கான பொருள்களையும்உடைக்கான மூலப் பொருள்களையும் தரும். அவற்றைக்கொண்டு உணவுசமைப்பதையும் துணிநெய்யுந் தொழிலையும் வீட்டுக்குவீடுநடைபெறச் செய்யலாம். அதே

போல், கிராமத்தில்கிடைக்கும்பொருள்களைக் கொண்டு எளிய முறையில் வீடு கட்டலாம் ;கட்டுகிறார்கள். வீடு கட்டுவதில் சுண்ணமிடிப்பது ஒரு கலை நிறைந்த வேலை. பாரதியார் தம் குயில் பாட்டில் ''நாட்டினிலுங் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும் பாட்டி''னைப் பற்றிக் குறிப்பிடும்போது சுண்ணமிடிப்பவர் தம்சுவை மிகுந்த பண்களைப் பற்றிக்கூறு கிறார்.

சுண்ணம் இடிப்பவர்களின் பாட்டுகளில் சுவையிருப்ப தோடு, தொழில் செய்யும் முறையில் அழகும், வேலை செய்பவர் களிடையே ஆனந்தமும் இருப்பதைக் காணலாம். இவ் வேலையில் பெண்களே முக்கிய பங்குகொள்வர். கையில் கப்பிக் கட்டையை எடுத்துச் சுண்ணாம்பைக் குத்துவர்: அது கல கலவெனத் தாளம் போடும்; பெண்களின் கைவளை யல்கள் குலுங்கும் ; மூக்குத்தி மினு மினுவெனப் பிரகாசிக்கும்; முகத்தில் புன்னகை பொங்கும்; பாதசரம் சல சலவென் றொலிக்கும்; பாட்டு வேலைக்கு விமர்சனம் கூறும்; ஆட்டத் துடனும், பாட்டுடனும், வேலை வெகு வேகமாக ஓடும்.

மெட்டு :

தன்னே னானே னானே னன்னே
னானே னன்னே — ஆமா சொல்லு
தானானே னானே னன்னே னானானே —
அப்படிச் சொல்லு

முன் பாட்டு

மூக்குத்தி தன்னே னானே மினு மினுங்க
முகமெல்லாம் தன்னே னானே சோதி மின்ன !
(பின் பாட்டு தன்னே னானே)

மு. பா : சாந்திடிக்கத் தன்னே னானே சருகுதிர
சாந்து மேலே தன்னே னானே பூவுதிர !
(பி. பா. தன்னே)

மு. பா: பூ வெடுத்துத் தன்னே னானே பிரியமுடன்
பூசைசெய்யும் தன்னே னானே அம்மாளுக்கு !
(பி. பா.)

மு. பா: கப்பிக் கட்டை தன்னே னானே கல கலங்க
கை வளையல் தன்னே னானே சோதி மின்ன !
(பி. பா.)

மு. பா: காட்டோரம் தன்னே னானே இருப்பாளவ
காட்டு நாச்சி தன்னே னானே அம்மாளவ
(பி. பா.)

மு. பா: காட்டு நாச்சி தன்னே னானே அம்மாளுக்குக்
காயாம் பூ தன்னே னானே வண்ணமதாம் !
(பி. பா.)

மு. பா: பாத சரம் தன்னே னானே சரசரங்க
பக்கமெல்லாம் தன்னே னானே சோதி மின்ன !
(பி. பா.)

மு. பா: செடி யோரம் தன்னே னானே இருப்பாளவ
தேனாச்சி தன்னே னானே அம்மாளவ !
(பி. பா.)

மு. பா: தேனாச்சி தன்னே னானே அம்மாளுக்குச்
செவந்திப்பூ தன்னே னானே மாலைகளாம்!
(பின் பாட்டு யாவரும்)

(ஒ) *கல் தூக்கும் வேலை :*

வீடு கட்டும் வேலையின்போது சுண்ணம் இடிக்கும் பெண்களின் பாடல்களைப் பற்றிப் பார்த்தோம். வீடு கட்ட உதவும் கல் தூண்கள், பட்டியல்கள், உத்தரம், இரும்பு விட்டங்கள், இரும்புத் தூண்கள் போன்ற வற்றைத் தூக்கும் வேலை, நிலை நிறுத்தும் வேலைகளை ஆண்கள் செய்வார்கள். மதுரை, தஞ்சாவூர்க் கோவில்களைக் கட்ட மிகப் பெரிய கற்களையும்,

தூண்களையும் உபயோகித்துள்ளனர். தஞ்சாவூர்ப் பெரிய கோவில் கோபுரத்தின் உச்சியில் வேலைப்பாடமைந்த பத்துடன் எடையுள்ள கல்லை ஏற்றி வைத்துள்ளனர். அதை எப்படி ஏற்றினரோ, ஏற்றும்போது எப்படிப் பாடினரோ? அஃது ஓர் அதிசயப்படக்கூடிய செய்தி. ஐந்து மைல் தொலைவிலிருந்து சாய்வாக மண் மேடு போட்டு, சாரங்கட்டி, சன்னை போட்டுக் கல்லை மெதுவாக மேலே கொண்டு சென்றிருக்கிறார்கள்.

இவ்வேலையைச் செய்யும் ஆட்களை 'நிமிர்ந்த ஆள்' என்றழைக்கிறார்கள். இவர்களுக்குக் கீழ் ''சித்தாள்'' என்ற உழைப்பாளர்களும் இருக்கிறார்கள். கிராமங்களிலிருந்து மதுரைமா நகரத்தில் பல பாதைகள் கூடுமிடங்களில் அவர்கள் கூட்டமாக நின்று கொண்டிருப்பதை இன்றுங் காணலாம். ஐந்து அல்லது பத்துப் பேர்களாகச் சேர்ந்துகொண்டு பெரிய பாரங்களைத் தூக்கும் வேலையில் ஈடுபடுவர். உருளைக் கட்டை, கடப்பாரைகளின் உதவி கொண்டு, ஓரிடத்திலிருக்கும் கற்களையோ, தூண்களையோ மற்றோரிடத்திற்கு நகர்த்திச் செல்லுவர். பின்பு, கடப்பாரை கயிறுகளின் உதவி கொண்டு, கையால் பிடித்தும், தோளால் தாங்கியும், தலையால் முட்டியும் 'பிடிபிடி' என்று ஒரே மூச்சில் பெருந்தூண்களை நிமிர்த்தி நிறுத்துவர். வேலை கடினமானது வேலை செய்யும்போது அலுப்புத் தோணாதிருக்க ஒருவர் முன்னால் பாடுவார், மற்றவர்கள் பின்னால் 'ஐஏல்' அல்லது 'ஐலசா' என்று சேர்ந்து ராகம் போட்டுக் கொண்டு மூச்சையடக்கித் தள்ளுவர்:

| | | |
|---|---|---|
| அனந்த | சயனா ! | — ஐ ஏல் |
| ஆதி | நாராயணா ! | — ஐ ஏல் |
| கரந்தபால் | வெண்ணெயுண்ட | — ஐ ஏல் |
| காகுத்தா | ராமா ! | — ஐ ஏல் |
| சீதா | ராமா ! | — ஐ ஏல் |

| | | |
|---|---|---|
| தேனுண்ட | வாயா ! | — ஐ ஏல் |
| திரைகடல் | முன்கடைந்தாய் ! | — ஐ ஏல் |
| பூதரா | பொற்பாதா ! | — ஐ ஏல் |
| புவியுண் | டுமிழ்ந்தவா ! | —ஐ ஏல் |
| புவியளந்து | மாவலிக்கு | —ஐ ஏல் |
| தீதறும் வாழ்வு | தந்தே | — ஐ ஏல் |
| என்றும் | அழியாத | — ஐ ஏல் |
| சிரஞ்சீவி | யாகவைத்தாய் ! | —ஐ ஏல் |
| பாதக | மானதெல்லாம் | —ஐ ஏல் |
| தீர்த்துப் | புவியினில் | — ஐ ஏல் |
| பஞ்சவரைக் | காத்தாய் ! | — ஐ ஏல் |
| ஆதரவாய் | எங்களையும் | — ஐ ஏல் |
| காத்தருள | வேணுமய்யா ! | — ஐ ஏல் |

கூடுரா அம்பன் — பிடி — பிடி — விடாதடா
ஐலசா—ஐ ஏல் ! ஐ ஏல் ! ஐ ஏல் !

*மேலும் சில அடிகள் :*

| | | |
|---|---|---|
| திருவே | செழுஞ்சுடரே ! | — ஐலசா ! |
| தேவாதி | தேவா ! | — ஐலசா |
| திருமூவர் | முதல்வா ! | — ஐலசா |
| பருவரையைத் | தூக்கிமுன்னம் | — ஐலசா |
| ஆயர்களைக் | காப்பதுக்கு | — ஐலசா |
| பட்சமுடன் | தாங்கிநின்றாய் | — ஐலசா |
| கரியழைக்க | வந்துநின்று | — ஐலசா |
| முதலையை | வென்றுமல்லோ | — ஐலசா |
| கரிக்குமுக்தி | யுங்கொடுத்தாய் ! | — ஐலசா |
| அறிய மறுத்த | பொல்லா | —ஐலசா |
| இரணியா | சூரனைத்தான் | — ஐலசா |
| அங்கம் | பிளந்திட்டாய் | — ஐலசா ! |
| வராக | மாகவந்து | — ஐலசா |
| இரணியன் | தம்பிதன்னை | — ஐலசா |

| | | |
|---|---|---|
| மார்பைப்பிளந் | தெறிந்தாய் ! | — ஐலசா |
| சிறக்கவே | கூர்மமதாய் | — ஐலசா |
| அமிர்தந் | தனைக்கடைந்து | — ஐலசா |
| தேவருக்கு | முன்னளித்தாய் ! | — ஐலசா |
| மச்சாவ | தாரமுற்று | — ஐலசா |
| சோமுகா | சூரனை | — ஐலசா |
| வதைத்தே | உயிர்மாய்த்தாய் ! | — ஐலசா |
| இச்சையுடன் | மாவலியால் | — ஐலசா |
| வாமன | னாகவந்து | — ஐலசா |
| மூன்றடிமண் | கேட்டுவாங்கி | — ஐலசா |
| நீண்ட பெரு | வடிவமதை | — ஐலசா |
| எடுத்தே | உலகளந்தாய் | — ஐலசா |
| பலராம வடிவு | கொண்டாய் ! | — ஐலசா |
| சவுரியங்கள் | பேசிவந்த | — ஐலசா |
| பரசுராமன் | தன்னுடைய | — ஐலசா |
| வில்லைவளைத் | தம்பெய்தாய் ! | — ஐலசா |
| மோகினிப் பெண் | ரூபமுற்று | — ஐலசா |
| பத்மா | சூரனைத்தான் | — ஐலசா |
| முடித்தேஉயிர் | மாய்த்தாய் ! | — ஐலசா |
| மேகநிறங் | கொண்டாய் | — ஐலசா |
| அரிராமா | வென்றுசொலும் | — ஐலசா |
| வித்தகரை | ஆதரிப்ப ! | — ஐலசா |
| கல்கி அவ | தாரமுடன் | — ஐலசா |
| போர்புரிந்து | வீர சூரன் | — ஐலசா |
| கலங்கிவிழ | நீமடித்தாய் | — ஐலசா |
| முக்கியமாய் | மூவுலகும் | — ஐலசா |
| அங்கெங்கு | மாகிநிற்கும் | — ஐலசா |
| முகுந்தா அடி | பணிந்தோம் ! | — ஐலசா |
| ராமாவ | தாரமுற்று | — ஐலசா |
| தென்னிலங்கை | யாண்டுவந்த | — ஐலசா |
| ராவணனைச் | சங்கரித்தாய் | — ஐலசா |
| கோமனையில் | தேவகிக்கு | — ஐலசா |

| | | |
|---|---|---|
| தவத்தை | நிறைவேற்ற | ஜலசா |
| குழந்தையாய் | அவதரித்தாய் | ஜலசா |
| எள்ளளவாய் | நின்றகண்ணா | ஜலசா |
| எங்களுக்கு | நீயே துணை ! | ஜலசா |
| நல்லோர் | துணை முகுந்தா | ஜலசா |
| அனந்தன்மீ | தாடும்பாதா | ஜலசா |
| நாரணா | பூரணனே | ஜலசா |

புடிடா அப்பன் விடாதடா''

எனக் கூறி, முடித்தனர். பாட்டுக்களைச் சொல்லிவந்தவரை அணுகி, ''இதெல்லாம் எங்கு படித்தீர்கள் ?'' என்றேன். ''எனக்குப் படிக்கத் தெரியாது ! இதெல்லாம் மன உத்தியாச் சொல்லவேண்டியது தானே ! '' என்றார். என்னுள்ளத்திலிருந்த படித்தவன் என்ற மமதை வெட்கித் தலை குனிந்தது !

*(ஓ)ஏற்றம் இறைத்தல் :*

ஆற்றுப் பாசனமோ, குளத்துப் பாசனமோ இல்லாத இடங்களில் ஏற்றங்கள் மிகுதியாகவுண்டு. ஏற்றங்கள் இருவகைப்படும். ஒன்று ''கைத்திலா''—ஒருவர் மாத்திரம் இறைக்கும் ஒற்றை ஆள் ஏற்றம். இதில் பாட்டிருக்காது. இதனை ''ஊமைத்திலா'' என்று கூடச் சிலர் சொல்லுகின்றனர். மற்றொன்று ''ஆளேறும்திலா.'' இதில் ஒருவர் சால்பிடித்து இறைப்பார். மூவர் மேலேயுள்ள மிதி மரத்தில் மேலும் கீழும் ஓடுவர்.

சாதாரணமாக, ஆழமாக அகலமாகக் கிணற்றை வெட்டி, கபிலை போட்டு மாடுகளைக்கட்டி இறைப்பதற்குப் போதிய முதலீடு இல்லாதவர்களும், நிலம் பரந்த அளவில் இல்லாதவர்களுமே ஏற்றம்போட்டு இறைக்கிறார்கள். பெரும்பாலும், சொந்த நிலமின்றிக் குத்தகைக்குப் பிடித்த நிலத்தில், அதிக முதலீடு இல்லாமல் வேலை செய்யும் சிரமமான நிலையிலுள்ள

ஏழை உழைப்பாளிகளே ஏற்றம் இறைத்து விவசாயம் செய்வதைக் காணலாம். அவர்களில் பலர் வெற்றிலைக் கொடிக்கால் உண்டுபண்ணுகின்றனர்.

சமீபத்தில் அவர்களைக் கண்டு பேசும் வாய்ப்புக்கிட்டியது. மதுரை நகருக்கு வெளிப்புறத்தில் ஒரு வெற்றிலைக்கால் பக்கத்தில் ஒரு வட்டக் கிணறும், ஏற்றமும் இருந்தன. அவற்றையடுத்து நான்கு நபர்கள் நின்றுகொண்டிருந் தார்கள். அவர்களிடம் நாங்கள் கேட்ட கேள்விகளும் கிடைத்த பதிலும் வருமாறு :

**கேள்வி :** உங்களுக்கு இந்த ஊர்தானா ?

**பதில் :** இல்லை, இல்லை ; எங்க ஊரு பட்டித்தேவன் பட்டி. அவனுக்கு ஏழுமலை. இந்த ஊருக்கு வந்து ரெண்டு வருஷ மாச்சு !

**கே :** ஏன் ஊரை விட்டு இங்கே வந்தீர்கள் ?

**ப :** அந்தக் கொடுமையை ஏன் கேக்கிறகே ! வருண பகவான் வயித்திலே அடிச்சு, ஊரைவிட்டே வெரட்டியிருச்சுங்க ! இங்கே குத்தகைக்குக் கொடிக் கால் போடுகிறோம்.

**கே :** அட பாவமே !...கொடிக்காலுக்குக் குத்தகை எவ்வளவு ?

**ப :** சென்டுக்கு ஆறு ரூபாய்ங்க ; கொடிக்கால் அழியிர வரைக்கும்.

**கே :** கொடிக்கால் எப்ப அழியும் ?

**ப :** முதிகாலாகி அழிய மூணு வருசமாகும்.

**கே :** முதிகால் என்றால் என்ன ?

**ப :** கொடிக்கா போட்டு மூணு மாத வரைக்கும், அதுசடைக் கால் ; ஆறு மாசம் ஆச்சிண்ணா அப்ப இளங்கால் ஒண்ணரை வருஷமாகிறபோது பயிர்க்கால் ; பிறகு

அழியப்போகும்போது முதிகால்; அழிஞ்ச கொடிக் காலுக்கு வெட்டுக் கட்டேன்னு வோம்!

கே: உங்களுக்கு என்ன கூலி கிடைக்கும்?

ப: சாமி! அது பெரிய வயித்தெரிச்சலுங்க! வெத்திலை விலையைச் சித்திரத்திலே எழுதாதே இன்னு சொல்லி யிருக்கிங்க! வெத்திலை இன்னிக்கு ஒருவிலை, நாளைக்கு ஒரு விலையா விக்கிது! வயித்தைக் கழுவிக்கிட்டு, குத்தகை கட்றதே பெரும்பாடா இருக்குதுங்க! என்ன பாவம் செய்தோமோ (ஏற்றத்தைச் சுட்டிக்காட்டிக் கொண்டு) இந்தப் பட்டமரத்தைப் பிடிச்சுக்கிட்டுத் தொங்குகிறோம்.

கே: ஐயா! நாங்க வெகு தூரத்திலிருந்து வந்திருக்கோம்; நான் ஒரு வாத்தியார். உங்க பாட்டைக் கேட்டு எழுதிக்கொண்டு போய்ப் பள்ளிப் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்க நினைக்கிறோம்.

ப: பாட்டு இப்ப யாரு சாமி பாடுறா? பழைய நாளையிலே எப்படி யெல்லாமோ படிச்சாக. எங்கே பார்த்தாலும் அப்பத் 'திலா' இருந்திச்சு! இப்பத்தான் 'மிஷின் தண்ணி' பாயுதே. எங்களுக்குப் பாடவாரது சாமி

கே: அப்படிச் சொல்லக் கூடாதய்யா! நாங்க இதுக்காகவே வந்திருக்கோம். உங்களுக்குத் தெரிஞ்சது ஏதாவது ரெண்டு சொல்லுங்க!

ப: ராமு! நீதான் ரெண்டு சொல்லப்பா!

ராமு: பாட்டுச் சும்மா எப்படி வரும்? சாலைப் புடிச்சா ஏதோ ரெண்டு புலம்பலாம்!

ராமு சாலைப்பிடித்து இறைக்க ஆரம்பித்தார். மற்ற மூவரும், மிதி மரத்தில் ஏறிப் பக்கத்தில் நடப்பட்டிருந்தகைப்

பிடிகளைப் பிடித்துக்கொண்டு, மேலும் கீழுமாக ஓடஆரம்பித்தனர். ராமு சாலில் தண்ணீரை மொண்டு, சற்று நிமிந்தார். சற்றுத் தயங்கினார். சால் மேலே எழும்பவில்லை போலும். ''போ பின்னத்தியாள்'' என்று கத்தினார். ஏற்றத்தின் மேல் நிற்பவர்களில் பின் நின்றவர், மிதி மரத்தின் அடிப் பாகத்திற்குச் சென்று விட்டார். நீர் நிறைந்தசால் ''குபக்'' கென்று மேலே வந்தது. சாலிலுள்ள தண்ணீரை ராமு கீழே கொட்டிக் கொண்டே பாட்டின் ஓர் அடியைப் பாடினார்; அடிப்படியே பாட்டுத் தொடர்ந்தது:

| | |
|---|---|
| ஆண்டவனே | ராமு! |
| ஆதரிக்க | வேணும்! |
| உடனேயே | வாரும்! |
| மூணுடனே | வாரும்! |
| நாலுடனே | வாரும்! (இப்படி எட்டுவரை) |
| ராமா | கோவிந்தா! |
| ராமா | கோவிந்தா! |
| ஒண்ணு | கோவிந்தா! |
| உடையவனே | தஞ்சம்! |
| ரெண்டே | கோவிந்தா! |
| ரெகு ராமா | தஞ்சம்! |
| மூணே கோவிந்தம் | முனியாண்டி தஞ்சம் |
| முனியாண்டி தஞ்சம் | நாலே கோவிந்தம்! |
| நாலே கோவிந்தம் | நாராயணா் தஞ்சம்! |
| நாராயணா் தஞ்சம் | அஞ்சே கோவிந்தம்! |
| அஞ்சே கோவிந்தம் | அய்யனாரே தஞ்சம்! |
| அய்யனாரே தஞ்சம் | ஆறே கோவிந்தம்! |
| ஆறே கோவிந்தம் | ஆறு முகவேலு |
| ஆறு முகவேலு | ஏழே கோவிந்தம்! |
| ஏழே கோவிந்தம் | எழுதினவன் தஞ்சம் |
| எழுதினவன் தஞ்சம் | எட்டே கோவிந்தம்! |
| எட்டே கோவிந்தம் | எம்பெருமான் தஞ்சம்! |

எம்பெருமான் தஞ்சம் ஒன்பதே கோவிந்தம் !
ஒன்பதே கோவிந்தம் உமையவளே தஞ்சம் !
உமையவளே தாயே பத்தே கோவிந்தம் !
பத்தே கோவிந்தம் பார்வதியே தஞ்சம்.

இவ்வாறாகப் பாட்டுகள் தஞ்சம் தஞ்சமென அபயக்குரல் எழுப்பின. ''உலகில் தஞ்சமின்றித் தவிக்கிறோம். தெய்வங்களே நாங்கள் உங்கள் அடைக்கலம்'' எனப் பாட்டுகள் ஏங்குவது போன்றிருந்தது. அது சமயம் மேலே இருந்தவர், ''ராமு! மழைப் பதிகம் பாடு' என்றார்.

பார்வதியாள் தஞ்சம் !
பரமேஸ்வரி பாதம் !
இருட்டு தில்லோ மேகம்
திரட்டு தில்லோ வெள்ளம்
வெள்ளைப் பிள்ளையாரே !
வெள்ளம் வரவேணும்
நாளை வெள்ளம் வந்தா
நானு டைப்பேன் தேங்கா
இப்ப வெள்ளம் வந்தா
எடுத் துடைப்பேன் தேங்கா
ஒத்த மழை பேஞ்சா

பரமேஸ்வரி பாதம்
இருட்டுதில்லோ மேகம்!
திரட்டுதில்லோ வெள்ளம்
வெள்ளைப் பிள்ளையாரே !
வெள்ளம் வரவேணும் !
நாளை வெள்ளம் வந்தா !
நானு டைப்பேன் தேங்கா !
இப்ப வெள்ளம் வந்தா !
எடுத் துடைப்பேன் தேங்கா !
ஒத்த மழை பேஞ்சா!
உலகம் செழிக்காதோ?

இதற்குள்ளாக ராமுவின் உடல் வியர்த்துவிட்டது. தண்ணீரில் மூழ்கிக் குளித்தவர் மாதிரி யாகிவிட்டார். உடம் பெங்குமிருந்து 'சல சல'வென வியர்வை நீர் கொட்டிக் கொண்டிருந்தது. மேலே ஓடிக்கொண்டிருந்த அய்யனு வந்து சாலைப் பிடித்தார். ஏற்றம் சிறிது நேரம் ஓடிப் பின் நின்று விட்டது. பின்பு நாங்களெல்லாரும் நிழலில் உட்கார்ந்து சிறிது நேரம் பல விஷயங்கள் பற்றிப் பேசிவிட்டுக் கலைந்தோம்.

*ஏற்றம் :*

ஏற்றத்தைத் தாங்கி நிற்கும் மரத்திற்கு ஆடுகால் எனப் பெயர். அது தரைக்குமேல் ஆறு அடி உயரத்தில் இருக்கிறது. அதன் மேல் பாகத்தில் ஒரு கவுளி இருக்கிறது. இதுசாதாரணமாக சன்னரை என்ற பலமான ஒருவகை மரத்தால் செய்யப்படுகிறது. தேக்குமரத்தாலும் அதைச் செய்வதுண்டு. ஆடுகாலுக்கு மேலேயுள்ள நெட்டு மரத்தை தாங்க ஆடுகால் கவுளியில் ஒரு கிடந் துருளிக்கட்டை இருக்கிறது. நெட்டு மரம் அல்லது வீசு மரம் இரண்டு பாகமாகவுள்ளது—முன் வீச்சு மரம், பின் வீச்சு மரம் — அவைகளை ஒன்றாக இணைத்துக் கிடந்துருளியுடன் சேர்த்து, ஆப்பொன்று வைத்து இறுக்கியுள்ளனர். நெட்டு மரத்தில் ஆள் ஏறுவதற்கெனச் சுமார் பத்துப் படிகள் உள்ளன : மரம் தரையில் படும் இடத்தில் ஒரு பள்ளம் வெட்டப்பட்டுள்ளது. அதைக் 'கூனக் குளி' என்றழைக்கின்றனர்.

நெட்டு மரத்தின் மேல் கோடி நுனியில் தண்ணீர் இறைக்கும் சாலைக் கட்டுவதற்கான களைக்கம்பு ஒன்றைக் கட்டியுள்ளனர். களைக்கம்பின் அடிப்பாகத்தில் சாலைப் பொருத்தியுள்ளனர். சாலில் பக்கத்திற் கொன்றாக இரு காதுகள் இருக்கின்றன. அவற்றின் ஊடேகிடத்துருளி யொன்று செல்கிறது. காக்காமுளையின் உதவியால் கிடந்துளிரு சாலினின்று கழன்று விடாதபடி பொருத்தப் பட்டுள்ளது. கிடந்துருளியின் மத்தியிலுள்ள துவாரத்தில் களைக்கம்பு, இரண்டு சீராப்புகளைக் கொண்டு இறுக்கப்பட்டிருக்கிறது.

''ஏத்தின் நீள மென்னாங்க?'' என்று கேட்டேன். ''கிணத்தின் ஆழத்தையும் கவுத்தின் நீளத்தையும் பாரு'' என்பாங்க. ஏத்தின் நீளம் கிணத்துக்குந் தகுந்தாற் போல் இருக்கும் என்றார் ஏற்றக்காரர். நாங்கள் பார்த்த ஏற்றத்தின் ஆடுகால் உயரம் 6 அடி. கவட்டையின் அகலம் 1½ அடி.

நெட்டு மரத்தின் நீளம் 16 அடி. சால் கம்பின் நீளம் 10 அடி. சால் கிடந்துருளியின் நீளம் 3 அடி. சால் சுமார் 25 படி தண்ணீர் கொள்ளும்.

''அண்ணா! அனுமந்தராயன் கோட்டையில் அழகான ஏற்றப் பாட்டுகள் கேட்கலாம்! வாங்க போகலாம்'' என்றார் நண்பர். நாங்களிருவரும் அவ்வூர் போய்ச் சேர்ந்தோம். காலை ஒன்பது மணியிருக்கும். ஆடவர்கள் யாரையும் பார்க்க முடியவில்லை. நாங்கள் வந்த செய்தியை அறிந்தவுடன் ஒரு பெரியம்மா, ''இப்பயாரையா அந்தப் பாட்டுப் பாடுரா. ஆத்திலே தண்ணியுமில்லை, ஏத்து இறைக்கிறதுமில்லை,, என்றார், இன்னொருவர், ''எல்லாம் இப்ப 'கமலை' போட்டுக் கிட்டாங்கா ;கரண்டு வேறே வந்திருச்சு? பழைய ஆளு யாருமில்லை. அடுத்த ஊரிலே எங்க வீட்டுக்காரர்கூடத் தோட்டம் போட்ட மணியாட்டி இருக்கிறார். இன்னுஞ் சாகலே! அவர் படிப்பார்...'' என்றார். அவரும்சாக வில்லை ; ஏற்றப் பாட்டும் இறந்துவிடவில்லை என மனதிற்குள்ளே சொல்லிக்கொண்டேன். போகும் வழியில் வழிகாட்ட ஒருவர் வந்தார். அவர், ''முந்தி நாளிலே, காலையிலே பாத்தா ஏத்துப்பாட்டு ஊரே சிலையோடும்! கேட்கக் கேட்க இன்ப மாயிருக்கும்! அப்படி இனிக்கும்! சற்றே நின்னு கேட்கலா மின்னு இருக்கும்! அந்தப் பாதரவைக் கேட்டாக் கண் கலங்கும்...'' என்றார். ஏற்றப் பாட்டைப் பற்றிய சிறந்த விமர்சனமாக இருந்தது, அவருடைய பேச்சு.

நாங்கள் தேடிச் சென்றவர், கிணற்றினுள் இறங்கிச்சேறு எடுக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார். நாங்கள் ஊர் திரும்ப எண்ணினோம். எங்கள் நிலைமையை உணர்ந்த ஒருவர் கீழ்வரும் பதிகம் பாடினார், ''எடுத்தவுடனே பதிகம் பாடமாட்டோம், முதலில் சாமிமேலே பாடுவோம். அப்புறம் பதிகம் பாடுவோம்...'' என்றார்.

| | |
|---|---|
| பிள்ளையாரே | வாரும் ! |
| பெரிய | பெருமாளே ! |
| உன்னைத் | தொழுதேனே ! |
| ஓரடியா | லிந்த |
| உலகளந்த | ராமு ! |
| உன் ராமத் | துக்கழகு |
| லட்சுமணப் | பெருமாள் ! |
| சோதியினுக் | கழகு |
| துலங்கு | வடிவேலு ! |
| வேலெடுக்கும் | கையே |
| வினைகள் | தீர்க்கவேணும் ! |
| உன்னைத் | தஞ்சமென்ற பேரை |
| அஞ்சாது | காரும் ! |
| அடிகள் | பிசகாமல் — எங்க |
| ஆண்டவனுங் | காவல் ! |
| பிடிகள் | தவறாமல் — எங்க |
| பிள்ளையாரும் | காவல் ! |
| மூங்கிக்கிளை | ஒண்ணு |
| முறியாமே | காரும் ! |
| காக்கா மூளை | ரெண்டும் |
| கழறாமல் | காரும் ! |
| சீராப்பு | ரெண்டும் |
| சிதறாமல் | காரும் ! |
| கிடந்துருளி | ஆப்பு |
| கிளர்ந்துருள | வேணும் ! |
| புளிச் சாணிக் | குச்சி |
| புடிகள் | தவறாமல் ! |
| மாயன் | பெருமாளே ! |
| மைனரியா | ஒண்ணு |
| | (அப்படியே எட்டுவரை) |

*பதிகம்*

| | |
|---|---|
| [1]மழை வடக்கே | பேய |
| வருங் கிழக்கே | வெள்ளம் ! |
| தெக்கேமழை | பேய |
| திரும்பிவரும் | வெள்ளம் ! |
| வெள்ளங்கண்ட | நாரை |
| [2]வெளிச்சி கொண்டு | போகும் ! |
| தண்ணிகண்ட | நாரை |
| தவளை கொண்டு | போகும் ! |
| ஆத்தைக்கண்ட | நாரை |
| ஆயிரை கொண்டு | போகும் ! |
| குளத்தைக் கண்ட | நாரை |
| [3]கொரவை கொண்டு | போகும் |
| ஆத்தைக் கண்ட | சுப்பன் |
| அதிலேமுழுகு | வானாம் ! |
| குளத்தைக் கண்ட | குப்பன் |
| குளிச்சுமுழுகு | வானாம் ! |
| ஓரடியா | லிந்த |
| உலகளந்த | ராமா |
| ஒரு பதியா | லொண்ணு ! |

''ஏற்றப் பாட்டிற்கு எதிர்ப் பாட்டில்லை'' என்பர். பாட்டில் இசைநயமிராது, ஆனால் சொல்வளமும் கற்பனையும் நிறைந்திருக்கும். கல்லாத மனிதர்கள் பாடும் இப்பாடல்

---

1. பதிகம் : சாதாரணமாகப் பத்துப் பாட்டு, பத்துச் சால் தண்ணீர் ஊற்றும் நேரம். பதிகத்தில் சில சமயம் அதிகமான எண்ணிக்கையும்வரும். 500சால் இறைத்தால் 1 குளி அல்லது 60 செண்டு நிலம் பாயுமென ஒரு கணக்கு.

2. ஒரு வகை மீன்.

3. ஒரு வகைமீன்.

களைப் போல் கற்றறிந்த கவிஞர்கள் கூடப்பாடுவது அருமை யாகும். ''மூங்கில் இலைமேலே'' என்ற ஏற்றப் பாட்டின் அடி, கம்பனைத் திகைக்க வைத்து விட்டதாம்! திகைப்பி லேயே இரவு கழிந்தது ; காலையில் ஏற்றக்காரன்,

மூங்கில் இலைமேலே
தூங்கும் பனி நீரே
தூங்கும் பனி நீரை
வாங்கும் கதிரோனே !

என்றானாம். கம்பன் ஆச்சரியத்தில் ஆழ்ந்து போய் விட்டார் என்று கூறும் கர்ணபரம்பரைச் செய்தி யொன்றுண்டு. கீழ் வரும் ஏற்றப்பாடல்களில் கவிநயமும், கற்பனையும் நிறைந் திருப்பதைக் காணலாம் !

ஈச்ச மணல் ஓடை !
இருபுறம்கம் போடை !
தாழை மணல் ஓடை !
தனிப்புறம்சம் போடை !
சம்போடைக் காட்டில்
சமத்தி கொலுவிருக்க !
ஈப்புகுந்தால் இறகொடியும்
இண்டம் [1]புதர்க்காடு !
கொசுப்புகுந்தால் இறகொடியும்
கோங்கி ளிளங்காடு !
பனியாலே நெல் விளையும்
பண்புறு நற்காடு
கரடி அலையும்வனம்
காட்டானை தூங்கும்வனம் !
சிறுத்தை அலையும் வனம் !
சிறு நரி தூங்குவனம் !

---

1. புனக்காடு என்றும் பாடுவர்.

ஓடி நிலம் — பாய
ஒருபதியா — லொண்ணு !

(வேறு)

டொம்பன் — களையேற
டொம்பச்சி — தானாட
வண்டு — கவி பாட !
வந்த குயில் — கேட்க
தும்பி — குழலூத !
சூழ்ந்த குயில் — கேட்க !
ஒன்பதாச்சு — சாலு !
ஓரடியா — லிந்த
உலகளந்த — ராமா !
ஒருபதியால் — ரெண்டு !

(வேறு)

தொங்குநடைக் — காரி !
பெங்களுருப் — பெண்ணே !
அங்கேதுக்குப் — போறே ?
பொங்கலிடப் — போறேன் !
பொங்கலிலே — பாதி
பங்குதர — வேணும் !
செங்குருவை — குத்திச்
செவலைக்கடா — நாறு
கருங்குருவை — குத்திக்
கறுப்புக்கட — நாறு !
ஏத்தோட — வருத்தம்
ஏறினவன் — அறிவான் !
அடிகள் — தவறாமே
தாங்கி மிதி — பாரம்
புடிகள் — தவறாமே

பொறுத்து மிதி பாரம் !
புள்ளையோட வருத்தம்
பெத்தவளே அறிவாள் !
பந்தத்துறை மேலே
பாடி விட்டேன் நூறு !
செல்லத்துறை மேலே
செப்பிவிட்டேன் நூறு
எண்ணி இறைச் சாலும்
ஏறுதில்லே அந்த மூலை !
பாடி இறைச் சாலும்
பாயுதில்லை அந்த மூலை !
வாய்க்கால் தண்ணி தள்ளி
வருகுதண்ணே நூறு
இன்னுமொரு நூறு
இறைக்க வல்லோ போறேன் !
ஓடி நிலம் பாய
ஒருபதியா லஞ்சு !

✳

# 10




## (அ) நவீனப் போக்குவரத்து :

மனிதன் தன் முயற்சி காரணமாகத் தன் சூழ்நிலையை மாற்றியமைத்து வருகிறான். அவன் இப்பொழுது காலத்தையும், தூரத்தையும் வென்றுவிட்டான். முன்பெல்லாம் எத்தனை காலமானாலும் போகமுடியாது என்று நினைத்த இடங்கள் இப்பொழுது 'கூப்பிடு தூரத்தில்' வந்துவிட்டன !

ஆதி மனிதன் செடிகள், புதர்கள், முட்கள், மரங்கள், அடர்ந்த காடுகள், துஷ்ட மிருகங்கள், ஆறுகள், மலைகள், சமுத்திரங்கள் முதலியவைகளைப் பார்த்துத் திகைத்தே போயிருப்பான். அவன் தன் உணவைத் தேடிக்கொள்ள ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ஊர்ந்துதான் சென்றிருப்பான். அவ்வளவு இடைஞ்சல்கள். பின்பு ஆயுதங்களின் உதவிகொண்டு காட்டை வெட்டி வழி ஏற்படுத்திக்கொண்டு சிறிது சிறிதாக நகர்ந்து இடம் விட்டு இடம் பெயர்ந்திருப்பான். எவ்வளவு காலங்கழித்து, அவன் இப்பொழுது நாம் காணும் பெரும் பாதைகளை அமைக்கக் கற்றுக்கொண்டானோ ? ஓரிடம் விட்டு மற்றோரிடத்திற்குத் தன் சாமான்களையும், தன்னையும் தூக்கிச்செல்லக் காட்டு மிருகங்களாயிருந்த கழுதை, குதிரை, மாடு போன்றவற்றைப் பழக்கி,

அவைகள் இழுத்துக்கொண்டு செல்ல வண்டிகளையுமுண்டு பண்ண ஒரு யுகமே ஆகியிருக்கவேண்டும். இப்பொழுது அந்தக் கட்டைவண்டி யுகமோ மாறி வருகிறது.

மோட்டார், ரெயில், ஆகாய விமானம் போன்ற நவீனப் போக்குவரத்துச் சாதனங்கள் வந்துவிட்டன. அவற்றைக் கண்ணுற்ற கிராமவாசி ஆச்சரியத்தில் மூழ்கி இந்த வெள்ளைக் காரன் ''இன்னுமென்ன செய்யானையா?'' எனப் பாடுகிறான்.

*மோட்டார் வண்டிப் பாட்டு*: (தெந்தேந்தி நாதினனமெட்டு)

தரையில் ஓடும் இந்த மோட்டார் வண்டி அகிலத்தையுமே நடுங்கச் செய்கிறது. அதன் முன் புறத்தில் சூட்சியம் (எஞ்சின்) இருக்கிறது. அதைத் துரைமகன் ஓட்டுகிறான்! அது நம்மைப் படைத்த கடவுளைப் போன்று, தரையைக்கூடத் தொடாமல் பறந்து செல்கிறது. ஆனால் வரவரக் கார்கள் மலிந்து போய்விட்டன! எதற்கெடுத்தாலும் எங்கே பார்த்தாலும் கார்கள்தாம்...என்பதாகக் கூறுகின்றன பாடல்கள்:

1. மானங் கிடு கிடுங்க
மத்தளங்க ளோசையிட
பூமி கிடு கிடுங்க
போகுதடி மோட்டார் வண்டி!

2. மோட்டாரு வண்டிகளாம்
முன்னேயொரு சூட்சியமாம்!
சூட்சியத்து மேலிருந்து
சுத்துரானே தொரைமகனும்!

3. கூடலூரு சாலையிலே
கூலிக்கே ருழுகையிலே
படைச்ச கடவுள் போலப்
பறக்குதடி மோட்டார் வண்டி!

4. முந்தி யொரு காலத்திலும்
மோட்டாரைக் கண்டதில்லை
இந்தநல்ல நாளையில்கார்
ஏறாத பேரோ இல்லை

*ரெயில் :*

ரெயில் வண்டியில் சூட்சியம் (பிஸ்டன்) இரண்டு பக்கத்திலுமிருக்கிறது. அது மாடில்லாமல் செல்லும் மாய வெள்ளைக்காரன் வண்டி! அது தன்னாலேயே போகும்! வண்டி எங்கேயோ வருகிறது, அது வருகிற விசயத்தை முன் கூட்டியே தந்தி வந்து பேசி விடுகிறது. இந்தச் சாதி வெள்ளைக்காரன் வேலை ஆச்சரியப்படத்தக்கதாக விருக்கிறதேயெனப் பாட்டுகள் வியப்புறுகின்றன:

1. எஞ்சினு வண்டிகளாம்
இருபுறமும் சூட்சியமாம்!
மாடில்லாமே போகுதடி
மாயவெள்ளைக் காரன்வண்டி!
தன்னாலே போகுதல்லோ
சாதிவெள்ளைக் காரன்வண்டி!

2: வண்டி வருகுதடி
வாடிப்பட்டி மங்தையிலே
தந்திவந்து பேசுதடி
சமயநல்லூர் டேசனிலே!

*பறவைக் கப்பல் :*

பறவைக் கப்பல் (அல்லது ஏரோப்ளேன்) எவ்வளவு பெரிய உருவம்! விவசாயியின் வைக்கோல் போர் பருமன் இருக்கிறது! அது பத்து மைல் உயரத்தில் பறப்பது போலிருக்கிறது. அதன் சத்தத்தைக் கேட்டாலே மனம் பதறுகிறதே! இதை உண்டாக்கிய வெள்ளைக்காரன் செத்தவர்

களைக்கூடப் பிழைக்க வைத்து விடுவான் போலிருக்கிறதே— எனப் பாட்டுக்கள் அளவிலா வியப்படைகின்றன:

1. வய்க்கப் படப்புப் போல
வருகுதடி ஏரப்பிளேன் !
பறக்குஞ்சத்தம் கேட்டவுடன்
பதறுதடி எம்மனசு !

2. பத்துமயில் தூரத்திலே
பறக்குதடி ஏரப்பிளேன் !
செத்தாப் பிழைக்கவைப்பான்?—இந்தச்
சீமைவெள்ளைக் காரன்மகன் !

(ஆ) *கண்டதும் கேட்டதும்:*

''தெளிவுதர மொழிந்திடுதல் சிந்திப் பார்க்கே
களிவளர ஆனந்தக் கனவுபல காட்டல்''

என்ற பாரதியின் வாக்கு, நாட்டுப் பாடல்களைப் பொறுத்த மட்டில் நூற்றுக்கு நூறு உண்மையானது. தாம் கண்டவற்றைப் பற்றியும், கேட்டவற்றைப் பற்றியும் தெளிவாகக் கூறி, நம்மைச் சிந்தனைக் குள்ளாக்கும் ஆற்றல் நாட்டுப் பாடல்களை அமைப்போருக்கு உண்டு.

வெள்ளைக்காரர்கள் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் ஏற்பட்ட புது மாறுதல்கள்-ஆறுகளின் மேல் பாலங்கட்டுதல், மின்சாரக் கம்பி போடுதல் போன்ற நவீன காரியங்கள்— நாட்டுப்புற மக்களின் சிந்தனையைக் கிளறி உணர்ச்சி நிறைந்த பாடல்களை வெளிப்படுத்தியுள்ளன.

ஓர் ஊரின் அருகே ஆறு ஒன்று ஓடுகிறது. கிராம மக்கள் அதைக் கடந்துதான் தங்கள் நிலபுலங்களுக்குச் செல்ல வேண்டும். மழைக் காலங்களில் ஆற்றில் வெள்ளம் வரும். அச் சமயம் ஆற்றின் அக்கரையிலுள்ளவர்கள் அக்கரையில்

தான், இக்கரையிலுள்ளவர்கள் இக்கரையில்தான். இவ்வாறாக மக்களும் ஆடு மாடுகளும் அவதியுற்று வாடியகாலம் பல. ஆற்றின் குறுக்கே பாலங் கட்டலாமென யாரும் நினைக்கவே யில்லை. ஆனால் வெள்ளைக்காரன் நேற்றுத்தான் (அண்மையில்) வந்தான். அதற்குள்ளாகவே ஆற்றின் மேல், பாலங்கட்ட ''நினைச்சிட்டானே' (திட்ட மிட்டு விட்டானே) எனப் பெருமூச்சுடன் பாட்டுக்கள் வெளிப்படு கின்றன:

(ரெண்டாம் நம்பரு டேசன் கச்சேரி என்ற மெட்டு)

ஆத்திலே வெள்ளம் வர
ஆடு மாடு அவதிப்பட
நேத்து வந்த வெள்ளைக்காரன்
நினைச்சிட்டானே பாலங்கட்ட !

நீலகிரி மலையிலிருந்து வரும் மின்சாரக் கம்பியைப் பற்றிய பாடல்கள் சில. அதைக் கிராம மக்கள் தங்கள் மொழியில் காந்தக் கம்பியெனக் கூறுகின்றனர்; மேலும் அதைப் பச்சத் தண்ணிக் கரண்டெனவும் அழைக்கின்றனர். அதனால் குட்சியங்களெல்லாம் எப்படிப் பறக்குதெனப் பாருங்கள் :

1. நீலகிரி ஓரத்திலே
நீட்டி விட்டான் காந்தக் கம்பி
தொட்டாப் புடிக்குதடி
துடிகாரன் போட்டகம்பி!

2: கோணூசி போலவல்லோ
கோயமுத்தூர் ஜில்லாக் கம்பி
கொள்ளப் பணம் செலவழித்துக்
கொண்டு வந்தான் செம்பட்டிக்கே !

3. கோணூசி போலவல்லோ
கோயமுத்தூர் ஜில்லாக் கம்பி
பச்சைத் தண்ணிக் கரண்டுகளாம்
பறக்குதல்லோ சூட்சியங்க!

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பெரியாற்று அணை கட்டப்பட்டது. மலையாள பூமியில் ஏலக்காய் மலைகளில் உற்பத்தியாகி, மேற்கு முகமாக ஓடி அரபிக்கடலில் வீணே சங்கமமாகிக் கொண்டிருந்த பெரியாற்றை, மலைகளின் நடுவே தேக்கி வட பகுதியில் குறுக்காக இருந்த மலையொன்றைத் துளைத்து, அந்த ஆற்றின் நீரை மதுரை மாவட்டத்தில் நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தினார்கள். அப்பொழுது நம் நாட்டை விக்டோரியா மகாராணி ஆண்டார். திறமைசாலிகளான பின்னி கொக், லோகன் போன்ற ஆங்கிலேய எஞ்சினீயர்கள் இவ்வேலையைச் செவ்வனே செய்து முடித்தனர். விவசாய மக்களுக்கு நலம் நல்கிய இவ்வணைக்கட்டு வேலை பற்றி வழங்கிவரும் நாட்டுப் பாடல்களில் சில வருமாறு :

1. மலையாளம் போறதண்ணி
மதுரைவந்து சேரவேணும்
சிந்தையிலே தானினைந்து
திருப்பி விட்டான் [1]கும்பினியான் !

2. ஆடுதடி [2]வொர்க்கு சாப்பு
அரைக்குதடி சுண்ணாம்பை
எடுக்குதடி மானிடங்க
எண்ணத் தொலையாமே !

---

1. கும்பினியான் – கிழக்கிந்தியக் கம்பெனியார்.
2. வொர்க்கு சாப்பு – Workshop.

3. சீமை இரும்பெடுத்துச்
சிமிள்போல ரோதை செய்து
ஆடாத சூட்சியத்தை
ஆட்டி வச்சான் லோகந்துரை !

4. அக்கரைக்கும் இக்கரைக்கும்
அழகான தந்தி போட்டுத்
[1]தந்திமேலே போராராம்
தருமதுரை லோகனுமே !

5. காங்கிரட்டுக் கல்லுடைக்கக்
கருமனுசன் ஆகாதின்னு
ஆகாச வேட்டெழுப்ப
அனுப்பி வச்சான் லோகந்துரை !

6. பேரான பெரியதுரை
பேருபோன டைமன்துரை
ஆடாத சூட்சியத்தை
ஆட்டிவைக்கும் லோகந்துரை !

7. உச்சியிலே தொப்பி வச்சு
வொர்க்கு சாப்பு போனதுரை
சுண்ணாம்பு ரோதையிலே
சுருண்டிட்டாராம் டைமன்துரை !

8. அஞ்சு மணியு மாச்சு
அரை மணி நேரமாச்சு
எஞ்சினை ஊதச் சொல்லு
எசமானே லோகந்துரை !

9. காடுகளும் வெட்டியாச்சு
கைகளும் நொந்துபோச்சு
பெரியாறு அழிஞ்சு போச்சுப்
பெறப்புடடி ஊரைத் தேடி !

---

1. தந்தி — Ropeway.

பெரியாற்று அணைக்கட்டு வேலை மலை நடுவில் நடந்தது. கிராம மக்களில் சிலரே துணிந்து அந்த இடத்துக்குக் குடும்பத்தோடு போய் வேலையில் ஈடுபட்டனர். வேலை முடிந்து ஊர் திரும்பியபோது ஊரில் தங்கியிருந்தவர்களுடன் பல நாட்கள் தாங்கள் மலைமேலே செய்த அற்புதமான வேலைகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்திருக்க வேண்டும். 'அங்கு இயந்திர உதவி கொண்டு மலையைச் சுக்குச் சுக்காக நொறுக்கினர்; கல்லைப் பல்லால் மெல்வதைப் போலத் துளைபோடும் இயந்திரம் மலையையே மென்று விட்டது. மேலே மலை அப்படியே யிருக்க அதன் ஒரு புறத்தின் அடிப்பக்கத்தைக் குடைந்து ஒரு மைல் நீளத்திற்குப் பெரிய சுரங்கம் போட்டு மலையின் மறுபக்கம் பொத்துவிடப் பட்டது.' இதை ஊரிலிருந்தவர்கள் பொய்யென்றே நினைத்து விட்டார்கள். அப்படி நம்பாமல் இருப்பவர்களுக்குச் சரியான பதில் கூறுகிறது பாட்டு :

கல்லை உடைக்கிறதும்
  கருமலையை மெல்லுறதும்
சொல்லுறது பொய்யானால்
  சுரங்கத்திலே போய்ப்பாரு !

இந்த அணைக்கட்டு வேலையைப் பற்றி லாவணி மெட்டில் அமைந்த நீண்ட பாடல் ஒன்றுண்டு. விரிவஞ்சி, அதை முழுவதுங் கூறாமல், அதன் மத்தியப் பகுதியிலிருந்து சில வரிகள் மட்டும் கீழே தரப்படுகின்றன.

வாடுதலில் லாமல் — தண்ணீர்
ஓடுது — மேற்கு முகம் !
மலையானை — புலிகரடி
கலை மான்கள் — மிருக சந்து
வந்து — புசிக்குமல்லால்
அந்த நதித் — தண்ணீரால்
மற்ற பிர — யோசனங்கள்

சற்றுமில்லை
வடமடலி
திடமாக
வளைத்துப்
கிழக்கே
மலையெஞ்சி
பல சூத்
மன்னன் பின்னி
தன்னை
அன்னவ
ஒண்ணரைக்
வருதியுட
உறுதியுடன்
வாயிதா
ஆயிரத்தி
தொண்ணூத்து
குரு மாதம்
தேசம்
மாநதியைத்
தானுரைத்தாள்

யாதலினால்
லேயணையைத்
வேகட்டி
பெரியாற்றைக்
திருப்பு மென்றே
ஷீர்கள் மெச்ச
திரமுங்கற்ற
கொக்கு துரை
வரவழைத்து
னுக்கு நேராய்
கோடி ருபாய்
ளேகொடுத்து—மன
ராணியம்மாள்
வுங்கொடுத்து
எண்ணூத்து
மூணாமாண்டு
சனவரியில்
செழிக்க—இந்த
திருப்பு மென்று
ராணியம்மாள் !"

# 11




> "எனது வாழ்வில் ஹிம்சையும் அபசுரங்களும் கலந்து உருகி ஓர் இனிய இன்னிசையாக ஒலிக்கின்றன. ஆனந்தமான பறவை யொன்று கடலைத் தாண்டிப் பறந்து செல்வது போல், எனது அருட் சிந்தனை சிறகடிக்கின்றது."
>
> — தாகூர்.

கிராம மக்கள் தங்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் மனிதப் பண்பும் கலையும் உடல் நலமும் வளரக்கூடிய பல களியாட்டங்களில் ஈடுபடுகின்றனர். ஆண்களும் பெண்களும் பங்கு கொள்வதற்குத் தகுந்தாற்போல் பல களியாட்டங்கள் உண்டு. மத விழாக்கள் சமயங்களில் நடக்கும் களியாட்டங்களைத் தவிர, சாதாரண நாட்களில் ஒயில்கும்மி, கும்மி, கோலாட்டம், கோமாளியாட்டம் போன்ற சமூகக் களியாட்டங்கள் உண்டு. இத்துடன் சிலம்பம், குஸ்தி போன்ற உடல் நல வளர்ச்சிக்கான பயிற்சிகளுமுண்டு. அவை ஒவ்வொன்றிற்கும் ஒரு வாத்தியாயர் உண்டு. அவரும் மாணவராகவே இருப்பார். எல்லாருமாகச் சேர்ந்து கலையை வளர்ப்பர்.

(1) ஒயில் கும்மி

இஃது ஆண்களாகச் சேர்ந்து ஆடும் ஓர் ஆட்டம். ஆடுபவர்கள் கையில் ஒரு கைக்குட்டையையோ விசிறியையோ

வைத்துக்கொண்டு, காலில் சதங்கை மணிகளைக் கட்டிக் கொண்டு பாடிக்கொண்டே ஆடுவர். பாட்டுக்குத் தகுந்தாற் போல் ஆட்டமும் வேறுபடும்.

(அ) கடவுள் துதி

1. முந்தி முந்தி விநாயகனே — சுருளி
முப்பத்தி முக் கோடி தேவர்களே (தனம்)

2. கந்தக் குழந்தைக்கு முன் பிறந்த — மகா
கச்சிக் கணபதி முன் நடவாய் (தனம்)

3. ஏழைகளின் தாயே வாலை சரஸ்வதி
என் நாவில் வந்து நீ அருள்புரிவாய் (தனம்)

4. பூமி யதிரவே ஆதாளி செய்யவே
பூமியைத் தொட்டொரு சலாம் வாங்கும்
— சொன்னேன் (தனம்)

5. பொன்னம் பகவதி செல்லாயி அம்மனைப்
போற்றி ஒரு சாலம் வாங்கும் சொன்னேன் (தனம்)

6. நீங்கள் ஆளோடே ஆளு உரசாமல்
ஆளில் ஒரு முழம் தள்ளி நில்லு (தனம்)

7. காலோட காலு உரசாமல் — உங்க
காலடி கச்சம் கழறாமல் (தனம்)

8. மேலோட மேலு உரசாமல் — உங்க
வேருவைத் தண்ணீ சிதறாமல் (தனம்)

9. உல்லாச மாகவே சல்லாப மாகவே
உச்சித மாய்க் கச்சம் கையிலெடு (தனம்)

10. கையி லெடுத்ததைத் தும்பு விட்டு — வலது
கால்தனில் பூட்டுங்க ளெல்லோரும் (தனம்)

(ஆ) *வேட்டைக் கும்மி (வேறு)*

காஞ்சிரங் காட்டுக் குள்ளே தன்னானே னானே
கதுவாலிக் கூட்ட மடா தில்லாலே லேலே !
மா லூணி கண்ணிவச்சா தன்னானே னானே
மாண்டிடுமே பட்சியெல்லாம் தில்லாலே லேலே !
ஆனைமலைப் பொந்துக்குள்ளே தன்னானே னானே
அழகுநரிக் கூட்டமடா தில்லாலே லேலே
மின்னேபோ யடிக்கட்டுமா தன்னானே னானே
பின்னேபோ யடிக்கட்டுமா தில்லாலே லேலே !

(காஞ்சிரம்)

(இ) *பனைமரக் கும்மி (வேறு)*

| | |
|---|---|
| பனை மரமே | பனை மரமே |
| ஏன் வளந்தே | இத்தூரம் ! |
| நான் வளந்த | சேதியைத்தான் |
| நாட்டார் | அறியாரோ? |
| குடிக்கப் | பதனியானேன் ! |
| கொண்டு விக்க | நுங்கானேன் ! |
| தூரத்து | மக்களுக்குத் |
| தூதோலை | நானானேன் ! |
| காலத்து | மக்களுக்குக் |
| காதோலை | நானானேன் ! |
| அழுகிற | பிள்ளைகட்குக் |
| கிலுகிலுப்பை | நானானேன் ! |
| அரிசியரிக்கிற | பெண்களுக்கு |
| அஞ்சரைக்கொட்டான் | நானானேன் ! |
| அறுபதடி | கிணத்துக்குமே |
| இழுத் திறைக்கும் | கயிறானேன் ! |
| கயிறே கயிறு | மானேன் |
| கன்று கட்டத் | தும்புமானேன் ! |

(பனை மரமே)

## (2) இராமாயணக் கும்மி

பாரதம், இராமாயணம் ஆகிய காவியங்கள் நம் நாட்டு மக்களின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்து போனவை. அவற்றிலுள்ள கருத்துகளைக் கும்மிப் பாட்டுகளாகப் பாடிக் கொண்டு ஆடுகிறார்கள். இதில் ஆண்களே பெரும்பாலும் பங்கு கொள்வர். கும்மியில் கலந்து கொள்பவர்கள் இராமாயணக் கதையிலுள்ள பல பாத்திரங்களாகவும் தம்மை அலங்கரித்துக்கொண்டு ஆட்டத்தை ஆரம்பிப்பர் கதையில் உள்ள எல்லாக் காட்சிகளையும் பாடல்கள் சித்திரிக்கும். இடையிடையே வசனங்களுமிருக்கும். குறிப்பிட்ட பாத்திரத் திற்கான வசனம் வரும்போது அவர் பேசுவார். இவ்வாறாக வசனம், பாட்டு, ஆட்டம் ஆகியவற்றை ஒன்றாக இணைத்து நெய்யப்பட்ட வேலைப்பாடமைந்த ஓவியம் இராமாயணக் கும்மி. அதிலிருந்து சில காட்சிகளை அடியில் காணலாம் :

### (அ) அயோத்தியாபுரி

அயோத்தியா புரியை ஆண்டிடும் பூமான் !
அரிய கோதண்டம் ஏந்திடும் சீமான் !
செய்ய வீர தண்ட மோதண்ட சீமான் !
தேவர் தொழும்பத சிங்கார சீமான் !
வெற்றிப் பூச்சக்ரக் குடை நிழலாட !
வெண்சா மரையொடு தேவர்கள் கூடச் !
சுற்றிலும் சங்கீதக் கீர்த்தனை பாட !
சுந்தர மாகவே சீதையுங்கூட !

(அயோத்தி)

### (ஆ) குகன் ஓடம் விடுதல்

எந்த ஊரு எந்தத் தேசம் சொல்லுமய்யா !
எங்கிருந்து இங்கு வந்தீர் விள்ளுமய்யா !
கானகத்தி லேவசிக்கும் குகனே கேளாய் !

கௌசல்யா தேவி பெற்ற ராமன் நானே !
தசரத ராசபுத்ரர் நீங்கள் தானா? — உங்கள்
தம்பி இளையோனுமிவர் தாமோ சொல்வீர்?

(வேறு)

ஏறு மய்யா என் சாமி ஓடமதில்
இறக்குவேனே என் சாமி கானகத்தில்
வனம் புகுந்த என் சாமி விசயமென்ன?
ராமருடன் என் சாமி லச்மணரே
வனம் புகுந்த என் சாமி விசயமென்ன?
ஏறுமய்யா என் சாமி ஓடமதில்!

(இ) *சீதை புலர்பல் (வேறு)*

எங்கும் மட மடன்னு மண் கிளம்ப
எந்தன் மன்னவனும் ஓடலுற்றான்! — அங்கே
திடுதிடென்று கொண்டு போறான் !
தென்னிலங்கை ராவணனும் — இந்த
ஆட்டுக்காரா ! மாட்டுக்காரா ! — எந்தன்
ஆடு மேய்க்கும் ஆயர்களே ! — எந்தன்
தெய்வமான ராமர் வந்தால் — நீங்க
சேதியைத் தான் சொல்லிடுங்க !
மாண்புமிக்க ராமர் வந்தால் — எந்தன்
வார்த்தையைத் தான் சொல்லிடுங்க! — அந்தக்
காக்கையுட வர்ணமுள்ள — அவர்
காலோ கனக நிறம் — கணைக்
காலதுவோ நீலவர்ணம் — அவர்
வாயோ பவள நிறம் — அவர்
வார்தையோ தெள்ளமுதம் — எந்தன்
தத்துவங்கள் தாமறிந்த — எந்தன்
சாமி வந்தாச் சொல்லிடுங்க!

(தன்னானே)

(3) *கோலாட்டம்:*

நாட்டுப் புறங்களில் முக்கியமாக ஆடவர்களே கோல் ஆட்டம் ஆடுவர். அதில் ஆட்டமும், தாளபொருத்தமும், அத்துடன் பாட்டு நயமும் இருக்கும். கரும்புரசு போன்ற ஒரு வகைக் காட்டு மரத்திலிருந்து கோல் குச்சி தயாரிப்பர். அதில் நல்ல ஓசையிருக்கும். குச்சியும் அழகாகக் கடையப் பட்டிருக்கும். குச்சியின் அடிப்பாகத்தில் மணி கோக்கப் படுவதுமுண்டு. வட்டமாக நின்று அடித்தல், இரண்டு வரிசை களில் நின்று பாய்ந்து பாய்ந்து மாறிவருதல், சென்று கொண்டே கோலடித்தல் போன்று எத்தனையோ வகைக் கோலடி உண்டு. பாட்டிற்குத் தகுந்தாற்போல் ஆட்டமும் கோலடியும் அமையும். கோலாட்டம் விறுவிறுப்பாக நடை பெறும்போது பார்த்தால் ஒரு போர்க்களக் காட்சியே கண் முன் வரும். இதனடியில் வருவது பாரத யுத்தத்தைப்பற்றிய ஒரு கோலாட்டப் பாட்டு:

*(அ) பாரதம்:*

1. ஐவரும் அடைக்கலம் கொடுத்தார் – அதை
ஆயன் அறிந்துபடை யெடுத்தார் – வெகு
ஆத்திரத்துடனே சேனை சேத்துவரவும்
கொண்டோடிப் போனார் – தேடிப் போனார்

2. செய்யாத அம்பும் வில்லும் கொண்டு – மாயன்
தேடியே பாண்டவரைக் கண்டு – குருச்
சேத்திரம் தன்னைவிட்டுக் காத்திடும் எங்களுயிர்
தினமே – அந்தச் சணமே!

3. வீமனும் பலராமனுமே முட்டினார்—அதில்
வெகு நேரமாக மல்லுக் கட்டினார் – அந்த
விசயனும் சாத்திரியும் திசை யெங்கும் பாணங்களைச்
சொரிந்தார் – பாதம் பணிந்தார்!

4. காமனும் நகுலனுமே எதிர்த்தார் !
கடுந்துய ரடைந்துமே குலைந்தார் !
காவல ரும்சகா தேவரும் படையெடுத்துக்
களைத்தார் — முற்றும் துளைத்தார் !

5. தேரேறி விசயனும் சென்றான்—கர்ணன்
தேரின் முன்பாகவே நின்றான்—அந்தச்
சேர்ந்த படைகளெல்லாம் சோர்ந்து விழும்படி
செய்தான்—சண்டை செய்தான் !

*(ஆ) கட்ட பொம்மன் கதை (வேறு)*

1. கோடி வந்தனம் மைந்தர்கள் தந்தனம்
கோலடி யாட்டம் தானாட
குவலய மதுபுகழ் பிரணவன் பொன்னடி
குறித்துத் துதியது செய்வோமே!

2. ஆதி நாளிலே கொத்துப்பல் லாரியை
ஆண்டிருந்தார் கட்டபொம்முதுரை !
அட்டி யில்லாமலே தென்பாண்டி நாட்டினை
அடைந்து பொட் டிப்புரம் ஆண்டுவந்தார் !

3. மாது சக்கம்மாள் கிருபையி னாலங்கே
வாழ்ந்திருந்த கட்டபொம்முதுரை
மட்டில் லாதபுகழ் எட்டையாபுரமதைக்
கட்டியே ஆண்டிடும் நாளையிலே !

*(4) பெண்கள் கும்மி :*

முளைப்பாரி போட்டுக் கும்மியடிப்பது திருவிழாக் காலங்களில் நடக்கும். ஆனால் சாதாரணமாக நிலவொளியிருக்கும் போது பொழுது போக்கிற்காகப் பெண்களும் பெரியவர்களும் சிறியவர்களும் ஒன்று சேர்ந்து கும்மியடித்துக் களிப்பர். அதில் பல கருத்துகள் வரும் ; மெட்டுகளும் மாறிமாறி வரும் :

1. ஊருக்கு மேற்கே ஊமைப்புற்றாம் — அங்கே
ஒருத்தி வீட்டிலே பாலெருமை !
காய்ச்சின பாலும் கசக்குதென்பாள்—நல்ல
கட்டித் தயிரும் புளிக்குதென்பாள்!
வேப்பங்காயும் இனிக்குதென்பாள் — அந்த
வீசைக் கள்ளி முத்து வீராயி (தன்னனே)

2 இந்த நிலாவும் நிலாவுமல்ல — பின்னும்
நித்திரைக் கேற்ற நிலாவுமல்ல
இந்த நிலா வெளிச்சத்திலே — நல்ல
சந்திரன் தேரது ஓட்டையிலே !
எங்குக் கண்டே பிள்ளை எங்குக் கண்டே
எங்க துரையை எங்குக் கண்டே (தன்னனே)

3. தெற்குத் தெருவிலே தேரோடும் வீதியில்
தேரு மேலே குஞ்சம் வீசக்கண்டேன்
பாதசரம் என்றால் பாதசரம் — நல்ல
பத்துப் பணத்திலே பாதசரம்
வீட்டுக்கும் நாட்டுக்கும் போட்டு நடந்தாலும்
இங்கிதம் குலுங்குமாம் பாதசரம் (தன்னனே)

4. சாந்துப் பொட்டு தளதளென — நல்ல
சந்தனவாடை குமுகுமென
கூந்தலழகுக் காரியெல்லாம் — காலைக்
குதித்துக்கும்மி யடியுங்கடி
அஸ்த கடகம் பளபளென!
அரை நூல் மாலை தள தளென!
விஸ்தாரமாகவே நின்று கொண்டு
வீசிக் கும்மி யடியுங்கடி

*(ஆ) இராட்டைக் கும்மி :*

அடி ராட்டை இன்னா ராட்டை
இருப்பூட்டு ராட்டை
அப்படி இருப்பூட்டு ராட்டை
அப்படி மரப்பூட்டு ராட்டை

மரப் பூட்டு ராட்டை
அப்படி கருங்காலி ராட்டை

இரட்டையை எடுத்துவைத்தாளாம் — அப்படிப்
பஞ்சுமெடுத்து வைத்தாளாம் !
பஞ்சுமெடுத்து வைத்தாளாம் ! — அப்படிப்
பாடிப் பாடியே நூற்றாளாம்! — அப்படிப்
பத்துப் பணத்துக்கு நூற்றாளாம் !
நூற்ற நூலைக் கொண்டுகிட்டு
எங்கெங்கோ போறாளாம் !
செல்லக்கா வல்லையா சந்தைக்கு
குப்பக்கா வல்லையா சந்தைக்கு
வேகு வேகின்னு போறாளாம் !
வெகு விரசாப் போறாளாம் !
திங்கட்கிழமைச் சந்தையிலே
திருப்பிவிட்டான் என்னூலை !
புதன்கிழமைச் சந்தையிலே
போதுமின்னான் என்னூலை !
வெள்ளிக்கிழமைச் சந்தையிலே
வேண்டாமின்னான் என்னூலை
தாராபுரம் சந்தையிலே
தள்ளி விட்டான் என்னூலை !
பாடியூருச் சந்தையிலே
பாதுகாத்தான் என்னூலை !
ஆலத்தூருச் சந்தையாம்
மேலத்தூருச் சந்தையாம்
ஆலத்தூருச் சந்தையிலே !
அறிஞ்ச மனிசன் கடைக்காரன் !
அறிஞ்ச மனிசன் கடைக்காரன்
அஞ்சாறு பணத்துக்கு எடுத்தானாம் !

... ... ... ... ... ... ...

எல்லாம் வாங்கிக் கணக்குப் பார்க்க
ஒருகாசுமிச்ச மாச்சுதாம் !

(5) *கோமாளிப் பாட்டு :*

கோமாளி ஒரு வேஷம் விநோதமான வேஷம். கோமாளியின் தலையில் நீண்டு நுனியில் வளைந்த குல்லாய் ஒன்றிருக்கும். அவருக்குத் தாடியும் மீசையும் மிக நீளம். அவை அநேகமாகப் புளிச்சை நாரினால் ஆனவைகளாக விருக்கும்! பல் பெரியவை, எப்பொழுதும் வெளியில் தெரியும்; இவை இருவரிசையாகக் கோக்கப் பெற்ற சிறு சோழிகள். வயிறு பெரிதாக விருக்கும். சிலர் இடுப்பில் மணி கட்டிக் கொள்வர். காலில் சதங்கை கட்டியிருப்பர். பாடிக்கொண்டு ஆடி யாவரையும் சிரிக்கச் செய்வதே அவர் வேலை.

கோமாளி இல்லாத தெருக்கூத்தே இருக்க முடியாது. 40 ஆண்டுகளுக்குமுன் எனது கிராமத்தில் நான் பார்த்த தெருக்கூத்தின் நினைவு இன்றும் பசுமையாக இருக்கிறது. நாடக ஆரம்பத்தில் சூத்திரதாரர் வருவார். சபையை வணங்கி, நாடகத்தின் சாரத்தைச் சொல்லுவார். அதற்கடுத்தாற்போல் கோமாளி பாடிக்கொண்டே வருவார். அவருக்கும் சூத்திரதாரருக்கும் உரையாடல் நடக்கும். சூத்திரதாரர் கோமாளியைப் பார்த்து நாடகம் விக்கினமில்லாது நடக்க விநாயகரை வணங்குமாறு சொல்வார் :

| | | |
|---|---|---|
| **கோமாளி :** | வெள்ளரிக் | காயா |
| | விரும்புமவ | ரைக்காயா ! |
| | உள்ளமிள | காயா ! |
| | ஒருபேச் | சுரைக்காயா ! |

என்பார். சூத்திரதாரர் திகைத்து, ''இதென்ன விநாயகரை வெள்ளரிக்காய், அவரைக்காய், மிளகாயென்று தூஷிக்கிறாயே?'' என்பார். கோமாளி, ''வெள்ளையானை முகத்தவனே, உன்னை விரும்புபவர்களைக் காப்பவனே. உன் உள்ள மிளகி எனக்கொரு வார்த்தை சொல்'' என்று பாட்டுக்கு விளக்கம் கூறுவார். திரைக்குப் பின் விநாயகர்

தோன்றிக் கோமாளியை விகடகவியாகுமாறு ஆசீர்வதிப்பார். அதேபோல் சரஸ்வதியை வணங்கும் போது கோமாளி, ''தட்டுவாணி, வணங்குகிறேன்'' என்பார். பின்பு அந்தப் பதத்திற்குக் 'கமல சரஸ்வதி' எனப் பிரித்துப் பொருள் கூறுவார். பின்பு நாடகத்தில் மோகினிப் பெண்ணும் மோகினி ராசாவும் வருவர். அதன் பின் ராசா வந்து கதை நடக்கும். இறுதிக் கட்டத்தில் பல வேஷங்கள் வரும். இந்த ஒவ்வொரு காட்சியிலும் கோமாளி இருந்து நாடகத்திற்கு ருசியும் மணமும் கொடுப்பார். அவர் வராவிட்டால் ரசிகர்கள் ''கோமாளி, கோமாளி'' எனக் கூச்சலிடுவர். நாடகங்களே யல்லாமல் ஊரில் நடக்கும் விழாக்களின் போதும் நடிப்புத் திறமையுள்ளவர்கள் கோமாளி வேடம் போட்டு வீடு வீடாகச் சென்று ஆடிப்பாடிப் பரிசு வாங்குவது உண்டு. ஒரு சில கோமாளிப் பாடல்களை அடியில் காணலாம் :

(அ) ''பேயா மழையும் பேஞ்சுக்கிச்சாம்
பெரிய வெள்ளமும் வந்துக்கிச்சாம்
ஆரா மீனு ஆத்திலே
குள்ளக் கெண்டை குளத்திலே

(வசனமாக, 'வீட்டிலே எம் பெண்டாட்டி என்ன செய்தாள் ?')

அதிலே ஒரு படி வாங்கிக் கிட்டா
இதிலே ஒரு படி வாங்கிக் கிட்டா
எல்லாம் சேத்து மூட்டை கட்டி
வீடு தேடி வந்தாளாம்
அரிந்து அரிந்து போட்டாளாம்
ஆணச்சட்டி நிறைஞ்சதாம்
வெந்ததின்னு ஒரு கண்டம்
வேகாமலே ஒரு கண்டம்
எடுத்து எடுத்துத் தின்னாளாம் !
எல்லாமுமே தின்னாளாம் !

அத்தனையும் சாப்பிட்டுவிட்டு
அடுத்த வீடு போனாளாம்!
மூணு மயிரைப் பிடிச்சிழுத்து
மூணு குத்து வைத்தாளாம் — அவன்
எட்டி மயிர் பிடித்து
எட்டுக் குத்து வைத்தானாம்
அடிகளை வாங்கிக் கொண்டு
அப்பா வீடு போனாளாம்!
பொந்து விழுந்த
பூசணிக்காய் போறதைப் பாரு!
அங்கே ரெண்டு
போடு போட்டு
வாரதைப் பாரு!

*பாட்டுக்கு ரசமான விளக்கம் கூறிக்கொண்டே பாடுவார்.*

*(வேறு)*

(ஆ) வண்டிக் குள்ளே பெண்ணைப் பாரு!
பெண்ணின் கையில் கிளியைப் பாரு!
கிளியின் வாயில் பழத்தைப் பாரு!
பழத்துக் குள்ளே புழுவைப் பாரு!
புழுவுக் குள்ளே பொட்டுப் பாரு!
பொட்டுக் கேத்த புடவைக் காரிங்கோ!

*(வேறு)*

(இ) தோசை திங்க ஆசை யாகுதே
படப்படப்பட சுடச் சுடச் சுட
பச்சை மிளகாயை நறுக்கி வச்சு
பசுவு வெண்ணெயை உருக்கி வச்சு
பத்துத் தோசையை அடுக்கி வச்சு
பப்படத்தைப் பொரிச்சு வச்சு
டும் டும் டும் ஏடண்டான்

| | |
|---|---|
| படப் படப் பட | சுடச் சுடச் சுட |
| அதிலே நாலு | இதிலே நாலு |
| எண்ணிப் | போட்டு |
| தோசை திங்க | ஆசையாகுதே—அப்பாடா |
| சிறுமலைப் | பழம் |
| பொங்கச் | சோத்தை |
| சேத்து | உருட்டிப் போட்டு |
| டுண் டுண் | டுண் டுண் (தோசை) |

"பெண்களைப் போலவே கிராமங்களும் மக்களுடைய அடிப்படைத் தேவையான உணவைத் தருவதோடு, எளிய வாழ்க்கைப் பாடல்களின் மூலமும் எவ்விதச் சிரமமுமின்றித் தாமாகவே எழுகின்ற அழகு விழாக்களின் மூலமும் மக்களுக்கு இன்பத்தைத் தருகின்றன."

—*தாகூர்*

கிராமச் சூழ்நிலை காரணமாகவும், சந்தர்ப்பங்கள் காரணமாகவும், கிராமங்களில் பல விழாக்களைக்கொண்டாடும் வாய்ப்பு ஏற்படுகிறது. அவற்றை மக்கள் இறை வழிபாடாகக் கொள்ளுகின்றனர். அறுவடைக்குப் பின் அடுத்த பயிரிடும் பருவம் ஆரம்பமாகும் வரை கிராமத்தில் விழாக்கள் கொண்டாடுவார்கள். இயற்கையின் மூலம் தாம் பெற்ற நண்மைகள் அத்தனைக்கும் நன்றி தெரிவிக்கும் முறையில் அவ்விழாக்கள் அமையும். அவற்றில் பின்வருவன சில :

(அ) கரகம் :

கரகமென்பது ஒரு வகைப் பூக்குடம், சாமி கும்பிடும் போது எடுக்கப்படும் பூர்ண கும்பமாகும். பல கோவில்களில் திருவிழா ஆரம்பமாகு முன் கரகமெடுத்து வந்து மூலஸ்தானத்தில் வைக்கின்றனர். கரகத்திற்குக் கும்பக் கரக

மென்று பெயர். வயது வந்த ஆண்கள்தாம் கரகமெடுப்பார்கள். 'சாமி சாட்டி' விட்டால் சம்பந்தப்பட்டவர்கள் விரதமிருப்பார்கள். சாமி எந்தத் தீர்த்தத்திலிருந்து கரகம் கொண்டு வரும்படி உத்தரவு கொடுக்கிறதோ, அங்கு இரவில் ஊர் அடங்கியபின் சம்மந்தப்பட்டவர்கள் போவார்கள். பெண்களோ குழந்தைகளோ போவதில்லை. ஒரு செம்பில் தீர்த்த மெடுத்து, அதில் மஞ்சளைக் கலக்கி, அதனுள் சிவப்பு அரளிப் பூவையிட்டு, பூவால் அதை அலங்காரம் செய்து பூர்ண கும்பமாக்கிவிடுவர். தெய்விக சக்தி அந்தக் கும்பத்தில் 'தாளிக்கப்படுகிறது' என்று சொல்லுகிறார்கள். தெய்விக சக்தி ஆவாஹனம் செய்யப்படுகிறது போலும். மேள வாத்தியங்கள் முழங்கும். பூசாரிக்கு அருள் வந்து விடும். அவர் கரகத்தை எடுத்து ஆடிக்கொண்டே கோவிலுக்கு வருவார். கரகம் கனமாக இருக்குமென்பர். மிகச் சக்தி வாய்ந்த தெய்வமாக இருந்தால் கரகத்தைக் குதிரையின் மேல் வைத்துக் கொண்டு வருவதுமுண்டு. திருவிழா முடியும் வரையில் கரகம் கோவிலில் இருக்கும் கடைசி தினத்தன்று நள்ளிரவில் கரகத்தை ஆற்றில் கலக்கிவிடுவர். சாதாரணமாகத் தெய்வம் கோவிலில் இருப்பதில்லை, பரிசுத்தமானவர்கள் சென்று அதை அழைத்துவந்து திருவிழாவின்போது அங்கிருக்கச் செய்கின்றனர் என்ற கருத்து வெளியாகிறது. "இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்திலே எங்கே கூடி இருக்கிறீர்களோ, அங்கே அவர்கள் நடுவிலே நான் இருக்கிறேன்," என்று இயேசுகிருஸ்து கூறிய அருள்மொழி இங்குகுறிப்பிடத்தக்கது.

இஃதன்றி ஒரு சிலர் கரகமெடுத்து ஆடுவதையே இப்பொழுது தொழிலாகக் கொண்டுள்ளனர். பம்பைக் கொட்டுடன் வாத்தியங்கள் வாசிக்க, அதற்குத் தகுந்தாற்போல் தலையில் கரகத்தை வைத்துக் கொண்டு ஆடுகின்றனர். யாவரும் பிரமிக்கத்தக்க வகையில் பலவகை ஆட்டங்களிருக்கும். சில சமயங்களில் பாட்டுமிருக்கும்:

ஒண்ணாங் கரகமம்மா
எங்க கண்ணனூரா !
என்னைவளர்த்த தாயே !
ஆதிபரஞ் சோதி !
அழகுமுத்து மாரி !
உருண்டாடும் பொன்கரகம்
முத்துமாரித் தாயே !

(முன் பாட்டிலுள்ள அடிகளைச் சேர்த்துப் பாடவும்)

மூன்றாங் கரகமம்மா
... ... ...
முத்தான பொன்கரகம் !
முத்துமாரித் தாயே !
அஞ்சாங் கரகம்மா ,,
... ... ...
அசைந்தாடும் பொன்கரகம்
முத்துமாரித் தாயே'
ஏழாம் கரகம்மா
... ... ...
எடுத்தாடும் பொன்கரகம் !
முத்துமாரித் தாயே !
பத்தாம் கரகமம்மா ,,
... ... ...
பதிந்தாடும் பொன்கரகம்
முத்துமாரித் தாயே !
உன் கரகம் பிறந்ததம்மா
மாயி மகமாயி கண்ணனூர் மேடையிலே!
உன் பம்பை பிறந்தம்மா
ஆயி மகமாயி பளிங்குமா மண்டபத்தில்!
உன் சூலம் பிறந்ததம்மா
ஆயிரங்கண்ணுடையா துலங்குமணிமண்டபத்தில்!

உன் உடுக்கை பிறந்ததம்மா
மாயிமகமாயி உத்தராட்ச பூமியிலே !
வடக்கே பிறந்தவளாம்
வடநாடு காவல்கொண்டா !
கிழக்கே பிறந்தவளாம் !
கீழ்நாடு காவல்கொண்டா !
மேற்கே பிறந்தவளாம்
மேனாடு காவல்கொண்டா !
தெற்கே பிறந்தவளாம்
தென்னாடு காவல்கொண்டா !

(ஆ) *பந்தலிடுதல்*

''ஓடியோடி யோடி யோடி
யுட் கலந்த சோதியை
நாடி நாடி நாடி நாடி
நாட்களுங் கழிந்துபோய்
வாடி வாடி வாடி வாடி
மாண்டு போன மாந்தர்கள்
கோடி கோடி கோடி கோடி
எண்ணிறந்த கோடியே''
''நட்ட கல்லைத் தெய்வமென்று
நாலுபுட்பஞ் சாத்தியே
சுற்றி வந்து மொணமொணென்று
சொல்லு மந்திரமேதடா
நட்ட கல்லும் பேசுமோ
நாதனுள் ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவங்
கறிச்சுவை யறியுமோ''

என்ற சிவ வாக்கியர் பாடல்களில் அருவவழிபாட்டின் உயர்வு குறித்துக் கூறப்பட்டுள்ளது. தமிழ்மக்கள் கடவுளைக் 'கந்தழி' என்னும் பெயரால் வழுத்தினர். 'கந்தழியாவது

ஒரு பற்று மற்று அருவாய்த் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள்.' அது சார்பினால் தோன்றாது. தான் அருவாய் எப்பொருட்கும் சார்பென நின்று எஞ்ஞான்றும் இன்பந் தகைத்தரோ, வாய்மொழியான் மெய்யான் மனத்தான் அறிவிறந்த தூய்மையதாம் மைதீர் சுடர்'' எனத் தொல் காப்பியத்தில் நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார்.

இதனை,

''உற்ற வாக்கையுள் உறுபொருள்
நறுமலர் எழுதரு நாற்றம்போல்
பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்''

எனத் திருவாசகம் கூறும். இவ்வுயரிய கருத்து தமிழ் மக்களிடையே இன்றும் நிலைத்திருக்கின்றது.

குக் கிராமங்களிலும் உருவமில்லாத தெய்வ வழிபாடு நடைபெற்று வருகின்றது. ஒரு கிராமத்தில் முத்தாலம்மன் கும்பிடுவதற்காக ஊரில் பறை அறிவிக்கப்பட்டிருந்தது. பொங்கல் சாட்டி விட்டால் எவரும் ஊரைவிட்டு வெளிச் செல்ல மாட்டார்கள். அது பொங்கல் தடை. பொங்கல் சாட்டிய தினத்திலிருந்து பொங்கலிடும் நாள்வரை ஒரு வார காலத்திற்கு ஒவ்வொரு தினமும் இரவு நேரத்தில் பாட்டுப் பாடித் தெய்வத்தை அழைப்பர். இந்த மிக முக்கியமான பணியைச் சமூகத்தின் கீழ் நிலையில் வைக்கப்பட்டிருக்கும் ஹரிஜன மக்கள்தாம் செய்கிறார்கள். ஒருவர் கொட்டுக் கொட்டுகிறார். விரதம் பூண்டுள்ள ஒரு வயதான அம்மை யார் பாடுகின்றார். அதில் ஒரு பாட்டு தெய்வத்திற்கு அமைக்கவேண்டிய பந்தலைக் குறிக்கின்றது. அதைக் கூட மென்று பாட்டு குறிப்பிடுகின்றது. இந்தக் கூடத்தின் கீழ் தான் தெய்வத்தை எழுந்தருளச் செய்ய வேண்டும். விண்ணிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கொளி யாய் ..'' இருக்கும் கூடத்தின் வர்ணனை நம் கற்பனைக் கடங்காததாக விருக்கின்றது.

பாட்டு

கூடமோ கூடம்
குலாவிய கூடம்
[1]ஆட்டானும் மாட்டானும்
[2]அடையுமந்தைக் கூடம்
அழகிய சம்பா
விளையு மந்தக்கூடம்
காசாலே கட்டினால்
களிம்பே பிடிக்குமின்னு
பணத்தாலே கட்டினால்
பாசம் பிடிக்குமின்னு
[3]கெண்டை மீன்கொண்டு
கீ(ழ்)வரிச்சுக் கட்டி
[4]அயிரை மீன்கொண்டு
ஆக்கை இறுக்கி
[5]விரா(ல்)மீன் கொண்டு
மே(ல்)வரிச்சுக் கட்டி
ஒருசொளகு பொன்கொடுத்து

---

1. ஆட்டானும் மாட்டானும் - உயிரினங்கள் அனைத்தும்.
2. அடையுமந்தக் கூடம் - அந்தக் கூடாரத்தின் கீழ்த் தங்கி வாழும்.
3. கெண்டை மீன்கொண்டு - சேல் கெண்டை போன்று மின்னும் வானத்து மீன்களைக் கொண்டு.
4. அயிரை மீன் : தலையைத் தொட்டவுடன் வாலைத் தூக்கி வளையும் ஒருவகை மீன். நட்சத்திர ராசிகளில் விருட்சிகம் போன்றவை வாலைத் தூக்கி வளையும் மீன் போன்றிருப்பது இங்கு நோக்கற்பாலது.
5. விரால் மீன் : இவ்வகை மீன்களின் அடிவயிறு நீல நிறமாக விருக்கும்-ஒரு வேளை மீனினங்களுக் கிடையே பார்க்கும் போது மேல்தளத்தில் தோன்றும் நீலநிற வானத்தையே இது குறிக்கின்றது போலும்.

முத்தாலம் மாணுக்கு
ஒழுகாமல் கட்டும்கூடம் — அம்மாளே
பொழுதேறப் பொழுதேறப்
பொன்கூடம் மின்னுதல்லோ

என்று பாடி முடித்தவுடன், கொட்டும் குலவையுமிருக்கும்.

பாட்டின் அடிக்குறிப்பில் கூறியது போன்று பாடலை உற்று நோக்கினால், அந்தக் கூடம் நம் தலைக்கு மேல் விரிந்து பரந்து நிற்கும் வானக்கூரையின் கீழ்தான் மக்கள் தெய்வத்தை நிலைநிறுத்தி வழிபட்டனர் என்பது தெளிவாகின்றது. தெய்வம் மனிதனால் அமைக்கப் பெற்ற கோவிலிலோ, சிலையிலோ இல்லை. அஃது ''ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த சோதி'' என்ற உயரிய கருத்து சாதாரண மக்களிடத்தும் இன்றும் நிலைபெற்றிருக்கின்றது.

(இ) *முளைப்பாரி :*

முளைப்பாலிகையை கிராமத்தார் 'முளைப்பாரி' என அழைக்கின்றனர். ஆண்கள் கரகத்தில் தெய்வத்தைக் காணுவது போல், பெண்கள் விரதமிருந்து ஒரு சட்டியில் மண்போட்டு நவதானியங்களை நாட்டிவைத்து நீர் தெளித்து முளையுண்டாக்கி, அதை நிழலிலேயே வளர்த்து பூவால் அலங்கரித்து, அதைத் தெய்வமாக நினைத்து, யாவரும் அதைச் சுற்றி நின்று கைகொட்டி ஆடித் துதிபாடுகின்றனர்; ஊர்வலமாக எடுத்து வருகின்றனர். பத்தாம் நாள் ஆற்றில் கரைத்துவிடுகின்றனர். கீழ் வரும்பாட்டில் அந்த விவரம் அடங்கியுள்ளது.

குசவனுட — சூளையிலே
குடமெடுத்து — ஓடுடைச்சு
வட்டவட்ட — ஓடுடைச்சு
திட்டமுள்ள — முளைபரப்பி
ஆட்டான் — தொழுத்திறந்து

ஆட்டெருவைக் கொண்டுவந்து
மாட்டான் தொழுத்திறந்து
மாட்டெருவைக் கொண்டுவந்து
சம்சாரி படப்பையிலே
சம்பா வைக்க ரெண்டெடுத்து
முதலாளி படப்பையிலே
முத்து வைக்க ரெண்டெடுத்து
கடுகு சிறுபயறு
காரா மணிப்பயறு
என்றும் சிறுபயறு
எங்கும் படியளப்பா !
கன்னி முளைதெளிச்சா
கல்யாணம் கூடுதும்பா !
இருசி முளைதெளிச்சா
இந்திரனைப் பெத்தெடுப்பா !
மலடி முளைதெளிச்சா
மன்னவனைப் பெத்தெடுப்பா !
ஒன்ணாங் கிழமன்னைக்கு
ஓரிலையாம் முளைப்பாரி
இரண்டாம் கிழமன்னைக்கு
இரண்டிலையாம் முளைப்பாரி
மூணாம் கிழமன்னைக்கு
முத்தும் பயிராயிருக்கும்
நாலாம் கிழமன்னைக்கு
நாலிலையாம் முளைப்பாரி
அஞ்சாம் கிழமன்னைக்கு
மஞ்சமுளை கொண்டிருக்கும்
ஆறாம் கிழமன்னைக்கு
ஆறிலையாம் முளைப்பாரி
ஏழாம் கிழமன்னைக்கு
எடுத்திடுவா முளைப்பாரி

எட்டாம்
எட்டெலைக்கும்
ஒன்பதாம்
ஊருசுத்தி
பத்தாம்
பதனம்
தானானே தானானே !

கிழமன்னைக்கு
காப்புக்கட்டி
கிழமன்னைக்கு
வருவாக !
கிழமன்னைக்குப்
அடைஞ்சிடுமே !
தானானே தானானே !

*காளி — மாரி கும்மி :*

1. காளியம்மன் கோவிலிலே
கனத்தமரம் இச்சி — மேலே
பறக்குது பார் பச்சி — காளி
வகுந்திருப்பா உச்சி
கழுத்திலிடும் தாவடமும்
கனக்கு திம்பா பிச்சி !

2. மாரியம்மா காதிலே — ஓர்
வைரக் கல்லாம் ஓலை — அவளுக்கு
மல்லிகைப்பூ மாலை
மஞ்சப்பட்டாம் சேலை
மாலை கனக்குதின்னு
மகிழ்திட்டாளாம் மாரி

3. ஆத்து மணல் குவித்து
அழகு கும்பந் தானிறுத்தி — அதில்
அடுக்குமல் லிகைதொடுத்து — அதில்
தொடுத்தெரியு மாம்பத்தி
அத்தனையும் நான்படைச்சேன்
ஆத்தாளுக்கு நான்ஒருத்தி !

*(வேறு)*

தன்னன னாதினம் தன்னானே — தனம்
தன்னன னாதினம் தன்னானே.

1. மங்கையரெல்லாம் வாருங்கடி — நல்ல
மாணிக்கக் கங்கைநீ ராடுங்கடி
சிங்கார மாய்நகை பூட்டுங்கடி — நல்ல
சிறந்த குங்குமம் தீட்டுங்கடி !

2. கும்மியடிக்கிற பெண்டுகளே — நீங்க
கோணாமே வாருங்க கன்னியரே
வளைஞ்சு கும்மியை நாமடிச்சா — நீங்க
வரங்கள் கொடுப்பாளே முத்தாலம்மா !

3. மூங்கில் முனையிலே பச்சரிசி — நல்ல
முப்பது தேங்காயாம் சக்கரையாம்
வச்சுப் படைக்கிற முத்தாளுக்கு
வணங்கிக் கும்மி யடியுங்கடி !

4. நாலு தெருவுக்கும் நாலு குப்பம்
நடுத் தெருவிலே ஆலாத்தி
ஆலாத்திப் பெண்களை முன்னேவிட்டு
ஆராட்டம் பாக்கிறா முத்தாலம்மா!

5. ஊருக்கு வடக்கே ஆல மரத்தடி
ஊமைத்துரை மக்க சாவக்கட்டு
மூணாம் பொதுவிலே முத்தாலம்மா
முத்துவண்ணச் சேவல் கொண்டுவந்தா !
நாலாம் பொதுவிலே காளியம்மா !
நாகவண்ணச் சேவல் கொண்டுவந்தா !
அஞ்சாம் பொதுவிலே மாரியம்மா !
பஞ்சவண்ணச் சேவல் கொண்டுவந்தா
இத்தனை சேவலை எதிர்த்துமே கொத்துதாம்
எங்க முத்தாலம்மா ! சாதிச் சேவல் !

(ஈ) *தேரோட்டம்* :

தென்னிந்தியாவிலுள்ள தேர்கள் மிகப் பெரியவை. கலையழகு நிறைந்தவை. திருவிழாவின் முடிவு நாளில்

தேரின்மேல் தெய்வத்தை வைத்து மக்களெல்லாம் ஒன்று திரண்டு தேர்வடத்தைப் பற்றி அதை ஊர்வலமாக இழுத்து வந்து நிலைநிறுத்துவர். ஸ்ரீவில்லிபுத்தூர், திருவாரூர், மதுரை, காஞ்சிபுரம் போன்ற ஊர்களில் பெரிய தேர்கள் உண்டு. தேரோட்டம் பற்றிய ஒரு பாட்டைக் கீழே காணலாம் :

| | |
|---|---|
| கடுக்கா நல்ல | ஏலேலோ மரம் பிளந்து ஐலசா |
| கண்டியம்மன் | ஏலேலோ தேரு செய்து ஐலசா |
| தேரசைய | ஏலேலோ ரதங்குலுங்க ! ஐலசா |
| தேசத்தாரே | ஏலேலோ கையெடுக்க ! ஐலசா |
| கையெடுத்த | ஏலேலோ பேர்களுக்கு ! ஐலசா |
| கைலங்கிரி | ஏலேலோ போனபலன் ! ஐலசா |
| பாக்கு நல்ல | ஏலேலோ மரம்பிளந்து ! ஐலசா |
| பழனியப்பன் | ஏலேலோ தேரு செய்து ! ஐலசா |
| தேரசைய | ஏலேலோ ரதங்குலுங்க ! ஐலசா |
| தேசத்தாரே | ஏலேலோ கையெடுக்க ! ஐலசா |

(உ) உடுக்கு :

இதை முத்திரி, கோடாங்கி என்று அழைப்பர். உடுக்கை யடிப்பவருக்குக் கோடாங்கி என்ற பெயருமுண்டு. கோடாங்கி தான் சில கோவில்களுக்குப் பூசாரியுங்கூட. அவரால் சாமியை அழைக்க முடியும்; பேய் பிசாசுகளை விரட்டமுடியும், குறி சொல்லவும் முடியும்; பல திருவிழாக்களை அவரின்றி நடத்த முடியாது. அவருடைய உடுக்கடியும் பாட்டும் கேட்போரை மயிர் சிலிர்க்கச் செய்யும், ஆடக்கூட வைக்கும். அவர் பாடும் பாடல்களில் சில வருமாறு :

*சாமியை வருந்தி அழைத்தல்*

| | |
|---|---|
| ஓம் சரவண | பவமுருகனே ! |
| உன்னைப் பணிந்தேன் | கதிர்கடம்பனே ! |
| வள்ளி மணாளனே | வடிவேலய்யனே ! |
| நெடுநாளாகவே | தேடினேன் கந்தனே ! |

சடை வளர்த்தவன் சற்குருவானவன் !
சண்முகநாதன் எனும் பெயர் கொண்டோன் !
தெற்கே சுருளி மலைவளர்ந்தவன் !
தீர்த்தத் தொட்டிகள் காத்துவந்தவன் !
சுப்பையா என்றொரு நாமம் படைத்தவன் !
கண்டியிலேயவன் தவம் முடித்தவன் !
கதிர்காம மென்னும் மலைவளர்ந்தவன் !
குருவே நமசிவாய ! உன்பாதம் நான்மறவேன் !

*மாரியாத்தாளை அழைத்தல் :*

[1] மசிரான் படைக் காலம்
மாரி வெளியேறித்
தங்க இடம் இல்லாமல்
தனியே வெளியேறி
வீரபாண்டி எல்லை — மாரி
விடுதியில் உட்கார்ந்தாள் !
கீரைக் கரையாம்
கிருதுமா நதி வாய்க்கால்
சுத்திப் புளிய மரம் — மாரிக்குச்
சூழ்ந்த நெல்லி மாமரமாம்
முல்லைக்கால் பாசனமாம் — மாரிக்கு
முதமடையே சீதனமாம்
மருகாத் துறையாம்
மணியம்புள்ளை நந்தவனம் — மாரி
தங்கலாமின்னு சொல்லி — மாரி
தலம்பாத்தா அந்நேரம்
தங்கத் தரா செடுத்து — மண்ணைத்
தானா கிறுப் போமின்னு
மண்ணு ஒரு தட்டில்

1. மசிரான் படைக்காலம் - மைசூரை ஆண்ட ஹைதர், திப்புவின் படையெடுப்புச் சமயம்.

பொன்னு
நிறுத்தாளாம்
நிலை நிறுத்த
மண்ணே
வளைச்சடிச்சா
டோராவை!

ஒரு தட்டில்
அந்நேரம்—மாரி
வேணுமின்னு
யிழுக்குதின்னு — மாரி
டோராவை !
டோராவை !

*பேய் வர்ணிப்பு :*

மலையே
மாமலையில்
மலையை விட்டுக்
மங்கைமேலே
சுத்தலையோ?
சுழலலையோ
ஆடலையோ ?
சாயலையோ !
கூப்பிட்டது
குஞ்சரமே
மதுரை போறேன்
சீமை போறேன்

வடமுகமே !
பொன்னுவண்டே !
கிளம்பலையோ?
பாயலையோ?
மாசடையை
இந்த வேளை
மாசடையை
மங்கைதலை !
கேட்கலையோ !
நீ திரும்பு !
மாலை வாங்க !
செண்டுவாங்க !

(ஊ) *தேவராட்டம் : சேர்வை கட்டியாடுதல் :*

தமிழ் நாட்டில் கன்னடம், தெலுங்கு மொழிகளைத் தாய் மொழிகளாகக் கொண்ட இனத்தவர்களுள் சிலர் தங்களைக் கம்பளத்தவர் என்று கூறிக்கொள்ளுகின்றனர். இவர்களுக்கு ஒன்பது கம்பளமென்று பெயர். ஒன்பது இனத்தைச் சேர்ந்தவர்கள். ஒரே கம்பளியின் மேல் உட்கார்ந்து முக்கியமான சமூகப் பிரச்சினைகளுக்கு முடிவு காண்பர். இவர்களுக்குள் பல பொதுவான பழக்க வழக்கங்களுண்டு.

இவர்கள் ஸனாதன இந்து மதத்திலுள்ள மும்மூர்த்திகளை வணங்கினாலும், மாலைத் தெய்வந்தான் இவர்களின்

குலதெய்வம். ஒருவர் இறந்தால் அவருக்கு இடுகாட்டில் ஈமக்கடன்கள் முடிந்தபின், அங்கு அவருக்கு ஓர் ஒப்பக்கல் நாட்டப்படும். ஒரு வருட காலம் விசேட தினங்கள் தோறும் அதற்குப் பூசை செய்யப்படும். ஆண்டு முடிந்த பின், மாலைக் கோவில் கும்பிடும்போது, பல சடங்குகளுக்குப்பின், மேள தாளத்துடன் ஒப்பக்கல்லிலுள்ள ஆவி மாலைத் தெய்வத் துடன் சேர்க்கப்படும். மாலை என்பது உயிர்மாலை போலும். இறந்த முன்னோர்களை வழிபடும் வழக்கமே இவ்வுருப் பெற்றிருக்க வேண்டும்.

இம்மாலைக் கோவில் வழிபாடு வருடமொரு முறை இருக்கும். அச்சமயம் பல கலைநிகழ்ச்சிகளிருக்கும். அதில் சலகை எருது ஓட்டுதல் என்பது ஒன்று; தேவராட்டம் ஆடுதல் மற்றொன்று. இவ்வாட்டத்தை ஆண்களே ஆடுவர். நீளமான ஜரிகைக்கரை வேட்டியொன்றைக் கட்டிக்கொண்டு, கழுத்தில் நீளமான துண்டு போட்டுக்கொள்வர்; தலையில் தலைப் பாகையிருக்கும். துண்டின் இரு நுனிகளையும் கையிலெ டுத்து வீசிக்கொண்டு ஆடுவர். காலில் சதங்கை மணி ஓசையிடும். உருமிக் கொட்டுத் தாளமிடும். இதில் முப்பத்தி ரண்டு வகை ஆட்டமிருப்பதாகக் கூறுகின்றனர். ஆட்டம் கவர்ச்சியாக விருக்கும். ஆனால் இதில் பாட்டிராது.

சேர்வை கட்டியாடுதல் மற்றொரு வகை. இதில் உடை வகைகள் கவர்ச்சியாக விருக்கும். தலையில் ஜரிகைத் தலைப்பாகையிருக்கும். பாகையின் வால் பின்புறம் தொங்கும் கழுத்தில் முன் கூறியதுபோல நீண்ட துண்டு உண்டு. இடுப்பில் பாவடை கட்டி கொள்வர்; ஜாக்கெட்டும் போட்டுக் கொள்வர்! காலில் சதங்கை மணியுண்டு. கையில் ஜால்ரா அல்லது கஞ்சரா அல்லது சப்ளாக்கட்டை அல்லது சேகண்டி வைத்துக்கொண்டு பாடிக்கொண்டே ஆடுவர். பாட்டுகள் தெலுங்கிலேயே இருக்கும். மாதிரிக்கு ஒரு பாட்டு கீழே தரப்படுகிறது. பாட்டின் கருத்து, ''சீரங்க சுவாமி நீ ஒரு

பாலகனாக ஆடு, பாடு. சிறிய கால் சதங்கையை உன் காலில் கட்டிக்கொண்டு கண்ணைச் சிமிட்டிச் சிமிட்டியாடு; பெரிய சதங்கையை உன் காலில் கட்டிக் கொண்டு பகட்டாக நீ யாடு'' என்பதாகும். பாட்டின் முதலடியிலுள்ள தெய்வ நாமத்தை மாற்றி, பெருமாள்' அழகர், கோபாலர் எனச் சேர்த்துக் கொண்டு அதே பாட்டு நீடித்துப் பாடப்படும்:

சீரங்க ரங்கசாமி
நீ பாலடு நீ பாலடு!
ஆடேடு நீ பாலடு படே டம்மா!
சின்னக கெச்சலே கட்டி
சிமிட்டி டம்மோ!
பேதாகு கச்சலே கட்டி
பகட்டி டம்மோ!

*

# 12

# கதைப் பாட்டுக்கள்



''ஒரு நாட்டில் வழங்கி வரும் கதைப்பாட்டுக்கள், அந்த நாட்டின் சட்டங்களைவிட முக்கியமானவை'' என ஆண்ட்ரூஸ்பிளெச்சர் என்னும்மேனாட்டுஅறிஞர் கூறுகிறார். சட்ட நிபுணர்கள் எந்தச் சட்டத்தை வேண்டுமானாலும் செய்யட்டும், ஆனால் நாட்டின் கவிஞர்கள் மட்டும் தடையின்றித் தங்கள் கவிதைகளைப் பாடிக்கொண்டிருக்கட்டும்! அவை மக்களின் மனப்பான்மையை, எண்ணத்தை மாற்றும் இயற்கையான சட்டங்களாக ஆகிவிடும் என்னுங் கருத்தை கார்லைல் வெளியிடுகிறார்.

சிவாஜியின் காலத்தில் மகாராட்டிர மக்களிடையே தேசீய உணர்ச்சியை உண்டு பண்ணவும், 1857 இல் ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடந்த புரட்சிக்கு நாட்டை ஒன்று திரட்டவும், பம்பாய் மாகாணத்தைத் திலகர் தலைமையில் தேசீயக் கொடியின் கீழ் ஒன்றுபடுத்தவும் நாட்டுப் பாட்டுக் கதைகள் பெரிதும் பயன்படுத்தப்பட்டன!

வெளிநாடுகளில், முக்கியமாக அமெரிக்கா, டென்மார்க், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் அந்நாடுகளில் வழங்கி வரும் கதைப் பாடல்கள் பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்துள்ளனர். தமிழ் நாட்டில் அம்மாதிரியான ஆராய்ச்சிக்கான வாசல் திறந்திருக்கிறது. இங்கு மதுரை மாவட்டத்தில் பாடப்படும் ஒரு சில கதைப் பாடல்களைப் பற்றிய விவரங்களை மாத்திரம் காணலாம்.

*தோற்றம் :*

கதைப் பாட்டுக்களைத் தனிப்பட்ட ஒரு புலவன் கட்டினானா அல்லது சமூகத்தில் பலர் சேர்ந்து அதற்கொரு உருக் கொடுத்தனராவென்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம். கதைப் பாட்டுக்களை உருவாக்குதல் தனிப்பட்ட புலவனுக்கு இடமேயில்லை; அது பலருடைய சேர்க்கையால், ஒத்துழைப்பால் உண்டானது என்பது ஒரு சிலரது அபிப்ராயம். கதைப் பாட்டுக்களிலுள்ள தாள லயமும், கற்பனையும், பாட்டின் இனிமையும் ஒரு புலவனின் சிருஷ்டியாகத் தானிருக்க முடியுமெனக் கூறுகின்றனர் வேறு சிலர். தமிழ்நாட்டில் வழங்கி வரும் கதைப் பாடல்களில் இவ்விரு வகையையும் சேர்ந்தவைகளைக் காணலாம்.

*வகை :*

கதைப் பாட்டுக்களில் பலவகையுள்ளன : (1) சரித்திர சம்பந்தமானவை ; (2) புராண சம்பந்தமானவை; (3) வீரச் செயல்கள் சம்பந்தமானவை ; (4) காதற் கதைகள் சம்பந்தமானவை.

*கான்சாகிப் சண்டை, கட்டபொம்மன் கதை, ராஜா* தேசிங்கு கதை போன்றவை *சரித்திர* சம்பந்தமானவை; பஞ்சபாண்டவர் வனவாசம், அல்லியரசாணி மாலை, சித்திர புத்திரன் கதை, வைகுந்த அம்மானை, காமன் பாட்டு போன்றவை புராண சம்பந்தமானவை; பௌன்னர்—சங்கர், ஜம்புலிங்கம் கதை, சந்தணம் பாட்டு, புலி சுட்டது போன்றவற்றில் வீரச்செயல்கள் நிறைந்திருக்கும்; புலேந்திரன் களவு மாலை, பொன்னுருவி மசக்கை, காத்தவராயசாமி கதை போன்றவற்றில் காதற் கட்டங்கள் நிறைந்திருக்கும். பெரிய உலக மகா காவியங்களெல்லாம்' ஆரம்பத்தில் நாடோடியாகப் பாடப்பட்ட பல கதைப் பாட்டுக்களின் தொகுப்பேயாகுமென்பது ஆராய்ச்சியாளர் முடிவு.

*பாடும் சமயம்; வகை :*

இப்பாடல்களைத் திருவிழாக் காலங்களில் பலர் ஒன்றாகச் சேருமிடங்களில் இரவிலும் பகலிலும் பாடுகிறார்கள். ஏகாதசி, சிவராத்திரி போன்ற நாட்களிலும், நிலவொளி மிகுதியாகவிருக்கும் வேலையில்லாத காலங்களிலும், இவற்றைக் கிராமங்களில் பாடுவதற்குக் கிராம மக்களே ஏற்பாடு செய்கின்றனர். தற்சமயம் கல்யாணவீடு, துக்க வீடுகளில் கூட மேற்படிக் கதைகள் பாடப்படுகின்றன. இப்பாட்டுக்களை நால்வராவது சேர்ந்து பாடுவர். உடுக்கு, சால்ரா, கடம், கஞ்சரா போன்ற பக்க வாத்தியங்களிருக்கும். காமன் பாட்டுக்குத் தப்பு தம்பட்டம் அல்லது டோலக் அடிக்கப்படும். ஒருவர் அல்லது இருவர் முன்பாட்டுப் பாடுவர்; இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர் பின்பாட்டுப் பாடுவர். இடையிடையே வசனங்கள் இருக்கும்.

*சந்தணம் பாட்டு :*

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் பிரிட்டிஷ் ஆட்சி உச்சநிலையில் இருந்த சமயம், மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் தாலுகாவில் போத்தம்பட்டி என்ற கிராமத்தில் ஒரு சாதாரண விவசாயியின் குடும்பத்தில் சந்தணம் என்ற வீரன் தோன்றினான். சிறிது காலத்தில் அவனது தாய் தந்தையர் பெரியகுளம் தாலுகாவிலுள்ள காமராசபுரம் என்ற ஊரில் குடியேறினர். துடுக்கு நிறைந்த அச்சிறுவனைப் பள்ளிக்கூடம் சிறை செய்ய இயலாது போயிற்று. ஆசிரியரையே அடித்துவிட்டுச் சந்தணம் பள்ளிக்கு முழுக்குப் போட்டு விட்டான்.

வாழ்க்கையில் பல வீரச்செயல்கள் செய்கிறான். தன்னை அவமானப்படுத்திய மருதமுத்துச் சேர்வையை வெட்டி வீழ்த்துகிறான். அரசாங்கம் அவனைக் கைது செய்ய முயல்கிறது. அதன் கெடுபிடிச் சட்டங்களும், அடிதடிப் போலீசும்,

பட்டாளங்களும்கூட அவன் முன் செயலற்றுப் போகின்றன. போலீசிற்கு அவன் சிம்மசொப்பனமாக விருக்கிறான். ஆனால் மக்கள், முக்கியமாக ஏழைகள், அவனை மிகவும் நேசித்து, அவனுக்குப் பக்க பலமாகவிருக்கின்றனர்.

அரசாங்கம் திகைத்துப் போனது. என்ன செய்வதென்று தெரியாமல், வெறிகொண்டு, சந்தணத்தின் பெற்ற தாயைச் சொல்லமுடியாத அவமானத்திற்குள்ளாக்குகின்றனர் செய்தி வீரன் காதுகளுக்கெட்டினது. மண்டு தீயென எழுந்தான். அந்த ஈனச் செயலுக்குக் காரணமாக இருந்த போலீஸ் அதிகாரியின் தலையைத் துண்டித்து, அதைத் தன் தாயின் காலடியில் வைத்து வணங்கினான்.

ஆண்டுகள் பல ஓடிவிடுகின்றன. சந்தணத்தின் புகழ் பெருகிக்கொண்டே யிருந்தது. ஆனால் கடின வாழ்க்கையும் சோதனைகளும் அவனுடைய உடம்பை வாட்டி நோயை உண்டுபண்ணி விட்டன. சந்தணம் சாதாரணமாகச் சாக விரும்பவில்லை. மதுரைக்கு சென்று, நீதிபதியின் முன் தோன்றி,

"வெட்டினவன் சந்தணந்தான்
தட்டிவிடு சூட்சியத்தை"

என்று கூறித் தூக்கு மேடையில் வீர மரண மெய்திப் புகழ் பெற்றான். அவனுடைய வீரச்செயல்களைப் பற்றி உடுக்கடித்துக்கொண்டு பாடும் பாட்டு வெகு நீளமானது—ஏழுநாள் கதை, அதிலிருந்து ஒரு சிறு பகுதியே கீழே தரப்பெற்றுள்ளது.

(அ) *கதைப் பாட்டுக்கள்* :

பிறந்தது போத்தம்பட்டி
வளர்ந்தது காமராசபுரம்
ஏழு வயசிலேயே
பள்ளிக்கூடம் போனார் பாரு!

மத்தியானச் சாப்பாட்டிற்கு — அவர்
கேளாமலே போனார் என்று
கட்டழகன் வாத்தியார்
பிரம்பைக் கொண்டு அடிச்சிட்டாராம்!
அப்போது சந்தணமும்
அலறியே வெளியே ஓடி!
கல்லை எடுத்தல்லவோ
வாத்தியாரை எறிஞ்சிட்டாராம்!
என்னப்பா சந்தணமே
இவ்வளவு கோபமாடா!
பெரியாளு ஆனயானா
எத்தனை கொலை செய்வேடா?
கச்சேரிக்கு ஆளாவடா!
இப்பவே நீ ஓடிப்போடா!
என்றுமே சொல்லையிலே
என்ன செய்தார் சந்தணமும்!
பெற்ற தகப்பனிடம்
சந்தணமும் என்ன சொன்னார்
பள்ளிக்கூடம் போக மாட்டேன்
கேசுவந்தா என் பொறுப்பு (தன்னன)

இஃதன்றி வேலைத் தலங்களில் தொழிலாளிகள் (ஆடவரும் பெண்டிரும்) சந்தணம் பாட்டைச் சந்தணம் மெட்டிலேயே பாடுவர். அது வருமாறு:

தன்ன னன்னே னானே னன்னே
னான னன்னே னான னன்னே
னால னன்னே னான னன்னே
னான னன்னே னானே னன்னே.
சந்தணம் பாட்டுப் பொன்னம்மாள்
சர்க்காரு ரோட்டு!
போனாப் பார்க்கலாம் பொன்னையா
புகைவண்டி ரோட்டு

1\. மதுரையிலே கம்பு வாங்கி
மந்தையிலே சிலம்படிச்சு
வீதி மறிச்சடிப்பான்
வீரப்புலி சந்தணமும் ! (தன்ன)

2\. தோட்டா வெடி யெடுத்துச்
சுருளுக் கத்தி யிடையிலிட்டு
சேருவையை வெட்டி விட்டு
தேசவழி போறானடி ! (தன்ன)

3\. ஏட்டை அடிச்சு வச்சான்
இனுசுப் பட்டரைக் கட்டிவச்சான்
சிப்பாயி மார்களெல்லாம்
தோப்புக்கரணம் போட வச்சான்! (தன்ன)

4\. வீர பாண்டி ஏட்டுகளாம்
வித விதமாய்ச் சிப்பாயாம்
துவரங்காயைத் தின்னச் சொல்லித்
தொலுக்கிட்டானாம் சந்தணமும் ! (தன்ன)

5\. தூக்கு மரத்தடியில்
வாக்கு மூலம் கேட்கையிலே
வெட்டினவன் சந்தணந்தான்
தட்டி விடு சூட்சியத்தை ! (தன்ன)

6\. உருண்டை முழியழகன்
உத்திராட்சப் பல்லழகன்
திரண்ட முழி சந்தணத்தைச்
சீமையிலே காண்ப தெப்போ! (தன்ன)

( ஆ) *பொன்னர்—சங்கர்*

இப் பூலோகத்தில்
''பொன்னி வளநாடு
கட்டியரசாளும்
வைகை வளநாடு
நெல்லி வளநாடு
ஆணாடு பெண்ணாடு
கூடகண்டாம் பள்ளம்

புகழ் புரியும் கோனாடு
காராளன் தேசம்
வாழ்ந்திருக்கும் கோனாடு
நேர்பூத்த கோனாடு
அழகு பொன்னி வளநாடு
குறிஞ்சி வளநாடு

இப்படியான ஐம்பத்தாறு தேசங்களையும் குன்றுடைய ராசனும் தாமரைப் பெண்ணும், கணவனும் மனைவியுமாகக் கட்டி அரசாண்டு வந்தார்கள். அவர்களுக்குப் பின் அந்த ராச்சியத்தையாளப் பிள்ளை இல்லையாகையால் தாமரை தவம் செய்தாள்.

பிள்ளையில்லை ஈஸ்வரா நான் பாவியானேன் — நான்
பெருமலடி ஈஸ்வரா நான் தோசியானேன் — நான்
மக்களில்லை ஈஸ்வரா நான் பாவியானேன்—நான்
மாபாவி ஈஸ்வரா நான் தோசியானேன்—எனக்குக்

கொள்ளிவைக்கப் பிள்ளையில்லை
குடமுடைக்க மைந்தரில்லை — எனக்கு
மண்ணு வைக்கப் பிள்ளையில்லை — இந்த
மாபாவி என்ன செய்வேன்?

ஈசன் கிருபையால் மாணிக்கங்கள் போல பொன்னர், சங்கர் என்ற இரு ஆண்களும் தங்கா என்ற ஒரு பெண்ணும் பிறந்தனர்.

குன்றுடைய ராசனுக்குப் பங்காளிகள் பன்னிருவர். அவர்களால் தீங்கு நேராதபடி பொன்னரும் சங்கரும் தேவலோகத்தில் வளர்ந்தனர். அவர்கள் இந்திரசாலம், மகேந்தரசாலம், கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தை முதலிய அறுபத்து நான்கு கலைகளும் கற்று முடித்தனர்.

பூலோகத்தில் பன்னிரு பங்காளிகளும் குன்றுடைய ராசன் மேல் போர் தொடுத்து. அவரைச் சிறைப்படுத்திச் சித்திரவதை செய்தனர். இதையறிந்த பொன்னரும் சங்கரும்,

தெய்வலோகம் தானிருந்து
பூலோகம் இறங்கி வந்தார்!

கத்தியைத் தாமெடுத்துக்
கண்டதுண்டம் செய்கிறாராம்!
மந்திரவாள் தாமெடுத்து
மடிக்கிறாராம் ஒருபுறமாய்
பின்வீச்சுக் காயிரமாம்!
முன்வீச்சுக் காயிரமாம்!
மந்திரத்தை உச்சரித்து
மடித்தாராம் படைகளெல்லாம்!
மலைபோலக் குவிகிறாரே!
மாநிலத்தில் உள்ளவர்கள்!
செடிபோலக் குவியுதுபார்!
சித்திரம்போல் உள்ளஉடல்
பங்காளி பேர்களுட
படைகளெல்லாம் முடிஞ்சு போச்சு!
பாதம் வந்து பணியாத
பன்னிரெண்டு பங்காளிகள்
போர்களும் முடிஞ்சிருச்சு!
பூலோகத்தில் சண்டையில்லை!
உலகத்தில் சண்டையில்லை!
ஒருவர் கூட எதிரியில்லை!

சண்டை முடிந்தது. உறையூர்ப் பட்டணத்தில் பட்டங் கட்டி அரசாளும்போது உடன் பிறந்த தங்கா விளையாடக் கிளி வேணுமென்று கேட்க, அண்ணன்மார்கள் இருவரும் காளிதேவி வளர்த்த கிளியை வலை வீசிப் பிடித்து வந்தார் கள். இதையறிந்த காளிதேவி தனது வேட்டுவப் படைகளை ஏவி விட்டாள் :

வடக்கே நல்லாப் பாருமய்யா!
வடகடலும் பொங்குதய்யா!
தெற்கே நல்லாப் பாருமய்யா!
தென்கடலும் பொங்குதய்யா!

கிழக்கே நல்லாப் பாருமய்யா !
கீழ்கடலும் பொங்குதய்யா !
மேனாட்டுப் படைகளெல்லாம்
விரட்டிச் சண்டை போடுதய்யா !
நாற்புறமும் வருபடையை
நான்விடேனே சங்கர்பிள்ளை
முன்வீச்சுக் காயிரமாம் !
பின்வீச்சுக் காயிரமாம் ?
மந்திரவாள் கையெடுத்து
மடிக்கிறாராம் படைகளெல்லாம்
வெட்டவெட்டத் தழையுதுபார் !
வேட்டுவப் படைகளெல்லாம் !
இத்தனையும் பொன்னர்
எதிர்த்துமடிச் சிட்டாராம் !

ஆனால் இதற்குள்ளே பொன்னருக்கும் சங்கருக்கும் வயது பதினாறு ஆகிவிட்டது. ஈசன் கொடுத்த வாக்கின் படி அவர்கள் தேவலோகம் போகவேண்டும். இப்பொழுது ''தப்பாத பாணம் வந்து தலையிலே விழுந்து'' அவர்கள் கைலாசம் சென்றனர். உடன்பிறந்த சகோதரி தங்கா அண்ணன்மார் மடிந்த செய்தி கேட்டுத் தேடிக்கொண்டு வீரப்போர் மலையடிவாரம் வந்து சேர்ந்தாள். பிணமாகக் கிடந்த தன் அண்ணன்மார்களைக் கண்டு உருண்டு புரண் டழுது, கட்டைகளை அடுக்கி, அவர்களின் உடம்பை அதிலேற்றித் தீமூட்டி, தானும் அந்தத் தணலில் பாய்ந்து மடிந்தாள். இந்தச் செய்தி கேட்ட குன்னுடையராசனும் தாமரையும் அங்குவந்து அவர்களும் நெருப்பில் குதித்து உயிர் நீந்தனர். இவ்வாறாக, இந்தச் சோக முடிவுக்கதை ஏழு நாட்கள் - பத்து நாட்கள் கூடத் தொடர்ந்து நடக்கும். இடையிடையே வேடிக்கை விநோதங்களும் உபகதைகளு மிருக்கும். கடைசி தினத்தன்று பட்டாபி ஷேகமுமிருக்கும்.

(இ) *காமன் பாட்டு (லாவணி)*

பண்டிகை : பங்குனி மாதம் முழு நிலாவின் போது காமன் பண்டிகையைக் கிராமங்களில் கொண்டாடுவார்கள். கரும்பும் முத்துத் தட்டையும் நட்டு, வைக்கோல் பிரியால் சுற்றி மலரிட்டுப் பாட்டுப் பாடி வருவர். முழு நிலா அன்று காமன் எரிந்து போவான்.

பண்டிகையை யொட்டி மன்மதன் - ரதி தர்க்கமும், ரதியின் ஒப்பாரியும் லாவணி மெட்டில் பாடுகின்றனர். காமன் எரிந்து மறுபடியும் உயிர் பெற்று விட்டான் என்பது ஒரு கட்சியின் கொள்கை. இவர்களுக்கு எரியாத கட்சியினர் என்று பெயர். காமன் எரிந்தே போய்விட்டான், மீளவில்லை என்பது மற்றொரு கட்சி. இவர்கள் எரிந்த கட்சியைச் சேர்ந்தவர். எரிந்த கட்சியைச் சேர்ந்தவர்கள் புராணங்களில் நம்பிக்கையுடையவர்; எரியாத கட்சியினர்,

''காலிப் புலவர்கள் போலிக் கதையதை
வேலிக்கப்புறம் தள்ளு—சித்தர்கள்
நூலின் வழி நில்லு—ஞானத்தைக்
கோலியே மனதில்...''

என்று கூறுவர் தமிழ் நாட்டுப் பதினெண் சித்தர்கள் வழியைப் பின்பற்றுபவர்கள். இவை விரிக்கிற் பெருகும் இரு கட்சியினருக்கும் வாதம் நடக்கும். அது மிகவும் ரசமாக இருக்கும். மக்கள் திரளாக வந்து கூடி வாதத்தை ரசிப்பர்.

கதை :

தக்கனின் வேள்வியை அழித்தபின் சிவன் இமயமலைச் சாரலில் தவமிருந்தார். தேவர்கள் அவருடைய தவத்தைக் கலைக்க மன்மதனை அனுப்பினர். மன்மதன் அவர் மேல் மலர்க்கணை ஏவினான். அவர் நெற்றிக் கண்ணைத் திறந்தார்; மன்மதன் எரிந்து போனான். செய்தி கேட்டு ரதி

புலம்பினாள். சிவன் கயிலைக்குச் சென்று பார்வதியை மணந்தார். இதுவே கதையின் சுருக்கம். இது விரிவாக லாவணியில் பாடப்படும்.

*லாவணி தோன்றியது :*

லாவணி என்னும் பதம் மகாராட்டிர மொழியிலிருந்து வந்தது. லாவணி என்ற மூலத்திற்குத் தொடுதல், நடுதல் என்பது பொருள். நாற்றுநட்டுப் பயிர் வளர்வது போல், பாட்டு வளர்வது என்பது பொருள். லாவணிப் பாட்டு அந்த இடத்திலேயே மனயுக்தியாகப் பாடப்படுவது; குழுவாகப் பலர் சேர்ந்து பாடுவது. குழுவிற்கு ஒரு தலைவர்-வாத்தியார் அல்லது குரு - இருப்பார். அவருக்குச் சுயமாகப் பாடும் ஆற்றல் உண்டு. அவர் விடுக்கும் சவாலுக்கு எதிர்க் கட்சியினர் பதில் கூறவேண்டும்.

சிவாஜி மகாராஜாவின் குரு, ராமதாசரின் காலத்திலிருந்து லாவணி மகாராட்டிர நாட்டில் இருந்து வந்திருக்கிறது. சிவபக்தர்களும் விஷ்ணு பக்தர்களும் தனித் தனியாகக் கட்சிசேர்த்து கொண்டு, போட்டியாகப் பாடுவதுண்டு, ஹோலிப்பண்டிகை சமயமும் இப்பாட்டுக்களைப் பாடுவதுண்டு. வீடுகளில் குழந்தை பிறந்து எட்டு தினங்கள்வரை, இரவு நேரத்தில் தாயும் குழந்தையும் விழித்திருந்து, பேய் பிசாசுகளின் தொல்லையின்றி இருப்பதற்காகவும் அந்நாட்டில் மக்கள் லாவணி பாடுகின்றனர்.

லாவணி பாடும்போது, தப்பு, தம்பட்டம், துந்தினா, தப்ளாக்கட்டை, டேப் போன்ற பக்கவாத்தியக் கருவிகளில் ஏதாவது ஒன்றோ சிலவோ இருக்கும். லாவணிப் பாட்டில் ராகம் முக்கியமன்று. மொழியும் கருத்தும் மிக முக்கியமானவை.

மகாராட்டிரர்கள் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு தமிழ் நாட்டை ஆண்டபோது லாவணி இங்கு வந்து

பரவியது. பல லாவணிப் பாட்டுக்கள் அச்சாகியுள்ளன; அச்சாகாமல் ஏட்டுப் பிரதிகளும் தஞ்சை சரஸ்வதி மஹாலில் உள்ளன.

மதுரை மாவட்டத்திலுள்ள கிராமங்களில் பாடப்பட்டு வாய்மொழி வழக்கிலுள்ள லாவணிப்பாட்டுக்களில் சில வருமாறு :

*மன்மதனை ரதி தடுத்தல்*

சிரித்து முப்புர மெரித்த சம்பு !
எரித்த நித்திய சோதி சம்பு !
சிவன்மேல் எனக்கே அன்பு—நான்
மகளாய்ப் பிறந்த பின்பு—அந்தச்
சிவனின் தவசழிக்க—நீ
கபடமுடன் போரே மதே—என்னைச்
சிருட்டித்த ஈஸ்வரனோ—அன்பாய்ப்
பெத்த மகள் என்றும் பாரான் !
சிறுத்தொண்டன் பாலகனை—என் அப்பன்
அறுத்துக் கறிசமைத்தான்—அவன்
சித்தத்தை எண்ணாமல்—நீங்க
பத்தித் தணல் எரியப் போமோ? —அந்தச்
சங்கரன் தவசழிக்க
உன்னாலே ஆகாதுகாண்
(தப்பு தம்பட்டம் அடித்தல்.)

*மதன் தகனம்—ரதி புலம்பல்:*

கண்டேனொரு கனாவை—எம்
பெண்டுகளா கேளுங்கடி—நான்
கட்டியிருந்த மங்கிலியம் !
பொட்டென்று தான் தெரிக்க !
சட்டுனு வாங்களடி !
கட்டழகுத் தாதிகளா !
தேரை நிறுத்தியல்லோ—அவர்
வாரேனின்னு போனாரடி—அடி

திரும்பிவரக்
அரும்பு மலர்
ஆகாச
அடுக்குமெத்தைக்
படுத்துறங்கும்
அனலாயெரிங்
கனவிலேயும்
வல்லபுலி
பிள்ளையல்லோ
மாபாவி
தீபாவ
மங்கிலியம்
தங்கப்
மஞ்சள்
நெஞ்சம்
மையினால்
நெய்யா
பந்தல்
வந்தசனம்
பலகாரம்
பாதிமணம்
இட்டலி
எடுத்துக்
கோலம்
கொட்டுக்காரன்
என் சோட்டுப்
இளவாழைத்
சீனிக்கல்
தென்மதுரைப்
மங்கைநான்
சண்டாள
பங்கம்

காணேனடி
வாடுதடி
மேடையிலே
கட்டிலிலே — இவர்
வேளையிலே — இவர்
தாரோடி — இனி
வாராரோடி — அட
என்தகப்பா — நான்
உந்தனுக்கு
என்தகப்பா என்
உன் வயித்தில்
என் கழுத்தில் — உனக்குத்
பொறுக்கலையோ — நான்
குளித்துவர — உன்
பொறுக்கலையோ?
இட்டபொட்டு
யுருகுதையோ !
பிரிக்கவில்லை !
போகவில்லை !
சுட்ட சட்டி
போகவில்லை !
சுட்ட சட்டி
கவுத்தவில்லை
அழியவில்லை !
போகவில்லை !
பிள்ளைகளா
தண்டுகளா — அடி
கண்டுகளா — என்
பெண்டுகளா — அட
பெண் பிறந்தே — அட
அப்பா இன்று
அடைஞ்சேனடா...
(தப்பு, தம்பட்ட முழக்கம்)

# 13



# வாழ்க்கையில் சோதனைகள்

"பிரிவின் துயரமே உலகத்தில் பரவிப்பாய்கிறது; இதுவே எல்லையற்ற ஆகாசத்தின் எண்ணற்ற உருவங்களைத் தோற்றுவிக்கிறது.

இந்தப் பிரிவின் துக்கமே இரவெல்லாம் நட்சத்திரங்களிலிருந்தும் மௌனமாக உற்றுநோக்குகிறது; இதுவே ஆடி மாதத்து மழையிருளில் இலைகளின் சலசலப்பின் நடுவே இனிய கீதமாய்ப் பரிணமிக்கிறது.

பொங்கிப் பரவும் இந்த வேதனையே பிரேமைகளாகவும் ஆசைகளாகவும் கனிந்து, மானிடர் தம் வீடுகளில் இன்ப துன்பங்களாக மாறிவிடுகிறது. இதுவே என் கவிதையுள்ளத்திலிருந்து பாடல்களாக உருகிப் பெருக்கெடுத்து ஓடுகின்றது!" — தாகூர்.

வாழ்க்கையில் எத்தனையோ சோதனைகள், இடைஞ்சல்கள், ஏமாற்றங்கள் — கிராமவாசிகளின் வாழ்க்கையில், விசேடமாக உழவன் வீட்டில் சோதனைகள் பல :

"ஆவீன மழைபொழிய இல்லம் வீழ
அகத்தடியாள் மெய்ந்நோவ அடிமை சாவ
மாவீரம் போகுதென்று விதைகொண் டோட
வழியிலே கடன்காரன் மறித்துக் கொள்ளச்
சாவோலை கொண்டொருவன் எதிரே தோன்றத்
தள்ள வொண்ணா விருந்துவரச் சர்ப்பம் தீண்டக்
கோவேந்தன் உழுதுண்ட கடமை கேட்கக்
குருக்களுமே தட்சிணைகள் கொடுமென் றாரே"

இந்த முடிவில்லாத துன்பங்களை நயமாக்கி இனிய பண்ணில் தேன்பாங்கு அல்லது தேன் பாகு ஆக நாட்டுப்புற மக்கள் வெளியிடுகின்றனர். அக்கவியைத் தெம்மாங்கு என்று சிலர் கூறுவர். துன்பங்களாயிருப்பினும் சுவையுள்ள கவிதைகளைக் கொண்டு வருமானால் அவற்றை விலைகொடுத்துக் கூட வாங்கலாமல்லவா ?

*(அ) கவிஞன் துயரம் :*

தெம்பாங்கு சொல்லித்
    தெம்பாங்கு சொல்லித்
தெருத்தெருவாய்ப் போனாலும் – என்னை
    அன்பான வார்த்தை சொல்லி
ஆதரிப்பார் யாருமில்லை !

*(ஆ) உழவன் துயரம் :*

(1) காடோ தரிசு காடோ தரிசு
    கலப்பையுங் குட்டை கடுந்துழவு
மாடோ கிடந்து மறுகுது
    மழையை யிறக்கிவிடு
மதுரை மீனாட்சி சொக்கர் மகாலிங்கமே !

(2) கஞ்சிக் கவலை கடன்காரன் தொல்லை
    கற்புரையும்நெஞ்சத் துயரத்தை யாரறிவார்
வீட்டுக்குச் சோறில்லை வெற்றிலைக்குப் பாக்கில்லை
    மெல்லியரே என்றன், வீடான வீட்டில்
முத்திரி வைக்கவும் எண்ணெயில்லை—ஈசா
    துயரத்தில் மூழ்கவோ எனைப்படைத்தாய்?

*(இ) தாயின் துயரம் :*

தான் பெற்று வளர்த்த பெண் வயது வந்தவுடன் யார் புத்திமதியும் கேளாமல் எங்கோ சென்று விடுகிறாள்; தாய் துயருற்றுப் பலபல சொல்லிப் பலரிடமும் புலம்புகிறாள்; அதில் சில பாடல்கள் :

(1) பூமரம் வச்சவன்
பொன்னாலே சேவகன் பொய்கையிலே — இந்த
மாமரம் வச்சவன்
தருவான் தருவான் என் மகபழியை !
வெட்டின பஞ்சை
மிதிக்கக் கூசுவாள் என்மகள் — மெல்லியரே
கல்லாலே கோட்டையும்
காண்டாவனமும் கடந்திட்டாளே !
அருகு புனக்கள்ளி
அன்பா நடைக்கள்ளி— ஆசைக்கள்ளி
திருகு புனக்கள்ளி
தேசக்கள்ளி என்மகள்
கள்ளிபோனதிசை காணிங்களோ?
பாம்பு படமெடுக்க அந்தப்
படத்து நிழலிலே எலியொதுங்க அங்கவ
பின்பார்த்துப் பின்பார்த்துப்
போனதொரு சூட்சியமே !

(2) *சேயை இழந்த தாய் புலம்புகிறாள்:*

1. தேங்காய் அடுப்புக்கூட்டில்
தென்னம்பூச் சோறாக்கித்
தென்னம்பூச் சோறுதின்னத்
தெருவெல்லாம் தேடுறேனே

2. மாங்காய் அடுப்புக்கூட்டி
மல்லிகைப்பூச் சோறாக்கி
மல்லிகைப்பூச் சோறுதின்ன
மங்கையெல்லாம் தேடுறேனே

3. கத்தரிக்காய் பச்சைநிறம்
கருணன்மகள் சானகியாள்
கத்தரிக்காய் வெம்பிவிட்டாக்
கறிக்குதவ மாட்டாதே

4. வெள்ளரிக்காய் பச்சைநிறம்
வீமன் மகள் சானகியாள்
வெள்ளரிக்காய் வெம்பிவிட்டா
விதைக்குதவ மாட்டாதே.

(ஈ) *மக்கள் துயரம் :*

(வேறு)

1. சிவகிரி மகராசா
செல்லத்துரைப் பாண்டியன்
ஈசன் அடிசேரக்
கைலாசம்போய்ச் சேர்ந்தார்! (சிவகிரி)

2. மானழுக மயிலழுக
மாடப்புறாக் குஞ்சழுக
சிவகிரிச் சனங்களெல்லாம்
தெருத்தெருவாய் நின்றழுக! (சிவகிரி)

3. யாராரு கூப்பிட்டாலும்
அசையாத மகராசா
ஏமன்வந்து கூப்பிடவும்
ஏறிட்டாரே பூந்தேரு! (சிவகிரி)

(உ) *மனைவி துயரம் :*

1. கரையிலோர் ஆலமரம்
கவலையில்லை யின்னிருந்தேன்
கரையிடிஞ்சு மரஞ்சாய
கவலைமெத்தத் தோணுதில்லோ!

2. சில்லென்று பூத்த
சிறுநெருஞ்சிக் காட்டூடே
நில்லென்று சொல்லி
நிலைநிறுத்திப் போனீரோ!

3. ஆற்றங் கரையோரம்
அன்னத்தை மேயவிட்டேன்
அன்னமென்றும் பாராமல்
அம்புகொண்டு எய்தார்கள்!

4. குளத்தங் கரையோரம்
குயிலைநான் மேயவிட்டேன்
குயிலென்றும் பாராமல்
குண்டுகொண்டு எய்தார்கள் !

5. தலையை வகுந்து
தாழம்பூச் சூடியுமே
தலையிலே உள்ளெழுத்தைத்
தாயார் அறியவில்லை !

6. உச்சி வகுந்து
பிச்சிப்பூச் சூடியுமே
உச்சியிலே உள்ளெழுத்தை
உள்ளவர்கள் அறியலையே !

*(ஊ) பக்தையின் துயரம் :*

நில்லாது செல்வம்
நிலையாது வாழ்க்கை நிச்சயமே
வல்லான் கருத்துக்கும்
வாவென்ற சொல்லுக்கும் வாயிழந்தேன் !
பொல்லாத புத்தியை
ஏன் படைத்தாய் இந்தப்
பொல்லாத புத்தியை
ஏன் படைத்தாய் !
புல்லா முளைக்கலையே இந்தத்திரு
வண்ணாமலைப் பொய்கையிலே நானொரு
கல்லாய்ப் பிறக்கலையே திரு
வண்ணாமலைக் கானலிலே நானொரு
ஈயாய்ப் பிறக்கலையே திரு
வண்ணாமலை எல்லையிலே !

*

# 14



# வேதாந்தப் பாடல்கள்

"மலை மேலுள்ள கூடுகளையே ஆவலுடன் தேடிப் பகலும் இரவும் பறந்து செல்லும கொக்குக் கூட்டம் போல், ஒரே பிரார்த்தனையில், எனது ஜீவன் தனது அழியாத ஜோதி இல்லம் தேடி யாத்திரை செய்ய அருள் புரிவாயாக!"
—தாகூர்.

சாதாரணமாகவே நாட்டுப்புற வாழ்க்கையிலும், மலை வாசிகளின் வாழ்க்கையிலும் ஒரு பற்றற்ற தன்மை மிளிருவதைக் காணலாம். நாளைய தினத்தைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதே யில்லை. ஆகாயத்துப் பறவைகளைப் போல, தானியங்களையோ மற்றப் பொருள்களையோ சேர்த்து வைப்பதோ அல்லது பணத்தைக் குவித்து வைப்பதோ அவர்களின் இயற்கைக்கு விரோதமானது. அறுவடை நடந்து தம் தேவைக்கு அதிகமானபொருள் கைக்கு கிடைத்துவிட்டால் அதைப் பலரோடு பங்கு போட்டுக் கொள்ளும் வகையில் ஒரு தேரோ திருவிழாவோ ஏற்பாடு செய்துவிடுவர். தாயின் மடியில் வளரும் குழந்தை எப்படித் தனக்கு வேண்டியதை அப்போதைக் கப்போது அன்னையிடமிருந்து கேட்டுப் பெற்று ஆனந்த மடைகின்றதோ, அதே போன்று அவர்களும் தங்கள் அன்றாடத் தேவைகளை இயற்கை அன்னையிடமிருந்து புதிது புதிதாகப் பெற்றுப் பேரானந்த மடைகின்றனர்.

இந்தப் பற்றற்ற ஜீவியத்தின் காரணமாக வாழ்க்கையின் ஆழ்ந்த ரகசியங்கள் அவர்களுக்குப் புலப்படுகின்றன. அவைகள் பாட்டு வடிவில் வெளிவருகின்றன. பதினெண் சித்தர்களின் பாடல்களெல்லாம் இவ்வாறு வெளி வந்தவைதாம்.

உயரிய வேதாந்தக் கருத்துக்கள் நிறைந்த பாடல்களைப் பாடிக்கொண்டு இன்றைக்கும் வீடுவீடாகத் தெருத்தெருவாகச் செல்லும் துறவிகளை நாம் நாட்டுப்புறங்களில் காணலாம். 'மணியாட்டி' என்றொரு கூட்டத்தவர்களும், 'அரிசிக் காவடி,' 'அன்னக் காவடி' எடுப்பவரும் பாட்டுப் பாடிக் கொண்டே வீடு வீடாகச் செல்வர். இது வல்லாமல் மக்களே திருவிழாக் காலங்களில் 'உடக்கர்' என்று ஒருவகைச் சாதுக்களின் வேடம் பூண்டுகொண்டு பாடி ஆடுவர். இவர் களின் தலையில் நீண்ட நரைமுடியிருக்கும், தாடியுமிருக்கும். கழுத்திலே உருத்திராட்ச மாலை யிருக்கும். உடம்பில் திருநீறு மிளிரும். ஒரு கையில் சுரைக்காயின் ஓடும், மறு கையில் சங்கிலியுமிருக்கும். இவற்றைக் கொண்டு ஒரு வகை யான இன்னொலி எழுப்பிக் கொண்டு பாடுவார்கள்; அதற்குத் தகுந்தாற் போல் ஆடுவார்கள். பாட்டுக்களில் கருத்தாழ மிருக்கும் :

எட்டு நாலுங் கொப்பிலே
எறும்பிருந்து வாழுது !
பட்டி னத்து மாவிலே
புறாவிருந்து கூவுது !
திட்டமாய் அறிந்து சொல்லு
சிவனறிந்த மந்திரம் !
பண்டு நாம றிநததே
பன்மலர்க் கருத்தினை
பாலிலே செபித்து விட்ட
மந்திரங்கள் எத்தனை !

கண்ட கோயில் தெய்வமென்று
கையெடுப்ப தில்லையே!
மூல மாங்கு ளத்திலே
முளைத்தெழுந்த கோரையாம்!
காலமே எழுந்தி ருந்தால்
நாலுகட் டறுக்கலாம்!
நாலு கட்ட றுக்கலாம்—அதை
ஐந்துகட்டாய்க் கட்டலாம்!
நீள வீடுங் கட்டலாம்!
நெடுங்கதவுஞ் சாத்தலாம்!
குச்சு வீடுங் கட்டலாம்!
குறுங்கதவுஞ் சாத்தலாம்!
வாழ வேண்டு மென்று சொன்னால்
வாய்மதங்கள் பேசலாம்!
கால னுட ஓலை வந்தால்
கனத்தவீடுந் தாங்குமோ?
குச்சு வீடுந் தாங்குமோ?
குறுங்கதவுந் தாங்குமோ?
ஓடி ஓடி நூலெடுத்து
உள்ளமுங் குறைந்தது!
பாவியான பூனை வந்து
பாவிலே விழுந்ததும் — அதை
அக்கவும் தொடுக்கவும்
ஆறு மாதம் செல்லவும்
கூலிக்காரன் செத்ததும்
குடிக்கக் கஞ்சியற்றதும்
தான தான தான தான
தான தந்த தானனா

2. *(வேறு)*

அரகரா சிவசம்பு தேவா—எங்கள்
ஆதிபர மேஸ்வரா அம்பிகை பாகா

பரமபஞ் சாட்சர ரூபா—நாங்கள்
பச்சைமால் கிருபையால்
பாரினில் வந்தோம்
தரணி முழுதும் இழந்தோம்! – நாங்கள்
சந்தனச் சோலையில் வந்து இருந்தோம்!
ஆரண்ய வேட்டைகளாடி – நாங்கள்
ஆகாச மார்க்கமாய் வருகிறபோது
அடி தொழுதார்கள் அநேகம் – நாம்
அஞ்சாதேயென்று வலக்கையடித்தோம்!
மண்ணுண்டு மந்திரமுமுண்டு—அதில்
மான் தோலுமுண்டு புலித் தோலுமுண்டு!
குருவுண்டு சீடனுமுண்டு
கூசாமல் இரந்துண்ண திருவோடு முண்டு!

..................................................

பஞ்சுப் பருத்தி எடுத்து – அதைப்
பேரான மணையிலே ஊட்டி அரைத்து
நெஞ்சக் கருத்தாலே நூத்து – அதை
நேரோடும் பாவில் ஓடி நெய்தாலும்
நாலு முழத்திலொரு துண்டு—அதில்
நாலைந்து பக்கமும் பீத்தலு முண்டு
பாதியைப் பறையன் கிழித்தான்—அதில்
பகுபாதி அம்பட்டன் கொண்டோடிப் போனான்!
அக்கினி தேவுக்குப் பாதி – இந்த
அழகான கட்டைக்குப் போத்தப் பத்தாது!

(அரகரா)

✲

# 15



# ஆதிவாசிகளின் பாடல்கள்

மதுரை மாவட்டத்திலுள்ள அகமலைப் பகுதிகளில் ஆதிவாசிகள் வசிக்கின்றனர். அவர்களில் பல வகுப்புக்களுண்டு. பழியர்கள், புலையர்கள் கொடைக்கானல் மலைப் பகுதியில் காணப்படுகின்றனர். பழியன், மன்னான், முதுவான் போன்றவர்கள் குமுளி, தேக்கடியை அடுத்துள்ள பகுதிகளில் வாழ்கின்றனர். இம் மக்களின் ருசிகரமான வாழ்க்கை, பழக்கவழக்கங்கள், பாடல்கள் பற்றித் தனியாக ஒரு நூலே வெளியிடலாம். பிற்கூறிய மூன்று இனத்தவரும் இடம்விட்டு இடம் மாறி வசிக்கும் இயல்புடையவர்கள். சில சமயங்களில் காட்டு மிருகங்களின் தொந்தரவில்லாதிருப்பதற்காக உயர்ந்த மரங்களில் தங்கள் வீடுகளைக்கட்டிக்கொள்வர். காட்டில் ஏராளமாகக் கிடைக்கும் கிழங்கு, தேன் ஆகியவைகளே இவர்களின் முக்கிய ஆகாரம். கேழ்வரகும் உற்பத்தி செய்வர்; வேட்டையும் ஆடுவர்.

*புலையர்கள்*

புலையர்கள் அதிகமாக இடம்விட்டு இடம் பெயர்ந்து போவதில்லை. ஊர் கட்டியே வாழ்கின்றனர். கீழ் பழனி மலையில் தாண்டிக்குடி, நல்லூர்க்காடு, மங்களங்கொம்பு, கொட்டக்கொம்பு, கவிச்சிக்கொம்பு, பெரும்பாறை, கட்டக்காடு, மணலூர்க்காடு, குத்துக்காடு, சோளக்காடு, பாய்ச்சலூர், ஆடலூர், பன்றிமலை ஆகிய இடங்களில் அவர்களைக் காணலாம்.

*தோற்றம்*

இவர்கள் சமவெளிகளில் வாழும் மக்களே போன்றிருப்பினும், சற்றுக் குட்டையானவர்கள். தலை பறட்டையாக விருக்கும். நல்ல கட்டுறுதியுள்ள உடல், இடுப்பில் ஒரு துணியிருக்கும்; (இப்பொழுது இளைஞர்கள் சட்டை போட ஆரம்பித்து விட்டனர்.) எவ்விதக் கடினமான உழைப்பையும், உடலை வாட்டும் கடுமையான சோதனைகளையும் இவர்கள் தாங்குவர். ஆனால் சுறுசுறுப்பில்லாதவர்கள். கணப் பண்டையில் அல்லது இளஞ்சூரிய வெளிச்சத்தில் உட்கார்ந்து பேசியும், அல்லது ஆடிப்பாடியும் பலமணி நேரத்தைப் போக்குவர். பிறருடன் பழகுவதில் சிறிது அச்சமும் தயக்கமும் உடையவர். ஆனால் பழகியபின் நம்பிக்கைக்குப் பாத்திர மான நல்ல நண்பர்களாக இருப்பர்.

*உணவு, இருப்பிடம்*

அவர்களின் தேவைகள் மிகக் குறைவு; உணவு எளியது. காட்டில் சாதாரணமாகக் கிடைக்கும் வள்ளிக்கிழங்கு, தேன், பலாக்காய், வாழைக்காய், கேழ்வரகு போன்றவை களே அவர்களின் முக்கிய ஆகாரப்பொருள்கள். பலாக்காயை உடைத்து அதனுள்ளிருக்கும் சுளைகளைப் பச்சையாகச் சாப்பிடுவர். விதைகளைச் சுட்டுச்சாப்பிடுவர். வாழைக் காயை நெருப்பிலிட்டுச் சுட்டு, உரித்துத் தேனோடு கலந்து பிரியமாகச் சாப்பிடுவர். வேட்டையாடி மான், பன்றிபோன்ற மிருகங்களைக் கொன்று மாமிசத்தையும் உண்பர்.

அவர்களின் இருப்பிடங்கள் மிகவும் தாழ்வானவை. சாதாரணமாக மண், காட்டுக்குச்சிகளால் மதிலை வளைத்து மேலே கூரைவேய்ந்து கொள்வர். வீட்டினுள் வெளிச்ச மிராது. உள்ளே போகவேண்டுமானால் உட்கார்ந்தே உட்புக வேண்டும். சுவர்கள், கூரை, கதவு முதலிய யாவும் வாழைப் பட்டைகளினாலான வீடுகளும் உண்டு.

தற்சமயம் அவர்கள் மலையிலுள்ள தோட்டமுதலாளிகளின்கீழ் காப்பி, வாழை, ஏலத்தோட்டங்களில் வேலை செய்கின்றனர்: அல்லது பாதைகள் அமைத்தல், மரம் வெட்டுதல் போன்ற சில்லறை வேலைகள் செய்து பிழைக்கின்றனர்.

*பழக்க வழக்கங்கள்*

அவர்களின் சமூக மதப்பழக்க வழக்கங்கள் நமக்குப் புதியனவாகவிருக்கும். பெண்களுக்கு மிகுந்த சுதந்தரமிருக்கிறது. வயது வந்த ஆணும் பெண்ணும் தாங்களாகவே சேர்ந்து வாழ்கின்றனர். சில சமயங்களில் குழந்தைகள் பிறந்தபிறகு கூடக் கிராமத் தலைவர்கள் ஒன்றுகூடி, சம்பந்தப்பட்ட ஆடவன் தங்களை அறியாமல் ஒருபெண்ணைச் சேர்த்துக் கொண்ட குற்றத்திற்காக ஓர் அபராதம் விதிப்பர். பின்பு கல்யாணம் நடக்கும். ஆண் மகன் காட்டிலுள்ள கற்பூர வல்லிச்செடி யென்ற ஒரு வகைச்செடியை நூலில் கட்டிப் பெண்ணின் கழுத்தில் கட்டி விடுவான். பின்பு விருந்தும் ஆடல் பாடலும் நடைபெறும்.

சாதாரணமாகப் பெண்கள் நகைகள் அணிவதில்லை காதில் பனை ஓலை வைத்துக் கொள்ளுகின்றனர். கையில் வளையல்கள் உள்ளன. சில சமயங்களில் காட்டிலுள்ள ஒரு வகை அழகான கொடியைக் கழுத்தில் அணிந்து கொள்ளுகின்றனர்.

*தெய்வங்கள்*

கரகநாச்சி, கதவனாச்சி, பூதனாச்சி, ஆண்டிச்சி, நாகமங்களான், பெரியபூதன், மலையான். வெள்ளையன், பழனியாண்டி, பூம்பாறை நாதன் போன்ற பல தெய்வங்களைப் புலையர்கள் வணங்குகின்றனர்.

கரகநாச்சி விழா வருடந்தோறும் சிறப்பாக நடைபெறும். சாமிகானகத்தில் தானிருக்கும். இது வண்டுணா மலரெனப்

படும் சண்பகப் பூவிலிருப்பதாக எண்ணுகின்றனர். 'சுத்தி பத்தியாக' இருந்து சுவாமியை அழைக்கப் போவார்கள். வாயைக் கட்டிக் கொண்டு (எச்சில் படாமலிருப்பதற்காக) நெல்லைக்குத்தி மாவரைத்து, அதைப் புதுத்தண்ணீரில் கரைத்து, அதை ஒரு பச்சை மூங்கில் கொட்டியில் எடுத்துச் செல்வர். இதைச் சுவாமி ஆடவேண்டியவர்கள் மேலெல்லாம் தெளிப்பர். உடனே அருள்வந்துவிடும். யாவரும் ''தெவப் பொட்டித் தழை' என்ற ஒரு வகைச் செடியின் சிறுகிளை களைக் கையிலெடுத்து வீசிக்கொண்டே ஆடுவர்; மேளம் முழங்கும்; வாத்தியமும் உண்டு. வெள்ளைப்பூ, மஞ்சள், எலுமிச்சம்பழம் ஆகியவையும் சாமிக்கு உகந்த பொருள்கள்.

சாமியை அழைத்துக் கொண்டு ஊர் அருகிலுள்ள ஒரு மரத்தடிக்கு வருவர். அங்கே ஒரு பந்தல் போட்டுத் தாங்கள் சாமியாடும்போது உபயோகித்த ''தெவப் பொட்டித் தழை''யை அதன்மேல் பரப்பி யாவரும் சாமியை வழுத்துவர். காலையில் பந்தலின் மேல் 'கரகநாச்சி'' வந்து விடுவாள். பச்சை மண்ணால் செய்யப்பட்ட கரகங்கள் பந்தலின்மேல் இறங்கியிருக்குமாம். பூசாரி அதை யெடுப்பார். அவ்வருடம் நல்ல மழை பெய்யும், நோய் நொடியிராது, யாவருக்கும் சுகம் ஏற்படும் என்று நம்புகின்றனர்.

இதைப்போலவே இன்னொரு வியப்பான செய்தியும் உண்டு. ஒருவர் ஏதோ ஒரு காரணத்தால் வெளியூரில் இறந்து விட்டால், இரண்டு ஆண்டுகளுக்குப்பின் அவருடைய ''நிழலை'' அழைப்பதுண்டு. இறந்த மனிதன் நோயாய்ப் படுக்கையில் கிடந்து இறந்த சமயம் நிகழ்ந்த காட்சிகளெல் லாம் அப்பொழுது தென்படுவதுண்டாம்!

புலையர்களின் தலைவர்கள் மன்னாடி என்னும் வகுப் பினர்களாகும். ''தரைக்குப் பண்ணாடி மலைக்கு மன்னாடி!'' என்பது ஒரு பழமொழி. மலைக்கு இவர்கள் அரசராயிருந்து

ஆண்டு வந்தனராம். இவர்களுக்குக் குன்றுடையார் என்ற பெயருமுண்டு. இவர்களின் தலைவர்கள் பழையகால சத்தியப்படி காலில் செருப்புப் போடுவதில்லை, குடை பிடிப்பதுமில்லை. ஒருவர் கூறியது போல், "கல்லே தலையணை, கனலே பஞ்சு மெத்தை" என இயற்கையோடு இயைந்த எளிய வாழ்வு வாழ்கின்றனர். இவர்கள் தாராள மனதுடையவர்களாயும், யாரோடும் அன்பாகப் பழகும் இனிய சுபாவமுடையவர்களாயுமுள்ளனர். இவர்களுக்கும் புலையர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

*பாடல்கள்*

மலைவாசிகளின் பாடல்கள் இயற்கையை யொட்டி எழுந்தவை. பறவைகள் பாடுவது போல் இருக்கும் அவர்கள் பாடுவது. அதில் வார்த்தைகளுக்கு அதிக இடமில்லை; சந்தமும் இனிமையுமே முக்கியம். தம் அலகை எப்படித் திறந்தால், நாக்கை எப்படி அசைத்தால், உடம்பை எப்படி வைத்துக் கொண்டால் சத்தம் இனிமையாக, லயமாக வரு மெனப் பறவைகளுக்குத் தெரியும்! அதன்படி அவை தம் உடலை, சப்தமுண்டாக்கும் பாகங்களின் நிலையை, மாற்றிப் பலவித கீதங்களையுண்டு பண்ணுகின்றன. இயற்கை நிலை யிலிருந்து பார்ப்பவர்களும் அதே மாதிரி செய்கின்றனர்.

வேலவர்-வள்ளி பாட்டுப் பாடிக்கொண்டு மதுரை மாநகர் வீதிகளுள் ஒன்றின் வழியாக வீடு வீடாகச் சென்று பிச்சை யெடுத்த ஓர் அம்மையாரைச் சந்திக்க நேர்ந்தது. முற்பகல் சுமார் பதினொரு மணியிருக்கும். அவர் தமது குழந்தையை மாராப்பில் கட்டி முதுகில் போட்டுக்கொண்டு ஒரு வீட்டின் முன் நின்று பாடினார், சிறிது பழையது கிடைத்தது உடனே வீதியின் ஓரமாக ஓரிடத்தில் நின்று, குழந்தையைக் கையில் எடுத்து அந்தப் பழைய சோற்றை அதற்கு ஊட்டினார். மறு படியும் பாட்டு ஆரம்பமானது. பாட்டில் கிழ வேடங் கொண்டு வந்த வேலவருக்கும் வள்ளிக்கும் நடந்த வாதுச் சண்டை விவரிக்கப்படுகிறது:

கிழவனின்னே சொல்லாதே வள்ளி
கெட்டகோபம் வந்திடுமே !
பாட்டனின்னே சொல்லாதே வள்ளி
பாவமெத்த வந்திடுமே !
அறைஞ்சனின்னாப் பாரு கிழவா !
ஆறு பல்லு விழுந்து போகும்
போட்டனின்னாப் பாரு கிழவா !
பொக்கைவாயாப் போயிடுமே !
அறைஞ்சாலும் குத்தமில்லை
அமுதவள்ளி உன்கையால் !
போட்டாலும் குத்தமில்லை
பொன்னே உன்றன் கையாலே

மரக்கிளையில் கவலை சிறிதுமின்றி உட்கார்ந்து கொண்டு தன் குரலை மாற்றி மாற்றி 'மாமாயத் தீம்பாட்டுக் களை'க் காற்றிலே பரப்பிவிடும் 'மாயக் குயிலே' போல், ஊர் பேர் தெரியாத அந்த அம்மையார் பாடிக்கொண்டே சென்றார்.

பாட்டிலுள்ள வார்த்தைகளின் அமைதியைச் சற்றுக் கவனிப்போம்: ''போட்டனின்னாப் பாரு கிழவா, பொக்கை வாயாப் போயிடுமே!'' என்னும் வார்த்தைகளைத் திரும்பத் திரும்ப அந்த அம்மையார் பாடிய ராகத்தில் பாடிப் பார்த் தால், படியாதவர்கள் எப்படித் தம் உடலுறுப்புக்களைச் செவ்வனே உபயோகிப்பதன் மூலம் இனிமையான, லயமான சப்தங்களை உண்டாக்குகிறார்கள் என்ற ரகசியம் நமக்கு மங்கலாகத் தெரியும் !

மலை வாசிகளின் பாட்டிலும் இதே முறை காணப்படு கிறது.

சுண்டப்பூ மாலைக்கும்
தொங்குஞ் சுருளுக்கும்

சுண்டப்பூ மாலைக்குள்
ளாரு தோணா வந்தா

என்ற கானாமுதத்தை இசைக்கும்போது தங்களின் வாயையோ, தொண்டையையோ, நாக்கையோ அமுக்காமல், அழுத்தாமல் லயமாக உபயோகிக்கின்றனர். வார்த்தைகள் திரும்பத் திரும்ப வருகின்றன. கருத்தாழமதிகமில்லை எனினும், இசை காற்றையே இனிக்கச் செய்கிறது!

இப் பாடல்களைச் சேகரிப்பதற்காகக் கொட்டக் கொம்பு, மங்களங்கொம்பு, பெரும்பாறை முதலிய இடங்களுக்குச் சென்று இந்த மக்களை நேரடியாகச் சந்தித்துப் பேசும் வாய்ப்புக் கிட்டியது. அந்த நாட்களை மறக்கவே முடியாது. பல பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து வேலை பார்க்கும் ஓரிடத்திற்குச் செல்லுமாறு நண்பர் என்னை அனுப்பினார். அங்குச் சென்று அவர்களுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்த பின் ஒரு சாமி பாட்டுப் பாடுமாறு கேட்டேன்.

''கரக நாச்சி வந்திடுமே!'' என்று ஓர் அம்மாள் பயத்துடன் பதில் கூறினார். ஆகா! என்ன பக்தி! ஒரு சொல்லில், ஒரு பாட்டில், தெய்வமே வந்துவிடும்! கடவுளிடமிருந்து வெகு தூரத்திலுள்ள என் வாழ்க்கையை அவர்களுடைய புனித வாழ்க்கைக்கு மாற்றிக்கொள்ள ஆசைப்பட்டேன். மிகவும் வற்புறுத்தியதின் பேரில், தப்ப வழியின்றி ஒரு வயதான அம்மாள் பாடினார்:

''லே லே லே லே
லே லே லே லே''

என்றார். (சாமி பாட்டில் சந்தம் தான் பாடுவார்கள்) உடம்பு நடுங்கியது; கண்களில் நீர் பெருகியது; ஆவேசம் வந்தது; பேச்சு நின்று விட்டது!

வயது சென்ற கிழவி ஒருவரிடம், ''துக்கத்தில் பாடக் கூடிய ஒப்பாரி ஒன்று பாடுங்கள்'' எனக் கேட்டேன்.

''அழுகாச்சி வந்துவிடும்'' என்றார். சாமியுணர்ச்சியைப் போல் இதுவுமொரு புனித உணர்ச்சி! இவரும் வற்புறுத்தலுக்காக வாய் திறந்து ஏதோ சொன்னார். கண்ணீர் தாரை தாரையாகப் பெருகியது; யார் சமாதானப்படுத்தியும் கேளாது பல நிமிடங்கள் அழுது கொண்டேயிருந்தார்.

உணர்ச்சிகளை வெளியிடும் அந்தப் பாடல்கள், எப்பொழுதோ யாரோ கேட்பதற்காகப் பாட ஏற்பட்டவையல்ல. அப்படிப் பாடவுங் கூடாது; முடியவும் முடியாது..

மறுதினம் களியாட்டப் பாட்டுக்களைக் கேட்கலாமென்று தாண்டிக்குடியில் ஓரிடத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த பெண்களைக் காணச் சென்றேன். அவர்கள், ''காம்பு'' போட்டுக் கொண்டு பாடலாம் என்றார்கள். வெற்றிலை, பாக்கு, புகையிலை வாங்கிவர ஏற்பாடு செய்தேன். சுமார் இரண்டுமணி நேரம் பலவகையாகக் கேட்டும், பாட்டுக்கள் எதுவும் வருவதாகத் தெரியவில்லை. இதற்குள்ளாக உள்ளூர் நண்பர் என்னைத் தேடிக்கொண்டு வந்தார். பெண்கள் பாடவில்லை என்றவுடன் அவருக்கு ஆத்திரம் வந்துவிட்டது; அத்துடன் வழியும் தெரிந்து விட்டது; ''ஆடலாம் வாருங்கள்'' என்றார். பெண்கள் மகிழ்வுடன் எழுந்து வட்டமாக நின்று கொண்டு, இடுப்போடு சேர்த்துக் கைகளைப் பிடித்துக் கொண்டு கம்பீரமாக ஆட ஆரம்பித்தனர். ஆட்டம் லாவகமாக இருந்தது. மெல்லிய காற்றில் பூவும் தளிரும் நிறைந்த மரக்கிளை அசைவதுபோல் இயற்கைப் பொலிவுடன் இருந்தது ஆட்டம். ஆனால் பாட்டு வரவில்லை. நண்பர் வாயினால் மேளம் கொட்டினார்; வாத்தியமும் இசைத்தார். பாட்டு வந்தது. ஆட்டமும் உச்ச நிலையை அடைந்தது.

''ஆடும்போது அவர்கள் பாடுகின்றனர். உயிருள்ள கவிதைகள் வெளி வருகின்றன. அவை என்றும் ஏட்டில்

எழுதப்படாதவை. ஆனால் மறுபடியும் மறுபடியும், தினம் தினம் அவை பாடப்படுகின்றன! அவை அவர்களின் உவகைப் பெருக்கின் ஊற்றாக உள்ளன! அவர்கள் நில வொளியில் கட்டைகளை அடுக்கி உண்டாக்கிய தீ வெளிச்சத்தில், கொட்டின் தாளத்திற்கும் (வாத்தியத்தின் இசைக்கும்) இசைய, மிக மெதுவாகத் தங்கள் கால்களை அசைத்தாடு கின்றனர்'' என்று, 'எல்வின்' என்ற மேனாட்டு அறிஞர் தமது [1]'காட்டுப் பாடல்கள்' என்ற நூலில் சித்திரித்துள்ள காட்சியை ஒருவாறு கண்டோம்!

*களியாட்டப் பாட்டு: (பாணிப் பாட்டு)*

1. காப்பி மர மேறி
 காப்பிப்பூ நான் சூடி!
வாழை மர மேறி
 வாழைப்பூ நான் சூடி!
வளர்ந்த காலுப் பயலோட
 உனக் கென்ன விளையாட்டு!
ஆளான ஆளுமில்லை
 அழகைக் குறைப்பாகளா!

ஆண்களும் பெண்களும் கைகோத்து ஆடிக்கொண்டே பாடுவர். முக்கியமாக நிலவொளியுள்ள இரவு நேரங்களில் களியாட்டங்களிருக்கும்; அல்லது மரக்கட்டைகளை அடுக்கித் தீ மூட்டி, அந்தத் தீ வெளிச்சத்தில் களியாட்டங்கள் நடை பெறும். பாட்டுக்களில் பொருள் அதிகமிராது. கவித்துவமும் அதிகமிராது. அவை அடியடியாக இருக்கும். முன்னடிக்கும் பின்னடிக்கும் கருத்துத் தொடர்பிராது. சில பாட்டுக்கள் தெளிவில்லாமலே இருக்கும்.

---

1. காட்டுப் பாடல்கள்: நாட்டுப்புற மக்கள், தாங்கள் பாடும் பாட்டுக்களைக் 'காட்டுப் பாட்டு' என்று கூறுவது இங்குக் குறிப்பிடத் தக்கது.

2. பாச்ச லூரான் பச்சைக் குஞ்சு
பாறை யெல்லாம் இருக்குது !
கண்ணனூரான் காலுத் தண்டை
காலைக் காலை சுத்துது !
பூலத்தூரு மன்னாடி
பொட்டைப் பண்ணியைச் சுட்டாண்டி
நம்ம ஊரு மன்னாடி
நாகவடத்தான் போனாராம் !

*வேறு :*

3. பாறைக் கடிவாரம்
பாவாளம் பூ வண்ணா
அதிலே யொரு பூவு
கொடுத்திட்டுப் போங்கண்ணா !
பூவு கொடுத்தாலே
கொண்டை கலைஞ்சிடும் !
கொண்டை கலைஞ்சாலே
கூட்டி முடிங்கண்ணா !

அடுத்து மற்றொரு பாட்டு; இதே பாட்டுத்தான்-ஆனால் ஓரிரு வார்த்தைகள் மட்டும் மாறி வருகின்றன :

4. பாறைக் கடிவாரம்
பாவாளம் பூ வண்ணா !
அதிலே ஒரு பூவு
கொடுத்திட்டுப் போங்கண்ணா!
பூவு கொடுத்தாலே
பம்பை கலைஞ்சிடும்
பம்பை கலைஞ்சாலே
புரட்டி முடிங்கண்ணா !

அடுத்துவரும் பாணியில் சிறிது பொருள் செறிவு காணப் படுகிறது. மலைமேல் வாழை பயிரிடும் வேலை மிக அதிகம்.

வாழைக்காய் சமவெளியிலுள்ள பல இடங்களுக்குச்செல்கிறது அதன் பலன் என்ன? பாட்டைக் கேளுங்கள் :

5. புல்லைக் களைஞ்சு
புது வாழை நானட்டேன்!
புது வாழைக் காயெல்லாம்
எங்கெங்கே போகுது !
காமாட்சி யம்மன் — படிக்
கட்டுக்குப் போகுது !
காமாட்சி யம்மா
என்ன வழி விட்டா?
காரிக் குதிரையை
ஏத்த வழி விட்டாள் !
காரிக் கழுத்திலே
என்ன மணிச் சத்தம்?
காரிக் கழுத்திலே
கரு மணிச் சத்தம் !
காரி நடத்த
என்ன தடிவேணும் !
காரி நடத்த
காயந் தடிவேணும்!

அதே பாணியில், அதே பொருளில் வேறு பாட்டு — சில வார்த்தைகளை மாற்றி :

6. கல்லைக் களைஞ்சு
கருவாழை நானட்டேன்!
கருவாழைக் காயெல்லாம்
எங்கெங்கே சேருதாம்!
பூம்பாறை நாதன்
படிக்கட்டு சேருதாம் !
பூம்பாறை நாதன்
என்னவழி விட்டான் ?

புள்ளிக் குதிரையில்
ஏத்தவழி விட்டான் !
புள்ளிக் கழுத்திலே
என்னமணிச் சத்தம்?
புள்ளிக் கழுத்திலே
புதுமணிச் சத்தம் !
புள்ளி நடத்த
என்ன தடிவேணும் ?
புள்ளி நடத்த
புங்கந் தடிவேணும் !
ஏக் ஏகே ! ஏக் ஏகே ! ஏக் ஏகே !
ஹேக் கேகே ! ஹேக் கேகே ! ஹேக் கேகே !

வேறு:

7. இந்தத் தலைவாசல்
யாரு தலைவாசல் !
மங்கள மன்னாடி
மன்னும் தலைவாசல் !
மன்னு மதிலேறிக்
கூவுறதே சாவல் !
கூவுற சாவலைக்
கூப்பிட்டா மாயாண்டி
சங்குஞ் சடையாண்டி !
தாமரைப் பூவாண்டி !
சங்குஞ் சடைக்கெல்லாம்
பூக் கொண்டா மாயாண்டி !

8. இந்தத் தலைவாசல்
யாரு தலைவாசல் ?
குப்பண மன்னாடி
குந்தும் தலைவாசல்

குந்தும் மதிலேறிக்
கூவுறதே சாவல்!
கூவுற சாவலைக்
கூப்பிட்டா மாயாண்டி!
சங்குஞ் சடையாண்டி!
தாமரைப் பூவாண்டி!
சங்குஞ் சடைக்கெல்லாம்
பூக்கொண்டா மாயாண்டி!

*கல்யாணப் பாணி:*

9. சுண்டப்பூ மாலைக்கும்
தொங்குஞ் சுருளுக்கும்
சுண்டப்பூ மாலைக்குள்
ளாரு தோணா வந்தா?
யாருந் தோணாவல்லை!
தோழிதோ ணாவந்தேன்!
வாழைப்பூ மாலைக்கும
வட்டாரக் கொண்டைக்கும்
வாழைப்பூ மாலைக்குள்
ளாருந் தோணா வந்தா?
யாருந் தோணாவல்லை!
தோழிதோ ணாவந்தேன்!
தோட்டம்பூ மாலைக்கும்
சூசிலிக் கொண்டைக்கும்
தோட்டம்பூ மாலைக்குள்
ளாரு தோணா வந்தா?
யாருந் தோணாவல்லை
தோழிதோ ணாவந்தேன்:
தல்லாலே லாலாலே
லாலாலே லாலாலே. (திரும்பத்திரும்ப)

பாட்டு ஆண் பெண் தர்க்கமாக அமைந்துள்ளது. ''சுருள் சுருளாகத் தொங்கும் தலைமுடியையுடைய நீ, சுண்டப் பூமாலை யணிந்து யாரைத் துணைகொண்டு இங்கு வந்தாய்?'' என ஆண்மகன் வினவுகிறான். ''உன்னைத் துணையாகக் கொண்டு நானிங்கு வரவில்லை. எனக்குத் துணையாகத் தோழி வந்திருக்கிறாள்! நான் தனியாக இருப்பதாக நீ கருதாதே!'' என்று பெண் மறுமொழி கூறுகிறாள்.

# 16




முடிவுரை : ஆண்டவனருளால் 1947 ஆம் ஆண்டு துவங்கி, நாட்டுப் பாடல்களைச் சேகரிக்கக் கிராமங்களுக்குச் சென்ற சமயங்களிலெல்லாம் கண்ட கனவு, இன்று ஓரளவு உருப்பெற்றிருக்கிறது. ஆனால், ஆரம்பத்தில் கூறிய, 'நாட்டுப் பாடல் என்னும் பாற்கடலை நக்கிக் குடிக்கத் துணிந்த பூனையின் கதை', என்னளவில் உண்மையாகி விட்டது. நாட்டுப் பாடல்கள்-இல்லை, காட்டுப் பாடல்கள்-ஏட்டில் எழுதாக் கவிதைகள்-கடல் போன்று அகன்று விரிந்தவை என்ற உண்மையை வாசகர்கள் உணர்வார்கள். ஊக்கமும் உற்சாகமும் நிறைந்த வாலிபர்களும், பள்ளி ஆசிரியர்களும், தமிழறிஞர்களும், இத்துறையில் இறங்கிப் பல புதுநூல்களை வெளியிட இந்நூல் ஒரு தூண்டுகோலாக அமைந்தால் நான் எனது குறிக்கோள் நிறைவேறி விட்டதாக எண்ணி மகிழ்வேன். தாலாட்டுப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், தொழில் பாட்டுக்கள், களியாட்டப் பாடல்கள், கதைப் பாட்டுக்கள், ஆதிவாசிகளின் பாடல்கள் போன்ற ஒவ்வொரு துறையிலும் ஆராய்ச்சிக்குப் பரந்த இடமுள்ளது. ஒவ்வொன்றும் தனித்தனியே ஒரு நூலாக வெளிவந்து தமிழன்னையை அலங்கரிக்கும் நன்னாள் புலரவேண்டும்!

*மங்களம்* : (கதைப் பாட்டின் முடிவில் பாடப்படுவது)

கதையும் முடிஞ்சிருச்சு !
காரணமும் தீர்ந்திருச்சு !

நாடு செழிக்கணுமே !
நல்ல மழை பெய்யணுமே !
தேசம செழிக்கணுமே !
செல்ல மழை பெய்யணுமே !
ஊரு செழிக்கணுமே !
உத்த மழை பெய்யணுமே !
பூமி செழிக்கணுமே !
பொன்னுமழை பெய்யணுமே !—நான்
படித்த கதை முழுதும்
பழுதா யிருந்தாலும்
கொண்டு மனம் பொறுத்து—உங்க
குழந்தை சொல்லாக் கொள்ளவேணும் !

வணக்கம்!

—✲—

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

1920

தலைமை நிலையம் :

154, டி. டி. கே. சாலை,
ஆள்வார்பேட்டை, சென்னை-18.

கிளை நிலையங்கள் :

79, பிரகாசம் சாலை (பிராடுவே),
சென்னை-108.

திருநெல்வேலி-6. மதுரை-1.
கோயமுத்தூர்-1. கும்பகோணம்-1
திருச்சிராப்பள்ளி-2. சேலம்-1.

விலை ரூ. 25—00

அப்பர் அச்சகம், சென்னை-108.